D
211,31'N67
N67.5.3
64976

RRM 206/08

R50 (B)

வெளியீடு—11—5—1968]
Issued—11—5—1968]

MADRAS STATE ARCHIVES
4061/L
22 JUL 1968
EGMORE, MADRAS

வாய்மையே வெல்லும்

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

768

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1967 ஜூலை 14
Friday, 14th July 1967

தொகுதி V—எண். 3
Volume V—No. 3

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

D
V211, 31 N67
N67.5.3
4996

V211, 31 N67
N67.5.3

MADRAS STATE ARCHIVES
22 JUL 1968
MADRAS

உள்ளடக்கம்

	பக்கங்கள்.
1 வினாக்கள்—விடைகள்	253–285
2 கவன ஈர்ப்பு— சென்னை, கோவை நகரங்களிலுள்ள விடுதிகள், இல்லங்கள், மருத்துவ மனைகள் இவற்றிற்கு 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி' வழங்குதல்	285–286
3 அரசினர் தீர்மானம்— பேரவை விதி 155 (3)-ஐ நிறுத்தி வைத்தல் ..	286
4 1967-68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—	
கோரிக்கை எண் XVI—வேளாண்மை	287–376 378–407
கோரிக்கை எண் XVII—மீனளம்	
கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு ..	
கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு	
கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை ..	
கோரிக்கை எண் XXI—சின்கோனா	
கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு	
5 அறிவிப்பு— 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா	377
6 அரசினர் மசோதா— 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா	377
7 பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்	377–378

64976

தமிழக சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1967 ஜூலை 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Selection Committees for Colleges

*321 *Q*.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) Whether the Government propose to constitute new selection committees for the purpose of selecting candidates for admission into various Government Colleges like, Medical Colleges, Engineering Colleges, Arts Colleges, Law College, Teachers' College, Veterinary College, Agricultural College, various technical institutes like Polytechnic institutes; and

(*b*) if so, will proper representation be given to the deserving members of backward classes to serve on the selection committees ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) கடந்த ஆண்டைப் போலவே 1967-68ம் ஆண்டிற்கும் தேர்வுக் குழுக்கள் (Selection Committees) புதிதாக அமைக்கப்படும்; இக் குழுக்களை அமைப்பது குறித்துப் பின்பற்றப்படும் கோட்பாடுகள் பெரும் பாலும் முந்திய ஆண்டில் பின்பற்றப்பட்ட கோட்பாடுகளாகவே இருக்கும்.

(இ) தேர்வுக் குழுக்கள் சாதி அடிப்படையில் அமைக்கப்படுவதில்லை. எல்லா வகையான கல்வி நிறுவனங்களிலும் அரிசன மாணவர்களுக்கும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் 16 சதவீத இடங்களும் (மிகப் பின் தங்கிய வகுப்பினர்கள் உட்பட) பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 25 சதவீத இடங்களும் ஒதுக்கப்பட்டிருப்பதால், அச்சமூகங்களின் நலன்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டா.

Thiru K. VINAYAKAM: Even though the principles governing the constitution of these committees were followed as before, in the last year, may I know why people belonging to one political party alone, that is the party in power should have been chosen to be the members of these committees and why the people belonging to the opposition parties were grossly neglected ? Is it because of the political differences between the party in power and the other opposition parties ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசியல் கட்சி காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலைமை முன்புதான் இருந்தது. சென்ற முறைகளில் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் போடப்படவில்லை. இப்போது அப்படி அல்ல. புதுக்கோட்டை கல்லூரியில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் போடப்பட்டிருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டத்தில்

ஐ.டி.ஐ-க்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டு களில் எப்படி உறுப்பினர்களைப் போடுவது என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது. அரசாங்கக் கல்லூரிகள் 20-க்கு மேல் இருக்கக்கூடிய நிலையில் சென்ற ஆண்டு போடப்பட்டு அந்தக் கல்லூரி களுக்கு மட்டுந்தான் இந்த ஆண்டும் கமிட்டி போடப்பட்டது. மற்றக் கல்லூரிகளில் அந்தக் கல்லூரி முதல்வர்களே கவனித்துக்கொள்வது என்ற முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தனியார் நடத்தக்கூடிய கல்லூரி களிலேயும், அதே போன்று மத்திய சர்க்காரிடத்தில் இருந்து 75 சத விகிதம் மானியமாக வாங்கி 25 சதவிகிதம் தனியார் போட்டு நடத்தக் கூடிய கல்லூரிகளிலேயும் இது போன்ற தேர்வுக் குழுக்களை அமைக்க வில்லை என்பது உண்மையா ? அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளிலே அவர்களே தேர்வுக் குழுக்களை அமைத்துக் கொள்ளுகின்ற நிலைதான் இருந்து வருகிறது. அங்கும் இப்படிப்பட்ட தேர்வுக் குழுக்களை அமைக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டு வருகிறது. பொறி இயல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கும் தேர்வுக் குழு அமைத்துத் தேர்ந்தெடுத்து பிறகு ஒவ்வொரு கல்லூரிக்கும் இவ்வளவு பேர் என்று தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டுமென்ற கருத்தும் சொல்லப் படுகிறது. இந்தக் கருத்துக்கள் பற்றி எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. பெ. மலைச்சாமி : தனியார் கல்லூரிகளில் உள்ள தேர்வுக் குழுக் களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெறச் செய்ய செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளுக்குத் தேர்வுக் குழுக்களை எப்படி அமைக்க வேண்டுமென்பதிலே முடிவு எடுத்த பிறகுதான், சட்ட மன்ற உறுப்பினர்களை இடம் பெறச் செய்வதா இல்லையா என்ற கட்டம் வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கரூர் அரசினர் கல்லூரிக்குத் தேர்வுக் குழு அமைக்கப்படவில்லை. காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு ஃபர்ஸ்ட் கிரேடு கல்லூரிகள் என்று சொல்லப்படுகிற 9 கல்லூரிகளுக்கு மட்டுந்தான் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதே போன்று இந்த ஆண்டும் செய்யப் பட்டது. மற்றக் கல்லூரிகளில் முதல்வரும், சீனியர் புரொபஸர் ஒருவ ரும் குழுவில் இடம் பெறுகிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : தனியார் கல்லூரிகளுக்குப் பெரும்பகுதி பணத்தை அரசாங்கம் வழங்கி வருவதால் வரக்கூடிய ஆண்டுக்கு முன்னா லாவது அவற்றுக்கும் தேர்வுக் குழுக்கள் அமைப்பது பற்றி உறுதியான முடிவை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் அவர் கள் கூறுவது போன்ற கருத்து சொல்லப்பட்டு வருகிறது. அதுபற்றி சர்க்கார் ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

MR. SPEAKER : Hon. Member Thiru K. Vinayakam may now put a supplementary without imputations. Because, imputation is not permissible according to the rules.

THIRU K. VINAYAKAM : Without imputations ? Well, Sir, I never imported any imputation in my supplementaries. That is what I feel.

Mr. Sspeaker while selecting the members for these Selection Committees of the Colleges and other educational institutions, what is the criterion which the Government has determined ? Is it just the political leanings or whether the members are required to possess some knowledge of the educational institutions, or is it a fact that even those who have no connection with educational institutions and those who have no knowledge of what is meant by higher education have been chosen as members of some of these committees who put all sorts of fantastic questions at the time of interview which provokes laughter from the students ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்தக் குழுவைப்பற்றிக் கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒன்பது கல்லூரிகளைத் தவிர மற்ற அரசினர் கல்லூரிகளில் முதல்வரும், சீனியர் புரபஸரும் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கூட அதிகார பூர்வமற்ற உறுப்பினர் குழுவின் தலைவராக இருந்தார். இந்த ஆண்டு குழுவின் தலைவராக கல்லூரி முதல்வரையே போட்டிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு தரம் அபிவிருத்தி அடைந் திருக்கிறது. சென்ற ஆண்டு, தகுதி, திறமை எந்த அளவுக்கு இருந் தனவோ அதை விடச் சற்று மேலாகவே இந்த ஆண்டு இருக்கிறது.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கும்போது அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்க ளுடைய கருத்தைக் கேட்பதில்லை ; பொது மக்கள் கருத்தையும் கேட்ப தில்லை. அடுத்த ஆண்டாவது அதற்கும் ஒரு கமிட்டி நியமிக்க அரசுக்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொன்ன படி தனியார் பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான தேர்வுக் குழுவை அவர்களே அமைத்துக் கொள்ளுகிறார்கள். அவற்றையும் தேர்ந் தெடுக்கப்பட்ட குழுவினிடத்தில் விடவேண்டுமென்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. அது பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்க இந்த அரசு எண்ணம் கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH ; Mr. Speaker, before making appointments to panchayat union councils or selecting students for the colleges and high schools, interviews are held. Inasmuch as these interviews have proved to be useless and the candidates concerned have to spend a lot of money, will the Government consider the desirability of stopping these interviews ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய தகவல்களை எழுதி அனுப்பினால் எந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வரும்.

திரு. எஸ். முருகையன் : சென்ற ஆண்டு ஆட்சியில் இருந்தவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் எவ்வளவு பேரை இது போன்ற குழுக்களில் நியமித்திருந்தார்கள் ? இப்போது எதிர்க்கட்சியைச் சார்ந்த எத்தனை உறுப்பினர்களை இந்த அரசு இத்தகைய குழுக்களில் நியமித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் இல்லையென்றாலும் சென்ற தடவை எதிர்க்கட்சியைச் சார்ந்த யாரையும் எந்தக் குழுவிலும் போடவில்லை. இந்த ஆண்டு எதிர்க்கட்சியைச் சார்ந்த வர்களையும் பரவலாகப் போடப்பட்டிருக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

[1967 ஜூலை 14

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : அந்தந்தத் தொகுதியிலுள்ள ஸ்தாபனங்களுக்கு அந்தத் தொகுதிகளைச் சார்ந்த எம்.எல்.ஏ.க்களைப் போட்டிருக்கிருர்களா அல்லது வேறு தொகுதியைச் சார்ந்த எம்.எல்.ஏ.-க்களைப் போட்டிருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தந்தப் பகுதிகளிலுள்ள உறுப்பினர்களையேதான் போட வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. வேறு பகுதியில் இருப்பவர்களைக் கொண்டு வரக்கூடாது என்ற நிலைமை இல்லை. பொதுவாகப் பார்த்து நியமிக்கப்படுகிருர்கள் என்ருலும், இது பற்றி இன்னும் திட்டவட்டமான முடிவுகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : காலேஜ் கமிட்டிகளைப் போடும்போது "என் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களை அதிலே போடுவது இல்லை ?" என்று முன்பு கேட்டபோது பழைய தொழிலமைச்சர் அவர்கள் "இது சர்க்காருடைய பாலிசி, அப்படித்தான் வைத்திருக்கிறேம்" என்று சொன்னது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பாலிசி பற்றித் தெரியவில்லை. இப்போது என்ன பாலிசி என்பதை விளக்கிவிட்டேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதிலே மார்க் அடிப்படையில் தேர்ந்தெடுத்துவிட்டால், இப்படிப்பட்ட குழுக்கள் போட வேண்டிய நிலைமை அல்லாமல் போகும் அல்லவா ? இது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்ஞல் அவ்வாறு மார்க் அடிப்படையில்தான் கல்லூரி முதல்வர்கள் தேர்ந்தெடுக்கும் நிலைமை இருந்தது. மார்க் அடிப்படையை மட்டும் பார்க்காது, குடும்பங்களில் நிலைமை, ஏழ்மை, பிற்போக்குப் பகுதியைச் சார்ந்தவர்கள், ஒருவர் கூடப் படிக்காத குடும்பங்கள் உள்ள நிலை இவற்றையெல்லாம் பார்த்து அத்தகையவர்களுக்கும் கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்று முறையில்தான் உத்தியோகப் பற்றற்றவர்களை, பொது மக்களை நன்கு அறிந்துள்ளவர்களை, மன வளம் கொண்டவர்களை இத்தகைய குழுக்களில் போட வேண்டுமென்ற அடிப்படையில் கொள்கை அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. தா. விஜயராஜ் : சென்ற ஆண்டு திருவண்ணுமலை கலைக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு பட்டப் படிப்பிற்கு சிபார்சு செய்யப்படாத காரணத்திஞல், யூனிவர்சிட்டி கமிஷன் சிபார்சு செய்ய வில்லை என்று தெரிகிறது. அங்கு இடவசதி இந்த ஆண்டு உள்ளது. அடுத்த ஆண்டு வேண்டிய இடவசதி செய்து கொடுப்பதாக குழுவிடம் தெரிவித்திருந்தும் சிபார்சு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் தலையிட்டு அதற்கு ஆவன செய்து இந்த ஆண்டு பட்டப் படிப்பிற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்விக்கு தொடர்பில்லை என்ருலும் பல்கலைக் கழகந்தான் அதை முடிவு செய்ய வேண்டும். ஆகவே புது வகுப்புகள் தொடங்குவது, புது இடங்கள் ஒதுக்குவது என்பவை பல்கலைக் கழகம் செய்ய வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு சிபார்சு செய்திருக்கிறது. முடிவு கட்ட வேண்டியது பல்கலைக் கழகத்தினிடம் இருக்கிறது.

திரு. சொ. கோவிந்தராசன் : மதுரை மீனுட்சி அரசினர் பெண் கல்லூரியில் இம்மாதிரி கமிட்டி போடப்பட்டதா ? அங்கு சில தவறுகள் நடந்திருப்பதாகக் கேள்வி. அதுபற்றி ஆராயப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரை மீனுட்சி அரசினர் பெண் கல்லூரியில் இந்தக் குழு போடப்படவில்லை. நான் முதலில் சொன்னபடி சென்ற ஆண்டு எந்த ஒன்பது கல்லூரிகளில் குழுக்கள்

1967 ஜூலை 14]

போடப்பட்டிருந்தனவோ அந்தக் கல்லூரிகளில் இப்போதும் போடப்பட்டு அந்தக் குழுவின் தலைவராக அந்தந்த கல்லூரி முதல்வர்களே இருக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

Thiru K. VINAYAKAM : Sir, however, much the members of the Selection Committee may be large-hearted to safeguard the interests of the Scheduled Castes as well as the Backward Classes and Most Backward Classes, would it not be fair and justifiable for the Government to include a member belonging to the Scheduled Caste or Backward Class community in that Committee so as to safeguard their interests properly and securely ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்பட்ட வகுப்பினர் புறக்கணிக்கப்பட்டு மற்றவர்களைப் போடுகிருர்கள் என்ற நிலை அல்ல. குழு பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதிலுள்ளவர்கள், பிற்பட்ட வகுப்பினரா, தாழ்த்தப்பட்ட வகுப்பினரா அல்லது மற்றவர்களா என்பதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் முறையில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு 16 சதவீதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சத வீதமும் அளிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே மற்றவர்களைப் போட்டதால், எந்த அளவிற்கும் அதில் இழுக்கு ஏற்பட்டு விடவில்லை. உதாரணமாக பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில் 1966-67-ல் மொத்த மாணவர்களின் 46·4 சதவீதம் பிற்பட்டமக்களுக்கு சென்றிருக்கிறது. அவர்களுக்கு என்று 25 சதவீதம் ஒதுக்கினுலும் 46·4 சதவீதம் பிற்பட்ட வகுப்பினருக்கு செல்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 1967-68-ல் 45 சத வீதம் பிற்பட்ட வகுப்பினருக்குச் சென்றிருக்கிறது. காரணம் என்னவென்ருல் பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் அதிக மார்க் வாங்கியிருந்தால், அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு 25 சதவீதம் தரப்படுகிற காரணத்திஞல், இந்த நல்ல உயர்வு இருக்கிறது. ஆகவே பிற்பட்ட வகுப்பினரின் நலன் புறக்கணிக்கப்பட்டு விட்டது இந்த குழுவிஞல் என்று இதன் மூலம் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மட்டும் 25 வினுக்கள் இருக்கின்றன. அடுத்த வினு 322.

Seats in Pre-University Class

*322 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of seats that were available in P.U.C. in all Government and Private Colleges during the last academic year ?

(*b*) whether they are all filled up ; and

(*c*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) சுமார் 50,000.

(இ) கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 47,272,

(உ) பொதுவாக புகுமுக வகுப்பில் (Humanities) பிரிவில் சேர விரும்பிய மாணவர்கள் எண்ணிக்கை பெரும்பாலும் ஒவ்வொரு கல்லூரியிலும் அனுமதிக்கப்பட்ட இடங்களைவிட குறைவாக இருந்தது. குறிப்பாக பெரிய நகரங்களில் உள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் சேர நெருக்கடி அதிகம் எழுந்தது. அதே சமயத்தில் உட்புறமான இடங்களில் உள்ள கல்லூரிகளில் பூரா இடங்களும் முக்கியமாக (Humanities) பிரிவில் நிரம்பவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, is it possible for the Hon. Minister to give a detailed resume of the present position as to whether seats are still available in the mufassal colleges for the P.U.C. and if so, what steps are the Government taking to transfer those students who flock to the City of Madras to come and fill up those seats in the mufassal colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு எல்லாக் கல்லூரிகளிலும் எவ்வளவு இடங்கள் நிரப்பப்பட இருக்கிறது, எவ்வளவு இடங்கள் மிச்சப்பட்டிருக்கிறது என்ற கணக்கை கொடுக்கும்படி கேட்டிருக்கிறோர்கள். 17ம் தேதிக்குள் அதைக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம். இப்போது மாணவர்களைச் சேர்க்கிற முயற்சியில் மாணவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு, அவர்கள் வரவழைக்கப்படுகிற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 17ம் தேதிக்குள் இறுதி முடிவுக்கு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பின்னர்தான், எவ்வளவு இடங்கள் எந்தெந்த கல்லூரிகளில் காலியாக இருக்கிறது என்பதை தெரிவித்த பின்னர் தான், அது தெரிந்த பின்னர்தான், மற்ற மாணவர்களை அங்கு அனுப்ப இயலுமா என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த பி.யு.ஸி. வகுப்பில் இன்னும் 3,000 பேர்கள் தேவைப்படுகிறது என்று சொல்லும் நிலையில் பல கல்லூரிகளில் சேராமல் இருப்பதற்கான பல காரணங்கள் உள்ளன. உதாரணமாக தாம்பரம் பக்கத்தில் எஸ்.ஐ.வி.ஈ.டி. என்ற கல்லூரிக்கு இரண்டு மைல்களுக்கு அப்பால் பஸ் போக்குவரத்து இருக்கிற காரணத்தினுல், அங்கு மாணவர்கள் சேருவதற்கு அஞ்சுகிறுர்கள் என்பது தெரியுமா? ஆகவே கல்லூரி வரையில் பஸ் போக்குவரத்தை நீடிக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்வித்துறை மூலம் இந்தக் கஷ்டம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கஷ்டம் நீக்கப்படுகிற முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தனியார் கல்லூரிகளில் மாணவர்களை சீக்கிரமாக சேர்த்து விடுகிறுர்கள். ஆனல் அரசினர் கல்லூரிகளில் கால தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதத்தை நம் புதிய அரசு தவிர்க்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தாமதத்தை தவிர்க்க வேண்டுமென்ற முறையில்தான் முதலில் 60 சதவீதத்திற்கு மேல் மார்க்குகள் வாங்கியவர்களுக்கு 25 சதவிகிதம் இடங்களை ப்ரின்ஸி பாலே பார்த்து முதலில் சேர்த்து விடலாம் என்று—அப்போது அரசாங்கக் கல்லூரிகளில் திறமையான மாணவர்கள் வந்து சேருவார்கள் என்று— அப்படி ஒரு உததரவு இடப்பட்டிருந்தது. 25 சதவீதம் 60 சதவீதத்திற்கு மேல் மார்க் வாங்கியவர்களைச் சேர்க்கலாம் முதலில் என்றிருந்தது. மற்றும் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளுக்கு முடிந்த பிறகு வருகிறவர்களையும் சேர்த்துக் கொள்கிற நிலையில் இடம் வைக்க வேண்டியிருப்பதாலும், தனியார் கல்லூரிகளில் அதுபற்றிக் கவலைப் படாமல் அவர்கள் விருப்பப்படி சேர்ப்பதற்கு வாய்ப்பிருப்பதால், அவர்கள் விரைவாக முடிவு எடுத்து விடுகிறுர்கள். இங்கு சிறிது காலத் தாழ்வு இதனுல் ஏற்படுகிறது. இந்தக் காலத் தாழ்வு ஏற்படாமல் விரைவுபடுத்தும் முயற்சியை அடுத்த ஆண்டு அரசு மேற்கொள்ள முயற்சி செய்யும்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : கோவை போன்ற இடங்களில் நெரிசல் அதிகமாக இருந்து கொண்டிருப்பதால், அதிக செக்ஷன்களை ஏற்படுத்துவதற்கும், இட நெருக்கடி கல்லூரிகளில் இருப்பதால், மாலை வகுப்புகள் ஏற்படுத்தவும் அரசாங்கம் சிபார்சு செய்யுமா, அதை அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஷிப்ட் முறையை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் அந்தக் கருத்தை ஒப்புக் கொண்டிருக்கிறுர்கள். அதற்கு முன் ஏற்பாடாக பல காரியங்களைச் செய்த பிறகுதான் அதை அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் இந்த ஆண்டு கூடுதலான வகுப்புகளைத் துவங்குகிற முயற்சியில் ஈடுபடலாம் என்று சொல்லி பல கல்லூரிகளில் கூடுதல் வகுப்புகளைத் தந்திருக்கிறுர்கள். அந்த முறையில் பல கல்லூரிகளில் சில பல செக்ஷன்கள் மேலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 85 மாணவர்களைக் கொண்ட அறிவியல் பிரிவு, 95 மாணவர்களைக்கொண்ட கலையியல் பிரிவு தந்திருக்கிறுர்கள். ஆர்ட்ஸ் காலேஜ், கலைக் கல்லூரியில் 24 மாணவர்களைக் கொண்ட பாட்டனி பிரிவை தந்திருக்கிறுர்கள். ஷிப்ட் முறையை பல்கலைக் கழகங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு நெருக்கடிக்குத் தகுந்தாற்போல் நடைமுறையில் வரும்போது திட்டம் தீட்டப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி : அரசாங்க விருப்பப்படி ஒரு சில மாணவர்கள் ஒரே கல்லூரியில் மனு செய்து அதில் இடம் இல்லை என்று சேராமல் தவிக்கிறுர்கள். 16 சதவீதம் ஹரிஜனங்களுக்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டு எல்லாக் கல்லூரிகளிலும் கொடுக்கப்பட்டாலும் அவர்கள் கேட்கிற குரூப்கள் கொடுக்கப்படாமல் பி. ஸி. குரூப்தான் கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக பிற்காலத்தில் அவர்கள் உத்தியோகத்திற்கு சிரமப்பட வேண்டியிருப்பதால், அவர்கள் கேட்கிற குரூப்பை கொடுப்பதற்கு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வகுப்புகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் விகிதாச்சாரம் வகுக்கப்பட்டு கல்லூரிகளுக்கு அறிவிக்கப்படுகிறது. எந்தெந்த பாடத்தை எடுத்துக் கொள்வது என்பதைப் பொறுத்து அவர்கள் தகுதி, அவர்கள் திறமை, எவ்வளவு மார்க்குகள் அவர்கள் வாங்கியிருக்கிறுர்கள் என்பதைப் பார்த்து அளிக்கிறுர்கள். ஒருவருக்கு ஆசை ஒருவிதமாயிருக்கலாம், அவர்கள் அறிவுத் திறன் அடிப்படையில் பெறும் தேர்வு எண் வேறுவிதமாயிருக்கலாம். அதற்கேற்ப வகுப்புகளைப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று முதல்வர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதன்படி வழங்கப்படுகிறது.

திரு. அ. பால. சுப்பிரமணியம் : பாளையங்கோட்டையிலே சில கல்லூரிகளிலே மாணவர்கள் 350 மார்க்குகள் வாங்கினுல்தான் இடம் என்று வற்புறுத்துகிறுர்கள். ஒரு கல்லூரிக்குக் கீழே ஹைஸ்கூல் இருக்கிறது. அந்த ஹைஸ்கூலிலே படித்துவிட்டு அதைச் சேர்ந்த கல்லூரியிலே சேர வேண்டுமென்றாலும்கூட 350 மார்க்குகள் வேண்டுமென்று வற்புறுத்துகிறுர்களே, அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறைபாடுகள் குற்றச்சாட்டுகள் பரவலாக எங்கு பார்த்தாலும் சொல்லப்படுகின்றன. அவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது, சில கல்லூரிகளிலே 400 மார்க்குகள் வேண்டுமென்று கேட்கிறுர்கள், சில கல்லூரிகளில் 350 மார்க்குகள் வேண்டுமென்று கேட்கிறுர்கள், சில கல்லூரிகளில் 300 மார்க்குகள் வேண்டுமென்று கேட்கிறுர்கள். முதலிலே எண்ணிக்கைகளை அடிப்படையாக வைத்துக்கொள்ளவேண்டுமா? அவர்களுடைய குடும்பங்களை அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டுமா ? அவர்களுடைய சமுதாய பிற்பட்ட தன்மையை அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டுமா ? அவர்களுடைய இடத்தை அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டுமா ? அப்படியே ஏதாவது முறைப்படுத்திக் கொண்டாலும், அதை எந்தெந்த கல்லூரிகளில் வைத்துக்கொள்வது என்பதுபோன்ற குழப்பங்கள் எல்லாம் இருக்கின்றன. உதாரணமாக சென்ற ஆண்டிலே சென்னையிலே 8 கல்லூரிகளுக்கு 15,600 பேர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். இருந்த இடம் 450 இடங்கள்தான். அது மாதிரி திருச்சியிலே மூன்று கல்லூரிகளிலே 9,100 பேர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். இருந்த இடம் 1,760 தான். பொன்னேரியிலே 244 பேர்கள்

[1967 ஜூலை 14

விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் இருந்த இடமோ 340. அப்படி பல இடங்களில் இருந்ததாகச் சொல்ல முடியாது. குறிப்பிட்ட சில இடங்களில் தான் அந்த நிலை இருந்தது. ஆகவே அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து சரிப்படுத்தவேண்டுமென்பதற்காக கல்விக் குழு ஆராய்ந்து பார்த்து தக்க முடிவு எடுத்தால், அடுத்த ஆண்டிலே அதை சீர்த்திருத்தலாம் என்று கருதி இருக்கிறேன்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் திருச்சியிலே ஒரு கல்லூரியில் 9 ஆயிரம் பேர்களிடமிருந்து அப்ளிகேஷன் வந்தது என்று சொன்னார்கள். ஒரு அப்ளிகேஷனுக்கு 4 ரூபாய் என்று கல்லூரிகளிலே வாங்குகிறார்கள். கல்லூரிகளிலே சேர்ந்தவர்கள் போக மீதி உள்ளவர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ? திருச்சியிலே எந்தெந்த இடத்தில் புதிய வகுப்புகள் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு கணக்கைத் தான் சொன்னேன். இந்த ஆண்டு கணக்கு இன்னும் வரவில்லை. இந்த ஆண்டு இன்னும் அதிகமாக இருக்கலாமே தவிர, குறைவாக இருப்பதற்கு இடம் இல்லை. விண்ணப்பத்தாள்கள் கொடுப்பதற்கு பணம் வசூலிக்கிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 8 அணா தான் வசூலிக்கப்படுகிறது. இடம் கிடைத்த பிறகு செலுத்தப்படவேண்டிய கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிறது. சில இடங்களிலே 4 ரூபாய், 5 ரூபாய், 6 ரூபாய் என்று பலவிதமாக வசூலிக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்தவேண்டுமென்று கல்லூரி முதல்வர்களுக்கு தெரிவித்திருக்கிறோம். பல்கலைக் கழகத்திடமும் இதை ஒருமுகப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கிருந்து தகவல் வந்தவுடன் அரசாங்கம் முடிவு செய்யும். திருச்சியைப் பொறுத்தவரை பெரியார் கல்லூரியில், பிஷப் கல்லூரியில், நேஷனல் கல்லூரியில் ஆகியவற்றில் இட வசதிகள் செய்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் பல்கலைக் கழகத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் முடிவு தெரியவில்லை.

ஆலைகளில் நிர்வாகக் குழு

* 323 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு பஞ்சாலைகளிலும், சர்க்கரை ஆலைகளிலும், எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை புதிய நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்படுகின்றனர் ?

(இ) இனிமேல் புதிதாக நியமிக்கும் நிர்வாகஸ்தர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) முதல் தடவையாக சர்க்கரை/நூல்நூற்பு ஆலைகளில் பதிவாளர்களால் நியமிக்கப்படும் நிர்வாகக் குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும். மேற்படி இலாகா அதிகாரி தொடர்ந்து நிர்ணயிக்கும் கால அளவுக்கு நிர்வாகக் குழு கடன் வாங்கிய மூலதனம் முழுவதும் திருப்பிக் கொடுக்கும் வரை செயல்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எல்லாத் தொழிற்சாலைகளிலும் ஒரே நேரத்தில் நியமனம் செய்யப்படுகிறதா ? அல்லது வெவ்வேறு காலத்திலே நியமனம் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூற்பு ஆலைகளைப் பொறுத்தவரையில் ஒரே காலத்தில்தான் 10 நூற்பு ஆலைகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றன. சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை தனித்தனியாக நியமனம் செய்யப்படுகின்றன.

1967 ஜூலை 14]

திரு என். எஸ். வி. சித்தன் : கூட்டுறவு தொழிற்சாலையின் நிர்வாகக் குழுவின் தலைவர்கள் (Chairman, Board of Directors) பெரும்பாலும் உத்தியோகப் பற்றற்றவர்களாக இருக்கவேண்டுமென்று வகுத்திருக்கிறார்கள். ஆனால் சில ஆலைகளில் அரசாங்க அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அதற்கான சிறப்புக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்க அதிகாரிகள் மேனேஜிங் டைரக்டர்களாக இருக்கிறார்கள். ஆனால் சேர்மெனாக இருப்பவர்கள் உத்தியோக சார்பற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். குறிப்பாக ஒரு இடத்தில் மட்டுமே அதனுடைய சேர்மென் டைரக்டராக இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கு இருக்கிற முறை முன்பு இருந்த பிரகாரம் செய்யப்பட்டது. ஆனால் இப்போது இருக்கிற முறை பிரகாரம் எப்படி செய்வது என்பது யோசிக்கப்படும்.

திரு கே. என். குமாரசாமி : அரசினர் நடத்துகின்ற தொழிற்சாலைகளைவிட தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளில் தொழில் தகராறுகள் அதிகமாக இருக்கின்றன என்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமாக இருக்கின்றனவா இல்லையா என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் தான் தெரியும். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. தனியார் துறையிலிருந்து பெறுவதைவிட அரசாங்கத்திலே அதிகமாகப் பெறமுடியும் என்ற ஆசை, உரிமை காரணமாக தொழிலாளர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : சர்க்கரை ஆலைகளுக்கு நியமிக்கப்படுகின்ற டைரக்டர்கள் எந்தெந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களிலே இன்னின்னார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கோவாபரேடிவ் பாங்கியிலிருந்து இன்னின்னாரும், தொழில் தெரிந்தவர்கள் இன்னின்னாரும், தனியார் துறையிலிருந்து இவ்வளவு பேர்களும் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்டம்

* 324 வினா.—**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறநிலையச் சட்டம் 92-ம் பிரிவின் பிரகாரம் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதியுடன் முடியும். 1966–67-ம் வருட நிதி ஆண்டில் அடியிற்கண்டவைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்ட செலவுகள் என்னென்ன ?

(1) பிராந்திய குழுக்கள், (2) ஆலோசனைக் குழுக்கள், உபகுழுக்கள், (3) புத்தகங்கள், சஞ்சிகைகள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1967-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய (அதாவது 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய) ஆன செலவு பின்வருமாறு :—

	ரூ.	பை.
1. வட்டாரக்குழுக்கள்	4,863	70
2. ஆலோசனைக் குழுக்களும் உபகுழுக்களும் ..	1,186	40
3. நூல்களும் வெளியீடுகளும்	18,787	35

[1967 ஜூலை 1

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, வட்டாரக்குழு செலவு செய்ய கூடிய செலவுகள் என்ன முறையில் செலவு செய்யப்படுகிறது ? அந்த செலவுகளெல்லாம் தணிக்கைப் பார்க்கப்பட்டு அரசாங்கத்திற்கு வந்திருக் றதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் குழு உறுப்பின களுடைய போக்குவரத்து செலவு, அங்கே அந்தக் குழு கூடும்போ ஏற்படுகின்ற செலவினங்கள் அவற்றையெல்லாம் சேர்ந்து செலவின என்று வைக்கப்பட்டிருக்கிறது. எல்லா வட்டாரக் குழுக்களுக்கும் சேர்த் ரூ. 4863 70 ஒரு ஆண்டிலே செலவு செய்யப்பட்டிருக்கிறது. இ ஆடிட்டரால் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : அறநிலைய குழுக்களின் உறுப்பினர்களைப்போடும்போது ஆஸ்திகர்களாகப் போடப்படுகின்றதா ? அப்படியில்லையென்றால் அப்படிப் போடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆஸ்திகர்கள், நாஸ்திகர் கள் என்பது உள மனப்பான்மை பொறுத்தது. குழுக்களுடைய வேலை களை பொறுப்புகளை ஒழுங்கு முறையாக, நாணயமாக செய்யக்கூடியவர் களைப் போடுவது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

திரு. எம். சி. பாலன் : அறநிலைய உறுப்பினராகவருவதற்கு என் னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு அ. மாரிமுத்து : இந்த அறநிலைய பாதுகாப்பிற்கு ஏரியா கமிட்டிகள் அமைத்திருக்கிறார்கள். கிராமங்களிலே எந்தெந்த கோவில் கள் அறநிலைய நிர்வாகத்தின்கீழ் இருக்கின்றனவோ அவற்றை இரண்டு மூன்று பகுதிகளாக அரசியல் கண்ணோட்டத்துடன் பிரித்திருக்கிறார்கள். இதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே இதைப் போக்கு வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏறியா கமிட்டியை எடுத்து விடவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இதைப்பற்றி இப்போது எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை. ஆந்திராவைப் பார்த்ததிலே இதுமாதிரி ஒரு ஏரியா கமிட்டி அமைத்து பிறகு எடுத்துவிட்டார்கள். அதைப்போலவே நாமும் ஏரியா கமிட்டியை எடுத்துவிடலாமா அல்லது அதற்குப்பதிலாக ஆலோசனைக் கமிட்டியைப் போடலாமா என்று யோசிக்கப் பட்டுவருகிறது.

திரு, எஸ். முருகையன் : சமீபத்தில் வட ஆற்காடு அறநிலைய பாதுகாப்புக் குழுவில் இதுபோன்ற குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுவதில் ஆளும் கட்சியிலிருந்து ஒருவரைக்கூடப் போடாமல், எதிர்க்கட்சியில் உள்ளவர்களை 5 பேர்களைப்போடுவதற்கான காரணம் என்ன

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எற்கெனவே போடப் பட்டதுதான் இந்தக்குழு. இந்த அரசு அமைவதற்கு முன்னாலே போடப் பட்டதுதான் இதற்குக் காரணம்.

THIRU K. VINAYAKAM ; Whereas it is incumbent that a trustee for any Hindu Temple should have complete faith in Hinduism, is it not fair that the members who are vested with the powers of selecting the trustee should also have complete faith in Hindu Religion and such being the case, will the Government come forward at least in future to select only those who have faith in Hinduism to serve on these committees ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எப்படிப்பட்டவர்கள் இருக்கவேண்டும். எப்படிப்பட்ட உளப்பாங்கு கொண்ட வாகள இருககவேணடும் என்ற நியதி இல்லை. அப்படிச் செய்தால்

967 ஜூலை 14]

ந்த இலாக்காவில்கூட எப்படிப்பட்டவர்கள் இருக்கவேண்டும் என்பதையும், ந்த அதிகாரிகளுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பதையும், அதற்குப் றகு அந்த நம்பிக்கை எந்த அளவிற்கு இருக்கவேண்டுமென்ற அளவு கருவிகள் சரியாக இருக்கிறதா என்பதையும் காணவேண்டும். ஆகையால் அப்படியில்லாமல் பொதுவாக குறிப்பிட்ட இடத்தில் இன்னார் இருப்பதால் இன்ன தீங்கு வந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டால், அவரை நீக்கிவிட்டு அந்தப் பொறுப்பை செம்மையாக நிறைவேற்றுகிறவர் களிடம் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

திரு எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் பூஜை நடத்துவதற்காகப் போடப்படுகிறதா ? கடவுள் நம்பிக்கை கட்டாயம் வேண்டுமென்று அரசு கருதுகிறதா ? முற் பகல் 9-30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்களெல்லாம் என்ன நோக்கத்திற்காகக் கோவில்கள் அமைந் திருக்கின்றனவோ அந்த நோக்கங்கள் சரிவர, ஒழுங்காக ஈடேற, அந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

* 325 வினா.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னையில் உள்ள அறநிலைய ஆணையர் அலுவலகத்துடன் இணைத்திருக்கும் டிவிஷனல் இஞ்சினியர் வேலைகள் வரையறுக்கப் பட்டுள்ளதா ?

(இ) அவர் 1966–67-ம் ஆண்டில் எத்தனை ஆலயங்களில் நடை பெற்று வரும் கட்டுமான வேலைகளைப் பார்த்துள்ளார் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ஆலயங்களைப் புதுப்பித்தல், பாதுகாத்தல் ஆகிய பணிகளை கோட்டப் பொறியாளர் மேற்பார்வையிட்டு செலவு மதிப்பீடுகளைப் பரிசீலனை செய்யவேண்டும்.

(இ) 76 ஆலயங்கள்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, ஆலயங்களின் கட்டுமான வேலைகளைக் கவனிக்கத் தனியாக இருக்கிற பொறியியல் பகுதியை எடுத்து விட்டு, பொதுப்பணித் துறையோடு சேர்த்து கவனிக்கப்பட்டால், அது சீராகவும் சிக்கனமாகவும் இருக்கும். அதைப் பற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பொறியியல் பகுதி 1963-ஆம் ஆண்டு அமைப்பது என்று முடிவு செய்து 1964-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அற நிலையத் துறையின் பாதுகாப்பில், 8,641 கோவில்கள் இருக்கின்றன. இவைகளிலே கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டவைகள், 600, 700 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோவில்களைப் பொறுத்த வரையில் தனியாகக் கண்காணிப்பு இருந்தால் தான் அவைகள் சீர்கெடாமல் இருக்கும். பொறியியல் துறையில் இருந்தால், அந்தப் பொறியாளர்கள் வேறு பல அலுவல்களை கவனிக்கவேண்டியிருக்கிறது ; அதோடு சேர்ந்து இந்த வேலைகளையும் கவனிக்க வேண்டியிருக்கும். 1963-ம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் பொறியியல் பகுதியில் கட்டடப் பொறியாளர், உதவிப் பொறியாளர், ஜூனியர் பொறியாளர், சிலைஞர் வல்லுனர் இருந்தும், ஒரு ஆண்டில் அவர்கள் 76 கோவில்களைத் தான் கவனிக்க முடிந்திருக்கிறது. எட்டா யிரத்துச் சில்லரை கோவில்கள் இருக்கின்றன. நல்ல முறையில் பழுது பார்க்கப்படாவிட்டால், பழம் பெரும் கோவில்களெல்லாம் பழுதடைந்து விழுந்துவிடும். உதாரணமாக, கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்தி ரன் கட்டிய கோவில் சீர்படுத்தப்படாத காரணத்தினால், அது விழுந்து போயிற்று. அந்தமாதிரியான கோவில்களைச் சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டுமென்று கண்டறிந்து கூறி, செலவுகளை வரையறுத்துக் கூற

அதிலேயே நாட்டம் கொண்ட பகுதி இருந்தால்தான் இந்த வேலைகள் செம்மையான முறையில் நடைபெற முடியும். பொதுப்பணித் துறையில் இந்தப் பொறுப்பை விட்டால், அது அந்த அளவுக்கு நடைபெறுது என்று தான் இப்போது தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி கமிஷன் பரிந்துரைகள்.

* 326 வினா.—**திரு. என். மருதாசலம் :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி கமிஷன் சிபார்சின் அடிப்படையில் மாநில ரீதியில் ஆரம் பக் கல்விக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் விவாதித்து முடிவெடுப்பதற்கு ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரி களும், கல்வி நிபுணர்களும் சமப்பங்காகக் கொண்ட கல்விக் கூட்டுக் குழுக்களை அமைப்பது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை கல்வி கமிஷன் பரிந்துரைத்திருப்பது போன்ற கல்விக் கூட்டுக் குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்த அரசு கருதுகிறது. ஆகவே, அரசு அந்த சிபாரிசை ஏற்றுக் கொள்ளும் நிலையி லில்லை.

திரு. என். மருதாசலம் : ஸார், நம் மாநிலத்திலே கல்விக் கமிஷன் சிபாரிசுப்படி, கல்வி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஆராய கல்விக் கமிஷன் ஒன்றை நம் மாநிலத்தில் ஏற்படுத்தினால் கல்வியின் தரம் உயரும், அதனால் கல்வி ஆசிரியர்களுக்கும் ஒரு உற்சாகம் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோத்தாரிக் கமிஷன் இப்படிப்பட்ட ஒரு சிபாரிசு செய்திருக்கிறது, செய்ய லாம் என்று. ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகளின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி போட்டு, அதற்கு கல்வித்துறைச் செயலாளர் செயலாளராக இருந்து நடத்துவது என்று சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி அமைப்பதன் மூலமாக ஏற்படும் நன்மையை விட, இப்போது இருக்கிற முறையில் அதிக நன்மை ஏற்படக் கூடும். கல்வித் துறையில் அதிகார பூர்வமான சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமை ஆசிரியர்கள் சங்கம், சவுத் இண்டியன் டீச்சர்ஸ் கில்ட் போன்ற பல்வேறு சங்கங்கள் தனித்தனியாக ஆராய்ந்து, சிபாரிசுகளை வழங்கி, அவைகளின் மீது தக்க முடிவு எடுக்க இப்போது இருக்கிற அமைப்பே நடைமுறைக்கு உகந்ததாக இருக்கிறது. இதற்காக ஒரு குழு அமைத்தால், பிரதிநிதிகள் ஒரு சிலர் தாம் இடம் பெறக் கூடும். அதிகாரிகளில் ஒருசிலர்தான் இடம் பெறக்கூடும். கல்வித் துறை செயலாளர் அந்தக் குழுவுக்குச் செயலாளராக இருப்பதால், அவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும் நிலைமை இருக்கிறது. அந்த முடிவு அரசுக்கு வரும்போது, அமைச்சரவைக்கு வரும்போது அந்தச் செயலாளர் தான் ஆராயவேண்டும். அவரும் இருந்து அங்கே செய்த முடிவை அவரே இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடர்பாடுகள் இருப்பதால், இப்போது இருப்பதே சரியாக இருக்கும். அவர்களைக் கேட்டுச் செய்ய ஆலோசனைக்குழு இருப்பதால் கல்வியின் நிலை, கல்வி நிலயங்கள் பற்றி இப்போது இருக்கிற முறையில், அடிப்படையில் பணியாற்றுவது வசதியாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

Neighbourhood schools

* 327 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are contemplating to start "Neighbourhood schools" under which rich and poor students would have to study in the same schools since all schools would have the same basic facilities and standards ; and

(*b*) whether the Government will get any financial aid from the Central Government for such "Neighbourhood schools" ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, is it a fact that the Central Government have recommended to the Madras Government to start such schools because they are largely in vogue in England where most public schools have got "Neighbourhood" schools so as to feed not only children coming from the higher strata of society but also children coming from the lower strata of society ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நெய்பர்ஹூட் ஸ்கூல் இருக்கவேண்டும் என்பதை இந்தக் கல்விக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. நெய்பர்ஹூட் ஸ்கூல் என்ற அளவுக்கு அதன் நோக்கம் என்ன என்றால், ஒரு பள்ளி எந்தப் பகுதியிலே இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள்மட்டும்தான் அந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதாகும். அந்த அளவுக்கு நம் நாட்டுப் பெற்றோர் கள் இசைந்து வருவார்களா என்பது பிரச்சினையாக இருக்கிறது. உதாரண மாக எடுத்துக்கொண்டால், ஒரு குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளியில் அந்த ஏரியாவிலுள்ள மாணவர்கள் மட்டும்தான் சேரவேண்டுமே தவிர, வேறு பகுதி மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வரக்கூடாது. க்ரிஸ்டியன் காலேஜ் ஸ்கூல் இருக்கிறதென்றால், அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிறவர்கள்தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வடசென்னையில் இருக்கிற ஸ்கூல் என்றால், அந்தப் பகுதியிலுள்ள, அந்த ஸ்கூலைச் சுற்றி இருக்கிற மாணவர்கள் தான் அந்த ஸ்கூலில் சேரவேண்டும். வேறு பகுதி மாணவர்கள் இந்தப் பள்ளிக்கு வர முடியாது, இந்தப் பகுதி மாணவர்கள் வேறு பள்ளி களுக்குச் செல்ல முடியாது. இது நம்முடைய நாட்டு நடைமுறைக்குச் சரிப்பட்டு வராது. துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், கிராமங் களில் அந்த முறைதான் இருக்கிறது. அந்த முறையைக் கொண்டு வந்தால் ஒரு பள்ளியில் கொண்டுசேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அந்தப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வரவேண்டும். அந்த முறையில் நெய்பர்ஹூட் ஸ்கூல்ஸ் என்று கட்டாயமாகக் கொண்டு வந்தால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பெற்றோர்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சேர்க்கவேண்டு மென்று நினைக்கலாம். அதற்காகப் பள்ளி கூடம் இருக்கிற இடத்திற்குக் குடி யேற வேண்டியிருக்கும். அப்படிக் குடியேறிப் படிக்க வைப்பதிலே கஷ்டங்கள் இருக்கும். இப்போது எல்லாப் பள்ளிகளிலும் வசதிகளைப் பெருக்கவும், எல்லாப் பள்ளிகளும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லா ஆசிரியர்களும் ஒரே தரத்தில் இருக்கவும், எல்லாப் பள்ளிகளிலும் உள்ள ஆய்வுக் கூடங்கள் ஒரே தரத்தில் இருக்கவும் கவனம் செலுத்திய பிறகு, எல்லாப் பள்ளிகளும் எல்லா முறையிலும் ஒரே தரமாக இருக்கிறது என்று கருதக்கூடிய நிலைமை வருமானால், அது வெற்றி பெறக் கூடும். அது வரையில் பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறான காரியத்தைச் செய்யக் கூடாது.

பள்ளி உதவி மேற்பார்வையாளர்கள்

* 328 வினா.—**திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூட உதவி மேற்பார்வையாளர்கள் (**Junior Deputy Inspectors of Schools**) ஓய்வு பெறும் வயது என்ன ?

(இ) அதை ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதுக்குச் சமமாக உயர்த்த யோசனையுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐம்பத்தைந்து வயது.

(இ) யோசனைகள் வந்துள்ளன. அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, பள்ளி மேற்பார்வையாளர்களாக, ஆசிரியர்களாக இருந்து அந்தப் பதவிக்கு வருவதால், ஆசிரியர்களுக்குள்ள வயதை அவர்களுக்கு நிர்ணயம் செய்ய இந்த சர்க்கார் முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையில் உள்ள பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களுக்கு வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற நிர்வாகத் துறையில் அரசிதழ் பதிவு செய்தவர்களுக்கு 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பதிவு பெறுதவர்கள் வயதை உயர்த்துவதுபற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை காரணமாக ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் ஸ்கூல்ஸ் இன்றைக்கு எவ்வளவு பேர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய தகவல் இப்பொழுது இல்லை.

Safety Belts

*329 Q.—Thiru K. Vinayakam: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to order the wearing of "Safety belts" for all the automobile drivers, which will secure the drivers fixed to the seats while driving ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. விநாயகம்: ஸார், இந்த சேஃப்டி பெல்ட் மோட்டார் வண்டிகளை ஓட்டுகிற டிரைவர்களுக்கு மாத்திரம் என்று அல்ல; மோட்டார் சைக்கிளில் போகிறவர்களுக்கும், ஸ்கூட்டர்களில் போகிறவர்களுக்கும் இது பயன்படும் என்று கருதப்படுகிறது. அவர்களையாயினும் நிர்ப்பந்தப்படுத்தி அதைப் போட்டுக்கொண்டுதான் ஓட்ட வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் "பை நெகோஷியேடிங் எ பெண்ட்"—அதாவது ஒரு இடத்தில் திரும்பும்போது—அவர்களுடைய இடத்திலிருந்து நழுவிக் கீழே விழுகிறார்கள். அப்போது பக்கத்தில் இருக்கிற மங்கையும் கீழே விழும் நிலைமை இருக்கிறது. அப்படி இல்லாமல் இரண்டு பேர்களையும் சீட்டோடு கட்டிப்போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைப் போடுவதன்மூலம் ஒரு அருமையான காட்சியைக் காணத் தவறி விடுவார். அதற்கு இப்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

தூறு எடுக்கும் கருவிகள்

*330 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூறு எடுக்கும் கருவிகள் வடார்க்காடு மாவட்டத்திற்கு எப்போது கொண்டு வரப்படும் ?

(இ) இப்போது எந்த மாவட்டத்தில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 1967-ம் வருஷம் ஜூலை மாத வாக்கில்.

(இ) இரண்டு முழு யூனிட்டுகள் தென் ஆர்க்காடு மாவட்டத்திலும், நான்கு முழு யூனிட்டுகள் தஞ்சாவூர் மாவட்டத்திலும் இப்போது இருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: பத்து ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து ஏற்கெனவே இருந்த அமைச்சர் உயர்திரு. கக்கன் இருந்த காலத்திலிருந்து இந்தக் கருவிகள் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு வரும் என்று ரிபோர்ட்டு வைத்தார்கள். அவர்கள் அதற்குப் பிறகு அதைக் கவனிக்கவில்லை. இன்றைக்கு இருக்கக் கூடிய நமது மதிப்பிற்குரிய மராமத்து இலாகா அமைச்சர் அவர்களாவது உடனடியாக அங்கு இருக்கக்கூடிய ஏரிகளைத் தூர் எடுப்பதற்கு வேண்டிய கருவிகளை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது அந்தக் கருவிகளின் வேலை தஞ்சை மாவட்டத்தில் ஓரளவுக்கு முடிவு பெற்று விட்டன. ஆகவே, விரைவில் அவை அனுப்பப்படும்.

திரு. நா. காசிராமன்: தஞ்சை மாவட்டத்திற்கு நான்கு கருவிகள் அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். அவை எங்கெங்கே வேலை செய்தன என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காவேரிப் பகுதியிலே, குறிப்பாகக் கல்லணைப் பகுதியிலே வேலை செய்தன.

திரு. எம். சண்முகம்: தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இந்தக் கருவிகளைக் கொண்டு தூர் எடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் எத்தனை ? அவற்றில் இதுவரையில் முடிவடைந்தவை எவ்வளவு ? இன்னும் எத்தனை பாக்கியிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி போடவேண்டும்.

Dr. H. V. Hande: Is it a fact that a number of these desilting machines are not properly working due to want of spare parts ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது தவறான தகவல். இப்பொழுது நம்மிடத்தில் இருக்கிற எல்லாக் கருவிகளும் ஒழுங்காக வேலை செய்து கொண்டு வருகின்றன.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: மொத்தம் எத்தனை யூனிட்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த யூனிட்டுகள் எந்தெந்த ஜில்லாவில் அதிகமாகச் செயல்பட்டன ? எந்தெந்த ஜில்லாவில் இன்று வரையில் செயல்படாமலே இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மொத்தம் ஆறு யூனிட்டுகள். அவற்றில் இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் நான்கும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. செங்கற்பட்டு, மதுரை, தென் ஆர்க்காடு, ராமநாதபுரம், திருச்சி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் இந்தக் கருவிகள் ஆரம்பத்திலேயே வேலைகளைச் செய்திருக்கின்றன.

திரு. ஓ. கோவிந்தராசன்: தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வீடூர் பகுதியில் ஆறு மாத காலமாக டி. டி. 20 என்ற புல்டோஸர் வேலை செய்யாமல் இருந்துகொண்டிருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளினால் அதைப் பழுது பார்த்து வேலைக்கு லாயக்காக செய்ய முடியவில்லை. இதுபற்றித் தவறான ரிப்போர்ட்டு செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அந்த

கருவிகளை, பல மாவட்டங்களுக்கும் அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்த இயந்திரத்தை சீக்கிரம் பழுதுபார்த்து அந்த மாவட்டத்தில் துரிதமாக வேலையை முடித்துக்கொண்டு, இதர மாவட்டங்களுக்கு அந்தக் கருவிகளை அனுப்பக் கூடிய அளவிலே உத்தர விடுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வீடூரில் அந்தக் கருவிகளின் வேலை விரைவிலே முடிவடைந்துவிடும். அவை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் அனுப்பப்படும் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

புலவர் க. முருகையன் : தஞ்சை கல்லணைப் பகுதியில் ஏறக் குறைய ஆற்றில் தூர் வாரும் வேலைகள் முடிந்து வருகின்றன. தஞ்சையில் திருவையாறு தென் பகுதியிலே உய்யகுண்டான் வாய்க்கால் தூர்ந்து போய்க் கிடக்கிறது. அதைப்போல பல ஏரிகளும் தூர்ந்து இருக்கின்றன. அந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய நமது அமைச்சர் அவர்கள் உத்தர விடுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாசனக் காலத்தில், தண்ணீர் வருகின்ற காலத்தில் அவைகளையெல்லாம் வேலை செய்ய இயலாது என்பதனை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : மேல் பவானி, கீழ் பவானி, மேட்டூர் முதலிய அணைகளிலே வெள்ளம் வந்த காலத்தில் ஏராளமாகத் தண்ணீர் நிரம்பி, ஸில்டு படிந்திருக்கிறதே, அதை அகற்றுவதற்குத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது நம்மிடமுள்ள ஆறு யூனிட்டுகளைக் கொண்டுதான் இந்த வேலைகளையெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. பரம்பிக்குளம்—ஆளியாறு வேலை முடிந்தவுடன், அங்கேயிருந்து விடுபடுகின்ற அதிகப்படியான யூனிட்டுகள்மூலம் அந்த வேலைகளை உடனடியாகத் துவக்குவதற்கு வழிவகுக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : வீடூர் பகுதியில் ஆத்திக்குப்பம், அங்கணிக் குப்பம் ஆகிய இடங்களிலுள்ள நிலங்களில், வீடூர் ஏரியின் உடைப்பின் காரணமாக, 2, 3 அடி மணல் மூடிக்கிடக்கிறது. அந்த நிலங்களைச் சீர் திருத்தி உபயோகப்படுத்துவதற்கான யோசனை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஈ. எம். நடராசன் : தூறுவாரும் கருவிகளை நல்ல ரோடுகள் இருந்தால் கிராமங்களுக்கு எடுத்துப் போகலாம். ஆகவே, ரோடு இல்லாத கிராமங்களுக்கு அவற்றை எடுத்துப்போக வழிவகை செய்யப்படுமா ? அல்லது வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கேள்விக்கான பதிலைக் கேள்வியின் தொடக்கத்திலேயே அவரே கூறியிருக்கிறார்.

உணவுப் பொருள்கள் விற்பனை

*331 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுப் பொருள்களைக் கள்ள மார்க்கெட்டில் விற்பனைசெய்பவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :

(அ) ஆம்.

(இ) வர்த்தக வரிகள் துணைக் கமிஷனர் பதவித் தரத்தில் தனியாக உணவு வழங்கல் துணைக் கமிஷனர் ஒருவரின்கீழ், வணிகர்கள், அரிசி ஆலைக்காரர்கள், கள்ளச் சந்தையில் விற்பனை செய்வோர் ஆகியோரின் செயல்களைக் கண்காணிக்க செயல் முறைக் காத்து ஒன்று அண்மையில் அமைககப்பட்டுள்ளது. கண்காணிப்புக் காத்து தற்போது முனைப்பாகச் செயலாற்றி வருகிறது. இவ்வமைப்பின் நோக்கம் நிறைவேற அக்காத்து முற்றிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரிசி விலையிலும் பிற இன்றியமையாப் பொருள்கள் விலைகளும் பெருமளவு ஏற்றம் ஏற்படுவதை விழிப்பாக கவனிககுமாறும் அத்தகைய போக்கைத தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

Thiru K. VINAYAKAM : After the constitution of this body to detect the culprits, may I know whether any instances have come to the notice of the Government how many people have been booked and how many people have been fined or what action has been taken against unsocial elements that sell food-grains in the blackmarket?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : So far we have no information from the districts. From the District Collectors information is collected and when it is available, it will be placed on the table.

திரு கே. போஜன் : கள்ள மார்க்கெட் விற்பனை என்றால், உணவு தானியங்களை இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று சர்க்கார் விலை நிர்ணயித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உயர்ந்த பட்சமாக என்ன விலை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலைக்குள் இருக்குமாறு அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் அங்கிருக்கிற சந்தை விலைகளைக் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷனில் கிடைக்கிற அரிசி கேரள எல்லைப் பகுதியிலே ஒரு படி அரிசி ரூ. 4-க்கு விற்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கு ஏழை எளியவர்களாக இருப்பவர்களுடைய ரேஷன் கார்டுகளைச் சில செல்வந்தர்கள் மொத்தமாக ப்ளெட்ஜ் பேரில் வாங்கி, அவற்றின் பேரில் கிடைக்கிற அரிசியை மொத்தமாக வாங்கி, அதைக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்து வருகிறார்கள் என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ? தெரிந்திருந்தால் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : கேரளாவுக்கு மேட்டூர் வழியாகக் கள்ளக் கடத்தல் செய்கின்ற லாரிகளில் உள்ள அரிசியைமட்டும் பறிமுதல் செய்து, அதற்கான விலையை அளித்துவிட்டு, லாரிமீது எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ? கள்ளக் கடத்தல் செய்யும் லாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கள்ளக் கடத்தல் செய்யும் லாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று திட்டவட்டமாக அரசாங்கம் கூறவில்லை. ஆனால் தற்பொழுது இப்படிப்பட்ட லாரிகளைப்பறிமுதல் செய்வதற்கும், அவற்றை வழக்கு மன்றங்களில் கொண்டுபோய் நிறுத்துவதற்கும், தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டு, கள்ளக் கடத்தல் வழக்குகள், பெரும் புள்ளிகள் சம்பந்தப்பட்டவைகளாகவே இருப்பதால், அந்த வழக்குகள் ரகஸ்யமாகவே நடந்து முடிந்து விடுகின்றன. அப்படியில்லாமல், குற்றம் செய்தவர்களை விலங்கிட்டு, ஊர் வலமாக இழுத்துவர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்படிச் சொல்வது வழக்கு மன்றங்களையே அவமதிப்பதாக இருக்கும். முறையாக நடைபெறுவதாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் அரசாங்கம் கொள்முதல் செய்தபிறகு, சர்ப்ளஸ் ஆக இருக்கும் நெல்லை அவர்கள் விற்கின்றபோது, அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தை உபயோகிக்காமல் இருப்பதற்கு உத்தரவாதம் அமைச்சர் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அப்படி எதிராக உபயோகித்ததாக எந்த விதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, முன்பு கள்ள மார்க்கெட் கழுகுகளைத் தூக்கில் இடவேண்டும் என்று காலஞ்சென்ற பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது தூக்கில் இடாவிட்டாலும் கள்ள மார்க்கெட்காரர்களுக்குக் கடும் சிறைத் தண்டனையாவது கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே சொன்னேன். சிறைத் தண்டனையே கொடுக்க வேண்டும் என்று. அப்படிச் செய்பவர்களுடைய தானியங்களைப் பறிமுதல் செய்வதோடு, அதற்கு உபயோகிக்கும் லாரிகளையும், இதர வாகனங்களையும்கூடப் பறிமுதல் செய்ய வேண்டும், சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்ட முறை இருக்க வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதோடு, வேறு சொத்து வைத்திருப்பவர்களாக இருந்தால், அந்தச் சொத்து முழுவதும் பறிமுதல் செய்ய வேண்டும் (ஆரவாரம்) என்று மத்திய சர்க்காருக்கு, அப்படி அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சர்க்கார் வற்புறுத்திக்கொண்டு வருகிறது. (பலத்த ஆரவாரம்).

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மாவட்டக் கலெக்டர்களுக்கு உத்தரவு போடும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் டெபிசிட் தாலுக்காக்களான குடியாத்தம், வேலூர் தாலுக்காக்களைப் பொறுத்தவரையில், இப்பொழுதும் இரண்டு ரூபாய்க்குமேல் படி அரிசி விற்கப்படுகிறது என்பதை மனதில்கொண்டு, ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற திட்டத்தை அங்கே அமல் நடத்த வேண்டும் என்று செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படி அமல் நடத்த செயற்குறிப்பு இல்லை. ஆனால், முதல் கட்டமாக இரண்டு மாதங்களுக்குள்ளே சென்னையின் புறப் பாகங்களாகிய, திருவொற்றியூர், தாம்பரம், ஆவடி போன்ற இடங்களுக்கு அமல் படுத்தப்படும். அதன்பிறகு குடும்பக் கார்டுகள் உள்ள இடங்களில் செய்யப்படும்.

பதுக்கல் அரிசி கண்டுபிடிப்பு

*332வினு—திரு வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

பதுக்கி வைத்துள்ள அரிசியைக் கண்டுபிடிக்க போலீஸ் நாய்களை உபயோகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பல பிரச்சினைகளுக்கு இந்த நாய்களை உபயோகிக்கும்போது, அரிசி மூட்டைகளைக் கண்டுபிடிக்க இவற்றை உபயோகிக்கவே உத்தேசம் இல்லையா அல்லது உபயோகித்து பலன் இல்லையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உத்தேசம் இல்லை என்பதில்லை. இந்த மாதிரிப் போலீஸ் துப்பறியும் நாய்களுக்குப் பிரத்தியேகமாக, குற்றங்களைக் கண்டுபிடிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கொலைக் குற்றம், திருட்டுகள், போன்றவற்றைக் கண்டுபிடிக்க, கொலைகாரன் யார், திருடன் யார் என்று கண்டுபிடிக்க, அந்த இடத்திலே, வாசனை மூலமாக, கிடைக்கும் பொருள்களைக்கொண்டு குற்றவாளிகள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கின்றன. அது ஒரு அம்சம். இரண்டாவது அம்சம் குற்றம் நடந்தவுடனே போலீஸ் நாய்கள் துப்பறியப் போக வேண்டும்; அந்த இடத்திற்கு அவசர, அவசரமாகக் காலதாமதம் இல்லாமல் நாய்கள் அனுப்பப்பட வேண்டும். கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம் போன்றில்லாமல், பதுக்கல் என்பது ஒரு பிரத்தியேகக் கலையாக இருக்கிறது. அதோடு பதுக்கலில் நாய்களை உடனடியாக அனுப்புவது என்பது சாத்தியமில்லை. ஆகவே, நாய்களை ஊக்குவிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that however much the police dogs may be efficient, they can only distinguish between a murde er and a non-murrderer by smelling clothes or blood-stains and it is not possible for any dog even if it trained by the police officials to distingnish between hoarded rice and ordinary rice which is licensed under the trade ?

THE HON. THIRU K.A. MATHIALAGAN ; Sir, I have already answered it.

திரு. கரு. சீமைச்சாமி : அரிசிக் கடத்தலுக்கு, போலீஸ் நாய்களை அனுப்புவதானால், திரு கோதண்டராமன், அவர்கள் வீட்டிற்கு அனுப்பினால் அது அங்கே படுத்துவிடும் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை).

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் உணவுப் பதுக்கலைப் பற்றி ரெவின்யூ பிரிவிலும், போலீஸ் பிரிவிலும் தெரிவிக்கப்பட்டும், எந்த விதமான நடவடிக்கை எடுப்பதற்கும் பதிலாக, பதுக்கல்காரர்களுக்குச் சாதகமாகவே நடக்கிறார்களே அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் This is a question about the Police Dog. ஆகவே போலீஸ் நாயைப்பற்றிக் கேள்வியை மாற்றிப் போடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : அரசியல் வாதிகள் துப்புச் சொன்னாலும், ரெவின்யூ பிரிவும், போலீஸ் பிரிவும் நடவடிக்கை எடுக்காததால், துப்புத் துலக்க இந்த நாய்களை அனுப்புவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் யாரிடத்தில் துப்புச் சொன்னார்கள் என்று தெரிய வேண்டும். இதற்காகவே 'என் போர்ஸ்மென்ட் செல்' என்று நிறுவி, ஏற்கனவே டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் கீழே நடைபெறும் 'ஆன்டி-ஸ்மக்லிங் செல்' உடன் புதிதாக வர்த்தக இலாகா, கள்ளச் சந்தை, இவற்றைக் கண்காணிக்க ஒருங்கே இயங்கும் வகையில் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லும் துப்பை யாரிடம் சொன்னார்கள் என்று தெரியவில்லை. எங்கே பதுக்கல் இருக்கிறது, எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றி இப்போதாவது சொன்னால் துரிதமாக நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்,

நியாயவிலைக் கடைகள்

* 333 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு -வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழகத்தில் ஒவ்வொரு ஆதித்திராவிடர்கள் வசிக்கும் காலனியிலும், நியாயவிலைக் கடைகளை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆதித்திராவிடர்கள் என்று சொல்லக்கூடிய நேரத்திலே, சகலத் துறைகளிலும் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு எல்லாப் பிரச்சினைகளிலும் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை அமைக்காவிட்டாலும், படி • அரிசித் திட்டத்தையாவது அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது சில இடங்களில் ஸ்டாசுடரி ரேஷன், இன்பார்மல் ரேஷன் போன்ற முறைகள் இருந்து வருகின்றன. அதுவல்லாமல், வேறு எங்காவது குடும்பக் கார்டு முறை தேவை என்றால், அதை மாவட்டக் கலெக்டர் நிலைமைக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்கிறார்கள். உணவுப் பொருள்கள் அரிஜனங்களுக்குக் கொடுக்கவில்லை என்கிற வாதமே தவறானது. எங்கெல்லாம் ஸ்டாசுடரி ரேஷன் இருக்கிறதோ, அங்கெல்லாம் அரிசன மக்கள் அளவு அரிசியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அரிசனக் காலனிக்குத் தேவை என்று இருந்தால், அவசியம் என்றிருந்தால், அதைக் கலெக்டர்மூலமாக எழுதியனுப்பினால், அங்கேயிருக்கும் இன்றியமையாத் தன்மைக்கு ஏற்றவாறு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-00 **திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காரணத்தால், தருமபுரி ஜில்லாவிலே, புஞ்சை தானியங்கள்தான் சாகுபடி செய்யப்படுகின்றன. அதுவும் விவசாயக் கூலிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, புஞ்சை தானியத்தை வினியோகம் செய்ய சர்க்கார் முன் வருமா? எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கடற்கரை ஓரப் பகுதியிலும், மணற்பாங்கான பகுதியிலும் வாழும் மீனவர்களும் மற்ற இன மக்களும் விவசாயத்தில் ஈடுபடவில்லை. எனவே, அங்குள்ள மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும், விலைகளைக் கட்டுப்படுத்தி நியாய விலைக் கடைகளைத் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : முன்பே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நிலைமைகளைக் கண்டறிந்து, எங்கெங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம், அதற்கு எங்கெங்கே அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அடிக்கடி அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்களிடத்திலே அங்கத்தினர் நிலைமையை விளக்கினால், அதற்கான நியாயங்களைக் கூறினால் அதன் அவசியத்தைப் பொறுத்து, அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

Ban on service of cereal dishes

* 334 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon, the Minister for Food and Revenue be pleased to state —

(a) Whether it is a fact that the Government have withdrawn the ban on serving of cereal dishes in catering establishments and hotels after 5 p.m. on Mondays and Thursdays from April 14th (Tamil New Year day) 1967 ; and

(b) if so, the reasons therefor ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) Yes ;

(b) The staple food of the people in this State is rice. The ban on the service of meals made out of cereals after 5-00 p.m. on Mondays and Thursdays was causing a great deal of hardship to bachelors staying away from their homes and the floating population in towns, depending on hotels and other catering establishments for their food. Several representations were also received by Government against this ban. In order to obviate this difficulty, the Government withdrew the above ban by notifying the deletion of the relevant clause from the Madras Food (Restriction on Service of Meals by Catering Establishments) Order, 1965.

THIRU K. VINAYAKAM ; Whereas the purpose of this ban on serving of cereal food dishes in the catering establishments on Mondays and Thursdays was the laudable purpose of conserving foodstuffs because of the shortage and not with any significance of fast, has the result of the removal of this ban resulted in foodstuffs accruing in large quantities in our State and, if so, is the Government giving more rations to the catering establishments now ?

THE HON. THIRU K .A. MATHIALAGAN : I cannot say that the stock has increased. But the demands of the hoteliers are taken into account and met according to the stock position.

Nellore rice

* 335 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Hon. Minister is aware that the so-called "Nellore rice" supplied through the rice ration shops in the City of Madras is not of good and pure Nellore rice variety ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தெரியும். சிறந்த ரக நெல்லூர் அரிசி வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் சென்னை வட்டார நிர்வாகி அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சமீபத்தில் ஆந்திர முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்களின் கவனத்திற்கும் தமிழக உணவு அமைச்சரவர்கள் அதைக் கொண்டுவந்துள்ளார்.

THIRU K. VINAYAKAM : As a resident of Madras and drawing rice from the ration shop, I had the pleasure of purchasing this Nellore rice after the notification came into effect. Is the Government aware that it is anything but Nellore rice, it is Renigunta or Gudur rice, and is it a fact that the quality of rice is so bad that it cannot be classified with the Nellore rice ?

நியாயவிலைக் கடைகள்

* 333 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு -வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழகத்தில் ஒவ்வொரு ஆதித்திராவிடர்கள் வசிக்கும் காலனியிலும், நியாயவிலைக் கடைகளை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆதித்திராவிடர்கள் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, சகலத் துறைகளிலும் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு எல்லாப் பிரச்சினைகளிலும் சலுகைகள் கொடுக்கப் பட்டு வருகின்றன. ஆகவே, அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை அமைக்காவிட்டாலும், படி அரிசித் திட்டத்தையாவது அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது சில இடங்களில் ஸ்டாசுடரி ரேஷன், இன்பார்மல் ரேஷன் போன்ற முறைகள் இருந்து வருகின்றன. அதுவல்லாமல், வேறு எங்காவது குடும்பக் கார்டு முறை தேவை என்றால், அதை மாவட்டக் கலெக்டர் நிலைமைக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்கிறார்கள். உணவுப் பொருள்கள் அரிஜனங்களுக்குக் கொடுக்க வில்லை என்கிற வாதமே தவறானது. எங்கெல்லாம் ஸ்டாசுடரி ரேஷன் இருக்கிறதோ, அங்கெல்லாம் அரிசன மக்கள் அளவு அரிசியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அரிசனக் காலனிக்குத் தேவை என்று இருந்தால், அவசியம் என்றிருந்தால், அதைக் கலெக்டர்மூலமாக எழுதியனுப்பினால், அங்கேயிருக்கும் இன்றியமையாத் தன்மைக்கு ஏற்ற வாறு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-00

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காரணத்தால், தருமபுரி ஜில்லாவிலே, புஞ்சை தானியங்கள்தான் சாகுபடி செய்யப்படுகின்றன. அதுவும் விவசாயக் கூலிகளுக்குக் கிடைக்க வில்லை. ஆகவே, புஞ்சை தானியத்தை வினியோகம் செய்ய சர்க்கார் முன் வருமா? எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்வி யிலிருந்து எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கடற்கரை ஓரப் பகுதியிலும், மணற்பாங்கான பகுதியிலும் வாழும் மீனவர்களும் மற்ற இன மக்களும் விவசாயத்தில் ஈடுபடவில்லை. எனவே, அங்குள்ள மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும், விலைகளைக் கட்டுப்படுத்தி நியாய விலைக் கடைகளைத் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : முன்பே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நிலைமைகளைக் கண்டறிந்து, எங்கெங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம், அதற்கு எங்கெங்கே அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அடிக்கடி அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்களிடத்திலே அங்கத்தினர் நிலைமையை விளக்கினால், அதற்கான நியாயங்களைக் கூறினால் அதன் அவசியத்தைப் பொறுத்து, அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

Ban on service of cereal dishes

* 334 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(*a*) Whether it is a fact that the Government have withdrawn the ban on serving of cereal dishes in catering establishments and hotels after 5 p.m. on Mondays and Thursdays from April 14th (Tamil New Year day) 1967 ; and

(*b*) if so, the reasons therefor ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Yes ;

(*b*) The staple food of the people in this State is rice. The ban on the service of meals made out of cereals after 5-00 p.m. on Mondays and Thursdays was causing a great deal of hardship to bachelors staying away from their homes and the floating population in towns, depending on hotels and other catering establishments for their food. Several representations were also received by Government against this ban. In order to obviate this difficulty, the Government withdrew the above ban by notifying the deletion of the relevant clause from the Madras Food (Restriction on Service of Meals by Catering Establishments) Order, 1965.

THIRU K. VINAYAKAM ; Whereas the purpose of this ban on serving of cereal food dishes in the catering establishments on Mondays and Thursdays was the laudable purpose of conserving foodstuffs because of the shortage and not with any significance of fast, has the result of the removal of this ban resulted in foodstuffs accruing in large quantities in our State and, if so, is the Government giving more rations to the catering establishments now ?

THE HON. THIRU K .A. MATHIALAGAN : I cannot say that the stock has increased. But the demands of the hoteliers are taken into account and met according to the stock position.

Nellore rice

* 335 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Hon. Minister is aware that the so-called "Nellore rice" supplied through the rice ration shops in the City of Madras is not of good and pure Nellore rice variety ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தெரியும். சிறந்த ரக நெல்லூர் அரிசி வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் சென்னை வட்டார நிர்வாகி அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சமீபத்தில் ஆந்திர முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்களின் கவனத்திற்கும் தமிழக உணவு அமைச்சரவர்கள் அதைக் கொண்டுவந்துள்ளார்.

THIRU K. VINAYAKAM : As a resident of Madras and drawing rice from the ration shop, I had the pleasure of purchasing this Nellore rice after the notification came into effect. Is the Government aware that it is anything but Nellore rice, it is Renigunta or Gudur rice, and is it a fact that the quality of rice is so bad that it cannot be classified with the Nellore rice ?

[1967 ஜுலை 14

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have already admitted the fact that the quality is not good. On analysis by the Regional Storage Officer of the stoks of Nellore raw rice received from Nellore against the quota of 4,900 tonnes allotted recently to Madras State from Andhra Pradesh it was found that the rice differed as compared to the open market Nellore raw rice which used to be received in the past for the reasons stated below —

(a) The rice is of lesser polish when compared to the rice of the open market.

(b) The brokens content in the open market rice did not normally exceed 10 to 15 per cent formerly. But the brokens in the Nellore raw rice now despatched contained higher percentage in certain consignments.

(c) Though the presence of red grains is within the tolerance limit, the open market rice does not contain red grains at all.

(d) The rice despatched also shows presence of unhuske paddy in certain consignments. The unhusked paddy is completely absent in the open market rice.

(e) The rice contains admixture of Tenali and Vijayawada varieties. The Nellore raw rice in the open market is noted for its purity and though from length-breadth ratio this is to be classified as medium, it was classified as fine on account of its consumer preference, purity, less brokens and cooking quality.

(f) The stocks despatched are of the new crops, i.e., crops harvested in January 1967. But the open market raw rice which used to be distributed in the City was always of the old variety.

Strictly speaking, none of the points raised above show any deterioration in quality. Polish is regulated under Civil Supplies specifications, red grains are again within the tolerance limit. The Commercial Manager, Food Corporation, has however been addressed to see that there is no admixture of varieties. The representatives of Madras State at Nellore have been alerted to send better quality. The Hon. Chief Minister, Andhra Pradesh, has also been informed accordingly.

Milk for marriage purposes

* 336 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(a) whether the Government are aware of the fact that it is very difficult to get bulk supply of milk for marriage purposes in Madras ; and

(b) if so, the arrangements made to get bulk supply easily from Madhavaram Milk Project ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) Yes, Sir;

(b) In order to alleviate difficulties of the public in getting bulk supply of milk for marriages, arrangements have been made for the supply of milk in bulk quantities to the public on demand.

1967 ஜுலை 14]

During the month of April-May 1967, the project has made arrangements to supply milk in bulk to 421 applicants and a total quantity of 61,911 litres of milk have been supplied to these applicants. No applicant has been denied the supply of milk and in almost all cases the demand has been met with in full.

THIRU K. VINAYAKAM : Whereas we are in the marriage season and plenty of marriages are being celebrated, is it not a fact that taking delivery of milk from the Madhavaram Depot is very difficult and will the Government make arrangements to have it delivered to the consumers at the Nandanam Depot and is it not also a fact that the required quantity is not given and they effect a cut depending upon the supplies received at the Depot ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Arrangements have been made to supply milk from the nearest milk depots at suitable timings to suit the convenience of the public. The members of the public who require bulk supply for marriages, etc., have to apply to the Assistant Milk Commissioner (Distribution) at Nandanam, Madras-35 specifying the dates and session and quantity of milk required and the depot through which delivery has to be made. But we have prescribed the condition that the entire cost of milk in bulk quantity has to be paid in advance.

DR. H. V. HANDE : Is the Minister aware of the fact that, because a lot of milk is supplied for marriages, etc., ordinary customers are not able to get milk in sufficient quantities ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is not correct.

கொள்ளிட நதி வெள்ளம்

*337 விஞ.—**திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்காவில் கொள்ளிடம் நதியின் வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் காட்டூர், கீழ்குண்டலபாடி, நாதல் படுகை போன்ற கிராமத்து மக்களை அந்தக் கிராமங்களிலிருந்து வெளியேற்றி அக்கரைக்குக் கொண்டுவந்து குடியேற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனை யிலிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், வருஷாவருஷம் கொள்ளிடத் திலே வெள்ளம் வரும்பொழுதெல்லாம் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். இந்தப் பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்குச் சாப் பாடு அனுப்ப வேண்டுமென்றால், 'போட்'டில்தான் அனுப்ப வேண்டும். ஆகவே, அவர்களைக் கட்டாயமாக அக்கரைக்குக் கொண்டுவர அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் முடிவு எடுப்பதில் மட்டும் இது இல்லை. அங்கிருக்கிற மக்களே வெளியேற மறுக்கிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் கட்டாயம் என்று வற்புறுத்துகிறார். வெள்ளத்தை எதிர்த் துச் சமாளிப்பதற்கு வேண்டிய திடமான தகுதியை அந்த மக்கள் பெற் றிருப்பார்கள்போல் இருக்கிறது. அவர்களை வெளியேற்றுவது அவர் களுக்கு உடன்பாடாக இல்லை.

Pudukkottai taluk.

*338 *Q*.—THIRU A. BALASUBRAMANIAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—

(*a*) whether the Government is aware of the persistent demand of the people of Pudukkottai for the constitution of a separate district with Pudukkottai as Headquarters ;

(*b*) if so, whether such a proposal is under the consideration of the Government ; and

(*c*) what the Government's decision thereon is ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இதுபோன்று கோரிக்கை இதுகாறும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

(இ), (உ) and இவ்வினாக்களுக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது வினா எண் 339 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஸார். புதுக்கோட்டையை மாவட்டத் தலைநகரமாக்குவதைப் பற்றி இதற்கு முன்பே இந்த மன்றத்தில் கேள்விகளெல்லாம் எழுப்பப்பட்டிருக்கின்றன. அது விஷயம் பரிசீலனையில் இருப்பதாக எற்கனவே இருந்த அமைச்சர்கள் கூறினார்கள். இப்பொழுது அமைச்சர் அவர்கள், "இதுபோன்று கோரிக்கை இதுகாறும் அரசாங்கத்திற்கு வரவில்லை" என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் முன்பிருந்த பிரச்சினை என்ன ஆயிற்று என்று கூற முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்பியிருக்கிறார். அவருக்கு அருள்கூர்ந்து ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சர்கள் அளிக்கின்ற விடைகளில் ஒன்றைச் சொல்லவும், ஒன்றைச் சொல்லாமல் இருக்கவும் ஒரு நாள் சொன்ன பதிலை, மறு நாள் திருத்தவும் அல்லது வேறு விதமாகச் சொல்லவும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ தெரிந்துகொள்ளாமலே புரிந்துகொள்ளாமலோ பதில் சொல்லுகிறார்கள் என்று எண்ணக்கூடாது என்று உறுப்பினர் அவர்களை அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the hon. Member is telling me that I have submitted an incorrect report. It is not so. No representation has been made.

Full ration in Vilavancode taluk

* 339 *Q*.—THIRU M. WILLIAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether in Vilavancode taluk in Kanyakumari district where free movements of rice and paddy are restricted, the Government will be pleased to issue full rations ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : By the term "full ration" the hon. Member presumbly refers to the scale of ration issued in the statutorily rationed areas of Madras and

Coimbatore. The scale of ration in Madras and Coimbatore is 1,400 grams of rice and 350 grams of wheat products. The scale of ration generally adopted in Kanyakumari district is 1,200 grams of rice per adult per week in municipal and coastal areas and 1000 grams of rice per adult per week in other places. There is no proposal at present to increase the above quantum of ration.

THIRU M. WILLIAM : Sir, the movement of rice and paddy is restricted in the entire taluk. The population of the taluk is about 3,30,000 which is equal to the population of Agastheeswaram and Thovala taluks. Rice is not available in the open market. The ration that the people are getting is only 500 grams. At present it is not even sufficient for two days. So, will the Hon. Minister be pleased to raise the quantum of ration or at least allow open market inside the taluk and seal the entire border ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : In Vilavancode taluk, there is one municipality, some coastal villages and some hilly villages. As a rule but subject to availability of stocks, issues are made at 1,200 grams per adult per week for the cardholders in the municipal areas, the coastal areas and the hilly areas. I want to submit that the weekly offtake in the Vilavancode taluk is 325 tonnes of rice. The total offtake for the entire Kanyakumari district is 800 tonnes. We are alloting 800 tonnes for the entire district and out of 800 tonnes, the Vilavancode taluk gets 325 tonnes. This supply is made keeping in view, as the hon. Member has stated, that it is a deficit area and it is very near the Kerala border. Now there is no open market there. There is no proposal before the Government to allow open market in view of the large scale smuggling.

DR. H. V. HANDE : About the Vilavancode taluk, I have received a number of representations. Actually the barrier imposed with regard to the Vilavancode taluk is also the barrier for Tamil Nad and the Kerala State. Because rice should not go to the Kerala State, the people in the Vilavancode taluk also are not getting rice. Some of the people there are starving and have given representations. So, will the Hon. Minister look into the matter and see that there is no dissatisfaction among the people in that taluk.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : If the stock position improves, we can certainly look into the matter but the hon. Member's contention that they are starving and the food supply is insufficient, is totally incorrect.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விளவன்கோடு தாலுக்கா ஒரு கம்மிப் பகுதியாக இருக்கிறது. அதனால் அங்கே இப்பொழுது உணவுப் பண்டங்களின் விலை ஒரு படிக்கு மூன்று ரூபாய்வரை ஏறியிருக்கிறது. அந்தத் தாலுக்காவில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கொண்டு செல்ல அரசாங்க அனுமதி வேண்டும். ஆகையால், முழு அளவிற்கு ரேஷன் கொடுத்து, இந்த பார்டர் பகுதியைச் சீர் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவே தெளிவு படுத்தினேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நம்முடைய அரசு ஒதுக்கக் கூடியதில் 50 சத வீதம் விளவன்கோடு தாலுக்காவிற்குத்தான் கொடுக்கப் படுகிறது. எங்கள் தரப்பிலுள்ள உறுப்பினரிடமிருந்தும் ஒரு குற்றச்சாட்டு வந்தது. அங்கே கொடுக்கப்படுகிற அரிசியை நான்கு ரூபாய், ஐந்து ரூபாய்க்குக் கேரள எல்லையிலே கொடுத்துவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதாகவும் எடுத்துச் சொல்லப்பட்டது. இன்றைக்கு நம்மிடத்திலிருக் கும் இருப்பின் அடிப்படையில், தேவைக்கேற்ப எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ, அது கொடுக்கப்படுகிறது. கொடுக்கக் கூடாது என் பது அல்ல இந்த அரசாங்கத்தின் நோக்கம். விளவன்கோடு தாலுக்கா விற்கு அரிசி கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பை நிறைவேற்றுகின்ற நேரத்தில் விளவன்கோடு தாலுக்காவைத் தாண்டி, இன்னும் மேற்படி தாலுக்காக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரிசி நம்முடைய எல்லையைத் தாண்டிவிடக் கூடாது என்பதிலேயும் இந்த அரசாங்கத் திற்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

மண்வள ஆய்வு நிலையங்கள்

*340 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மண்வளப் பாதுகாப்புச் சோதனை நிலையங்கள் எங்கெங்கேயுள்ளன, ஜில்லாவாரியாக ?

(இ) அவை முறையே எந்தெந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) and (இ) :தேவையான தகவல் பின்வருமாறு:—

மாவட்டத்தின் பெயர். (1)		மண்வளப் பாதுகாப்பு ஆய்வுக் கூடங்கள் உள்ள இடங்கள். (2)	தொடங்கிய ஆண்டு. (3)
1	கோயம்புத்தூர் ..	வேளாண்மைக் கல்லூரி-ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.	1956
2	தஞ்சாவூர் ..	வட்டார ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.	1960
3	திருநெல்வேலி ..	வட்டார ஆராய்ச்சி நிலையம், கோயில்பட்டி.	1963
4	தென்ஆர்க்காடு ..	கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.	1965
5	மதுரை	வேளாண்மைக் கல்லூரி, மதுரை.	1966
6	வடஆர்க்காடு ..	கரும்பு ஆராய்ச்சித் துணை நிலையம், மேலாலத்தூர், குடியாத்தம்.	1966
7	செங்கற்பட்டு ..	அரசாங்க விதைப்பண்ணை, காஞ்சிபுரம்.	1966

திரு. வி. கே. கோதண்டராமன் : விவசாய அபிவிருத்திற்காக வேண்டி இந்த மண்வளப்பாதுகாப்பு மிக மிக அத்தியாவசியமானது அல்லவா ? மழைக்காலத்தில் வெள்ளத்தினால் மண்வளம் பாதிக்காமலிருக்க வேண்டி யதை முன்னிட்டாவது மேலும் அதிகப்படியான மண்வளப் பாதுகாப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் குறிப்பிட்ட ஏழு இடங்கள் மட்டுமல்லாமல், ஆரூரான் ஷுகர் மில்ஸ் இருக்கும் வடபாதிமங்கலத்தி லும், இண்டோ-ஜெர்மன் திட்டத்தின்கீழ் உதகையிலும், ஆராய்ச்சி நிலைய மும், நான்கு மொபைல் டெஸ்டிங் யூனிட்களும் இருக்கின்றன. மேலும்,

இராமநாதபுரம், திருச்சி, சேலம், தருமபுரி ஆகிய இடங்களிலும் படிப்படி யாக ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக் கிறது.

குடியாத்தம் வட்டத்தில் கசிவு நீர் ஏரிகள்

* 341 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் Percolation tanks திட்டம் நடை பெறுகிறதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே, அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) ஆம்.

(இ) 1966-67, 1967-68-ம் ஆண்டுகளில் குடியாத்தம் தாலூ காக்களிலுள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் கசிவுநீர் ஏரிகளை தோண்டவும் புதுப்பிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது—

(1) செங்குன்றம்.

(2) கொண்ட சமுத்திரம்.

(3) சேத்துபண்டை.

(4) மூட்டாளம்.

செங்குன்றத்தில் (நெத்தான குட்டை) வேலை நடந்து வருகிறது. எஞ்சிய கிராமங்களிலும், ஏரிகளைத் தோண்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும், உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : மலைப் பிரதேசங்களில் பெரு மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டு, காட்டாறுகளாக ஓடும்போது, அங்குள்ள நிலத்தின் மண்வளம் நாசமாவதோடு, விவசாயம் செய்திருந்தால் அதுவும் நாசமாகி, விவசாய அபிவிருத்தி பாதிக்கப்பட்டு, உணவு உற்பத்தி தடைபடுகிறது. குடியாத்தம் ஒரு பக்கத்தில் ஆந்திரத்தையும், இன்னொரு பக்கத்தில் மைசூரையும் எல்லைகளாகக் கொண்டுள்ள மலைப் பிரதேசம் நிறைந்த பகுதியாகும். ஆகவே, இதற்கு விசேஷ கவனம் செலுத்தி, இதுபோன்ற பெர்கொலேஷன் டாங்குகளை அதிகப்படியாக ஏற்பாடு செய் வதற்கு உடனடியாக உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஆரம்பத்திலே குறிப் பிட்டதுபோல, அதற்கு வேண்டிய திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. அதற் காகத்தான் இப்பொழுது அந்த மண்ணையும் வண்டலையும் அடித்துக் கொண்டு போகாமலிருக்க, ஆங்காங்கு ஓடைக்கு எதிர்ப்புறங்களில் காட்டை அமைத்து அதன் மூலம் மண் அரிப்பதைத் தடுத்துக்கொண்டு வருகிறோம். மேலும் மத்திய அரசாங்கம் இதற்காக 15 சத வீதம் மானியமாகவும் 60 சதவீதம் கடனாகவும் அளிக்கிறார்கள். எஞ்சிய தொகையை மாநில அரசாங்கம் செலவு செய்து தேவையான இடங்களில் பெர்கொலேஷன் டாங்குகளை அமைக்கும்.

அரிசன நலப் பள்ளி ஆசியர்களுக்கு வீடுகள்

* 342 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-68-ல் தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜன நல இலாக்காவின் கீழுள்ள ஹரிஜனநல பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர் கள் ஆசிரியைகள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர். (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை. 1967–68-ம் ஆண்டுக்கு அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஐயா, ஆசிரியர்கள் உள்ளூரில் குடியிருந்தால்தான் பள்ளியை நல்ல முறையில் கவனிக்கமுடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனுல் ஆசிரியர்கள் உள்ளூரில் குடியிருப்பதற்கு இடவசதி செய்து கொடுக்காத காரணத்தால் பல ஆசிரியர்கள் வெளியூர்களிலிருந்து வருகிருர்கள். ஆகவே, உள்ளூரில் குடியிருக்க வேண்டும் என்ற திட்டத்தை குறிப்பாக சிதம்பரம் தாலூகாவில் அந்தத் திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆசிரியர்களுக்கு உள்ளூரிலேயே வீடு கட்டிக் கொடுக்கிற அவசியத்தை இந்த சர்க்கார் உணருகிறது. ஆனுல் இப்போதிருக்கும் நிதிநிலையை உத்தேசித்து, இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. கே. விஞயகம் : தலைவர் அவர்களே, ஹரிஜனங்களுக்கென்று தனியே பள்ளிக்கூடம் அமைத்தது பழையகால சரித்திரம். ஆனுல் அந்தப் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமாக, ஹரிஜனங்கள் வேறு வகுப்பு என்ற உணர்ச்சி தென்படுகிறது. ஆகவே, அவர்களுக்கென்று தனி பள்ளிக்கூடம் வைக்காமல், அந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் அரசாங்கமோ அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலோ எடுத்து நடத்தி, ஜாதி வித்தியாசங்களைப் போக்க காருண்யமுள்ள சர்க்கார் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை காருண்யமுள்ள சர்க்கார் கவனித்து வருகிறது.

பீடித் தொழிலாளர்களின் பாதுகாப்பு

* 343 விஞ.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) பீடி தொழிலாளர்களின் பாதுகாப்பு சட்டம் எந்த ஆண்டில் நிறைவேறப்பட்டது.

(இ) இதுவரை அமுல் படுத்தாதற்கான காரணமென்ன ?

(உ) அதை அமுலாக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழக 1958-ம் ஆண்டு பீடித் தொழில் மனைகள் (பணி நிலைமைகள் முறைப்படுத்தல்) சட்டம் 1958-ம் ஆண்டு இயற்றப்பட்டது.

(இ) அண்டை மாநிலங்களில் இத்தகைய சட்டம் இல்லாததால், இச் சட்டத்தின் உரிய விதித்துறைகள் மட்டுமே செயல்படுத்தபடுகின்றன.

(உ) இக் கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, எற்கெனவே இருந்த சர்க்கார் பீடித் தொழிலாளர்களுக்கான ஒரு சட்டத்தை இயற்றி, ஒன்பது பத்து வருஷக்காலம் வரையிலே அதை அமுல்படுத்தாமலே இருந்து * * * வந்தார்கள். ஆகவே, இப்போது இருக்கிற சர்க்காராவது மாதக் கணக்கில்—வருடக் கணக்கில் என்று எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக பீடித் தொழிலாளருக்கான சட்டத்தை அமுல்படுத்த முடியுமா ?

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

Thiru K. VINAYAKAM : On a point of order. The hon. Member, while putting his question has made it very clear that the previous Government have been * * * the people and the beedi workers. Is he in order ? Are you permitting it or what is your ruling on it ? Can an insinuation be made against any government either in the past or in the present ?

Mr. SPEAKER : Under rule 31 (5) of the Assembly Rules, no question or supplementary question shall contain arguments, inferences, ironical express'ons or defamatory statements against anybody.

திரு வி. கே. கோதண்டராமன் : .... * * *

Thiru K. VINAYAKAM : On a point of order. In spite of the ruling given by the Speaker, the Member persists and he carries on the same insinuation. Will the Speaker order the expunction of the objectionable terms ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், * * * * "பழைய அரசில் பீடித் தொழிலாளர்கள் ஏமாற்றத்திற்கு உள்ளானுர்கள்" என்று கேட்டால் சரியாக இருக்கும் அல்லவா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : It is not against anybody.

Thiru K. VINAYAKAM : Will you please order the expunction of those terms ?

Mr. SPEAKER : In fairness I agree to the request made by the hon. Member Mr. Vinayakam and say that the word * * * is an imputation and should be removed from the Official Proceedings.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகர் அவர்களே, கேள்விகள் பொதுவாக ஒரு குற்றச்சாட்டாகவோ, அனுமானமாகவோ, உள் நோக்கம் கற்பிப்பதாகவோ இருக்கலாமா என்பதைப்பற்றி நம்முடைய விதி முறைகள் எவ்வாறு உள்ளன ? இவைகளை அனுமதிக்கிறதா, இல்லையா ? பழைய அரசாங்கம் மோசடி செய்யாமலிருந்து, "மோசடி செய்ததா?" என்று கேட்டால் அது தவறு. பழைய அரசாங்கம் உண்மையிலேயே மோசடி செய்திருந்து அப்படிக் கேள்வி கேட்டால் அது தவறு இல்லையென்று கருதுகிறேன். குடியாத்தத்தில் பீடித் தொழிலாளருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ற வாதத்தின் அடிப்படையில் இந்த மன்றத்தில் இக் கேள்வி கேட்பதற்கு உரிமை இல்லையா என்பதை விளக்கவேண்டும்.

Mr. SPEAKER : The point of order raised by the Hon. Minister is an important one. But I am afraid it is a hypothetical question. It does not arise now, at the moment. When it acutally arises, I will give a ruling.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 1958–ம் ஆண்டு போடப்பட்ட சட்டம் தொடர்ந்து அமுல் நடத்தப்படாமல், அடிக்கடி இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச்

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

சர்க்கார் நிச்சயமாக ஏமாற்றுது. அந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : In view of the fact that different Acts are in operation in different States and in view of the laudable assurance the Minister gave in the course of the discussion will the Hon. Minister examine the necessity of meeting his counterparts in all the other States and come to a decision and give adequate protection to the beedi workers ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அண்மையில் 1966-ம் ஆண்டின் இறுதியிலே மத்திய சர்க்கார் ஒரு சட்டம் போட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை எல்லா தென் மாநிலங்களும் கூடிப் பரிசீலிக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினருடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆந்திரத் தொழிலாளர் அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பீடித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் ஒன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்தும், அந்தச் சட்டத்தின் பெயரால் பாதுகாப்புத் தராததற்கு என்ன காரணம் என்பதை இன்றைய அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்றைய அரசு இந்தச் சட்டத்திலே விதிவிலக்கு அளிக்கவில்லை. ஏற்கெனவேயிருந்த அரசு தொடர்ந்து விதிவிலக்கு அளித்தது. அதற்குப் பின்னாலே உள்ள காரணம் என்ன என்பது தெரியாது.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டிய நியாயமான சலுகைகளும், போனஸும் கொடுக்காமல் அவர்களைத் தொழிலாளர் என்ற அடிப்படையில் கவனிக்காமல், காண்ட்ராக்ட் முறையில் வைத்துக் கொண்டு, அவர்களின் சம்பந்தப்பட்ட குறைகளைப் புறக்கணிப்பதற்கு முதலாளிகள் முயற்சிக்கின்றனர் என்பது தெரியவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒரு புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சென்ற அரசு சட்டம் போட்டும்கூட, அமுல் நடத்தாததன் காரணமாக, தொழிலாளர்கள் பெருத்த இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாது இருப்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது, உணர்ந்துதான் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இந்தப் பீடித் தொழிலாளர் சட்டத்திற்கு அடிக்கடி விதிவிலக்கு அளிக்கப்பட்டு வந்தது. சென்ற அரசு பீடி முதலாளிகளிடம் பணிந்துபோகவேண்டும் என்ற காரணத்தாலா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினருடைய கருத்தை மறுப்பதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை.

தொழில் நிறுவனக் குழுக்கள்

* 344 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— மூற் பகல் 10-30

(அ) நமது ராஜ்யத்தில் எந்தெந்த தொழிற்சாலைகளில் முதலாளி, தொழிற்சங்கம், சர்க்கார் ஆகியவர்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) எந்த ஆண்டு முதல் இவைகள் அமைக்கப்பட்டன ?

(உ) அவற்றின் பணிமுறைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம்மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில் செயல்பட்டு வரும் எந்தக் குழுக்களிலும் அரசாங்கப் பிரதிநிதிகள் இல்லை. பணிக்குழுக்கள், குறை கவனிப்புக் குழுக்கள் என்பவை போன்ற அந்த நிறுவனக் குழுக்களில் அத் தொழில் நிறுவன பிரதிநிதிகளும் நிர்வாகத்தினரின் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

(இ), & (உ) இக்கேள்விகள் எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இனிமேலாவது அதுபோன்று அமைப்பதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அவர்களது நிர்வாகம் சம்பந்தப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. அவற்றில் அரசாங்கம் தலையிடுவதில்லை. தொழிலாளர்கள், நிர்வாகஸ்தர்கள், அரசாங்கம் ஆகிய மூவரும் சேர்ந்த குழுக்கள் தனியாக இருக்கின்றன. அதில் மட்டும் அரசாங்கம் பங்குபெறும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரு தொழில் ஸ்தாபனத்தில் தொழிலாளரும், முதலாளியும் சேர்ந்த ஒரு குழு இருக்கிறது. அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தில் அநேக தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பல குழுக்களும் இருக்கின்றன. க்ரீவன்ஸ் கமிட்டி, வொர்க்ஸ் கமிட்டி என்பதாக எல்லாம் இருக்கின்றன. எந்த தொழில் ஸ்தாபனத்தில் உள்ள குழுவைப் பற்றி கனம் அங்கத்தினர் கேட்கிறார் என்பது தெரிந்தால் பதில் சொல்ல முடியும்.

தொழிலாளர்களுக்கு வீடுகள்

* 345 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மில், பொதுப்பணித்துறை, நகரசபை இவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்க எத்தனை விதமான திட்டங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உதவித் தொகையுடன் கூடிய தொழிலாளர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைத் தொழிலாளர்கட்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்படுகிறது. பாளையங்கோட்டை, சிறப்புச் சிறுபாசனத் திட்டக் கோட்டத்தில் பணிபுரியும் பொதுப்பணித் துறை பணியாளர்கட்கும் குடியிருப்புகள் வகை செய்வதற்கான ஒரு திட்டத்தை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) செயல்படுத்தி வருகிறார். நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு ஊழியர்களுக்கான சிறப்பு வீட்டுவசதி திட்டத்தை நகராட்சிகளின் ஆய்வாளர் செயல்படுத்தி வருகிறார். நகராட்சி மன்றங்கள் குறைந்த வருமானத் தொகுதியினர்க்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி, அவற்றில் குறிப்பிட்ட சதவீதமுள்ள வீடுகளைத் தங்களது ஊழியர்களுக்கு ஒதுக்கித் தரலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக மத்திய சர்க்காரில் இருந்து எவ்வளவு உதவி கொடுக்கிறார்கள். அப்படி ஒதுக்கக்கூடிய பணத்தைக் கூட நாம் பெரும்பகுதி கைவிட்டுவிடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி தீவிர கவனம் செலுத்தி அந்தப் பணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை பூர்ணமாக நிறைவேற்ற இந்தச் சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பல முனையில் வேலை செய்கிறது. சப்சிடைஸ்டு ஸ்கீம்—அரசாங்கத்தின் சார்பிலும், தனிப்பட்டவர்கள் சார்பிலும், கூட்டுறவு முறையிலும் இருக்கிறது. ஏராள பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நாம் கேட்டிருக்கிற கிராண்டு கிடைக்காத காரணத்தினால் முழுவதும் நிறைவேற்றப்படவில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மாநிலத்திலேயே நகரசுத்தித் தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். நகரங்களில் அவர்கள் தனிப்பட்டவர்களுடைய நிலத்தில் இருக்கிறார்கள். அவர்களையும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே இன்றைய தினம் நகரசுத்தித் தொழிலாளர்கள் வசித்து வருகிற இடங்களை அக்வயர் பண்ணி அவர்களுக்கே கொடுக்க முன்வருவார்களா ? அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அமுல் நடத்துவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நகராட்சியில் உள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க உரிமை உண்டு. அதற்கான திட்டமும் உண்டு. ஆகவே அவர்கள் திட்டம்போட்டு அனுப்பினால் உதவி செய்வது பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, பல மில்களில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக என்று அரசாங்க நிலத்தை வாங்கி, பல ஆண்டுகள் ஆகியும் கூட, வீடு கட்டிக்கொடுக்காமல் காலி நிலமாகவே வைத்திருப்பவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிக் குறிப்பாக எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there has been a growing tendency on the part of the Government to instruct and preach morals to the private concerns and mills to construct houses for their own workers, is it not a fact that the Government have awfully neglected the construction of houses for their own employees like the employees of the Public Works Department, hospital employees and Transport workers. As the adage goes,'doctor' cureth thyself', will this Government think of reforming themselves first, before asking others to construct houses for their employees ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி அரசாங்கம் இரண்டு தினங்களுக்கு முன் சமர்ப்பித்த அறிக்கையை கனம் அங்கத்தினர் படித்திருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. தொழிலாளர்களுக்கு என்று வீடு கட்டவும், அரசாங்க ஊழியர்களுக்கு என்று வீடு கட்டவும் திட்டம் இருக்கிறது. யாரையும் புறக்கணிக்க அரசாங்கம் விரும்பவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசிடம் மாநில அரசு கேட்ட தொகை எவ்வளவு? கிடைத்தது எவ்வளவு ? எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு திட்டத்திற்கும் எவ்வளவு என்கிற விவரம் தனியாக இருக்கிறது. அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. 2,998 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 103 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது

திரு எம். சுரேந்திரன் : நகரத்தில் இருக்கிற மக்களே சுகாதாரமாக, ஆரோக்கியமாக வாழ்வதற்கு நகரசுத்தித் தொழிலாளர்கள் தான் காரணம். இன்றைக்கு அரசாங்க நிலம் இருக்கக்கூடிய இடங்களில் கூட அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக மேட்டூர் பகுதியை எடுத்துக்கொண்டால் மராமத்திலாக்கா நிலம் இருக்கிறது. எளிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். அதுபற்றி அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நகரசுத்தித் தொழிலாளர்கள் மனை வாங்கக் கடன் கேட்டால் கொடுக்கப்படுகிறது. வீடுகள் கட்டிக் கொள்ள கடன் கேட்டால் அந்தத் திட்டத்தின் கீழ் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறோம்.

திரு. சி. கோவிந்தராசன் : இப்படி வீடுகள் கட்டிக்கொள்வதற்கு கடன் கொடுக்கும் திட்டம் தேசிய நெருக்கடி காரணமாக நிறுத்தப் பட்டது. அந்தத் தடை அகற்றப்பட்டுவிட்டதா ? இப்போது உடனுக்குடன் பணம் உதவி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நிலைமை இருப்பது உண்மை. அதை மாற்ற உத்தேசித்திருக்கிறோம்.

திரு. என். மருதாசலம் : முனிசிபல் தொழிலாளர்களுக்கு வேலையில் இருக்கிற வரையில்தான் அந்த வீடுகள் கொடுக்கப்படுகின்றன. வேலையை விட்டவுடன் காலிசெய்துவிடச் சொல்கிறார்கள். அப்படி யின்றி அந்த வீடுகளை அவர்களுக்கே ஜாரி செய்து கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நகராட்சியில் பணிபுரிபவர்களுக்கும் சரி, மற்ற உத்யோகஸ்தர்களுக்கும் சரி—இப்படி வேலையில் இருக்கிற வரையில்தான் வீடுகள் கொடுப்பார்கள். வேலையை விட்டு நீங்கும்போது காலி செய்தால்தான் அந்த வேலைக்கு வருகிறவர்களுக்கு வீடுகள் கொடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

சென்னை, கோவை நகரங்களிலுள்ள விடுதிகள், அனாதை இல்லங்கள் மருத்துவ மனைகள் இவற்றிற்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குதல்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரமும் முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சென்னை நகரிலும், கோவை நகரிலும் அரசினரால் நடத்தப்படும் விடுதிகள், அனாதை இல்லங்கள், தனிப்பட்ட நிறுவனங்கள், தனிப்பட்ட சங்கங்கள் மருத்துவ மனைகள் ஆகியவற்றிற்கும் " ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி " வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை சென்னை மாநகரிலும் கோவை மாநகரிலும் மே மாதம் 15-ம் தேதி முதல் கொண்டு அமல்படுத்தி வருவதை இந்த மாமன்றம் அறியும். ஆனால் சென்னை மாநகரத்திலும் கோவையிலும் இருக்கின்ற 30 லட்சம் மக்கள் இதனால் பயன் அடைகிறார்கள் என்றாலும் அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படும் ஹாஸ்டல்கள் பல்வேறு அனாதை விடுதிகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றிற்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டம் இதுவரை அமல்படுத்தப்படவில்லை. பல்வேறு அனாதை விடுதிகளிலிருந்தும் ஹாஸ்டல்களிலிருந்தும் வந்துள்ள கோரிக்கைகளுக்கு இணங்க இந்த அரசாங்கம் இந்த மாதம், ஜூலை 10-ம் தேதியிலிருந்து இவைகளுக்கும் அமல்படுத்தி முயற்சி செய்யவேண்டுமென்று ஜி. ஓ. பிறப்பித்து இருக்கிறது. இதன் மூலம் ஹாஸ்டல்கள், அனாதை விடுதிகள், மருத்துவ மனைகள் இவைகளுக்கெல்லாம் 10-ம் தேதி முதல் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் இந்த இரு பெரு நகரங்களிலும் அமலாக்கும் ஆணையை நான் வாசித்து அமர்கிறேன்.

In G.O. Ms. No. 641, dated 11th May 1967 orders were issued for the supply of second sort rice (boiled and raw, at 66 paise per kg. with effect from 15th May 1967 in the statutorily rationed areas of Madras City and Coimbatore to all ration card-holders who may ask for it, excluding bulk consumers. Representations were received from certain orphanages and educational institutions in the City requesting that the concession may also be extended to them. The Government examined the question in consultation with the Commissioner of Civil Supplies and accordingly directed that the above concession of supplying rice at Re. 0·66 per kilogram sanctioned in G.O. Ms. No. 641, dated 11th May 1967 might be extended to the hostels attached to educational institutions, both private and Government, including hostels run by the Harijan Welfare Department, hostels and orphanages run by the Charitable Institutions and the hospitals situated in the statutorily rationed areas of Madras City and Coimbatore with immediate effect. This order was issued on 10th July 1967 and it came into force with immediate effect, that is from 10th July 1967.

3. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 155 (3)-ஐ நிறுத்தி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிக் கோரிக்கைகளுக்கு இன்றைக்கு இறுதி நாள். இறுதி நாள் அன்று மானியத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்கு பிற்பகல் ஒரு மணி என்று இருக்கும் விதியை இன்றுமட்டும் தளர்த்தி மாலை 7 மணி அளவில் வாக்கெடுப்பு நடத்தலாம் என்பதற்குப் பேரவையின் அனுமதி கோரி தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN: Sir, I move under rule 244 of the Assembly Rules—

"That sub-rule (3) of rule 155 of the Assembly Rules be suspended and that all Outstanding Demands for grants and cut motions be put to the House at 7·00 p.m. this day."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

4. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XVI—வேளாண்மை.

கோரிக்கை எண் XVII—மீனளம்.

கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு.

கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு.

கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை.

கோரிக்கை எண் XXI—சின்கோனா.

கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,04,73,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன்: தலைவர் அவர்களே, விவசாயப் பட்டப் படிப்பு மாணவர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலம் தொழில் நுணுக்க அறிவு பெற்றவர்கள், விவசாயத்தில் அதிகமாக ஈடுபட செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கரு. சிமைச்சாமி: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சாரம் உரம், டீசல் எண்ணெய், பம்பு செட்டு முதலியவை, குறைந்த விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, உற்பத்திக்கு அடிப்படையான விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் வேலைக்குத் தகுந்த கூலி என்று நிர்ணயம் செய்வது பற்றிக் பரிசீலிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களுக்கு குறைந்த பட்ச நியாய விலை நிர்ணயிக்க வேண்டுமென்றும், நிர்ணய விலை விவசாயிகளுக்குக் கிடைக்க உத்திரவாதம் அளிக்க வேண்டியதும் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

திரு. இ. எம். சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கான பூச்சி மருந்துகளுக்கு அரசாங்கம் மானியம் கொடுத்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைக்க வழிவகை செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVI—வேளாண்மை— என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,04,73,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

மாண்புமிகு திரு. வ. கோவிந்தசாமி : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் XVII—மீனளம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,14,17,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்"

திரு ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள சகல குளங்களையும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கூற—

"கோரிக்கை எண் XVII—மீனளம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,14,17,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள மீன் வளர்ப்பதற்குத் தகுதியான எல்லா ஏரி, குளங்களிலும், மீன் வளர்ப்பதற்காக பஞ்சாயத்துக்கு ஊக்கம் அளிக்க வேண்டியதை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVII—மீனளம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,14,17,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU T. MARTIN : Sir, to discuss about the provision of fishing facilities including cold storage, machine boats and landing spaces for boats, I move the cut motion standing in my name namely—"that the allotment of Rs. 1,14,17,200 under Demand No. XVII—Fisheries—be reduced by Rs. 100".

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, நாகையிலுள்ள மீனவர்களுக்கு (Fisheries Ice Plant) தயார் செய்யும் Ice அங்குள்ளவர்களுக்கு சரியாக கிடைக்காததுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVII—மீனளம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,14,17,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ், ரூ. 3,40,88,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள கால்நடைகளின் தரம் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்ட—

"கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ், ஒதுக்கப்படுகிற ரூ. 3,40,88,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கிராமங்கள் தோறும் கால்நடைகள் தரமானதாக உற்பத்தியாகத் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,40,88,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கோ. பாரதி மோகன் : தலைவர் அவர்களே, ஆடுகள் வளர்ப்பது போன்ற திட்டங்களில் நிதி விரையம் செய்யக்கூடாது என்பதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,40,88,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, செயற்கைக் கருத்தரிப்பு முறையில் பிரசித்தி பெற்ற காங்கய இனம் உற்பத்தியாகும் இடங்களில் "தர்ப்பார்க்கர்" இனக் கலப்பு செய்வதை ரத்து செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XVIII—விலங்கின வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,40,88,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,64,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மண் பரிசோதனை நிலையங்களை அதிகப்படுத்தும் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 53,64,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

“கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,71,03,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.”

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, காட்டிலாகா கணக்கில் வைத்திருக்கும் காடில்லாத பகுதிகளை விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டியது பற்றி விவாதிக்க—

“கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,71,03,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, காட்டு இலாகாவின் நோக்கத்திற்குப் பயன்படாத நிலம் பூராவும் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்ட—

“கோரிக்கை எண் XXXV—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,71,03,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் –

“கோரிக்கை எண் XXI—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,69,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.”

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

“கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,45,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.”

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ரப்பர் தோட்டத்தை அபிவிருத்திசெய்யவேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

‘கோரிக்கை எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 98,45,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு விடப்படுகின்றன. இப்பொழுது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்களுடைய முன்னுரை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் தமிழகத்தில் கணிசமான அளவு முன்னேற்றம் காண கனம் உறுப்பினர்களுடைய சீரிய கருத்துக்களை நான் முதலில் கேட்க விரும்புகிறேன். அவர்கள் கூறுகின்ற அரிய ஆலோசனைகளின்பேரில் நான் முடிவுரையாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன். முன்னுரையாக நான் பேச விரும்பிய குறிப்புகளை a ஏற்கனவே அச்சிட்டு இந்த மன்றத்திற்கு வழங்கியிருக்கிறேன். கனம் அங்கத்தினர்களுடைய பொன்னான நேரத்தை நான் முன்னுரைக்காக அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல் கடைசியாக எல்லா மானியங்களும்

a 378-407-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பேசுகின்ற முறையில் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது தலைவர் அவர்கள் அனுமதி தந்தால் கனம் உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களின் சீரிய அடிப்படையில் நான் பதில் கூறுகிறேன். விளக்க உரையையும், பேருரையையும், சிற்றுரையையும் அச்சிட்டு அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு அளித்து இருக்கிறேன். அவர்கள் கூறுகின்ற சீரிய கருத்துக்களை நல்ல பலனை அளித்து நாட்டிலே உணவுத் தேவையைப் பூர்த்திசெய்து நாட்டிலேயிருந்து வறுமையை அகற்றக்கூடிய அளவுக்கு அவர்கள் தங்களுடைய கருத்துக்களை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியம்தான் மானியங்களில் எல்லாம் கடைசியாக வருகிறது. வேளாண்மை குறித்து டெல்லியிலே விவசாய மாநாடு நடந்த காரணத்தினாலே அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு நாட்டிலே உள்ள விவசாய அமைச்சர்கள், இந்திய உணவு அமைச்சர் ஆகியோர் என்ன கருத்துக்களை வழங்கினார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு உரிய வாய்ப்பாக அதை எடுத்துக்கொண்ட காரணத்தினாலே என்னுடைய மானியத்தைக் கடைசியிலே ஒத்திவைக்கும்படி நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். தலைவர் அவர்கள் அனுமதி அளித்து இன்றைய தினத்திலே அது கொண்டுவரப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர்கள் பேசிவிட்டுப் போய்விடாமல் இறுதிவரையில் இருந்து இந்த மானியத்தை நல்ல முறையிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. இ. எம். சுப்பிரமணியம் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது நாடு விவசாய நாடு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்பொழுது விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் உற்பத்தியின் அளவைப் பார்க்கிறபொழுது அது அதிகரித்ததாகக் கணக்கு அளவிலே தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அதிலே உள்ள குறைகளைப் போக்குவதற்கு இந்தப் புதிய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை ஒரு தொழிலாகக் கருதவேண்டும், மற்றத் தொழில்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு அவற்றின்மேல் ஆகும் உற்பத்திச் செலவு, மூலதனத்தின்மீது ஆகும் வட்டி பிறகு லாபம் போன்றவற்றையெல்லாம் வைத்துப் பார்த்து அந்தப் பொருள்களுக்கு விலை வைக்கிறார்கள். ஆனால் விவசாயப் பொருள்களுக்கு அந்த நிலைமையில்லை; அது ஒரு பெரிய குறை என்று கூறுகிறேன். உற்பத்தி செய்கிறவர்கள் விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்க முடியாத துர்பாக்கியமான நிலை இன்றைய வரையிலும் இருந்துவருகிறது. வந்திருக்கும் புதிய அரசு இதற்கு ஒரு வழிகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்முதல் திட்டம் இப்பொழுது விவசாயிகளுக்குப் பெரும் இடையூறாக இருக்கிறது. பல தொல்லைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே கொள்முதலைப் பொறுத்தவரையில், ஒன்று, இந்த அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் அல்லது இவ்வளவு ஏக்கருக்கு நீங்கள் இவ்வளவு கொடுத்துவிடவேண்டுமென்று லெவி முறையைச் சொல்லவேண்டும் அல்லது இவ்வளவு செலவுகளுக்காக நீங்கள் இன்ன அளவு மூட்டைகளை நிறுத்திக்கொள்ளலாம் என்று நிர்ணயித்தால் விவசாயிகளுக்கு அந்த முறை சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குத் தேவையான பொருள்கள் விவசாயப் பண்டங்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் அவர்கள் விற்கும் பண்டங்களுக்கு மட்டும் கட்டுப்பாடு விதித்து விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்யும் நிலைமையைப் பார்க்கும்பொழுது, அவர்கள் வாங்கும் பொருட்களுக்கு விலைகள் உயர்த்தப்பட்டிருப்பதால் அவர்கள் மிகவும் அவலமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அந்த நிலையைப் போக்க இந்தப் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென நான் நம்புகிறேன்.

உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டம் போடப்படுகிறது என்றால் அந்தத் திட்டம் மாநில ரீதியிலே தீட்டப்படுகிறது. அப்படியில்லாமல் பஞ்சாயத்து யூனியன்கள் லெவலிலே திட்டங்கள் தீட்டப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் திட்டங்கள் சரிவர நிறைவேறியிருக்கின்றனவா, நிறைவேறுவிட்டால் என்ன காரணம் என்றெல்லாம் கண்டுபிடிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். பஞ்சாயத்து யூனியன்கள் ஸ்கீம்கள் தயார் செய்தால் அந்த ஸ்கீம் முழு அளவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்கு சௌகரியமாக இருக்கும். பஞ்சாயத்து யூனியன்களின் மூலம் எதிர்பார்க்கின்ற உற்பத்தியின் அளவு எல்லாம ஒருமுகப்படுத்தி பார்த்தால் ஜில்லா உபரியாக இருக்கிறதா அல்லது ஜில்லா உபரியாக இல்லையா என்பதையெல்லாம் சுலபமாகக் கணக்கிடலாம். அது மட்டுமன்று. எந்தவிதக் குறைபாட்டால் திட்டப்படி பலன் கிடைக்கவில்லை, குறைகளுக்குக் காரணங்கள் என்ன, அவற்றைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் எப்படி எடுப்பது என்பதை எல்லாம் காண ஏதுவாகும்.

உரப் பற்றுக்குறை இருக்கிறது என்று கூறப்படுகிறது. எதிர்பார்த்த அளவுக்கு நமக்கு 50 சதவிகிதம்தான்—அதாவது தேவைப்படுவதில் பாதிதான் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. வட கடலூரில் விவசாய மாநாடு நடந்த சமயம் விவசாய அமைச்சர் அவர்கள் உர விநியோகம் செய்வதற்கு கார்டுகள் கொண்டுவரப்போவதாக சொன்னார்கள். எப்படிக் கொடுக்கப்போகிறார்கள் என்று நிதானித்துக் கவனித்தால் எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்குக் கொடுப்பார்களா அல்லது எந்த அளவுக்குக் கிடைக்கிறதோ அந்த அளவுக்குத் தக்கவாறு உரத்தையும் பாதியாகக் குறைத்துத் தருவார்களா என்று தெரியவில்லை.

முற்பகல் 11-00 விவசாய அமைச்சர் அவர்கள் கார்டு சிஸ்டத்தைக் கொண்டுவரும் சமயத்தில்தான் தெரியும் என்று நம்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அது பற்றி உத்தரவு வந்துள்ளதாகக் கேள்விப்படுகிறேன். கார்டுகள் அச்சடிக்கப்பட்டு வருவதாகவும் கேள்விப்படுகிறேன். இதெல்லாம் நல்லதுதான். கொடுக்கும் ரசாயன உரத்தைக் காலத்திலே, பருவத்திலே கொடுத்தால் நன்றாக இருக்கும். முறையாகக் கொடுக்கவும் வழி செய்ய வேண்டும்.

கரும்பு, வேர்க்கடலை போன்ற பணப் பயிர்களுக்காகப் பூச்சி மருந்துகள் கொடுக்கும்போது 50 சதவிகிதம் மானியமாகத் தரப்படுகிறது. நெல், ராகி போன்ற பயிர்களுக்கு 25 சதவிகிதந்தான் தரப்படுகிறது. இதை மாற்றியமைத்து நெல், ராகி போன்ற பயிர்களுக்கு 75 சதவிகிதம் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறுகள் வெட்ட மானியம் கொடுக்கப்படுகிறது. அதற்காகக் கொடுக்கப்படுகிற மானியமும், கடன் தொகையும் இப்போது இருக்கக்கூடிய கூலி அளவு அதிகமாகியிருப்பதற்கேற்ப அதிகமாக உயர்த்திக் கொடுத்தால் நல்லது. பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகையை ஐந்து வருஷ காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் கொடுக்கப்படுகிறது. அதை ஏழு வருஷ காலம் என்று நீட்டிக் கொடுத்தால் நல்லது. விவசாயத்திற்கு மின்சார சப்ளைக்காக அப்ளிகேஷன் போட்ட தேதியில் இருந்து இத்தனை தினங்களுக்குள் கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு வரம்பை நிர்ணயம் செய்தால் நல்லது என்று கருதுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று விவசாய வேலைகளைக் கவனிக்க முடிவதில்லை. விவசாய டெப்போவில் தகுந்த கிளார்க் கிடையாது. பெஸ்டிஸைட்ஸ் விற்கவே அவருக்கு முழு நேரமும் செலவாகிறது. அவர் கிராமத்திற்குச் சென்று விவசாய மக்களிடத்தில் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார். இ.ஓ. (அக்ரிகல்சர்)-ஐ பஞ்சாயத்து யூனியனில் இருந்து எடுத்துவிட்டு, பழையபடி தாலூகாவுக்கு ஒரு டெமான்ஸ்ட்ரேடர் என்று இருந்ததை, பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு டெமான்ஸ்ட்ரேடர் வீதம் போட்டு நேரடியாக அவர்களை மாவட்ட விவசாய அதிகாரியின்

கீழ் கொண்டு வரவேண்டும். அதே போன்று கிராம சேவக்குகளும் விவசாய அதிகாரியின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அதன்படி ஒவ்வொருவருக்கும் 10 அல்லது 12 கிராமங்கள் என்று இணைத்து "கிராப்பிங் ஸ்கீம்" என்று போட்டுக் கொடுத்தால் எந்த அளவுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். குந்தகம் ஏதேனும் ஏற்பட்டால் அவர்களைக் கேட்க ஏதுவாக இருக்கும். விவசாயிகளுடைய தேவையைக் கேட்டறிந்து, பொறுக்கு விதைகள், தழை விதைகள், ரசாயன உரங்கள் ஆகியவற்றை அவர்கள் மூலம் கிராம மக்களுக்கு விநியோகம் செய்வது நல்லது. கிராம சேவக்குகளை விவசாய அதிகாரிகளின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பதை மீண்டும் கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் டிராக்டர்கள், பவர் டிரில்கள் போன்ற மெஷின்கள் கொடுக்கப்படவேண்டும். கிணறுகள் வெட்டுவதற்கான பிளாஸ்டிங் யூனிட் ஒன்றையும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒன்று என்று கொடுத்தால் நல்லது. இவையெல்லாம் இப்போது மாவட்ட ரீதியில் இருக்கிறது. அது பஞ்சாயத்து யூனியன்கள் அளவில் இருந்தால் கிராம மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும்.

கிணறு வெட்டும் இயந்திரம் மேலைநாட்டில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அம்மாதிரி இயந்திரத்தைக் கிணறு வெட்டப் பயன் படுத்தினால் கிணறுகளை வெட்ட சௌகரியமாக இருக்கும். அரசாங்கமே கிணறுகளை வெட்டிக் கொடுத்துவிட ஏதுவாக இருக்கும். தூர் வாரும் இயந்திரங்களை தாலூகாவுக்கு ஒன்று வீதமாவது கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரையாற்றுவதற்காகப் பெயர் கொடுத்த உறுப்பினர்களுக்கு மீதி இருக்கிற நேரத்தைப் பங்கீடு செய்தால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நான்கு நிமிட அளவுதான் வருகிறது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இதுவரை 11 நிடமிம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சராசரி 4 நிமிடந்தான் வருகிறது. பின்னால் காங்கிரஸ் கட்சியினுடைய நேரத்தைக் குறைத்து கொள்வதாக இருந்தால் சரி. என்மீது குறை சொல்லாமல் இச்குபடி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இ. எம். சுப்பிரமணியம் : கடைசியாக விவசாய அமைச்சர் அவர்களையும் உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நெல்லிக்குப்பம் ஆலையில் இருந்து கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்குப் பல ஆண்டுகளாக கொடுக்கப்பட வேண்டிய போனஸ் தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி மத்திய உணவு அமைச்சரிடம் எடுத்துக் கூறி விவசாயிகளுக்குக் கூடிய சீக்கிரத்தில் அந்த போனஸ் தொகை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. சின்னசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத் தொடர் கூட்டத்தில் முதன் முறையாகப் பேச அனுமதி கொடுத்ததற்காக எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறை மானியத்தின் மீது ஒதுக்கப்பட்ட தொகை இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்க வேண்டுமென்ற மனப்போக்கோடு ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு, 'நானும்' என்னுடைய மகனும், என்னுடைய பேரனும் வேளாண்மைத் துறையிலே இருக்க மாட்டோம், என்ற எண்ணம் கொண்டிருந்த விவசாயப் பெருங்குடி மக்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்து தொடர்ந்து நல்ல பல காரியங்களை ஆற்றிய காரணத்தால் 'நானும்' என்னுடைய மகனும், என்னுடைய பேரனும் இந்த விவசாயத் துறையிலேதான் இருப்போம், என்ற நம்பிக்கையோடு நல்ல உணர்வோடு தமிழகத்தில்

விவசாயப் பெருமக்கள் இருந்து வருகிறார்கள். அதற்காக இந்த அரசினருக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியை ஆரம்பத்தில் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒருசில குறைகள் இருக்கின்றன. அவை நீண்ட நெடுங்காலமாக வழக்கத்தில் இருப்பதாலோ, நிர்வாகக் குறைவின் காரணமாகவோ இருப்பவை. அதைப் பற்றிய சில கருத்துக்களை அரசுக்கும் அமைச்சரவைக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, இந்த நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற எண்ணத்திலே இருக்கும் நாம் விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சில விடுதலைகள் தரவேண்டுமென்று விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் கிராமங்களில் ஒரு பழமொழி வழங்குவது உண்டு. 'கல்லோடு எதிர்த்தாலும் கர்ணத்தோடு எதிர்க்காதே என்பதுதான் அந்தப் பழமொழி. கிராமங்களில் விவசாயிகள் சுதந்திரமாக வாழ முடியாது இன்று கர்ணத்திற்கு அடிமைப்பட்டுத்தான் வாழ வேண்டியிருக்கிறது என்பதைக் கருத்து வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதிலே அடிப்படையாகச் சில மாறுதல்களைச் செய்து விட்டால் பெரிய சங்கடமான நிலையில் இருந்து விவசாயிகள் விடுபடுவார்கள் என்று நம்புகிறேன். தமிழகத்தில் கூட்டுப்'' பட்டா முறை அதிகமாக இருக்கும் காரணத்தால் ஆண்டுக்காண்டு ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய உரிமையை இழக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு அவசர உத்தரவின் மூலம் ஒருசில மாதங்களுக்குள்ளாக தமிழகத்தில் உள்ள பட்டாக்கள் அனைத்தையும் தனித்தனிப் பட்டாவாக்க உத்தரவிட்டு தனிப் பட்டாவாக மாற்றி விட்டால் பெரும்பான்மையான துன்பங்கள் விவசாயிகளுக்குப் போய்விடும் என்று மனமார நம்புகிறேன்.

விவசாயத்திற்கு என்னதான் செய்வதாகச் சொல்லிக் கொண்டாலும், 100அடி, 120 அடிக்குக் கீழே உள்ள தண்ணீரை 1,000 ரூபாய்,1200 ரூபாய் என்று கொடுத்து ஒரு ஜோடி எருதுகளை வாங்கி 12 மணி நேரம், 14 மணி நேரம் என்று தண்ணீர் இறைக்க வேண்டியிருப்பதால் விவசாயிகள் முழு உற்சாகத்தோடு விவசாயம் செய்ய முடியவில்லை. அதனால் குந்தகம் ஏற்படுகிற காரணத்தால் தேவையான அளவுக்கு மின்சார வசதியைச் செய்து கொடுத்தால் இந்த உலகத்திலுள்ள எந்த விவசாயிக்கும் மேம்பட்ட அறிவோடு, ஆற்றலோடு ஓராண்டுக்குள் நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை அவர்கள் உற்பத்தி செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வேதனையோடு ஒரு சேதியை உங்கள் மூலமாக இந்த மன்றத்தில் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். என் கையில் இருப்பது பொறுக்கியெடுக்கப்பட்ட மனுக்கள். என் தொகுதியில் இருந்து 1,360 மனுக்கள் மின்சார இலாகாவிற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 1,366 மனுக்களில் 1,161 மனுக்கள் நானுகவே நேரடியாக பொறுப்புணர்ச்சியோடு பரிசீலனை செய்த மனுக்கள். அந்த மனுக்கள் 1963, 64-ல் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திற்கு விவசாய பெருங்குடி மக்களால் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக அங்கு அவர்களுக்கு மின்சாரம் வழங்காமல் அவர்கள் தவித்துக் கொண்டிருக்கும் போது அந்த விவசாயி எப்படி உணவு உற்பத்தியில் முழு மூச்சாக ஈடுபட முடியும் என்பதை உணர்ந்து மின்சார இலாகா குளங்களுக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து அந்த விவசாயிகளின் கிணறுகளை நோக்கி அந்த நிர்வாகம் சென்று ஒரு மாதத்திற்குள்ளாக இந்த மின்சாரத்தை சப்ளை செய்ய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு, பருத்தி, புகையிலை, வேர்க்கடலை இவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் பண உதவி இல்லையாதலால் பெரும் பணம் படைத்த முதலாளிகளிடம் இருந்து பணம் பெற்று புகையிலையை ஈடுசெய்து, மஞ்சளை ஈடுசெய்து, வேர்கடலையை ஈடுசெய்து, தாங்கள் அறுவடை செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்பே எளிய குறைந்த விலையில் அவர்களுக்கு விற்பதாக ஒப்பந்தம் செய்து

கொள்கிறார்கள். ஆகவேதான் இருபத்தைந்து ஆண்டுகள் ஆகியும் கூட நமக்கு கிடைக்கும் புள்ளிவிவரப்படி கிராமங்களில் புகையிலை, கரும்பு, வேர்க்கடலை இவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகள் கடனாளிகளாகவும், அதை வாங்கி விற்கக் கூடியவர்கள் கோடீஸ்வரர்களாகவும் ஆகும் பொருளாதார நிலை இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் அனைவரும் அறிவர்.

ஆகவே, இந்நிலையைப் போக்க, தலைவர் அவர்களே, உங்கள் மூலம் ஒரு சிறிய திட்டத்தைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஏழாண்டுகளுக்கு முன்பு என் மாவட்டத்தைச் சேர்ந்த மதிநுட்பம் வாய்ந்த ஒரு அமைச்சர் இருந்தார்கள், அவர்கள் கூட இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, என்னிடம் ஆயிரம் ரூபாய் பாங்கில் ரொக்கமாக இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். என் ஊரில் ராமசாமி என்பவருக்கு ஐந்து ஏக்கர் நன்செய் நிலம், 50,000 ரூபாய் மதிப்புள்ள நிலம் இருக்கிறது. ஆனால் ஆயிரம் ரூபாய் ரொக்கம் வைத்திருக்கும் சின்னசாமி நினைத்தமாத்திரத்தில் செக் மூலம் பாங்கிலிருந்து பணத்தைப் பெற்று விட முடியும். ஆனால் 50,000 ரூபாய் சொத்து மதிப்புள்ள அந்த விவசாயி ஒரு 500 ரூபாய் வாங்க வேண்டுமென்றால் தன் சுயமரியாதை அத்தனையையும் இழந்து 200 ரூபாயைக் குறைத்து ரூபாய் 300 வாங்கும் துர்பாக்கியகரமான நிலை இருக்கிறது. ஆகவே நான் அதற்கு என் கீழ்க்கண்ட யோசனையைக் கூறிக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே தனிப்பட்ட லேவாதேவிக்காரர்கள், வங்கிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து சர்க்கார் மூலதனத்தையும் சேர்த்து 51 சதவிகிதம் சர்க்கார் பங்கும் 49 சதவிகிதம் தனிப்பட்ட லைசென்ஸ் பெற்றவர்கள் பங்கும் என்று வைத்து அந்த மூலதனத்தை கொண்டு விவசாயிகள் விரும்புகிற நேரத்தில் அவர்களுக்கு செக் மூலம் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளின் துன்பங்கள் அத்தனையையும் போக்கி விடலாம். இதை சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(திரு. பெ. மலைச்சாமி தலைமை.)

ஆகவே, ஒன்று கர்ணங்களிடமிருந்து விடுதலை, இரண்டு, தான் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான பணம் கிடைக்கும் வகையில் மார்க்கட்டிங் செய்வதற்குள்ள பாதுகாப்பு, மூன்றாவதாக அவர்களுக்கு தேவைப்பட்ட பணம் காலாகாலத்தில் கிடைக்கச் செய்வது என்று இந்த மூன்று உதவிகளையும் செய்தால் அவர்கள் தங்களுக்குத் தேவையான பண்டங்களை ஆனியிலேயே பெற்றுக் கொண்டு, "ஆனி விதைத்தல், ஆடி முளைத்தல்" என்பதுபோல் தங்களுக்கு வேண்டிய பொருள்களை சேகரித்து வைத்துக் கொண்டு உற்சாகமாக விவசாயத்தில் ஈடுபட முடியும். இப்படிப்பட்டதொரு நிலையை தமிழகம் முழுவதும் உருவாக்கும் நிலை இல்லை என்றால் கோவை மாவட்டத்தில் அந்த பொறுப்பை ஒரு ஆண்டுக்கு கொடுத்துப் பாருங்கள். நடைமுறைச் சிக்கல்கள் எதுவுமில்லாமல், சர்க்காருக்கும் நிர்வாகச் செலவு இல்லாமலும், சர்க்காருக்கு பண முடை ஏற்படாதவிதத்திலும் அதை நிறைவேற்றிக் காண்பிக்கிறோம். இன்டன்ஸிவ் ஏரியாஸ் என்று கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களை அதில் சேர்த்திருக்கிறார்கள். கோவை மாவட்டம் என் மாவட்டம் ஆகையால் அது இல்லாது தஞ்சை அல்லது திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டு இதை பரிசீலனை செய்து பார்த்தால் தெரியும். விவசாயிகள் தங்கள் சொத்தின் 25 சதவிகிதம் பணத்தை தேவையான சமயத்தில் பாங்கில் செக் மூலம் வாங்க ஏற்பாடு செய்யவேண்டும். இதில் இரண்டு நன்மைகள் உள்ளன. ஒன்று, உணவு உற்பத்தியில் அவர்கள் அக்கறை காட்டுவார்கள். இரண்டாவதாக, விவசாயிகளின் ஒவ்வொரு செப்புக் காசும் பாங்கில் போடும் நல்ல பழக்கம் ஏற்பட்டு சேமிப்பும் ஏற்படும். இன்று ஒரு விவசாயி 500 ரூபாய் வாங்குவதற்குச் செல்கிறான் என்றால் நான்கு ஸ்டாம்ப் ஒட்டி அதற்குக் கீழ் கையெழுத்து போட்டுக் கொடுக்கி

றான். அதில் லேவாதேவிக்காரன் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். இதுதான் தமிழகத்தில் விவசாயிகளுக்கும் பாங்குகளுக்கும் உள்ள தொடர்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே நான் மேற் சொன்னபடி செய்தால் நம் நாட்டு விவசாயிகள், அமெரிக்க விவசாயிகள், ரஷ்ய விவசாயிகள் இவர்களைவிட நல்ல முறையில் உற்பத்தி செய்து நம் உணவுத் தேவை போக கேரளாவிற்கும் உணவு அனுப்ப முடியும் என்ற நிலையில் அவர்கள் அரசை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்படிச் சொல்லக் காரணம், நம் விவசாயிகள் நல்ல அறிவு, ஆற்றல் அனுபவம் உடையவர்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விவசாயி மகனை தொழிலாளியாக்குவேன் என்றார்கள். நான் என் மகன், என் பேரன், இன்னும் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு குடி வந்திருக்கிற வர்கள் விவசாயத்தில் ஈடுபடும் அளவிற்கு நல்ல பல திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்க இருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பெ. மலைச்சாமி): பேசுகிற உறுப்பினர்கள் நான்கு மணித்துளிக்குள் தங்கள் கருத்துக்களை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு கே. வி. சுப்பையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்குமுகத்தான் நானும் ஒருசில யோசனை களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் புதுக்கோட்டைப் பகுதி விவசாயத்தில் மிகவும் குறைந்த பகுதி, அங்கு மழையை நம்பித் தான் விவசாயம் செய்யவேண்டியிருப்பதால், எங்கள் புதுக்கோட்டைக்கு காவேரி ஆற்றுத் தண்ணீரையாவது அல்லது அமராவதி நதித் தண்ணீரை யாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி காவேரி ஆற்று நீரைக் கொடுக்க முடியாவிட்டாலும், அதிலுள்ள உபரித் தண்ணீரை யாவது சமுத்திரத்தில் போய் அனாவசியமாக கலக்கும் தண்ணீரையாவது எங்களுக்கு கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மழைத் தண்ணீர் கடலில் போய் வீணாவதைத் தடுத்து அரசாங்கம் பெரிய திட்டங்களைப் போட்டு அந்த மழைத் தண்ணீரைத் தேக்கி அதை விவசாயத்திற்கு பயன்படும்படிச் செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, சப்சாயில் வாட்டர், பெரிய அளவில் திட்டமிட்டு அந்தத் தண்ணீரை வெளிக் கொணர்ந்து பம்ப்செட்ஸ் அல்லது இதர முறைகளைக் கையாண்டு அந்தத் தண்ணீரையும் விவசாயத்திற்குப் பயன் உள்ளதாகச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரிய பெரிய கண்மாய்களில் தண்ணீர் ஊற்று வரும்போது கம்யூனிட்டி வெல்ஸ் வெட்டி பம்ப் செட்ஸ் வைத்து விவசாயி களுக்கு பயன்படும்படிச் செய்யவேண்டும். அந்த வகையில் ஏற்படும் செலவை பெட்டர்மெண்ட் டாக்ஸ் மூலம் ஈடுசெய்து அந்தமாதிரிக் கிணறு களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, காடுகளில் நன்கு விவசாயம் செய்யக்கூடிய பல இடங்கள் இருக்கின்றன. அந்தமாதிரி இடங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுத்து விவசாயம் செய்யத் தகுந்த முறையில் அந்தக் காட்டு இடங்களை விவசாயிகளுக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது எல்லாத் தொழில்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கி றது. எந்தத் தொழிலுக்குச் சென்றாலும் வேலைஇல்லை வேலை இல்லை என்ற நிலை தான் இருக்கிறது. ஆனால் விவசாய வேலை செய்வதற்கு மட்டும் ஆள் கிடைப்பதில்லை. காரணம் விவசாயத் தொழில் லாபகரமான தொழி லாக இல்லாதிருப்பதுதான். ஆகவே விவசாயத் தொழிலை லாபகரமான தொழிலாக்கினால், வேலையில்லாத் திண்டாட்டமும் போகும், விவசாயமும் பெருகும். விளைச்சலும் அதிகம் ஆகும் ஆகவே விவசாயத் தொழிலை லாபகரமானதாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தழை உரத்தைப் பொறுத்தவரையில் காடுகளிலே அதற்கான தழைகளைச் சேக ரித்து விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். இப்போது காடுகளிலே விற குக்கு உபயோகப் படுத்தக்கூடிய மரங்களை உண்டாக்குகிறார்களேயொழிய தழை உரத்திற்கு உபயோகப்படக்கூடிய தழைகளைக் கொண்ட மரங்களை வளர்ப்பதில்லை. அத்தகைய மரங்களை வைத்து காடுகள் விவசாயத்திற்குப் பயன்படும் முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்திற்குப் பெரும் துணையாக உள்ளது கால் நடைகள், கால்நடைகள் தீவனங்கள் இல்லாமல் எலும்பும் தோலுமாக உள்ளன. கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங் களை, மாட்டுத் தீவனங்களை, மாட்டுத் தீவனப் புல் போன்றவைகளை வளர்க்க, அவர்களை ஊக்குவிக்கும் முறையில் விவசாயிகளுக்கு லோன் தரவேண்டும், ஸப்ஸிடி தரவேண்டும். அந்த முறையில் தந்து மாட்டுத் தீவனங்களை வளர்த்து அவர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, விவசாயிக்கு எப்படி சல்பேட் உரங்களை விநி யோகம் செய்கிறோமோ, அதேமாதிரி பிண்ணாக்கும் விவசாயிக்குத் தேவை. அதேநேரத்தில் பிண்ணாக்கு மாட்டுக்கும் தீவனமாக இருக்கி றது. அப்படிப் பட்ட பிண்ணாக்கை அரசாங்கமே கொள்முதல் செய்து, நல்ல முறையில் வினியோகம் செய்து, விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு விரு ம்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. ந. சிவபெருமாள்: சட்ட மன்ற தாற்காலிகத் தலைவர் அவர் களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னு டைய ஓரிரு கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல நான் விழைகிறேன்.

ஒரு நாட்டினுடைய உண்மையான வளர்ச்சி விவசாயத்தில்தான் இருக்கிறது. அந்த விவசாயத்தின் வாயிலாக பெறப்படுகிற உணவில் தான் இருக்கிறது. உண்டி கொடுத்தவன் உயிர் கொடுத்தவனே, என்று பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான புறநானூறு எடுத்துச் சொல்லுகி றது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற சிறப்பியல்புகளுக்கெல்லாம் உரியவர்கள் உழவர் பெருங்குடி மக்கள் ஆவர். அத்தகைய உணவை உற்பத்தி செய்பவர்கள், உணவு தானியத்தை உற்பத்தி செய்கிற உழவர் பெருங்குடி மக்கள் இந்த நாட்டின் முதுகெலும்புப் போன்றவர்கள். அத்தகைய சிறப்பியல்பு களையுடைய உழவைத் தொழிலைப் புறக்கணித்ததன் காரணமாக, உழவர் பெருங்குடி மக்களைச் சிறுமைப்படுத்தி அவர்களை வேறு தொழில்களில் ஈடுபடச் செய்ததால் சென்ற அரசு மக்களின் நன்மதிப்பைப் பெறத் தவறி விட்டது என்பதை நாம் கண்கூடாகக் கண்டோம். வானை முட்டுகிற கட்டடங்களையும், வண்ணப் படங்களையும் காட்டி விவசாயப் பெருங் குடி மக்களை நகர்ப்புறத்திற்கு ஈர்த்த நிலையில் சென்றது தவறு என்று நல்லவர்கள் எடுத்துக்காட்டியும், அவர்கள் அதற்கேற்ப செயல்படாத நிலையில், கடந்த காலத்திய அரசு மக்கள் மன்றத்தில் செல் வாக்கு இழந்து வீழ்ந்தது என்பதை நாமெல்லாம் கண்டோம். இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றக் கழக அரசு, மக்களுடைய நன் மதிப்பைப் பெற்று, மக்களுடைய நலன்களைப் பிரதி பலிக்கும் வகை யில் மக்கள் குறைகளையெல்லாம் களையும் முறையில் இந்த ஆட்சி செய்து கொண்டு வருகிறது என்பதை நாமெல்லாம் பார்த்துக்கொண்டி ருக்கிறோம். இப்படிப்பட்ட ஆட்சியில் நல்ல பல திட்டங்கள் உருவாகும். உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கிற புதிய முறை விளைச்சல் திட்டம் பாராட்டத் தக்கதாகும். சென்ற அரசு போன பாதையும் போகாமல் இன்றைய அரசு நல்ல முறையில் புதிய பாதைகளை வகுத்து நிறை

வேற்ற முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. உழவுத் தொழிலுக்குத் துணையாக அமைகிற முறையில் தஞ்சை மாவட்டத்தில் மின் வழங்கும் நிறுவனங்களை அரசு மேற்கொண்டிருப்பது சிறப்பியல்புக்குறிய ஒன்று ஆகும். வருவாய் அடிப்படையில் இயங்குகிற அத்தகைய தனியார் நிறுவனங்களை அரசாங்கமே மேற்கொண்டு நடத்த முன் வருவது மக்கள்பால் கொண்டிருக்கிற அன்பால், நாட்டு நலனில் கொண்டுள்ள அக்கறையால் என்று எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

இயந்திரக் கலப்பைகளை, விதைக் கலப்பைகளை உழவர் பெருங்குடி மக்களுக்கு வழங்கியிருப்பது பாராட்டத் தக்கது. இந்த முறைகளை சேலம் மாவட்டத்திலும் மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உழவர் பெருங்குடி மக்களுக்கு நல்ல பல சலுகைகளை இந்த அரசு தருவதற்கு முயலவேண்டும். கடன் தவணைகளைக் கூட்டி, நீண்ட தவணைக் கடன்களாகக் கொடுக்கவேண்டும்.

சென்ற அரசு உர விநியோகத்தில் கலப்படங்களையெல்லாம் செய்து கள்ள மார்க்கெட்காரர்கள் நுழையத் தக்கதாக ஆக்கியிருந்தது. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிற கார்டு முறை ஏற்பாடு நல்லதொரு ஏற்பாடாக அமையும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

விலைவாசி உயர்வைக் குறைக்கவேண்டுமென்றும், உழவர் பெருங்குடி மக்களுக்கு நல்ல பல நன்மைகள் செய்யவேண்டுமென்றும், மாநில அரசு செயல் பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், மத்திய அரசு உர விலைகளை உயர்த்தியிருப்பது கண்டிக்கத் தக்கது. எல்லோரும் எதிர் பார்க்காத ஒன்று என்பதனைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

உரிய காலத்தில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்க முன் கூட்டியே அரசு நல்ல பல திட்டங்களை வகுத்துக் கொடுக்கவேண்டும்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆத்தூர் தொகுதி விவசாயத்திற்குப் பெயர் பெற்றத் தொகுதியாகும். 90 சத விகிதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழுகிற மக்கள். அங்கே பல ஏரிகள் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. அணைகள் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. இப்படிப்பட்ட நல்ல பல நன்மைகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்தும், அதோடு என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தையொட்டியும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் என்ன என்றால், விவசாயப் பெருங்குடி மக்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக, குந்தகப்படுத்தும் காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று இந்தச் சபையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவுடைமை லட்சியத்தைக் கொண்ட ரஷ்யாவிலும், Collective farm என்று நடைமுறையில் வைத்துக்கொண்டிருந்தாலும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தனி விவசாயத்திற்கு ½ ஏக்கர் முதல் 1½ ஏக்கர் வரையில் கொடுத்து, அதிலே அவர்கள் இஷ்டப்பட்ட பயிர்களை வைத்து, அவர்கள் இஷ்டப்படி விற்க உரிமை கொடுத்திருக்கிறார்கள். மொத்தத்தில் 5 சதவிகிதம் அளவுக்கு இந்த விதமாக நிலங்கள் தனியார் துறையில் இருந்தாலும், உற்பத்தித் துறையில் 50 சதவிகிதம் அளவுக்கு உற்பத்திப் பொருள்களைக் கொடுக்கிறார்கள்

என்று கூறுகிறார்கள். இந்த கொள்முதலைப் பொறுத்தமட்டில் 2½ ஏக்கர் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும். அப்போது தான் ஓரளவுக்கு விவசாய மக்கள் நன்மை பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

வியாபாரிகளுக்கு 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரையில் சேல்ஸ் டாக்ஸிலிருந்து எக்ஸெம்ப்ஷன் கொடுத்த பிறகு இப்போது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்கள் கொடுக்கக் கூடிய விவசாய வருமான வரியைப் பொறுத்த மட்டில் 12½ ஏக்கரிலிருந்து குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமேயானால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இன்னல் விளைவிக்கக் கூடியதாக இருக்கும். 12½ ஏக்கர் என்பதை 20 ஏக்கராக உயர்த்திக் கொடுக்க வேண்டும். நெல் உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு விவசாய வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். காஷ் க்ராப்ஸ் பயிரிடக் கூடிய விவசாயிகளிடமிருந்து விவசாய வருமான வரியை வாங்கினாலும், நெல் விளைவிக்கின்றவர்களிடமிருந்து விவசாய வருமான வரி வாங்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு புத்தன் தருவை வடிகால் திட்டம், சஸ்தாவிநல்லூர் கண்தருவை வடிகால் திட்டம், தாங்கைக் குளம் திட்டம், தினசயன் விளக்கு மேற்கே சுவிசேஷபுரத்தில் குளம் அமைத்து புத்தன்தருவைக்கு வரும் தண்ணீரின் சேதத்தை தடுக்கும் திட்டம் எல்லாம் நிறைவேற்றும் தருவாயில் இருக்கின்றன. அவைகளை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதியில், இலங்கையிலிருந்து வந்த பிரஜைகள், தங்களிடமிருந்த பொருள்களையெல்லாம் போட்டு பம்ப் செட்டுகளை வாங்கி வைத்து அவர்களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்காது மிகவும் அல்லல் படுகிறார்கள் குறிப்பாக தண்டலங்காடு என்ற கிராமத்திலும்......

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எத்தனை வருஷமாக மின்சாரம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

திரு டி. மார்டின் : எத்தனை ஆண்டுகள் என்று கேட்பதைவிட, இனிமேல் நாங்கள் செய்வோம் என்று சொன்னால், மிகவும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேன். அந்த இடங்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடல் வளத்தைப் பொறுத்த மட்டில் இயற்கையாகத் தமிழகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கடல் வளத்தை நாம் பயன்படுத்தினாலும், இன்னும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். பெரியதாளை, மணப்பாடு குலசேகரப்பட்டணம் போன்ற இடங்களில் மீன்களைக் கேரளத்திலிருந்து வந்துகொண்டுசென்று விடுகிறார்கள். பெரியதாளையில் குளிர் பதன சாதனங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போட் விஷயத்திலே, 120 போட்டுகள் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலையில் அரசாங்கம் மறு பரிசீலனை செய்வதாக கூறி இருக்கிறது. அவ்வாறு மறு பரிசீலனை செய்யும்போது அரசியல் குறுக்கீடு இல்லாமல் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், காங்கிரஸின் முக்கிய அங்கத்தினரான ரமணி அம்மாள் அவர்களுடைய கணவருக்கு ஒரு போட் அரசாங்கத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது என்று கூறி நீக்கி விடுவார்களோ என்ற பயம் அரசியல் காரணமாக மீனவர்களுக்கு வேண்டாம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மேலும் மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை எல்லா கிராமங்களுக்கும் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முற்பகல் 11-30
இந்த மீன் இலாகா பொறுப்பேற்றிருக்கக்கூடிய டைரக்டர் அவர்கள் சிறந்த ஒரு நல்ல டைரக்டராக இருந்தாலும், அவர்களுக்கும் இன்னும் அதிகமாக

ஊக்கம் கொடுத்து, கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு நல்ல விதமான உதவிகளைச் செய்யக்கூடிய வாய்ப்பும், வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மணப்பாடு, பெரியதாழை, குலசேகரப்பட்டிணம் மற்றுமுள்ள கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலை கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து, இத்துடன் விடை பெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பெ. மலைச்சாமி: திரு கோதண்டராமையா, திரு பி. எஸ். எல்லப்பன் ஆகியோர்களுடைய காலத்தையும் எடுத்துக்கொண்டு திரு கரு. சீமைச்சாமி அவர்கள் 12 மணித்துளிகள் உரையாற்றலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மான்யக் கோரிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தி பெருகவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை நான் இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 5 லட்சம் டன் தான் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. 55 லட்சம் டன்னிலிருந்து 60 லட்சம் டன் தான் உற்பத்தியாகியிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மூன்ருவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் உணவு உற்பத்திக்காக கிட்டத்தட்ட ரூபாய் 47 கோடி செலவழிக்கப்பட்டாலும், ஒரு துளி கூட உணவு உற்பத்தி பெருகவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மான்யம் மிகவும் ஒரு முக்கியமான மான்யம் என்று சொன்ஞர்கள். உணவு உற்பத்தி பெருகாவிட்டால், எந்த அளவுக்கு உணவுக் கஷ்டம் வரும், எந்த அளவுக்கு நாட்டில் கொந்தளிப்பு ஏற்படும் என்பதை நாமெல்லாம் அறிவோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரிய நீர்நிலைகளை உபயோகப்படுத்திக்கொண்டு பாசன வசதி செய்துகொண்டாகிவிட்டது. சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் தான் உணவு உற்பத்தியைப் பெறுக்கவேண்டும் என்று சொன்ஞர்கள். நான் அதை வரவேற்கிறேன். தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு மாபெரும் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிஞல், உணவுப் பஞ்சம் பறந்துபோய்விடும். தென் மண்டல மாநில அமைச்சர்கள் கூடி சந்தித்துப் பேசுகிருர்கள். கேரளத்திலுள்ள தண்ணீர் கடலில் போய் விழுந்து வீஞகப் போகிறது. ஆகவே, அந்த நீரை தமிழகத்திற்கு திருப்பிவிட்டு பாசன வசதிக்கு ஏற்பாடு செய்தால், தமிழகத்தில் ராமஞதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் சுமார் 2½ லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று, உணவு உற்பத்தி அதிகரிக்கும். நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கேரள முதல் அமைச்சர் அவர்களோடு மீண்டும் கலந்து பேசி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால், கிட்டத்தட்ட இந்த ஆண்டு 1,133,000 டன் அதிகமாக உற்பத்தி பெருகவேண்டும் என்று கணக்குக் கொடுத்திருக்கிருர்கள். அதிகமாக உணவு உற்பத்தி பெருகவேண்டிய அவசியத்தை நானும் வலியுறுத்துகிறேன். ஆஞல், உணவு உற்பத்தி விஷயத்திலே நாம் போதிய கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். மதிப்பிற்குறிய அங்கத்தினர் திரு. சின்னச்சாமி அவர்கள் பேசும்பொழுது விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்ஞர்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் என்று இருப்பதைப் போல உணவு உற்பத்தி கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விவசாய மக்களுக்கு எளிய முறையில் கடன் கொடுப்பதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

V8.11_31 N67
N67-5-3

சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்தவரையில், கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எந்த விதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ரயத்துவாரி கண்மாய்கள் 12,734 இருக்கின்றன. அவைகளில் சென்ற 12 ஆண்டு காலத்தில் 1,390 கண்மாய்கள் தான் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன. பாக்கி 11,344 கண்மாய்கள் இன்னும் மராமத்து செய்யப்படவில்லை. ஜமீன் கண்மாய்களை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலுள்ள 12,418 கண்மாய்களில் சென்ற 15 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மராமத்து செய்யப்பட கண்மாய்கள் 3,767 தான். இதையெல்லாம் பார்க்கும்பொழுது ஆமை வேகத்தில்தான் சென்றுகொண்டிருக்கிறது சிறிய நீர்ப்பாசனத் துறை. ஆகவே, இந்த அமைச்சரவை இதை நன்கு பரிசீலித்து, சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1966–67-ல் இடைக்கால பட்ஜெட்டில் சிறிய நீர்ப்பாசன திட்டத்திற்காக ரூபாய் 3,31,00,000 ஒதுக்கப்பட்டது. ஆஞல் 1967–68-ல் சிறிய நீர்ப்பாசன திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 2,46,00,000 தான். இது மிகவும் குறைந்த தொகையாகும். ஆகவே இந்தத் துறையில் இன்னும் போதிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரசாயன உரத்தைப் பற்றி கூறும்போது, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் திருச்சியில் நடந்த கருத்தரங்கில் பேசும்பொழுது, விவசாயிகள் உரத்திற்காக அலைகிருர்கள், பணத்தை கையில் வைத்துக்கொண்டிருந்தாலும் உரம் கிடைப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். உணவு உற்பத்திக்கு உரம் மிகவும் முக்கியமான தேவை. மாவட்டக் கலெக்டர்கள் அறிக்கையின் மூலம் நமது மாநிலம் பூராவுக்கும் கிட்டத்தட்ட 52,781 டன் நைட்ரஜன் உரம் தேவை என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆஞல், நமது தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டிருப்பது 26,660 டன்தான் கேட்டிருக்கிருர்கள். மீதம் 26,121 டன் தேவைப்படுகிறது. ஆகவே, தமிழக அரசு . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்திற்கு வேண்டிய நைட்ரஜன் உரம் 1,63,000 டன், மத்திய அரசு நமக்குக் கொடுப்பதாக இருப்பது 83,000 டன்.

64976

திரு கரு. சீமைச்சாமி : நைட்ரஜன் உரம் நமக்குத் தேவையாக இருப்பதை மத்திய அரசு கொடுபபதாக இருந்தால், அதை நான் வரவேற்கிறேன். விவசாயிகளுக்கு உரத்திற்காக கடன் கொடுப்பதற்கான தொகை சென்ற தடவை 1966–67-ல் ரூ. 1½ கோடி ஒதுக்கப்பட்டது. 1967–68-ல் அது ரூபாய் 1 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. உரம் வாங்குவதற்கு, விவசாயிகளுக்கு போதிய நிதி வசதி அளிக்கப்படவேண்டும்.

உர விநியோகத்தைப் பொறுத்தவரையில், கோவாபரேடிவ் சொஸைடிகளின் மூலம் உரம் விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு உரத்திற்காக கடன் கொடுத்தாலும், அந்த விவசாயி அந்த சொஸைடியில் மெம்பராக இருந்தால்தான் உரம் வாங்கமுடியும், இல்லாவிட்டால் வாங்க முடியாது. அந்த சொஸைடிகளில் சர்வாதிகார முறை நிலவி வருகிறது. இதைக் கண்டித்து மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பம்பு செட்டுகள் ஸ்கீமுக்காக போர்டு ஆப் ரெவின்யூ புட் ப்ரொடக்ஷன் 1966–67-ல் கிட்டத்தட்ட ரூபாய் 175 லட்சம் கேட்டிருந்தார்கள், இந்தத் தடவை 1967–68-ல் ரூபாய் 400 லட்சம் கேட்டிருந்தார்கள். ஆஞல் ரூபாய் 75 லட்சம்தான் இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, பம்பு செட்டுகளைப் பொறுத்த அளவிலே இன்னும் அதிகமான தொகையை நாம் ஒதுக்கியாகவேண்டும்.

பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை எடுத்து பாசன வசதிக்கு உபயோகப்படுத்தவேண்டும் என்று சொல்லப்படுகிறது. கிணறுகளிலிருந்து பம்பு செட்டு வைத்து, அதன் மூலம் தண்ணீர் வசதி பெற்று, உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே, இந்த பம்பு செட் ஸ்கீமுக்கு அதிகமான தொகையை ஒதுக்கிக்கொடுத்து, விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தை எடுத்துக்கொண்டால், கிணறு வெட்டுவதற்கான மான்யத்திற்கு அதிகப்படியான தொகையை ஒதிக்கிக்கொடுக்க வேண்டும் என்று கூட நான் கேள்வி நேரத்தில் பல தடவை வலியுறுத்தியிருக்கிறேன். 1966–67-ல் கிணறுகள் வெட்டுவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டது. 1967–68-ல் போர்டு ஆப் ரெவின்யூ, புட் ப்ரோடக்ஷன் கேட்டது ரூ. 1,550 லட்சம் கிணறுகள் வெட்டுவதற்காக. ஆனால் ரூ. 347 லட்சம் தான் ஒதுக்கப்பட்டது. இது மிகவும் குறைந்த தொகையாகும். 1966–67-ல் செகண்டு இன்ஸ்டால்மெண்டாக ரூ. 150 லட்சம் கிணறுகள் வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டது. இந்தத் தொகையை வைத்துக்கொண்டு எப்படி கிணறுகளைத் தோண்டமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும், எப்படி 11 லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே, இதற்கும் அதிகமான தொகை ஒதுக்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் சட்ட திட்டங்கள் விவசாயிகளின் மீது வெகு பளுவாக அமைந்திருக்கின்றன. உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்கிறோம். விவசாயிகள் கணக்குக் காட்டவேண்டுமென்றால், விவசாயிகள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகளுடைய மனமாற்றத்திற்கு நல்லதோர் திட்டத்தை தீட்டவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். தங்களுக்குத் தேவையான உள்ள நெல்லை வைத்துக்கொண்டு மீதியுள்ள நெல்லை விற்றால் நல்லவிலை கிடைக்கும்படியான நிலையை ஏற்படுத்தவேண்டும். விவசாயிகள் கரும்பைப் போடுகிறார்கள் வாழையை போடுகிறார்கள், மிளகாயை போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இரண்டு ஆண்டு நெல் பயிரிட்டால், இரண்டு ஆண்டுகளுக்கு கரும்பு போடுவார்கள், ஒரு ஆண்டு வாழை போடுவார்கள், ஒரு ஆண்டு மிளகாய் போடுவார்கள். ரொடேஷன ஆப் கிராப் என்ற முறையில் தான் அவர்கள் அப்படி பயிரை மாற்றுகிறார்கள். அவர்கள் உற்பத்தி மேலும் பெருகவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் வாழை போடுகிறார்கள், கரும்பு போடுகிறார்கள், மிளகாய் போடுகிறார்கள். விவசாயிகளுக்கு நல்ல வசதிகளை அளிக்கும்படியான திட்டங்களை தீட்டவேண்டும். சர்க்கார் நிதிநிலை அறிக்கை விவசாயிகளுடைய நிதிநிலை அறிக்கையாக இருந்திருக்க வேண்டும். சாதாரணமாகப் பார்க்கிறபொழுது கோழிப் பண்ணைகளுக்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. பெரிய கட்டங்களுக்காக பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்காக, தொழிலை வளர்ப்பதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அப்படி அனாவசியமாக செலவழிக்கப்படுகிற பணத்தையெல்லாம் நிறுத்திவிட்டு, அந்தப் பணத்தைத் திருப்பி விவசாயிகளுக்கு வேண்டிய கடன் போன்ற வசதிகளை நல்ல முறையில் செய்து கொடுப்பதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் திருச்சியிலே கருத்தரங்கிலே, யுத்த கால அடிப்படையிலே உணவு உற்பத்தி பெருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு சிறந்த கருத்து. வரவேற்கிறேன். அமெரிக்காவிலே கூட சண்டை காலத்தில் அப்படித்தான் செய்து, சர்க்காரே ரூ. 15 வரை மானியம் கொடுத்தார்கள். அப்படிச் செய்தால்தான் நல்ல உணவு உற்பத்தி செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஒரு மூட்டைக்கு ரூ. 10 வீதம், மூட்டை விலை ரூ. 30 என்றால், அதோடு ரூ. 10-ம் அதிகமாகச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுடைய கடன் வசதிகள், உணவு உற்பத்திக் கார்ப்பொரேஷன் மூலம், தொழில் துறையில் தொழில் கார்ப்பொரேஷன் போல, நிதி வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாய உற்பத்தி கணிசமாக உயரும். சென்ற அரசாங்கத்தைப் போல இல்லாமல், இந்த அரசாங்கம் தனிப்பட்ட கவனத்தை விவசாயத்திலும், உணவு உற்பத்தியிலும் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும். அந்த வகையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : திரு. பாரதி மோகன் நேரத்தையும் எடுத்துக் கொண்டு, திருமதி ஜானகியம்மாள் எட்டு நிமிடங்கள் பேசுவார்கள்.

***திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்தின் மீது, என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பற்றி, நான் உரையாற்ற நினைக்கிறேன். இன்றைக்கு வேளாண்மைதான் மிகவும் பிரதானமானது. நம்முடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இந்த வேளாண்மைக்கு, வேளாண்மை அபிவிருத்திக்கு, சிறு நீர்ப்பாசனத்திற்கு, அதிகமாக செலவழிக்க திட்டமிடப்பட்டது, ஆனால் 1965–66 இரண்டு ஆண்டுகள் கழித்து, நான்காவது திட்டத்தின் மூன்றாவது ஆண்டு நடக்கிற போதும், சிறுநீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. பெரிய பெரிய திட்டங்கள் தேவைதான், என்றாலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக, பல்லாயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும். அப்பொழுது தான் கிராம மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். மதுரை மாவட்டதில், நாகமலை, பழனிமலை, வரிச நாட்டு மலை போன்ற பகுதிகளில் மழையினால் பெறக்கூடிய தண்ணீரெல்லாம் வீணாக கடலிலே போய்ச் சேருகிறது. இந்த தண்ணீரையெல்லாம் சேர்த்து கண்மாய்களில் தேக்கி வைத்தால், பல்லாயிரக்கணக்கான எக்கர்சள் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். அதற்காக சம்மந்தப்பட்ட இஞ்சினீயர்கள் பரிசீலனை செய்து தேவையான இடத்தில் தடுப்புச் சுவரோ அல்லது அணைகளோ கட்டினால், நிச்சயமாக பல்லாயிரக் கணக்கான எக்கர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பி.டபிள்யூ. எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களில் அக்கறை எடுக்கும் முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அந்த மாதிரித் திட்டத்திற்கு அரசாங்கமும் அதிக கவனம் அளிக்க வேண்டும். மதுரை ஜில்லாவில் நிலையூர் வாய்க்கால் திட்டம் இருக்கிறது. 7,000 எக்கர் புஞ்சை, நஞ்சை சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டம் அது. பல ஆண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு வழியும் இல்லாமல், இதைக் கோரிக்கொண்டு இருக்கிறார்கள். சர்க்காருக்கும் அவர்கள் கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பாலாறு, பொருந்தலாறு திட்டம் 10,000 எக்கர் புஞ்சையை நஞ்சையாக்கக் கூடியதிட்டம். அதையும் கவனிக்க வேண்டும்.

புதிய அமராவதித் திட்டத்தில் 22·7 மைலில் வாய்க்கால் அமைத்தால் 400 எக்கர் நஞ்சையாக மாறும் நிலைமை ஏற்படும். அதற்கு அதிகமான செலவும் ஆகாது. அதையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், மதுரை ஜில்லாவிலே கண்மாய்கள் மராமத்துச் செய்யப்பட்டதாகவே தெரியவில்லை. கண்மாய்கள் மராமத்துச் செய்வது என்பது பல ஆண்டுகளாகவே இல்லை. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலும், அதன் பிறகு ஜமீந்தாரிக் காலத்திலும், கண்மாய்கள் ஆழப்படுத்துவது கவனிப்பாறற்று கைவிடப்பட்டது தொடர்ந்து நீடிக்கிறது. இதைப் பற்றி மதுரை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் கூட கலெக்டரிடம் எடுத்துக் கூறப்

பட்டது. ரூ. 45 லட்சம் கண்மாய் அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்பட்டு,
ரூ. 10 லட்சம்தான் சாங்ஷன் செய்யப்பட்டது என்று அவர்கள் குறிப்
பிட்டார்கள். அங்கே நூற்றுக்கணக்கான கண்மாய்கள் இருக்கின்றன,
அவற்றிற்கு 45 லட்சத்தையும் சாங்ஷன் செய்தால்தான் நிறைவேற்ற
முடியும் என்பதை இந்தச் சமயத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.
அதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக்
கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த கண்மாய்களை மராமத்துச் செய்ய, இப்படிப்பட்ட திட்டங்களை
நிறைவேற்ற சிரமங்கள் இருக்கின்றன. இன்றைக்கு பல எஞ்சினியர்கள்
இருக்கிறார்கள், பப்ளிக் ஒர்க்ஸ் எஞ்சினியர், தீவிர சாகுபடித் திட்ட
எஞ்சினியர், தூர் எடுக்கும் எஞ்சினியர், ஜமீன் கண்மாய் எஞ்சினியர்
என்றெல்லாம் பலர் இருக்கிறார்கள். இப்படித் தனித் தனி எஞ்சினியர்கள்
இருப்பதால், யார் எந்த திட்டத்திற்குப் பொறுப்பு, யாரிடத்தில் போய்க்
கேட்கவேண்டும் என்பது கலெக்டர் அவர்களுக்கே தெரியவில்லை என்றும்
இதற்கெல்லாம் சேர்த்து ஒரு மகாநாடு கூட்டி கலந்தாலோசிக்க வேண்டும்
என்று கலெக்டர் அபிவிருத்திக் கவுன்சிலில் கூறினார்கள். அதையும்
கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

புதிய கால்வாய் வெட்டியிருப்பதன் காரணமாக பல ஜில்லாவில் நீர்
பாயும் இடங்களில் புஞ்சை நிலங்களாக இருப்பவை, நீர் ஊற்றின்
காரணமாக நஞ்சை நிலங்களாகப் பயன் படுத்தப்படும் நிலைமைகள்
இருக்கின்றன. நீர் தேங்கி நிற்பதால் புஞ்சை சாகுபடி செய்யமுடியாமல்
இருக்கிறார்கள். நீர் ஊற்றின் காரணமாக நஞ்சை சாகுபடி செய்தாலும்,
பல ஆண்டுகளுக்கு அவர்களுக்கு தண்டத் தீர்வை போடப்படுகிறது:
அதைத் தாங்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அந்தச்
சுமையை அவர்களால் தாங்க முடியவில்லை. ஆகவே, ஐந்தாண்டு விவ
சாயம் செய்தவர்களுக்கு புஞ்சை மேல் நஞ்சை என்று வரி போட்டு,
பர்மிஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச்
செய்தால், சர்க்காருக்கும் வரிப்பணம் கிடைக்கும், விவசாயிகளுக்கும் நன்
மையாக இருக்கும்.

வன இலாகா பற்றிப் பேசும்போது, இன்றைக்கு ஃபாரஸ்ட் இலாகா
அதிகாரிகள், காட்டு ராஜாவாக இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில்
யாரும் குறுக்கிட முடியாது. வனங்களை தங்களுடைய இஷ்டம்போல்
மரங்கள் வெட்டுவது, மரங்கள் வைப்பது என்று என்னன்னவோ செய்
கிறார்கள். மண்வளம் பாதுகாப்புச் செய்தால் தான் மழை ஏற்பட முடி
யும். அதற்கு காடு மிக முக்கியம். அதை விட்டு அவர்கள், காடுகளை
வியாபாரப் பொருளாக ஆக்குவது என்கிற நிலைதான் இன்று இருக்கிறது.
அதில் மிக மிக கவனமாகப் பார்க்க வேண்டும். ஏனென்றால், மேக
மலைப்பகுதியில் (பெரியகுளம் பகுதியைச் சேர்ந்தது), சமீபத்தில் இருந்த
ஒரு ஜில்லா ஃபாரஸ்ட் ஆபீசர், ப்ருக் பாண்ட் டீ எஸ்டேட்டுக்கு ஓராயிரம்
ஏக்கர் நிலங்களை மரம் வெட்டக் கொடுத்திருப்பதாகத் தகவல் கிடைத்
திருக்கிறது. அதை சர்க்கார் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேமாதிரி அந்தப் பகுதியில் காட்டு இலாகாவில், நிலங்கள் சர்வே
சரியாக இல்லை. அங்கே எந்த எந்த நிலச் சுவாந்தார்கள் இருக்கிறார்
களோ, அவர்கள் கையில் இருக்கும் நிலங்களை ரீ-சர்வே செய்து, அவர்
களுக்குச் சொந்தமான நிலங்கள் போக, அவர்கள் அதிகமாக ஆக்ரமித்து
இருக்கும் நிலங்களை சர்க்கார் எடுப்பதன் மூலமாக பல்லாயிரக் கணக்கான
ஏக்கர் நிலங்கள் கிடைக்கும். அதேமாதிரி, உச்ச வரம்பு சட்டத்தின்
மூலம், மேச்சல் தரை என்று பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி
செய்யாமல் போட்டிருக்கிறார்கள். அந்தமாதிரி, நெய்க்காரப்பட்டி ஜமீ
னில், பட்டிவீரம்பட்டிப் பகுதியில் அப்படிப் பட்ட நிலங்கள் இருக்கின்றன.
அவைகளை பரிசீலனை செய்து எடுத்து சாகுபடிக்குக் கொண்டு வரவேண்
டும்.

சர்க்கார் விதைப் பண்ணைக்காக சில இடங்களில் உதாரணமாக மதுரை
ஜில்லாவில் ஒரு கிராமத்தில் நிலம் எடுத்தார்கள். 100 ஏக்கர் நிலத்தை
60 விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டு வந்தார்கள். விதைப்
பண்ணைக்கு என்று எடுத்துக் கொண்டு, அதில் சாகுபடி செய்து வந்த விவ
சாயிகளை வெளியேற்றிவிட்டு, நடுத்தெருவில் விட்டு விட்டார்கள். அடுத்த
ஆண்டு விதைப் பண்ணை தேவையில்லை என்று விட்டு விட்டார்கள். அதன்
மூலம் நிலச்சுவாந்தார் கஷ்டம் இல்லாமல், விதைப்பண்ணைக்கு நிலத்தை
கொடுத்து, விவசாயிகளை வெளியேற்றி விட்டார்கள். அதையும் கவனத்தில்
எடுத்துக் கொண்டு, அப்படிப்பட்ட நிலைகளைப் போக்க வேண்டும்.

போடிநாயக்கனூர், மீனாட்சிபுரம் என்ற ஊரில் ஏழை விவசாயிகள்
நிலத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும்,
குத்தகைப் பணம் கொடுக்கப்படவில்லை. ஜில்லாக் கலெக்டருக்கு இது
பற்றி பல மனுக்கள் போட்டும் இன்னும் பணம் கிடைக்கவில்லை. 3 ஏக்கர்,
4 ஏக்கர் நிலமுள்ள சிறிய விவசாயிகளிடம் இருந்து இப்படி நிலத்தை
எடுத்துக் கொண்டு மூன்று ஆண்டாகியும் பணம் கொடுக்கவில்லையென்
றால், அவர்களுக்கு எவ்வளவு சிரமம் என்பதைப் பார்க்க வேண்டும்.
ஆகவே, சர்க்கார் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்ளுகிறேன்.

உரங்களைப் பற்றிப் பேசும் போது, பஞ்சாயத்து மூலம் மல உரம் உற்
பத்தி செய்வதையும் சாகுபடிக்குப் பயன் படுத்த வேண்டும். பஞ்சாயத்து
யூனியன்களில், நகர சுத்தித் தொழிலாளர்கள் இந்த உரங்களை தனியார்
களுக்கு விற்று விரயமாகிறது. இதை நல்ல முறையில் தயாரிக்க அரசு வழி
வகை செய்ய வேண்டும்.

மீனளத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ராமேச்வரம், நாகை போன்ற
கடற்கரைப் பகுதிகளில் அதிகமான ஏற்பாடுகளை கூட்டுறவு சங்கங்கள்
மூலம் மீனவர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருவது சரியானது, ஆனா
லும் கிராம பகுதிகளில் இருக்கக் கூடிய கண்மாய்களில் குளங்களில்
பரம்பரையாக விவசாய மக்கள் மீன் பிடித்துச் சாப்பிடுவது பழக்கமாக
இருந்து வருகிறது. அதை அனுமதிக்க வேண்டும் என்பது என்னுடைய
தாழ்மையான வேண்டுகோள். நகரப் பஞ்சாயத்துக்களில் மீன் குத்த
கைக்கு விட்டு அந்தத் தொகையைக் கொண்டு குடிமராமத்து செய்வதை
மக்களுக்கு விட்டு விடுவதன் மூலம் மராமத்து வேலைக்கு அரசாங்கம்
பணம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இல்லாமல் இருக்கும். அந்த
வகையில் கவனம் செலுத்த வேண்டும். ஏழை எளிய மக்கள் மீன்
உணவு சாப்பிட வேண்டும் என்றுதான் மீன் குளிர்பதன முறைகளைச்
செய்கிறோம். அந்த மீன் இன்றைக்கு சாதாரண மக்கள் வாங்கமுடியாத
நிலையில் உள்ளது. வீசை 7·50 ரூபாய் என்று விற்கப்படுகிறது. அதிலும்
பல தில்லுமுல்லுகள் நடக்கின்றன. ஆகவே மீன்கள் ஏழை எளிய
மக்கள் வாங்கும் முறையில் குறைத்துக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்
என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதையெல்லாம் கவனம் செலுத்தி
குறைந்த விலைக்கு ஏழை எளிய மக்கள் வாங்கக்கூடிய அளவிற்குச்
சர்க்கார் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக பழனி தாலூக்காவில் நெய்க்காரப்பட்டி ஜெமீந்தார் 2 800
ஏக்கர்களை தனக்குத் தேவையில்லை என சர்க்காருக்குப் பட்டா போட்டுக்
கொடுத்திருந்தார்கள். அதில் விவசாயிகள் 800 ஏக்கர்களில் சாகுபடி
செய்து வருகிறார்கள். அந்த நிலத்தைச் சர்க்கார் எடுத்து விவசாயி
களிடத்தில் வரி வாங்கவேண்டும், எடுக்கவில்லை என்றால் ஜமீன்தாரிடத்
தில் வரி வாங்கவேண்டும். இரண்டு பகுதியிலும் தீர்வை வாங்குவதில்லை.
விவசாயிகள் கொடுத்தால் ஸ்தல அதிகாரிகள் வாங்க மறுக்கிறார்கள்.
ஜமீன்தாரைக் கேட்டால், சர்க்காருக்கு நிலத்தைக் கொடுத்து விட்டோம்
என்கிறார். அதில் சாகுபடி செய்யும் விவசாயிகள் குத்தகையையும்,
நிலத் தீர்வையையும் பொறுப்பான இடத்தில் கஜானாவில் கட்டுகிறேன்
என்கிறார்கள். இந்த நிலங்களின் மூலம் துவரை, உளுந்து பருப்பு
போன்ற வகையறாக்களைப் பயிர் செய்யலாம். பருப்பு வகைகளில் தமிழ்

நாட்டுக்குப் பற்றுக்குறையாக இருக்கிற நேரத்தில் பஞ்சாப் ஹரியானா போன்ற பிற மாநிலங்களை நம்பிப் பருப்புக்காக நிற்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட புஞ்சை நிலங்களைப் பயன் படுத்தலாம். ஆகையால் இதில் கவனம் செலுத்தும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. வி. சின்னச்சாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அதன்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காட்டிலாக்காவில் ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள். அவைகளைப் பற்றி காட்டிலாக்கா அதிகாரிகளிடம் கேட்டால், காட்டிலாக்காவை ஆடு மாடுகள் அழித்து விடும் என்று சொல்கிறார்கள். எனவே அதற்கென்று தனி அதிகாரியை நியமித்து சாகுபடிக்கு ஏற்றதாக உள்ள நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்குத் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

20, 30 ஆண்டுகளாக உழுதுவரும் ஏழை எளிய விவசாயிகளுக்கு அவரவர் உழுகின்ற நிலத்தை அவரவர் பெயருக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இளம் விவசாயிகளுக்கு விவசாய நடமாடும் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமப்புறங்களில் தனிப்பட்டவர்கள் பழத்தோட்டம் அமைக்க ஒரு திட்டம் இருக்கிறது. இது நல்ல பலன் கிடைக்கிறது. பஞ்சாயத்து பழத்தோட்டம் பலன் தருவதில்லை. இது செயல்படவில்லை. தனிப்பட்டவர்களுக்கு மானியம் தருவதால் பலன் கிடைக்கிறது. தனிப்பட்டவர்களின் பழத்தோட்டத்திற்கு 50 சத விகிதம் மானியம் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பம்பு செட்டுகள் வைக்க ஏராளமான பேர்கள் மனுக்கள் செய்திருந்தார்கள். அவர்களுக்கு அவைகள் வெகுவிரைவில் கிடைப்பதில்லை. அவ்வாறு மனுச்செய்தவர்களுக்கு பம்பு செட்டுகள் விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேய்ச்சல் நிலங்களைக் காட்டிலாக்காவில் சேர்க்கப்பட்டிருப்பதையெல்லாம் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

***திரு. டி. தங்கப்பன்:** தலைவரவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற இந்த வாதத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியிலே நீண்ட நெடுங் காலமாக எந்த விதமான அளவிலேயும் நல்ல முன்னேற்றங்களைக் காண முடியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் இருபது ஆண்டு காலமாக நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியிலே நல்ல விதமாக வேளாண்மைத்துறையை முன்னேற்றப் படுத்துவதற்கு நல்ல திட்டங்கள் எதுவும் செய்யப்படாதது தான். அப்படிச் செய்யப்பட்டிருந்தாலும் கூட இராமநாதபுரம் கிழக்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தமட்டில் புறக்கணிக்கப் பட்டுத்தான் வந்திருக்கிறது. பெரிய கண்மாய், களரிக் கண்மாய், சர்க்கரைக் கோட்டை கண்மாய் என்று மூன்று கண்மாய்கள் இருக்கின்றன. இந்த மூன்று கண்மாய்களும் 20 ஆயிரம் எக்கர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய பெரிய கண்மாய்கள் ஆகும். இவைகளுக்குக் காலா காலத்திலே தண்ணீர் வரவில்லை. வரப்புயர, நீர் உயரும் என்று சொல்லுவார்கள். வரப்பு உயர்ந்து தான் இருக்கிறது. நீர் மாத்திரம் வருவதில்லை. ஒவ்வொரு வருஷமும் ஆடி மாதத்திலே எல்லா மாவட்டங்களிலும் நாற்றுப் பயிர் விடுவார்கள். ஆனால் எனது பகுதியிலே தண்ணீர் இல்லாததால், இந்தக் கண்மாய்களுக்கும் தண்ணீர் வராததால் விவசாயம் பாதிக்கப்பட்டு பாழாகும் நிலைமையிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். நமது அரசாவது ஆடி மாதத்திலே அந்தப் பகுதி மக்கள் நாற்றுப் பயிரிடுகின்ற முறையில் வசதி செய்து தர வேண்டுமென்று விவசாயத்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மீன் உணவு என்று சொல்லுவார்கள். மீன் வளத்திற்கு இராமநாதபுரம் பகுதி பெயர் பெற்றது. அங்கே மீன்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்குக் குறைந்தது 60 ஆயிரம் கிலோ மீன்கள் பிடிக்கப்படுகின்றது. நார்வே திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மண்டபம் பகுதியிகளில் போட்டுகள் செய்யப்படுகின்றன. விசைப் படகுகள் செய்யப்படுகின்றன. அந்த விசைப் படகுகள் மீனவர்களுக்குக் கிடைக்கிறதா என்று பார்த்தால், உண்மையில் கிடைப்பது இல்லை. அங்கே செய்யப்படுகின்ற அந்த போட்டுகள் பெரிய முதலாளிகளுக்கும், வேறு தொழில் செய்பவர்களுக்கும் கிடைக்கிறதே தவிர, உண்மையிலே மீனவர்களுக்கு அந்தத் திட்டத்தின் கீழே நன்மைகள் கிடைக்கவில்லை. நைலான் வலைகள் தயாரிக்கப்படுகிறது. அதுவும் பெரிய முதலாளிகளுக்குப் போகிறதே தவிர, மீனவர்களுக்குப் போவதில்லை. (மணி அடிக்கப்பட்டது) இப்பொழுது தான் மீனவர்களைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் ஐந்தே ஐந்து நிமிஷங்கள் அதிகமாகத் தருமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி): இரண்டு நிமிடங்கள் வேண்டுமானால் அனுமதிக்கலாம்.

திரு. டி. தங்கப்பன்: மீனவர்களைப் பொறுத்தமட்டிலே மிகவும் ஒரு மோசமான நிலைமை என் பகுதியிலே இருக்கிறது. மீனவர்கள் கடல் கொந்தளிப்பாலும், புயலின் காரணமாகவும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். குடும்பத் தலைவர்களாக இருந்தவர்கள் கடலுக்குச் சென்றபொழுது அழித்து ஒழிக்கப்பட்டார்கள். இறந்து பட்டார்கள். குடும்பத் தலைவனை இழந்து அவனது மனைவி மக்கள் மிக மோசமான நிலையில் வாழும் நிலைமை இருந்தது. ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டி நஷ்ட ஈடு வேண்டுமென்று அங்கே தாலி இழந்த பெண்கள் கேட்டார்கள். நமது முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் தலைமையில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இந்த மன்றத்தில் முன்பு எம்.எல்.ஏ.-வாக இருந்த இராமநாதபுரம் ராஜா அவர்கள் காலத்திலே ஒரு மாநாடு நடைபெற்றது. மீனவர்கள் அந்த மாநாட்டிலே பலவிதமான கோரிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் அந்த அரசில் செயல்படவில்லை; கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே இப்பொழுது நமது மாண்புமிகு அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

அத்துடன் அங்கே உற்பத்தி செய்யும் பிடிக்கப்படும் மீன்களைக் கடலிலேயிருந்து கொண்டுவர சரியான ரஸ்தா வசதி கிடையாது. ஏற்கனவே தனுஷ்கோடியிலிருந்து சென்னை வரையிலே போக்குவரத்து வசதியிருந்தது. ஆனால் இப்பொழுது தனுஷ்கோடியிலிருந்து ராமேஸ்வரத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றால், சரியான நேரத்தில் கொண்டு வர முடிவதில்லை. அதன் காரணமாக மீன்கள் கெட்டு விடுகின்றன. எனவே ராமேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு வரும் மெயில் வண்டியிலே குளிர்சாதன பார்சல்வேன் ஒன்றை இணைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொண்டு இவ்வளவு நேரம் அனுமதியளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

நண் பகல் 12-00 ***திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, விவசாய மானியத்தின் மீது பேசுகின்ற நான் நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், விவசாயத் துறையில் பல இனங்களில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை கடந்த காலத்தை விடக் குறைந்திருக்கிறது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்குக் கடன் என்ற வகையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 18 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ரசாயன உரம் கொடுப்பதற்காக உள்ள ஒதுக்கீட்டில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஐம்பது லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. பில்டர் பாயின்ட் கிணறுகளுக்காகவும், மோட்டார் பம்ப் செட்களுக்காகவும் 18 லட்சம் ரூபாயும், 14 லட்சம் 40 ஆயிரம் ரூபாயும் முறையே குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கான பசுந்தாள் உரம் கம்போஸ்ட் மன்யூர், விவசாயக் கருவிகள், பூச்சி மருந்துகள் இவற்றுக்கான உதவித்தொகை, மானியத் தொகைக்கான ஒதுக்கீட்டில் ஒன்றரை லட்ச ரூபாய் இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. நல்ல இன மாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக என்னும் வகையில் எட்டு லட்ச ரூபாய் இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. மீனவர்களுக்குப் படகு கட்டும் துறையை எடுத்துக்கொண்டால் மூன்றரை லட்சம் மீனவ மக்கள் ஈடுபட்டிருக்கும் இந்தத் துறையில் 22 லட்ச ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுக் காலமாகப் பயனளித்து லாபம் தருகின்ற சின்கோனா தொழிலுக்கு சென்ற ஆண்டு 33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு முப்பது லட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் துறையில் கிடைக்கும் வருமானம் மிகக் கணிசமான அளவில் உயர்ந்திருக்கிறது. சென்ற ஆண்டு 43·47 லட்சம் ரூபாய்தான் வருமானம் வந்தது. இந்த ஆண்டு 67·73 லட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. ஆனாலும் அந்தத் துறையில் நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் இவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதற்காகத்தான்.

இப்பொழுதுள்ள சர்க்காரும் ஒப்புக்கொண்டிருப்பதைப் போல கடந்த கால சர்க்கார், இந்த மாநிலத்தில் பெரிய பெரிய நீர்ப்பாசன திட்டங்களை முழுமையான அளவில் நல்ல முறையில் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு கிணறுகளை ஆங்காங்கு தோண்டி பாசன வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மானியத்தில் கிணறு எடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைவாகவும், போதாத அளவிற்கும் இருக்கிறது. எந்த மாவட்டத்தில் எப்படியிருந்தாலும், எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்தின் நிலைமை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வெறும் கிணறுகளை மட்டுமே நம்பி வாழும் மக்கள் நாங்கள். அமைச்சர் அவர்கள் தங்களுடைய சொந்த மாவட்டத்திற்கு சலுகை காட்டுகிறார் என்று மற்றவர்கள் நினைத்துக்கொண்டாலுங்கூட, அங்கிருக்கும் உண்மை நிலையை உணர்ந்து அங்கு அதிகப்படியான கிணறுகளை எடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் ஆறுகள் கிடையாது. கிணறுகளை நம்பித்தான் நாங்கள் பிழைக்கின்றோம். அந்த மாவட்டத்தில் பெருவாரியாகக் கிணறுகள் எடுக்கப்படவேண்டும். அதற்கான வழிவகைகள் செய்யவேண்டும். அங்கிருக்கும் கோமுகி நதித் திட்டம் மணிமுத்தாறு திட்டம் போன்ற ஒன்றிரண்டு திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் போர் வெல் பவர் டிரில்லர் கடந்த சில காலமாக வேலை செய்யாமல் இருக்கிறது. அதைச் செப்பனிட மெக்கானிக் இல்லாததால் அது வேலையில்லாமல் "ஐடில்" ஆக இருக்கிறது. அந்தப் பவர் ட்ரில்லரை வேலை செய்யும் அளவுக்குச் சரிசெய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிலமில்லாதவர்களுக்குப் புறம்போக்கு நிலத்தைப் பட்டாவாக்கும் நேரத்தில், கிராமங்களில் தேவையான அளவிற்கு மேய்ச்சல் நிலம் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மேய்ச்சல் நிலத்திற்கும் வழி செய்யவேண்டும். மேய்ச்சலுக்காக இருக்கும் இடத்தை பட்டா செய்து விடக்கூடாது. அதைக் கவனத்தில் கொண்டு புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்ய வேண்டும், அதற்கான ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய இன்றைய அரசு, விவசாயப் பொருட்களை வாங்கி உண்போருக்குக் கொடுக்கும் சலுகையை, உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கொடுக்கக் காணோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை மனத்திலே கொண்டு, மிகப் பெருவாரியான விவசாயிகளுக்கு நன்மை செய்து, உற்பத்தியைப் பெருக்க வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயிகள் உற்சாகமாக இருந்தால்தான், விவசாயம் முன்னேறும், பசி, பட்டினி, பஞ்சம் ஆகிய அத்தனையும் நாட்டில் குறையும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு. கே. என். சாமிநாத கவுண்டர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடக்கின்ற 1967-68-ம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர கோனுயரும்

என்று ஔவையாரும்,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்றும்,

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

என்றும் அந்தக் காலத்தில் பாடல் பெற்ற தொழிலாக இருந்த விவசாயம், இன்றையதினம் மிகவும் க்ஷீண தசை அடைந்து ஒரு இழிநிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விவசாயம் அப்படி ஆனதற்குக் காரணம், மற்ற தொழில்களைப் போல் இல்லாமல், அதில் உள்ள லாபம் மிகக் குறைவாக இருப்பதுதான். சர்க்கார்த் தலையீடும் ஓரளவிற்குக் காரணம் என்றும் சொல்லலாம். எந்த நேரத்தில் எந்த நிலத்தில் எந்த வெள்ளாமை செய்யலாம் என்பது விவசாயிக்குத் தெரியும். ஆனால், சர்க்கார் பல தவறான சட்டங்களை இயற்றி உரம்பு நிலத்தில் நெல் பயிர் வைத்தாலுங்கூட, தண்டத் தீர்வை வசூலித்து விவசாயிகளைக் கட்டுப்படுத்துவதால், விவசாயிகள் தங்கள் இஷ்டம்போல் விவசாயம் செய்யமுடிவதில்லை. விவசாயம் செய்து எடுத்த பொருளை அவர்கள் இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று சர்க்கார் சட்டம் போட்டு அந்த விலைக்கு எடுக்கிறார்கள். இதெல்லாம் விவசாயத்திற்கு மிகவும் பாதகம் அளிக்கக்கூடிய ஒரு செயலாக இருக்கிறது.

சென்ற சில காலமாகவே விவசாயத் தொழிலைச் செய்வது மிகவும் ஒரு கேவலமான தொழில் என்ற முறையில் "நீ யார்?" என்று கேட்டால், "நான் விவசாயி" என்று சொல்லுவதை விட, ஒருபாங்கர் அல்லது ஒரு சினிமாக் கொட்டகை முதலாளி அல்லது ஒரு பஸ் முதலாளி

என்று சொல்லிக் கொள்ளுவதிலே தான் பெருமைப்படுகிறார்களே தவிர, "விவசாயி" என்று சொல்லிக்கொள்ளுவதற்குக்கூட வெட்கப்படும் நிலையில் இன்று விவசாயம் பின்தங்கியிருக்கிறது. ஆகையால், விவசாயத்திற்குச் சர்க்கார் நல்ல முறையில் மதிப்பு அளித்து, விவசாயப் பெருங்குடி மக்களையும், அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகச் சேர்த்து அவர்களுக்குக் கல்விச் சலுகை முதலியவற்றைக் கொடுத்து, அந்தத் தொழிலையும் அந்தத் தொழிலை நம்பி இருக்கிற மக்களையும் முன்னுக்குக் கொண்டுவர நல்ல முறையில் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாய விஸ்தரிப்பு அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். விவசாயத்திற்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர் நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு சாதாரண குமஸ்தா போல, அலுவலகத்திலேயே இருந்து, அந்த மருந்துகளையோ, உரங்களையோ விற்கின்ற நிலை இருக்கிறதே தவிர, விவசாயிகளிடம் சென்று, விவசாயத்தைப் பற்றி விளக்கவோ, அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றிப் பயிற்சி அளிக்கவோ அவருக்கு அவகாசம் இல்லை. அந்த நிலையை மாற்றி, அவருக்கு விவசாயிகளிடம் தொடர்பு ஏற்படும்படிச் செய்து, விவசாயத்தைப் பற்றி கிராம மக்களுக்கு விளக்குகின்ற முறையில், அவருடைய வேலையை மாற்றியமைத்து, அவர் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கும் வேலைக்கு ஒரு குமஸ்தாவை நியமித்து, அவர் விவசாயிகளோடு பழகி, விவசாயத்தை விளக்கமாக எடுத்துரைக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்திற்கு வேண்டிய டிராக்டர் போன்ற இயந்திர சாதனங்களை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு, மூன்று என்று வைத்து, அவைகளை சாதாரணமாக குறைந்தபட்ச வாடகைக்கு விவசாயிகளுக்குக் கொடுத்தால், விவசாயிகள் ஏக காலத்தில் நல்ல முறையில் வெள்ளாமை செய்ய முடியும் என்பதை இந்த மன்றத்திற்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். விவசாயிகளில் யாரும் சொந்தமாக டிராக்டர் வாங்கக் கூடிய நிலையில் இன்று டிராக்டரின் விலை இல்லை. ஒரு டிராக்டர் வாங்க வேண்டுமென்றால், குறைந்தது முப்பதாயிரம் ரூபாய்க்குமேல் ஆகிறது. இன்றைய சட்டப்படி ஒரு விவசாயி வைத்துக்கொள்ளக்கூடிய அதிகபட்ச நிலம் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர்தான். அந்த முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தின் மதிப்பையும், ட்ராக்டரின் விலையையும் கணக்குப் பார்த்தால் யாரும் டிராக்டர் வாங்க முடியாது. ஆகையால், சர்க்கார் ட்ராக்டர்களை வாங்கிவைத்திருந்து, அவைகளைக் குறைந்த வாடகைக்கு எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்குமாறு செய்தால், மிகவும் வசதியாக இருக்கும். விவசாயத்தைப் பெருக்கமுடியும் என்று நான் நம்புகிறேன். அதைச் செய்யவேண்டும் என்று அரசினரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கென்று நீண்ட காலத்திட்டம் போடவேண்டும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் உற்பத்திப் பெருக்கத்தையும் கணக்கிட்டு, நல்ல முறையில் சில நீண்டகாலத் திட்டமாகப் போட்டால்தான் விவசாயத்தை அபிவிருத்தி செய்து, உணவுப் பொருள் உற்பத்தியைப் போதுமான அளவிற்குப் பெருக்கமுடியும்.

இன்றுள்ள நிலைமையில், கேரள மாநிலத்தில் அவசியமில்லாமல் அவர்களுக்குத் தேவையில்லாமல், ஆறுகள் பல ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளை நம் மாநிலத்திற்கு பயன்படும்படிச் செய்யலாம். கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அணைக்கட்டி, அந்தத் தண்ணீரை என்னுடைய தொகுதியான மூலனூர், வெள்ளக்கோவில், ஆகிய வறண்ட பிரதேசங்களில் பாயும்படி வசதி செய்துகொடுத்தால் நிறைய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். அதில் வரக்கூடிய நெல்லில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுத்து, நாம் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். அதே சமயத்தில், நம்முடைய தேவையையும் பூர்த்திசெய்து கொள்ளவும் வசதியாக இருக்கும்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும், என்னுடைய தொகுதியாகிய வெள்ளக்கோவில், மூலனூர் பகுதிகள் பாலைவனம் போலவே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றனவே தவிர, எந்த விதமான நீர்ப்பாசன திட்டமும் அதற்கு எட்டவில்லை. மூன்று திட்டங்களினாலும் என் தொகுதி பயன் அடையவில்லை. ஆகையால், எப்படியும் கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஆனை மலையாறு, நீராறு போன்ற ஆறுகளில் அணைகள் கட்டி, அவற்றினுடைய தண்ணீரை வெள்ளக்கோவில், மூலனூர் பகுதிக்கு வரச்செய்து, அந்தப் பகுதிகள் பயன் அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டு, எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக மீண்டும் ஒரு முறை தலைவருக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ் பி. பச்சையப்பன்: தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்போது நமது அரசு வேளாண்மைத் துறைக்கு நல்லதொரு முக்கியத்துவத்தைக் கொடுத்த, விவசாயிகளுக்கு நல்ல ஓர் ஆர்வத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் போதுமான உரங்கள் கிடைக்கவில்லை. உரங்களுக்காக கடன் கோரி, யூனியனிடம் கேட்டால், முதலில் விண்ணப்பத்தில் கிராம உத்தியோகஸ்தரிடத்திலே அத்தாட்சி வாங்கி வந்து, அங்கே இருக்கிற கிராம சேவக் இடத்தில் கொடுத்த பிறகு, கமிஷனரிடத்தில் போய், அதன் பிறகு அவர் "இன்ன கடையில் வாங்கிக்கொள்" என்று ஒரு ரசீது கொடுக்கிறார். அந்த ரசீதை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனால், கடைக்காரர் "இன்று உரம் கிடையாது, இன்னும் இரண்டு நாள் கழித்து வாருங்கள்" என்று சொல்கிறார். இப்படியாக விவசாயிகளுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையைப் போக்க, விவசாயிகளுக்கு நேரடியாக பஞ்சாயத்து யூனியனிலே உரம் தருவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் வட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு மின்சார வசதி மிகவும் குறைவாக அளிக்கப்படுகிறது. மின்சார போர்டிலே போய் கேட்டால், "நீங்கள் கொட்டகையை போட்டுவிட்டு வாருங்கள் கம்பத்தை நடுகிறோம்" என்கிறார்கள். விவசாயிகள் கொட்டகை போட்டுவிட்டு மீண்டும் போய்க் கேட்டால், "நீங்கள் மோட்டாரை வைத்தால் உடனடியாக சர்வீஸ் கொடுக்கிறோம்" என்று கூறுகிறார்கள். இப்படியாக மின்சார போர்டு காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட மூன்று, நான்கு ஆண்டுக் காலமாக என்ஜின்கள் சும்மாவாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்திலே, விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள் கொடுக்கிறார்கள். சென்ற ஆட்சியிலே என்னுடைய ஊரைச் சேர்ந்த, என்னுடைய பஞ்சாயத்தைச் சேர்ந்த பவுஞ்சிப் பேட்டையில் ஒரு விவசாயிக்கு பொறுக்கு விதை கொடுத்தார்கள். "இது 6 மாதப் பயிர், நாற்றங்காலில் 50 நாள் இருக்கட்டும்" என்று கூறினார்கள். விவசாயி அதேமாதிரி செய்யவே, 50 நாள் ஆகி, நாற்று பிடுங்குகிற நேரத்தில் அவை கதிர் விட்டுவிட்டது. அந்த விவசாயி அந்த யூனியன்மீது வழக்குத் தொடர்ந்து, கடைசியில் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது பொறுக்கு விதை என்றால் நல்லபடியாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகள் நல்ல பலனைப் பெற்றுத் தருவார்கள்.

அடுத்தபடியாக, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழும் என்னுடைய தொகுதியில் போதுமான மருத்துவ வசதி கிடையாது. என்னுடைய வட்டத்தைச் சேர்ந்த பவுஞ்சிப் பேட்டையில், தேர்தலின்போது முஸ்லீம்

பெருமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டு போட்ட காரணத்திற்காக, காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டனர். அப்படி தாக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மருத்துவ வசதி செய்து தர வசதியில்லை. மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு அவர்களை ஏற்றிக் கொண்டு கள்ளக் குறிச்சிக்குத் தான் போய் தகுந்த சிகிச்சை பெற முடிந்தது. (மணியடிக்கப்பட்டது) ஆகவே, எங்கள் பகுதியில் நல்ல முறையில் மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதி மலைப் பகுதி. அத்தனை கிராம மக்களும் மலைக்குச் சென்றுதான் தழை, விறகு கொண்டுவர வேண்டும். பல நேரங்களில் கிராம மக்களை காட்டு இலாகா அதிகாரிகள் வழிமறித்துக் கொண்டு, தகராறு செய்து, கோர்ட்டிலே வழக்குப் போட்டுவிடுகிறார்கள். ஆகவே, கிராம மக்களுக்கு உதவி செய்யும் வகையில் தக்க ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 2,500 ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. கோமுகி அணையைக் கட்டுவதற்கு முன்பு, அந்தத் தரிசு நிலங்களைப் பட்டா ஆக்கக்கூடாது என்று உத்தரவு வந்தது. அந்த அணை கட்டி முடிந்த பிறகும், அந்தத் தரிசு நிலங்களை அப்படியே பட்டா வழங்காமல் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களை யெல்லாம் பட்டா செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் அலம்பலம் என்ற கிராமத்தில் எல்லா நிலங்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அந்த நிலங்களுக்கு மத்தியில் ஒரு நிலத்திற்கு மட்டும் பட்டா வழங்கப்படாமல் தரிசாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனைப்பற்றி பலமுறை கேட்டும் பட்டா ஆக்க முடியவில்லை. ஆகவே, இந்த நிலத்தையும் பட்டாவாக மாற்றித் தர வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. தோ. மு. நல்லசாமி :** அவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது மிகக் குறைவான நேரமே எனக்கு இருப்பதாலே மிகச் சுருக்கமாக என் உரையைக் கூற விரும்புகிறேன். இந்த இலாகாவானது நல்லபடியாகச் செயல்பட்டுத்தாளுக வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் கிடையாது. கனிவளம் நீங்கலாக, மற்ற எல்லாத் துறைகளும் உணவு, உடை போன்றவைகள் விவசாயத்தையே தான் நம்பியிருக்கின்றன. இதிலே ஆவேசம் காண்பிப்பதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. அரசாங்கம் ஆவேசம் காண்பிக்கும் அளவுக்கு விவசாயிகளிடத்தில் இந்த ஆவேசம் இருக்க வேண்டும். ஒரு மனிதன் நல்லபடியாக நடக்க வேண்டுமென்றால், அவனுடைய இரண்டு கால்களையும் நல்லபடியாகப் பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்திற்கோ அல்லது துறை நெறியாளருக்கோ—" டைரக்டருக்கோ " மட்டும் அக்கறை இருந்தால் போதாது. விவசாயிகளிடத்தில் அந்த ஊக்கம் இருக்க வேண்டும். அந்த — " இன்செண்டிவ் "—வேகத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் பூரணமாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவதாக அரசாங்கத்தின் எல்லா இலாகாக்களும் விவசாயத் துறையுடனும், விவசாயிகளுடனும் உறுதுணையாக—இணக்கமாகப் பணியாற்ற வேண்டும். அதனை மிகச் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன்.

விவசாயி நல்லபடியாக நடக்க வேண்டுமென்று சொன்னால், முதலில் அவனுக்குத் தேவையான " பத்து " அம்சங்களில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். முதலில் பணம் வேண்டும். இரண்டாவது தண்ணீர். மூன்றாவது, அதற்கு வேண்டிய உபகரணங்கள். நான்காவது, அதில் ஈடுபடக்கூடிய தொழிலாளருடைய நலன். ஐந்தாவது, ஃபார்ம் யார்டு மான்யூர், கம்போஸ்ட் மான்யூர், க்ரீன் மான்யூர், கெமிகல் பெர்டிலைசர்ஸ் முதலிய உர வகைகள். ஆறாவது, ஆராய்ச்சி நிலையங்களில் கண்டு பிடிக்கக்கூடிய முடிவுகளைத் தீவிரமாக நமது பண்ணைகளில் அமுல் நடத்துவது : அப்படிப் பணியாற்றுவதற்குத் தேவையான ஃபார்ம் staff—அதே சமயத்திலே ஒரு பக்கம் ஏராளமான களர் நிலம்—

ஒரு பக்கம் மணற்பாங்கான நிலம்—இன்னொரு பக்கம் கட்டாந்தரையாக இருக்கின்றது — இன்னொரு பக்கம் பாறையாக இருக்கலாம். இப்படிப்பட்ட நிலங்களை யெல்லாம் சீர்திருத்தம் செய்ய தனிப்பட்ட விவசாயியால் முடியாது. ஆகவே, ஏழாவது, அரசாங்கமே " மாடல் ஃபார்ம் " நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எட்டாவது, பயிர்களுக்கு " பெஸ்ட்டிசைட்ஸ் " பூச்சிகள் வராமல் பாதுகாக்க வேண்டும்— " பிளாண்ட் ப்ரொட்டெக்ஷன் ஒர்க்ஸ் " செய்ய வேண்டும். ஒன்பதாவது, விவசாயம் பெருமளவு பாதிக்கக்கூடிய " வீட்ஸ் " களைகளை எடுத்து எறிய வேண்டும். பத்தாவது, மார்க்கெட்டிங்கில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் தேவையான வசதிகளையும், சௌகரியத்தையும் செய்து கொடுக்காத வரையில், விவசாயிகளுக்குப் போதுமான வருமானம் இல்லை.

குறிப்பாக, கால்நடை பராமரிப்புத் துறையின் அவசியத்தை நாம் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. பட்டணத்தில் இருப்பவர்களுக்குக் கூட பால் வெளியிடங்களிலிருந்துதான் வர வேண்டியிருக்கிறது. பால் ஒரு பகுதியில் உற்பத்தியாகி, ரயில் மூலமாக 200 மைல், 300 மைல் எடுத்துக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. நீண்ட தூரத்திலிருந்து வருவதால் பால் கெட்டுவிடுவதற்கு வழி ஏற்படுகிறது. ஆகவே, பாலை பவுடர் ரூபமாகவோ, டின்னில் பதனப்படுத்தப்பட்ட பாலாகவோ கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த அம்சங்களில் எல்லாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மேலும் பாசனத்தை எடுத்துக் கொண்டால், ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் — வடிமுனைக் குழாய்கள், " டீப் போர் வெல்ஸ் " போன்ற பல துறைகள் ஒவ்வொன்றையும் " வாஸ்ட் சப்ஜெக்ட்டாக " எடுத்துக் கொண்டால்தான் விவசாயம் நல்ல முறையில் உருவாகும்.

அதனால் இந்தப் பத்து அம்சங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகப் பாராட்டுகிறேன். இது குறித்து ஆங்காங்கே கருத்தரங்கு நடத்துவது மட்டும் பயன்தராது. ஆங்காங்கே உள்ள ப்ராக்ரசில் விவசாயிகளைக் கொண்ட கமிட்டியைப் போட்டு, இந்தப் பத்து அம்சங்களையும் பற்றி நல்ல முறையில் ஆராய்ச்சி பண்ணச் செய்து, அதன் பலனை நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். நாம் சென்ற ஆண்டு 60 லட்சம் டன் உற்பத்தியாயிற்று என்றால் இவ்வாண்டு இன்னும் கூடுதலாக நான்கு லட்சம் சொச்சம் — 4·53 லட்சம் — உற்பத்தி செய்ய வேண்டும் என்று இருக்கிறோம். ஜனத்தொகை விரிந்துகொண்டுபோகவில்லை, வெடித்துக்கொண்டு போகிறது என்று சொல்கிறார்கள். பெருகுகிற ஜனத்தொகைக்கு நாம் உணவு அளித்தாக வேண்டும். ஆகவே தான் இத் துறையில் அதிக கவனம் செலுத்தக் கடமை பட்டவர்களாக இருக்கிறோம். இத் துறையில் எல்லா இலாகாவினுடைய ஒத்துழைப்பும் நமக்குத் தேவைப்படுகிறது. அதன் காரணமாகத் தான் இந்த இலாகாவின் பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களிடமே இருக்க வேண்டும் என்பதாக மத்திய அரசாங்கம் குறிப்பிட்டார்கள். அதனால் நான் அமைச்சர் கோவிந்தசாமியைக் குறை சொல்லவில்லை. இத் துறையில் அதிக ஆர்வமும், அக்கறையும் உள்ளவர். அவருக்கு கௌரவம் இந்த அரசாங்கத்திலும் இருக்கும். இதில் எல்லா இலாகாக்களுக்கும் இடையில் நல்ல கோ ஆர்டினேஷன் இருக்க வேண்டும். விவசாய இலாகா பைல் என்றால் அது அர்ஜெண்ட் பைலாக்கப்படவேண்டும்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இவ்விலாகாவுக்கு நான் பொறுப்பாக இருந்தாலும் எல்லாக் காரியங்களும் முதல் அமைச்சரைக் கலந்துகொண்டு தான் நடக்கிறது. அதைக் குறைவாகவோ, தாழ்வாகவோ நாங்கள் நினைக்கவில்லை.

* **திரு தோ. மு. நல்லசாமி :** நான் குறைவாகச் சொல்லவில்லை. விவசாயத் துறையைப் பொறுத்த வரையிலும் எல்லா இலாக்காக்களுக்கும் பங்கு இருக்கிறது. இன்றைக்கு சர்க்கரை ஆலையை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குக் கரும்பு தடையில்லாமல் தேவைப்படுகிறது. அப்போது

தான் ஆலையில் தொழில் நடக்கும். அதற்கு அவர்கள் விவசாயிகளுக்குப் பணம் கடன் கொடுக்கிறார்கள். உரம் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு அவர்கள் இப்படிக் கொடுக்கிற ஊக்கம் தான் அவர்களை நல்ல முறையில் அத் தொழிலில் ஈடுபடச் செய்கிறது. அது போல இந்த அரசாங்கமும் ஏன் விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வரக் கூடாது என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு பெரிய பெரிய டிராக்டர்கள் இருந்து பயன் இல்லை. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் நிலங்களைத் துண்டாடிவிட்டோம். ஆகவே பெரிய டிராக்டர்களை நினைக்க படாது. நம்முடைய சிறிய சிறிய பண்ணைகளுக்கேற்ற தளவாடங்கள் இப்போது உடனடியாகத் தேவைப்படுகிறது. இன்றைக்கு விவசாயிகளை வீரிய சோளம் போடச் சொல்கிறோம். வீரிய கம்பு போடச்சொல்கிறோம். வீரிய மக்காச் சோளம் போடச் சொல்கிறோம். அவர்களுக்குத் தேவைப்படுகிற உரம், அவர்களுக்குத் தேவைப்படுகிற விதை எல்லாவற்றையும் காலாகாலத்தில் கொடுக்க வேண்டுமென்றால் எல்லா இலாக்காக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைக்கு அனிமல் ஹஸ்பன்டரியை எடுத்துக் கொண்டால் நல்ல முன்னேற்றம் கண்டு இருக்கிறோம். தேவைக்குப் போதாது. அதிகப்படியான பால் தேவைப்படுகிறது. காலையில் பேப்பரை எடுத்துப் பார்த்தால் லெட்டர்ஸ் டு தி எடிடர் காலத்தில் அரசாங்கப் பால் பண்ணையில் இருந்து விநியோகிக்கப்படுகிற பாலில் தண்ணீர் கலக்கப்படுவதாகப் புகார் சொல்லப்படுகிறது. அரசாங்கப் பண்ணையிலேயே இப்படி நடக்கிறது என்று சொன்னால் என்ன பொருள்? பால் உற்பத்தி இன்னும் அதிகரித்தாக வேண்டும் என்பது தான்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாதவரம் பால் பண்ணையில் இருந்து விநியோகிக்கப்படுகிற பாலில் தண்ணீர் கலப்பதாக கனம் அங்கத்தினர் சொல்கிறார். அதுபோன்ற பாலை உடனே தேக்கி, தகவல் தெரிவித்தால் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

*** திரு. தோ. மு. நல்லசாமி :** நான் பத்திரிகையில் ஒரு குடிமகள் எழுதியுள்ள கடிதத்தைப் பார்த்துத் தான் சொன்னேன். என்னிடத்தில் வேறு ஆதாரம் எதுவும் கிடையாது. இதுவரை நாம் சாதி மாடுகளைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தோம். அதைக் காட்டிலும் நம்முடைய நாட்டு சீதோஷ்ண நிலைக்கேற்ப கலப்பு இன மாடுகளை உண்டுபண்ணினால் அதிக அளவு பாலும் பெற முடியும் எனத் தெரிகிறது. நடைமுறையில் கண்டுபிடித்துள்ள இந்த உண்மையைச் செயலாக்க முற்பட வேண்டும்.

அடுத்து பசுந்தாள் உரத்தையும் பெருக்கியாக வேண்டும். என்னுடைய அனுபவத்தை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு $2\frac{1}{2}$ ஏக்கரா பூமி இருக்கிறது. அதில் 3 போகம் சாகுபடி செய்தேன். முதலில் குறுவை ஏ.டி.டி. 27 போட்டேன். அடுத்து C 0·25 சம்பா போட்டேன். மறுபடியும்; 3-ம் போகம் ஏ.டி.டி. போட்டேன். விவசாய இலாக்கா கூறுவது போலவே லைன் ப்ளான்டிங் எல்லாம் வைத்துப் பயிரிட்டதில் ஓராண்டு காலத்திற்குள் ஏக்கருக்கு 100 மூட்டை நெல் கிடைத்திருக்கிறது. $2\frac{1}{2}$ ஏக்கராவில் 250 மூட்டை கிடைத்திருக்கிறது. இந்த அளவில் வேகமாக நாம் அபிவிருத்தி செய்தால் நம்முடைய இலக்கைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்யலாம். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல விவசாயிகளுக்கு இன்சென்டிவ் வேண்டும். இப்போது நாம் கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகக் கூடியது அல்ல. ஏற்கனவே இருந்த அரசாங்கமும் சரி, இன்றைக்கு இருக்கிற அரசாங்கமும் சரி, நாம் விலையைக் கட்டுபாடு செய்துவிட்டோம் என்று இருந்தால் போதாது. அந்த விலைக்கு வெளி மார்க்கெட்டில் விற்கவில்லை. நாமே கொள்முதல் செய்து ரேஷன் மூலமாகக் கொடுக்கக்கூடிய அரிசி நீங்கலாக, மற்றவை வெளியில் இந்த விலைக்கும் அதிகமாகவே விற்கிறது. அது தெரிந்தும், தெரியாதவர்களைப் போல நாம் இருப்பதில் பிரயோசனம் இல்லை.

விவசாயிகளுக்கு நாம் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டும். அது இல்லாத காரணத்தினால் தான் ஒன்று நெல் பயிரிட்டவன் நஷ்டமடைகிறான். இல்லை வெளி மார்க்கெட்டில் விற்று குற்றவாளியாக்கப்படுகிறான். இல்லை என்றால் கரும்புக்கு லாபம் என்றால் அதற்கு ஓடுகிறான். வாழை போட்டால் லாபம் என்றால் வாழை போடப் போகிறான். நாம் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்க முன் வந்தால் தான் இந்த நிலை நிற்கும். கரும்புக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். கொண்டு போய் பாக்டரியில் கொடுத்தால் உடனே பணம் பெறுகிறான். அதுபோன்று நெல்லுக்கும் ஒரு இன்சென்டிவ் ஏற்படக்கூடிய நிலையை ஏற்படுத்தினால் போதும். விதைப் பண்ணை வேண்டாம். விதைகளை அவர்களே இன்னும் தரமானதாக உண்டுபண்ணிக் கொள்வார்கள். இன்றைக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியது எல்லாம் விவசாயிகளுடைய உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். finance, water-supply, implements, manure, labour Welfare, implementation of the results of research on the farm, model farming, pesticides and insecticides, weedicides marketing ஆகிய எல்லாவற்றையும் பற்றி நல்லமுறையில் ஆராய்ச்சி செய்ய ப்ராக்ரசிவ் விவசாயிகளைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து, அவர்களுடைய முடிவுகளை செயல்படுத்தினால் $4\frac{1}{2}$ லட்சம் டன் அல்ல இன்னும் அதிக அளவுக்கே நம்முடைய உற்பத்தியைக் கூடுதலாக்கிக் காட்ட முடியும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

பி. ப 12-30

*** திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது என்னை சில வார்த்தைகள் பேச அனுமதித்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையிலேயே, நம் நாட்டில் உற்பத்திக்கு இயற்கையாகவே எந்த விதமான குறையும் இல்லை. வள்ளுவன் சொன்ன மாதிரி "இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" என்பதற்கொப்ப உண்மையிலேயே நிலம் சிரித்துக் கொண்டு இருக்கிறது, என்று சொன்னால் தவறு இல்லை. இயற்கை வளத்தை ஒழுங்காக உபயோகிப்பதில் தவறியதனால் தான் செயற்கையாக நம் நாட்டில் சோத்துப் பஞ்சம் வந்தது. இப்போது மிக இன்றியமையாததான அமோனியம் சல்பேட் வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாக வேண்டியிருப்பதை எல்லோரும் அறிவர்.

இங்கு "செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்" என்ற முறையில் நமது ஆட்சியாளர்—நான் நமது காங்கிரஸ்காரர்களைச் சொல்லவில்லை, அவர்களுக்கு முன்பு இருந்தவர்கள்—பெறும் தவறு செய்தார்கள். நமது தமிழ் நாட்டில் சப்பாத்திக் கள்ளி பெரும் அளவில் இருந்தது. அது நிலங்களுக்கு நல்ல உரமாக உபயோகப்பட்டது. ஆனால் அதைக் களைவதற்கு என்று ஆஸ்திரேலியாவில் இருந்து பூச்சி மருந்துகள் வரவழைத்து நாசம் செய்தார்கள். சப்பாத்திக் கள்ளிகளை அவ்வாறு நாசம் செய்யாதிருந்தால், இன்று சிந்திரித் தொழிற்சாலைகளை நாடவேண்டியிராது. உற்பத்தி பெருகச் செய்வதற்கு அதைக் காட்டிலும் நல்ல உரம் வேறு கிடையாது. தேவையுள்ளதைக் கெடுத்து, இப்போது கருவேலம், முள் வேலம் போன்ற முட்செடிகளைப் பயிர் செய்து வைத்திருப்பதால் 50 அடி தூரத்திற்கு அதன் வேர் ஓடி வேளாண்மை செய்ய முடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இப்படி முக்கியமான சத்துக்களை, உரங்களை எல்லாம் அழித்துவிட்டு இப்போது நம் விவசாய இலாகாவே சஸ்பேனியா போன்ற பசும் தழைகளை வயல்களில் பயிரிடச் சிபாரசு செய்கிறார்கள். அதைக் காட்டிலும், நம் நாட்டில் காட்டுப் புறங்களில் இயற்கையாக வளர்ந்துள்ள செடிகளே, தேவதாரு போன்று இருக்கின்றன, அவைகளே உன்னதமான எருக்களாகப் பயன்படும். அவைகளில் உள்ள சத்துக்களை நல்ல முறையில் சேகரித்து உபயோகித்துக் கொள்வதே சிறந்ததாகும்.

அடுத்தபடியாக, நம் நாட்டில் உள்ள உரம் கடலைப் பிண்ணுக்கு,
இரண்டு நாட்களுக்கு ஒரு கப்பலாக இதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி
செய்கிருர்கள். இங்கு டன் ரூ. 800 விற்கிறது. இதை வெளி நாட்டில்
200 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். ஏன் இப்படியெல்லாம் கடலைப்பிண்
ணுக்கை பெரும் நஷ்டத்திற்கு வெளியே கொடுத்துவிட்டு, அமோனியம்
சல்பேட் போன்ற செயற்கை உரங்களை கள்ள மார்க்கெட்டில் வாங்கப் பாடு
படுகிறோம் என்பது புரியவில்லை. இனியாவது கடலைப் பிண்ணுக்கு ஏற்று
மதியை நிறுத்திவிட்டு அதை இங்கேயே உரமாக உபயோகப்படுத்திக்
கொள்வதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். மேலும் ஸ்டேட் டிரேடிங்
கார்பொரேஷன் மூலம் 45 கோடி ரூபாய் ரசாயன உரம் மூலம் லாபம்
வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். குடியானவர்களுக்கு ரசாயன உரம்
வழங்கும் திட்டத்தில் இப்படி இடைத்தரகர்களே லாபம் அடைகிருர்கள்.
எனவே, கலப்பு உரம் தயாரிப்பது உண்மையிலேயே நிறுத்தப்படவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ள மார்க்கெட்டில் கலப்பு உரம் வாங்கு
வதற்காக குடியானவன் தான் உற்பத்தி செய்ததை குறைந்த விலைக்கு
விற்கும் கொடுமையும் நிகழ்கிறது. ஆகையால் நம் நாட்டில் இயற்கை
உரங்களையே நன்கு பயன்படுத்திக்கொள்ள வகை செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) எனக்கு தயவு செய்து
இன்னும் இரண்டு மூன்று நிமிஷம் வேண்டும்.

அடுத்தபடியாக, மாதவரம் பால் பண்ணையின் கணக்கைப் பார்க்கும்போது
அங்கிருந்த சாணத்தை கம்போஸ்ட் உரக் குழியில் கொண்டு போய்க் கொட்டு
வதற்கு 32 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த உரத்தை
7 ஆயிரம் ரூபாய்க்கு மட்டுமே ஏலம் விட்டிருக்கிருர்கள். இதைவிட வேடிக்கை
யான, அருவருக்கத்தக்க விஷயம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. இத்
தகைய சந்தர்ப்பங்களில் ஆயிரம் மடங்கு பலன் உள்ள பல கருத்துக்களை
நான் சொல்ல முடியும். ஆனல் இப்போது நேரம் தான் இல்லை.

அடுத்தபடியாக, விவசாயத்தில் பூச்சி மருந்து உபயோகிப்பதைப் பற்றி
யது. விவசாய இலாக்காக்களிலும் ப்ளாக் டெவலப்மெண்ட் இலாகாக்
களிலும் பூச்சி மருந்துகள் கொடுக்கிருர்கள். இதில் வருந்தத்தக்க விஷ
யம் என்னவென்ருல் இந்த மருந்தை உபயோகிப்பதனல் விவசாயம்
இன்னும் மோசமாகி விடுகிறது. இந்த மருந்துகளைக் கொடுக்கும்போதே
டி.டி.டி. 5 சதவிகிதம், இது பத்து சதவிகிதம் கலந்து போடவேண்டும்
என்றெல்லாம் சொல்கிருர்கள். ஆனல் இந்தப் பூச்சி மருந்திஞல்
பூச்சிகள் சாவது கிடையாது. மேலும் நன்ருக கொழுக்கின்றன. ஆனல்
போன வருஷத்து மருந்து மிச்சம் இருந்து அதை உபயோகித்தால்
பூச்சிகள் அழிகின்றன. இதிலிருந்து இப்போது தரப்படுகிற மருந்தின்
தரம் எவ்வளவு மட்டமாக இருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும்.
சாதாரணமாக, ஒரு வியாபாரியிடம் இவைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தால்
நல்ல முறையில் நடைபெற்றிருக்கும். லாபத்தைக் கருதியேனும் தரமான
சாமான்களை வினியோகிக்க அவர்கள் முன் வருவார்கள். இப்படி இல்லா
மல் அரசாங்கம் ஒன்றுக்கு முக்கால் விலையில் குறைத்துக்கொடுப்பதனல்
வியாபாரிக்கு லாபம் கிடைக்காமல் போகிறது. விவசாயிக்கும் தரமான
சாமான் கிடைப்பது இல்லை. உழாத கலப்பைகளும் முளைக்காத விதை
களும் விவசாயத்துக்குப் பயன்படாமல் போகின்றன. எனவே இத்துறை
யில் சம்பந்தப்பட்ட இலாகா கவனம் செலுத்து ஆவன செய்யவேண்டும்.

அடுத்ததாக, பல இடங்களில் டிராக்டர்கள் கிராமங்களுக்கு ப்ளாக்
டெவலப்மெண்ட் இலாகா மூலமாக வழங்கப்படுகிறது. இதில் பல
குறைபாடுகள் இருக்கின்றன. இந்த ட்ராக்டர்களில் 10-க்கு ஒன்று கூட
சரியாக இருப்பதில்லை. அரசாங்க இலாகாக்களில் சரியான அக்கரை எடுக்
கப்படாமையாலும் புதிது புதிதாக பலர் ஹாண்டில் செய்வதாலும் இப்படி
யெல்லாம் நாட்டின் சொத்து வீணுகிறது. உச்சவரம்புச் சட்டத்திஞல்
நிலம் துண்டு விழுந்து விட்டது ; ஆகவே விவசாய மக்களுக்கு நல்ல
விதைகளும் உழுவதற்கு நல்ல சிறிய டிராக்டர்களும் தரவேண்டும்.
ஜப்பான் முறையை அனுசரித்து குறைந்த விலைக்கு தரமான சிறு
டிராக்டர்களை உற்பத்தி செய்து விவசாயிடமே கொடுத்து, விவசாயிகளை

ஊக்குவிக்க வேண்டும். இப்படியெல்லாம் இயற்கை உரங்களைப் பெருக்கி
விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விவசாயப் பொருள்களை வழங்கி
உற்சாகப்படுத்திஞல்தான் உற்பத்தி நல்ல முறையில் நடைபெறும் என்று
சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி** : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை
மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். மற்ற தொழில்களுக்கெல்லாம் ஒரு நல்ல ஆதாரமான தொழில்
இந்த உழவுத் தொழில்தான். அதனல் தான் வள்ளுவர் :

"உழுவார் உலகத்தாக் காணியஃ தாற்ரு
தெழுவாரை எல்லாம் பொறுத்து."

என்று கூறியிருக்கிருர். அப்படிப்பட்ட தொழில் இன்று எந்த நிலையில்
இருக்கிறது என்பதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் சொன்ஞர்கள்.
குறிப்பாக உணவு உற்பத்தியையும், ஏனைய உற்பத்திகளையும் பொறுத்த
வரையில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் நம்முடைய இலக்கை
பூர்த்திசெய்ய முடியவில்லை, உற்பத்தியின் அளவுகூட குறைந்துள்ளது.
அதற்கான பிரதான காரணங்கள், என்னவென்று பார்க்கும்பொழுது
பருவநிலைக் கோளாறு, ஏனைய பிற காரணங்கள் என்றெல்லாம் குறிப்
பிடப்பெற்றுள்ளது. நம்முடைய நாட்டிலே பெரிய நீர்ப்பாசன வசதிகள்
எல்லாம் ஏற்பட்டு இருந்தாலும்கூட, சிறிய நீர்ப்பாசன வசதிகள் மேலும்
பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிறிய சிறிய குளங்கள் அங்கங்கே
வெட்டலாம், மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கி வீணுகச் சமுத்திரத்தில்
போய் விழக்கூடிய நிலையைத் தவிர்க்கின்ற வகையில் பல இடங்களில்
குளங்களை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம். சமுதாயக் கிணறுகளைப்
பல இடங்களில் வெட்டி குழாய்க் கிணறுகளை 20, 15 என்று இல்லாமல்
அதிகமான அளவிலே வெட்டிஞல் அதன்மூலம் பாசன வசதிக்கு ஏற்பாடு
கள் செய்தால் அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழியிருக்கும்.
ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 குழாய்க் கிணறுகள் வெட்டுவதாகத் திட்ட
மிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக 1967–68ஆம் ஆண்டில் 2 குழாய்க் கிணறு
கள் வெட்டுவதாக இருக்கிறது, இதையெல்லாம் அதிகமாக்குவதற்கு ஏற்
பாடுகள் செய்யப்படவேண்டும்.

கிணறுகள் வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிற உதவிக் கடன்கள் சிறிய
சிறிய விவசாயிகளுக்கு, இரண்டு ஏக்கர் நிலம் மட்டும் வைத்துள்ள விவ
சாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிலையில்லை. காரணம் என்னவென்ருல்
5,000 ரூபாய் கடன்தொகை தேவைப்படுகிறது என்ருல் இரண்டு ஏக்கர்
நிலம் வைத்துள்ளவன் அவனுடைய சொத்துக்கணக்கு காட்டும்பொழுது
அரசாங்கம் கேட்கின்ற சொத்துமதிப்பு இல்லாத காரணத்தால் 2
ஏக்கர் நிலம் உள்ளவர்கள் உதவியைப் பெறமுடியாமல் இருக்கிறது.
ஆகவே சிறிய சிறிய விவசாயிகள், இரண்டு ஏக்கர் நிலம் மட்டும் வைத்தி
ருக்கின்ற விவசாயிகளுக்கு எல்லாம் கடன் உதவி கிடைக்கக்கூடிய முறை
யில் உதவிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய கிணறுகள் விவசாயிகள் வைத்து இருந்தாலும் கூட அவற்றை
மேலும் அதிகமாக ஆழப்படுத்துவதற்காக அவர்களுக்குப் பண உதவி
கொடுக்க வேண்டும். ஏனென்ருல் அவர்கள் அந்த வசதியில்லாத கார
ணத்தால் மேலும் ஆழப்படுத்தமுடியாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே
புதிய கிணறுகள் வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிற மானியத்தைப் போல்
விவசாயிகளுக்கு பழைய கிணறுகள் ஆழப்படுத்துவதற்குக் கொடுப்பதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும்.

ரசாயன உரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நம் மாநிலத்திற்கு 8
லட்சம் டன் கேட்டு இருக்கிறோம், அது போதாத அளவுதான். இருந்தா
லும் கூட மத்திய அரசிடமிருந்து அதைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். விலை ஒரு குவிண்டாலுக்கு 33 ரூபாயிலிருந்து இப்பொழுது
44 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 33 சதவீதம் உயர்ந்திருக்கிறது. ஆகவே

விவசாயிகளுக்கு இந்த உரவிலை உயர்வு உற்பத்திச் செலவை மேலும் அதிகமாக்கக் கூடியதாக இருப்பதால் விவசாயிகள் கஷ்டத்திற்குள்ளாகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே உர விலையைக் குறைப்பதற்கோ அல்லது அதிகப்படுத்தப்பட்ட விலையை மானியமாகக் கொடுப்பதற்கோ அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிராக்டர்களைத் தனியாக சிறிய சிறிய விவசாயிகள் வாங்க முடியாத நிலை இருக்கிறது, பெரிய விவசாயிகள் தான் வாங்க முடியும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு டிராக்டர்கள் கொடுத்தால் அதன்மூலம் அவர்கள் பெற்றுகொள்ள முடியும். குறிப்பாக டிராக்டர்களை விட்டுவிட்டால் மாடுகளை வைத்து உழவு செய்ய முடியாத நிலையில் இப்பொழுது எல்லாம் மாடுகளின் விலை உயர்ந்திருக்கிறது. மாட்டுத் தீவனங்களின் விலை, புண்ணக்கு, பருத்திக்கொட்டை முதலியவற்றின் விலைகள் எல்லாம் உயர்ந்த விட்டபடியால் அவற்றை விவசாயிகள் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே டிராக்டர்களை வைத்து விவசாயம் செய்வதுதான் நல்ல முறையாகத் தெரிகிறது. ஆகவே அந்த வகையிலே செய்வதற்கு டிராக்டர்களைச் சிறு விவசாயிகளால் வாங்கமுடியாத நிலை இருப்பதால், எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் டிராக்டர்கள் கொடுத்தால் அதன்மூலம் அவர்கள் பெற்று விவசாயம் செய்யக்கூடிய நிலை ஏற்படும்.

பூச்சி ஒழிப்பு மருந்தைப் பொறுத்தவரையிலே போன தடவை நெல்லை மாவட்டத்திலே விமானத்தின் மூலம் தெளித்தார்கள். அது மிகவும் பிரயோஜனமாக இருந்தது. அப்படித் தெளிப்பதால் பரவலாக எல்லா இடங்களிலும் அது தெளிக்கப்படுகிறது. அப்படிச் செய்யாமல் இருந்தால் பூச்சி மருந்து ஒரு இடத்தில் தெளிக்கப்பட்டு இன்னொரு இடத்தில் தெளிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே விமானத்தின் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்துவிட்டு அந்தச் செலவை எல்லோரிடமிருந்தும் பகிர்ந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முறை இருக்கிறது. குறைந்த செலவில் அந்த முறையில் எல்லா இடங்களிலும் அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்வள ஆராய்ச்சி நிலையங்களைப் பொறுத்தவரையில் அவற்றை எல்லா மாவட்டங்களிலும் நிறுவவேண்டும். அப்படிச் செய்தால்தான் எந்தப் பயிரை எந்த மண்ணில் பயிர் செய்யவேண்டும் என்றும் எந்த மண்ணுக்கு எந்தத் தண்ணீர் விடவேண்டும் என்றும் ஆராய்ச்சி செய்து பயன்படுத்த முடியும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட நிலையங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி பூச்சி ஒழிப்பு மருந்து ஆராச்சி நிலயத்தையும் சென்னையிலே நிறுவாமல், மாநிலத்தின் மத்தியப் பகுதியிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேய்ச்சல் காடுகளைப் பொறுத்த வரையில், கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேய்ச்சல் காடுகளை அதிகமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே காடுகள் இருக்கின்றன, அதை அழிக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளுடைய விளைப்பொருள்களின் விலை, நெல் போன்ற தானியங்களைத் தவிர மற்றவற்றினைப் பொறுத்தவரையில் பருத்தி, வத்தல் போன்றவற்றின் விலை திடீரென்று குறைந்துவிடுகிறது. அவர்கள் குறைந்த விலையில் பொருள்களைப் போட்டவுடன் இரண்டு மூன்று மடங்கு உயர்ந்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கு வரவேண்டிய வருமானம் இடைத்தட்டிலே உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தை அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்தால் அவர்கள் அரசாங்கத்திடமிருந்து அதிகமான உதவியை எதிர்பார்க்காமல் கொஞ்சமான உதவியைப் பெற்றுக் கொண்டே உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபட முடியும். ஆகவே

உற்பத்திச் செலவை கணக்கிட்டு விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்து அவர்களுக்கு எந்த விலை கிடைக்க வேண்டுமோ அந்த விலை கிடைப்பதற்கு உத்தரவாதம் செய்தால் விளைச்சலைப் பெருக்குவதற்கு அது நல்ல அடிப்படையாக அமையும்.

கடைசியாக பொறுக்கு விதைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நெல் தவிர மற்ற புஞ்சைத் தானியங்களைப் பொறுத்தவரையில் கிலோ 10 ரூபாயாக இருப்பதால் விதைகளை மலிவான விலையில் கொடுக்க அரசாங்கமே தயார் செய்யவேண்டும். ஒரு கிலோ 10 ரூபாய் என்று விற்பதால் விதைக்காக மட்டும் ஒரு விவசாயி ஏக்கருக்கு 40, 50 ரூபாய் செலவு செய்யமுடியாது. ஆகவே தனிப்பட்ட கம்பெனிகள் இப்பொழுது அதைத் தயார் செய்கிறார்கள், அப்படியில்லாமல் அரசாங்கமே பொறுக்கு விதைகளை தயார் செய்யவேண்டும்.

அதைப் போலவே கலப்பு உரங்களைப் பொறுத்தவரையிலும் தனியார் துறையிலே அது உற்பத்தி செய்யப்படுவதால் பல இடங்களில் வெறும் மண்ணைத் தான் விற்று வருகிறார்கள். யூரியா, அமோனியம் சல்பேட் இவற்றைப் பலவிதமாக மிக்ஸ் செய்து உரம் தயாரிக்கிறார்கள். ஆகவே அவர்கள் தயாரிக்காமல் அரசாங்கமே தயார் செய்து நல்ல தரமான உரத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதிக நேரமில்லாததால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கோவிந்தராசன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். இந்த உர விநியோக முறையில் தஞ்சை மாவட்டத்தைப்போல் தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் உடனடியாகக் கார்டு முறையைக் கொண்டுவரவேண்டுமென்று நான் நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்வதோடு, விதை நெல், பூச்சி மருந்து இவற்றிற்கு மானியம் கொடுப்பதைப்போன்று உரத்திற்கும் நமது சர்க்கார் மானியம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய வட்டத்தில் மார்க்கெட்டிங் சொஸைடி என்று சிதம்பரத்திலே உரம் விநியோகம் செய்கிறது. அங்கே உரம் பெறுவதற்காக யூனியனிலே கொடுக்கிற லோனை எடுத்துக்கொண்டு விவசாயிகள் போனால் இரண்டு மூட்டை என்று இருந்தால் ஒரு மூட்டை மட்டும் கொடுத்துவிட்டு, இரண்டு மூட்டை கொடுத்துவிட்டதாகக் கணக்குக் கொடுத்துவிட்டு அவர்களை ஏமாற்றிவிட்டார்கள். அதைப்போல நமது சட்ட அமைச்சர் அவர்களுக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது.

சீனி கொடுக்கும் முறையில் ஒரு பர்மிட்டில் வரவு வைத்து விட்டு "கொடுத்து விட்டேன்" என்று சொல்லிவிட்டதாகச் சொன்னார்களே அதே போல் வியாபாரிகளிடத்திலேயே அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்றால் விவசாயிகளிடத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

எங்கள் வட்டத்தில் வெள்ளாறு என்ற ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மழைக்காலத்தில் வெள்ளம் புரண்டு ஓடுவதால் பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்களில் அறுவடைக் காலத்தில் வெள்ளம் பாய்ந்து விளைச்சலைப் பாழ்படுத்தி விடுகின்ற நிலை இருக்கிறது. அதைத் தடுக்க நமது சர்க்கார் தடுப்பு அணை போட்டு எங்களுடைய வட்டாரத்திற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். விருத்தாசலம் தாலூகாவில் மொட்டை அணை என்று இருக்கிறது. அதை நல்ல முறையில் சீர்ப்படுத்திக் கொடுத்தால் 50, 60 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். அந்த வசதி ஏற்பட்டால் உணவு நெருக்கடியைச் சமாளிக்கும் முறையில் உற்பத்தியைப் பெருக்கமுடியும்.

கால்நடைகள் இன அபிவிருத்திக்கு என்று பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிறது. கோழிப் பண்ணை நடத்துவதிலே பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் வருவதை விட தாற்காலிகமாக அந்தத் திட்டத்தை நிறுத்தி அந்தத் தொகையை விவசாயத்திற்குப் பயன்படுத்துவோமானால் உற்பத்தி பெருகமுடியும்.

சாதாரண விவசாயிகளால் நிலத்தில் பூச்சி விழுந்தால் அதைத் தடுக்க பூச்சி மருந்து அடிக்க முடிவதில்லை. பணம் இல்லாத காரணத்தால் பூச்சி மருந்து போட முடியவில்லை. இதனால் பக்கத்திலுள்ள நிலத்தில் பூச்சி மருந்து போட்டாலும், பூச்சி மருந்து போடாத நிலத்திலிருந்து மறுபடியும் அந்த நிலத்திற்கு பூச்சிகள் வந்து விடுவதால் சர்க்காரே இதை ஏற்றுமொத்தமாகப் பூச்சி மருந்து போட்டால் பூச்சியைத் தடுப்பதற்கு ஏதுவாகஇருக்குமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு எஸ். கணேசன் :** தலைவர் அவர்களே,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்று வள்ளுவப் பெருந்தகையாரால் பொற்றப்பட்ட உழவுத் தொழிலை உள்ளடக்கிய வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை முதலில் முழு மனதோடு ஆதரிக்கிறேன். வேளாண்மைத் துறையில் நிரம்ப சுய அனுபவம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உழவர்களுக்கு உற்சாகம் தந்திடப் பணி புரியும் வகையில் செயற்திட்டத்தை உள்ளடக்கிய இந்த மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் உற்பத்தி பெருகி பற்றுக்குறையையும் பஞ்சமும் இந்த மாநிலம் முழுவதும் நீங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் ஆங்காங்கு—தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, மாவட்டங்களில் விவசாயக் கருத்தரங்குகளையும், நீர்ப்பாசன மாநாடுகளையும் கூட்டி அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளைச் சந்தித்து குறைப்பாடுகளைக் கேட்டறிந்து உடனடியாக போக்க எடுத்துக் கொண்டுள்ள முயற்சி பயனுள்ள முயற்சியாகும். இதற்கு முன் எந்த அமைச்சரவையும் பின்பற்றாத சீரிய முயற்சியாகும். மக்களுக்கு ஏற்படும் அம்மை, காலரா, தொத்து நோய் போன்றவற்றைத் தடுப்பதற்காக மக்கள் சமுதாயம் முழுவதற்கும் மருந்து கொடுக்கும் பொறுப்பை எப்படி அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதோ, அதே போன்று நாட்டுக்கு அத்தியாவசியமான நெற்பயிருக்குப் பூச்சிகளின் காரணமாக வரக்கூடிய நோயையும் பரவாமல் தடுத்து நிறுத்தும் வகையில் அரசாங்கமே எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்துகளையும், தடுப்பு மருந்துகளையும் அடிக்கிற பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது பூச்சி மருந்துகளைத் தெளிக்க வேண்டிய காலத்தில் தெளிப்பதில்லை. மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிவித்தது போல் பொருளாதார வசதிக் குறைவினாலும், அலட்சியப் போக்கினாலும்கூட பூச்சி மருந்து தெளிக்க மறந்து விடுகிறார்கள் அல்லது மறுத்து விடுகிறார்கள் பூச்சிகளினால் பயிருக்கு நோய் ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. என்பதைப் புரிந்து கொள்ளாமல் ஆண்டவன் அளித்திருப்பது இவ்வளவு தான் என்ற கருத்தைக் கொண்டு வாளா இருந்து விடுகிறார்கள். சில விவசாயிகள் மருந்துகளைப் பயன்படுத்தும் முறை தெரியாமல் உடல் வதைக்கும் உயிர் இழப்புக்கும் ஆளாகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வேலையை அரசே ஏற்று நடத்துவது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலம் முழுமைக்குமான நெல் கொள்முதல் முழுவதுமே தஞ்சை மாவட்டமே வழங்கும் நிலையில் இருக்கிறது. அங்கு நஞ்சை அதிகம். ஆடுதுறை 27 என்ற நெல் வகையை ஜூன் மாதத்தில் விதைத்தால், ஜூலை மாதத்தில் நடவு போட்டுவிட்டால் விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று விவசாயிகள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற மாவட்ட கலெக்டர்களும் ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலும் கருத்தரங்கைக் கூட்டி இது பற்றிய கருத்துக்களைத் தெரிவித்து பரவலாக நல்ல விளைச்சல் தருகிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். காட்டுப் பகுதியில் உள்ள காடுகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருவதால் பருவமழை தவறி விடுகிறது. ஆனால் இந்த ஆண்டு உரிய காலத்தில் மேட்டூர் நீர் எங்களுடைய மாவட்டத்திற்குக் கிடைக்கின்ற நிலை இல்லை. நீர்ப்பாசன மானியத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். கிராமத்திலே, பெரிய பெரிய ஆறுகள், வாய்க்கால் களைத் தவிர, கண்ணிகள் என்று அழைக்கப்படும் சிறு வாய்க்கால்களில் அரசாங்கமே நீர் ஊற்று இருக்குமிடமாகப் பார்த்து பம்ப் செட் வைத்து நீர் வழங்கும் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும். எங்களுடைய மாவட்டத்தில் பம்ப் செட் வைக்கப்பட்டிருந்தாலும் 2, 3 ஏக்கர் நிலங்கள் வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் பம்ப் செட் வைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பம்ப் செட் வைத்துக்கொள்ள "சூரிடி" கொடுக்க நிலம் இல்லாமல் தவிக்கிறார்கள். இந்த நிலைமையில் நடுத்தர விவசாயிகள் உற்பத்தியை பெருக்குவது சாத்தியம் இல்லாத ஒன்றாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே, நீர் ஊற்று இருக்கும் இடங்களைப் பார்த்து பம்ப் செட்டுகள் வைத்து அரசாங்கமே ஜூன், ஜூலை மாதங்களில் முதல் சாகுபடிக்கும், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மூன்றாவது சாகுபடிக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இது போன்று கண்ணிகளின் மூலமாக அரசாங்கம் கொடுக்கக் கூடிய தண்ணீருக்குத் தண்ணீர்த் தீர்வை என்று விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற கருத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் இவ்வாறு செய்யலாம்.

எனது பகுதியில் பெரும்பகுதி மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. கடந்த ஆண்டு ஏற்பட்ட இயற்கைக் கொடுமையின் காரணமாக சாகுபடி செய்து வயிறு வளர்க்கின்ற ஏழை விவசாய மக்கள் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த மடங்களில் இருந்து வெளியேற்றப்படுவார்களோ என்ற அச்சம் அதிகமாக இருக்கிறது. தாற்காலிகமாக அவர்கள் குத்தகை பாக்கியை நிறுத்தி வைக்க சென்ற ஆண்டு உத்தரவிட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுவிட்ட குத்தகை பாக்கியை நிரந்தரமாகத் தள்ளிக் கொடுக்க அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவ மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி, சாலை வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வேளாண்மைத் துறை மானியத்தை முழு மனதோடு வரவேற்று உரையை முடிக்கிறேன். வணக்கம்.

பி. ப. 1–00

*** திரு. அ. மாரிமுத்து :** இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது என் விருப்பங்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் ஆடுதுறைத் தொகுதியைச் சார்ந்தவன் என்ற முறையில் ஆடுதுறையில் 27 என் என்ற உயர் ரக நெல்லை ஒரு போக நிலத்தில் சாகுபடி செய்ய அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. இந்த நேரத்தில் விவசாயிகளுக்குள்ள ஒரு சில குறைகளை இந்த அவை முன் எடுத்து வைக்க விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு போக நிலத்தில் குத்தகை சாகுபடி செய்து வரும் சாகுபடியாளருக்கு மா ஒன்றுக்கு நாலேந்து கலம் என்று குத்தகை ஏற்பாடு இருக்கிறது. அதை மாற்றி

இரண்டு போகம் நடக்கக்கூடிய நிலை ஏற்படுமானால் 10 அல்லது 12 கலம் மா ஒன்றுக்கு அளக்கக்கூடிய நிலை ஏற்படும் என்ற நிலை விவசாயிகளுக்கு இருக்கிறது. ஆகவே அத்தகைய முறையில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு போக நிலத்தில் 27 என்ற நெல் பயிரிடுகிறவர்களுக்கு தண்ணீர் தீர்வை மட்டும் வசூலிக்க வேண்டுமென்று இந்த அரசு நல்ல முறையில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆடுதுறைத் தொகுதியில் திருப்பனந்தாள், திருவடைமருதூர் வட்டாரங்கள் இருக்கின்றன. இரண்டிற்கும் சேர்ந்து சுமார் 75,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு உட்பட்டதாக இருக்கிறது. இந்த இரு வட்டாரங்களில் கூடக் கூடிய கவுன்சில் கூட்டத்தில் அத்தனை கவுன்சிலர்களும், குறிப்பாக எல்லா மிராசுதார்களும் விவசாயிகளும் பஞ்சாயத்து யூனியன் சார்பில் ஒரு ட்ராக்டர் வாங்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி நீண்டகாலமாகியும், ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தும் அது அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாது இருந்து கொண்டு வருகிறது. ஆகவே உழவு மிகவும் முக்கியமானது என்ற முறையில் பஞ்சாயத்து யூனியன் சார்பில் ஒரு ட்ராக்டர் வாங்கி வைக்கவேண்டுமென்றும் அதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாகுபடிதாரர்கள் பம்ப் செட்டுகளுக்காக கடன் வாங்குவதற்கு வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நல்ல முறையில் அந்த வசதி கிடைக்க ஆவனசெய்ய இந்த அரசாங்கம் முன்வரவேண்டும். நமக்கு நன்கு தெரியும், விவசாய காலங்களில் விவசாயிகளுக்கு விழுந்த குழந்தையைக் கூட தூக்க நேரம் இல்லை என்ற பழமொழி நமக்குத் தெரியும். சென்ற காலத்தில் விவசாயிகளுக்கு கூட்டுறவு நாணய சங்கம் மூலம் கிடைத்து வந்த மான்யூர், உரங்கள், எங்கேயோ ஐந்தாறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் சங்கங்களில் இருந்து உரங்கள் வழங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டால் விவசாயிகள் நிலத்திற்குரிய வகையில் சரியானபடி உரம் இட வகையற்றவர்களாகப் போய்விடும் நிலை ஏற்படும். அடுத்தபடியாக, இயற்கைக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குத்தகை பாக்கி காரணமாக தற்போது மிராசுதார்களால் முன்சீப் கோர்டில் தாவா செய்யப்பட்டு அதனால் விவசாயிகள் அச்சமுறும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந் நிலை மாறுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பண்டைய காலத்தில் மிராசுதார்களின் குடிகளாக இருந்தவர்கள் சீட்டோ ரசீதோ இல்லாமல் சாகுபடி செய்து வந்தார்கள். எந்தவித இக்கட்டும் இல்லாத நிலையில் இருந்தார்கள். தற்போது எங்கள் மாவட்டத்தில் ஆடுதுறையில் ஒரு சிலயிடங்களில் அத்தகைய முறையில் இருந்து வந்த விவசாயிகளை வெளியேற்றி வருவதை நான் குறிப்பாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைபற்றி ஒரு வார்த்தை. திருப்பனந்தாளில் பந்தநல்லூர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அது விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கு ஏராளமான கால்நடைகளுக்கு நோய் கண்டு பல கால்நடைகள் இறக்கும் நிலை ஏற்பட்டது. அங்கு கால்நடைச் சிகிச்சை வசதி எதுவுமில்லை. பஞ்சாயத்து யூனியன் சார்பாக என்னதான் தீர்மானம் போட்டாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி பெற்று அரசாங்கத்திற்கு எழுதியனுப்பினாலும் இதுவரை அரசாங்க அனுமதி பெறாத நிலை இருக்கிறது. ஆகவே விவசாயம் நல்ல முறையில் முன்னேற வேண்டுமானால், கால்நடை சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்படவும், பஞ்சாயத்து யூனியன் சார்பில் ஒரு ட்ராக்டர் வாங்கி வைக்கவும் அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையை வரவேற்பதோடு நான் சொல்ல விரும்புவது, விவசாயிகளாக இருக்கிறவர்கள் தேசத்தின் நலனுக்காக அதில் அக்கறை கொண்டு தேசத்தின் நல் வாழ்விற்காக கஷ்டப்படுகிறவர்கள் என்பது உலகம் அறிந்த விஷயமாகும். இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் அவர்கள் முக்கிய பங்கை எடுக்கவேண்டிய முக்கியஸ்தர்களாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் விவசாயிகள் என்று யாரைக் கூறுவது என்று தெரியாமல் இன்னும் அரசு இருக்கிறது என்று தான் நான் நினைக்கிறேன். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ள நிலச்சுவான்தார்களும், பண்ணைக்காரர்களும் தங்களை விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். எட்டு அல்லது பத்து மா சாகுபடி செய்து கொண்டிருக்கிற விவசாயிகளும் தங்களை விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். விவசாய வேலை செய்கிற விவசாயக் கூலிகளும் தங்களை விவசாயிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆகவே இதில் யாரை விவசாயி என்று அரசாங்கம் நிர்ணயிக்கிறது, யாருக்கு சலுகை காட்ட முன்வருகிறது என்பதை முதலில் வரையறுக்க வேண்டும். விவசாயிகள் விஷயத்தில் கடந்த கால அரசினிடம் நாங்கள் பலமுறை எடுத்துக் கூறியும் விவசாயி என்றால் லட்சக்கணக்கான ஏக்கர்களை, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உடையவர்களையும், கோவில், மடாதிபதிகள் இவர்களைத் தான் விவசாயிகள் என்று கருதி அவர்களுக்கு வேண்டிய வகையில்தான் இது வரை காரியங்கள் செய்து கொண்டிருந்தது. சர்க்காரின் முந்திய திட்டப்படி நிலச்சீர்திருத்த அமைப்பிற்கு முன்பு எங்கள் தாலூகாவில் ஐந்து மிராசுதார்கள்தான் இருந்தார்கள். கோவில் போக, இரண்டு முதலியார் குடும்பங்கள், ஒரு ஐயர் குடும்பம், இரண்டு பிள்ளைமார் குடும்பங்கள். இருந்தும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அவர்கள் வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. சர்க்கார் எந்தச் சட்டத்தைச் செய்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் அதில் எங்கு இடுக்குகள் இருக்கின்றன என்று பார்த்து அதில் நுழைந்துவிடுகிறார்கள். சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு ஒரு ஆண்டிற்கு முன்னதாகவே சொல்லி விடுகிறார்கள், நிலச்சீர்திருத்தம் கொண்டு வரப்போகிறோம் என்று. அதற்குள் வீட்டு வேலைக்காரனிலிருந்து மாடு மேய்க்கிறவன்வரை பிரித்து வைத்து விடுகிறார்கள். ஆகவே யார் விவசாயி என்பதை முதலில் வரையறுக்க வேண்டும்.

அடுத்து, விவசாயத்தை அபிவிருத்தி செய்கிற முறையில் காட்டு இலாகா ஒத்துழைக்க மறுக்கிறது. கொள்ளிடக்கரை ஓரத்தில் உயர்தரமான நன்செய் நிலங்கள் இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்கு விட முடியாது என்று மறுக்கிறார்கள். அங்கு சவுக்கு போன்ற நீண்ட கால பயிரை தயார் செய்கிறார்கள். நட்ட ஏழு ஆண்டுகளுக்குள் சவுக்கை வெட்டமுடியாது. அப்படி சவுக்கை போட்டு உற்பத்தி செய்து ஏழு வருட காலத்தில் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் ப்ளான்டேஷன் பராமரிப்பு செலவு என்று கணக்கு காட்டுகிறார்கள். ஏழாவது ஆண்டு இறுதியில் பத்தாயிரம் ரூபாய் தான் அவர்களுக்கு ஆதாயமாகக் கிடைக்கிறதே தவிர வேறு ஆதாயம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அந் நிலத்தை விவசாயத்திற்கு மாற்றினால் நிச்சயமாக ஒரு ஆண்டிற்கு பத்தாயிரம், இருபதினாயிரம் ரூபாய்கூட ஆதாயம் காட்டமுடியும்.

கொள்ளிடத்தில் நாதர்படுகை கிராமத்தில் உள்ள மக்கள் புகையிலை, கிழங்குகள், வாழை போன்றவற்றை படுகையில் சில இடங்களில் சாகுபடி செய்கிறார்கள். பாக்கி நிலங்களில் காட்டு இலாகா சவுக்கு வளர்க்கிறார்கள். ஒரு சின்ன கிராமத்தில் ஒரு வருடம் கிட்டத்தட்ட புகையிலை மூலம் வருகிற வருமானத்திற்கு மட்டும் வரி $16\frac{1}{2}$ ரூபாய் கட்டுகிறார்கள் மூன்று முறையாக. ஆகவே இப்படி சவுக்கு வைப்பதால் லாபம் இல்லை, நஷ்டம் தான் வருகிறது. காட்டு இலாகாப் பிரதேசங்களில் சிறுசிறு செடிகள் கொத்துக் கொத்தாக முளைக்கிறது, பீடி இலை போன்றிருக்கிறது. அதை அவர்கள் பராமரிப்பில் வைத்துக்கொண்டு சாகுபடிக்கு கொடுக்காமல் தடுத்து வருகிறார்கள். டெயில் எண்டாக உள்ள எங்கள் தாலூகாவில் 45,000 ஏக்கர் வீணாகியிருக்கிறது. கடந்த காலங்களில் மகாராஜாக்கள் இருக்கும்போது ஒருசில மிராசு

தார்களுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்ட இடங்கள் அவை. இப்போது காடுகளெல்லாம் அழிக்கப்பட்டு தனிப்பட்ட மிராசுதார்கள் கையில் இருக்கின்றன. அவைகள் புன்செய் நிலங்களாக இருக்கின்றன. அவைகளை மாற்றி அமைத்து தனி ஸ்கீமை ஏற்படுத்தினால், ஒரு மாத காலத்திலேயே இரண்டு புல்டோசர்களை வைத்து வேலை செய்தால் அடுத்த ஆண்டிலேயே நமக்குக் கிட்டத்தட்ட 30,000 ஏக்கர் நிலங்கள், நன்செய் சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய வளமான நிலங்கள் இருக்கின்றன. அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் மனுக்களும் கொடுத்திருக்கிறோம். பொது மக்களும் எங்களால் எவ்வளவு உதவி செய்யமுடியுமோ அதற்கு சிரம தானம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக மடாலயங்களுக்கு எங்கள் ஜில்லாவிலும், மற்றும் மாநிலம் பூராவிலும் நிலங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியில் இருக்கிற தர்மபுரம் மடாலயத்திற்கு 12,000 வேலி நிலம் இருக்கிறது. அவைகளுக்கு எந்தவிதமான மராமத்தும் செய்யப்படுவதில்லை. மராமத்து செய்வதற்குப் பஞ்சாயத்து யூனியன்கள் முயற்சி செய்தாலும் அவர்கள் ஒத்துக்கொள்ளுவதும் இல்லை. இப்படி நன்செய் நிலங்கள் மராமத்து செய்யாமல் பாழாக்கப்படுகின்றன. ஆகையால் கோவில்களாவது ஒன்று மராமத்து செய்ய வழிவகை செய்யவேண்டும்: அப்படி இல்லையென்றால் யூனியன் மூலமாகத் தாராளமாக மராமத்து செய்ய வழிவகை செய்துகொடுக்க வேண்டும்.

அதே போல போர்வெல் போட்டுக்கொள்ள, கிணறு தோண்டுவதற்கு இடம் கொடுப்பதில்லை. அரசாங்கம் பொதுக் கிணறுகள்—கம்யூனிட்டி வெல்ஸ்—தோண்டி, பொது சானல் உற்பத்தி செய்து, இவைகளிலிருந்து வரும் நஷ்ட ஈட்டை விவசாயிகளிடமிருந்தும், குத்தகைதாரர்களிடமிருந்தும் வசூலித்துக்கொள்ள வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன்கள் கொடுப்பதிலே எங்கள் வட்டாரத்தைப் பொறுத்த வரையில் விவசாய இலாகா நல்ல முறையில் திறம்பட செய்து, உரங்கள், விதைகள் நல்ல முறையில் கிடைக்கும் முறையை ஏற்படுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் யூனியனைப் பொறுத்த வரையில், மிகச் சிறந்த முறையில் எல்லா வகைகளான உரங்களையும், நல்ல நெல் வகைகளையும், விதைகளையும் இந்த வருஷத்தில் தயார்செய்து வைத்திருக்கிறார்கள். அதோடு இந்த ஆண்டில், கடந்த கால அரசில் ஏற்பட்டிருந்த கஷ்டங்களைப் போல விதை வினியோகத்திலும், உர வினியோகத்திலும் கஷ்டங்கள் இருக்காது. விவசாயத்தில் ஒத்துழைக்க நாங்களும் முன்வருகிறோம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : இப்போது உறுப்பினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்களின் நேரத்தையும் எடுத்துக் கொண்டு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் உரையாற்றுவார்கள்.

• **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்திலே பேசுவதற்கு ஓரிரு விஷயங்களை மட்டும் நான் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயம் என்று சொன்னால் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கிற ஒரு தொழில். அதோடு உயிர்களை வாழ வைக்க ஆதாரமாக இருக்கிற தொழிலாகவும் அது அமைந்திருக்கிறது. அதோடு நம் நாட்டிலே பெருவாரியானவர்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இங்கே இருக்கிற நிலங்களைச் சிறு சிறு துண்டுகளாகத்தான் வைத்துக் கொளள முடியுமே தவிர பெரும் ஃபார்மாக பண்ணைகளாக வைத்துக்கொள்ள முடியாது என்பதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அதன பேரில் தான் உச்சவரம்புச் சட்டம் வந்தது என்றும் சொல்ல விரும்புகிறேன். இருந்தாலும் கூட உச்ச வரம்புச் சட்டம் வந்த

தற்குப் பின்னரும் பல பேர்கள் கூட்டுறவு முறையில் கூட்டுப் பண்ணையாக பெரிய பெரிய ஃபார்மாக விவசாயத்தைச் செய்ய வேண்டுமென்ற வாதங்கள் இருந்துகொண்டே இருக்கின்றன. அப்படிப்பட்ட வாதங்கள் இருந்து கொண்டிருப்பது மட்டுமல்ல கடந்த காலத்திலே இருந்த அரசு அதிலே தடுமாறிக் கொண்டு வந்தும் இருக்கிறது. அப்படி தடுமாறிக் கொண்டு வந்த காரணத்தினாலும் இந்த ஆதாரமான உண்மையைப் புரிந்து கொள்ளாத காரணத்தினாலும் உணவு உற்பத்தியினுடைய அளவு ஒவ்வொரு வருஷமும் குறைந்து கொண்டே வந்திருக்கின்றது என்று கணக்குகள் கூறுகின்றன. கடந்த ஆண்டில் 58 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டியது, 52 லட்சம் டன்னாகக் குறைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, கடந்த காலத்திலே விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று எண்ணியும்கூட, பத்திரிகையில் விளம்பரம் செய்து, பிரசங்கங்கள் செய்து, எல்லாம் செய்தும் உணவு உற்பத்தி குறைந்து வந்ததற்கான காரணங்கள் என்ன என்று சரியாக ஆராய்ந்து பார்க்கும் போது ஒன்று புரிகிறது.

விவசாயிகள் என்று சொன்னால் அவர்கள் தொழில் செய்பவர்கள் மட்டுமல்ல. உயிர்களும் கூட. விவசாயிகள் எவ்வளவு என்று கணக்கிடு செய்யாமல் வேறு ஏதோ உணர்வுடன் அரசியல் காரணங்களை வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்தார்களே தவிர உணவு உற்பத்திக்கான காரியங்களைச் செய்தார்களா என்றால் இல்லை. இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால் பல இடங்களில் உதாரணம் சொல்ல முடியும். நிலத்தில் விவசாயம் செய்து உயிர் வாழ்ந்து கொண்டிருந்த விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றியதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. விவசாயம் செய்த நிலங்களைத் தரிசாகப் போடச் செய்த காரியங்களைப் பற்றிய ஆதாரங்கள் இருக்கின்றன. அம்மாதிரியான காரியங்களைச் செய்து, அதே நேரத்தில் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்ற வாதம் இருந்ததே, அது முரணான முறை, உபயோகத்திற்கு ஆகாத காரிய சாத்தியமற்ற முறை. விவசாயிகள் உயிர் வாழுகிறவர்கள் உயிர் வாழவைக்கிறவர்கள் என்ற எண்ணத்தின் மீது பிரச்னையை ஆராய்ந்து முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படிப் பார்க்கும் போது. இந்த அரசு வந்ததற்குப் பின்னால் விவசாயிகள் உயிர் வாழுகிற வழி வேண்டுமென்று. அவர்களுடைய உயிரைப் பாதுகாக்கவேண்டும் என்று அந்த அடிப்படையில் குறைந்த விலையில் உணவுப் பொருள்களைக் கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த அரசு சரியான கண்ணோட்டத்தில் மக்களைப் பார்க்கிறது. சரியான விதத்தில் பிரச்னைகளைத் தீர்க்க முற்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு ஆதாரமாக இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அப்படியானால். இன்னும் மற்ற அம்சங்களையெல்லாம் முரண்பாடு இல்லாமல் முறையாகச் செய்வது என்று சொன்னால் வாயினாலே சொல்லுவதை விட அனுஷ்டானத்தில் எவ்வளவு தூரம் செய்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படி அனுஷ்டானத்தில் செய்வதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். நம்முடைய நிர்வாக யந்திரம் இருக்கிறதே அது மிகவும் துருப்பிடித்த யந்திரம் என்று கருதுகிறேன். பல இடங்களில் தேய்ந்து போயிருக்கின்றன. பல இடங்களில் மரைகள் போயிருக்கின்றன. பல இடங்களில் ஆணிகள் இல்லாமல் இருக்கின்றன. பழைய வெள்ளைக்காரன் காலத்திலிருந்து தொடர்ந்து வந்த யந்திரமாக இருப்பதால் இம்மாதிரி சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சேதங்களையெல்லாம் போக்கி மாற்றி அமைத்து முறையாக யந்திரம் ஆக்கப்படாவிட்டால் எந்த மாதிரி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிட்டாலும் சரியாக முறையாகச் செய்ய முடியாது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. கடந்த காலத்திலே யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகளையெல்லாம், கடந்த இருபது ஆண்டுகளாக இருந்த அரசு அதிகப்படுத்தியதே தவிர குறைத்தது என்று சொல்ல ஆதாரங்கள் எதுவுமே இல்லை. இந்த அரசு செய்ய வேண்டிய பொறுப்பிலே திடமான, தடுமாற்றமற்றதான நடை முறையை எடுத்துக் கொண்டு உறுதியாக

செய்தால் தான் எடுத்துக் கொண்ட காரியம் சரியான முறையில் நிறைவேறும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படிச் சொன்னால், இரண்டு வகைகளில் விவசாயத்தைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒன்று உணவுப் பொருள்கள் உற்பத்திக்கு ஆதாரமாக இருக்கக்கூடியது ; இன்னொன்று மூலப் பொருள்கள் உற்பத்திக்கு ஆதாரமாக இருக்கக்கூடியது. நெல், சோளம் போன்ற பொருள்கள், பருப்பு வகைகள் ஆகியவை உணவு உற்பத்திப் பொருள்கள். இன்னொரு வகையில் கரும்பு, பருத்தி, புகையிலை எண்ணெய் வித்துக்கள் எல்லாம் மூலப் பொருள்கள் ஆகின்றன. இரண்டையும் ஒரே மாதிரியாக அபிவிருத்தி செய்து கொண்டு வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்று உணவிலும் நெருக்கடி இருக்கிறது ; பருத்தியிலும் நெருக்கடி இருக்கிறது. உணவுப் பொருளும் அவசியம் பருத்தியும் அவசியம். இரண்டும் அத்தியாவசியமானது. ஒன்று உயிர் வாழ்வதற்கு வேண்டும். மற்றொன்று மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு வேண்டும். உயிரைக் காப்பாற்றவும், மானததைக் காப்பாற்றவும் பிரயோசனமாக இருக்கின்ற காரணத்தினால் மிகவும் திட்டமிட்டுச் சரியான முறையில் செய்ய வேண்டிய் அவசியம் இருக்கிறது.

இப்போது இரண்டு வகைகளில் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்கிறோம். ஒன்று உற்பத்தியாகும் அளவைப் பெருக்க முயற்சிக்கிறோம் : இன்னொன்று நிலத்தில் விஸ்தீர்ணத்தைப் பெருக்க முயற்சி செய்கிறோம். இரண்டையும் முறையாகச் செய்தால் நிச்சயமாக உற்பத்தி பெருக முடியும். இன்றைக்கு என்னிடத்தில் பல விண்ணப்பங்கள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையை ஆராயும் போது நில விஸ்தீர்ணத்தைப் பெருக்க வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. மேட்டூர் பகுதி காவிரி ஆறு ஓடுகிற பகுதி. அதைச் சுற்றி நிலங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. அந்த நிலங்களில் 20 ஆண்டுகளாக 30 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிற விவசாயிகள் இன்றைக்கும் தண்டத் தீர்வை கொடுத்துக்கொண்டு வருகிற துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு அந்த நிலம் உரிமையாக்கப்படவில்லை என்ற காரணத்தினால் பாதை புறம்போக்கு நத்தம் புறம்போக்கு என்று பல்வேறு விதமாக கிராமக் கணக்குகளில் வைத்திருக்கிற காரணத்தினால் தண்டத் தீர்வை கட்டவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அப்படி கட்டுவது மட்டுமல்ல ; நிலத்தின்மீது அபிவிருத்தி செய்வதற்கான அக்கறை சிரத்தை கொள்ள வழியில்லாது இருக்கிறது. அதோடுமட்டுமல்ல ; விவசாயத்தைப் பெருக்க அரசாங்கம் கொடுக்கிற மானியத் தொகைகளைப் பெறுவதற்கான ஆதாரம் இல்லாது வசதிகளும் இல்லாது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரியான நிலங்களிலெல்லாம் முறையாக விவசாயம் நடக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கே இந்த நிலங்களை உரிமையாக்கிக் கொடுப்பது முதல் வேலையாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நில விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லும்பொழுது. காட்டு இலாகா இருக்கிறது, காட்டு இலாகாவில் நிலங்கள் மிகவும் அதிகமாக இருக்கிறது. காட்டு இலாகாவைச் சேர்ந்தவர்களைக் கேட்டால் "எங்களிடம் நிலம் இல்லை" என்று சொல்லுவார்கள். ஏனென்றால் காட்டு இலாகா நிலத்தை குறைத்துக் கொள்வதற்கு விரும்பவில்லை. அதற்குக் காரணம் காட்டு இலாகாவினர் ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இவ்வளவு சதவிகிதம் காட்டு இலாகாவிற்கு நிலம் இருக்க வேண்டும் என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் காரணமாக காடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி செடி இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மரம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கணக்கில் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அம்மாதிரி கணக்கில் இருப்பதனால் யாருக்கும் பயன்படாமல் அங்கே இருக்கிற நிலம் வீணாகக் கிடக்கிறது. அதனால் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடையாது.

கோனூர் கிராமத்தில் ஒரு பகுதியை சென்ற வாரத்தில் நான் பார்த்தேன். அங்கே மரமும் இல்லை, மட்டையுமில்லை, காடும் இல்லை, 2,468 ஏக்கர் என்று நினைக்கிறேன். அதில் பத்து ஏக்கர் நிலத்தில் யுகாலிபிடஸ் மரங்களை வைத்திருக்கிறார்கள். அந்தச் செடிகள் வைப்பதற்காக பணம்

ஒதுக்கியிருக்கிறோம், ஆட்களை வைத்திருக்கிறோம். ஆனால் செடிகள் நன்றாக வளரவில்லை. சரியாக உருவமாக இல்லை என்பதை நானே நேரிடையாகப் பார்த்தேன். காவேரிபுரம், கத்திரிப்பட்டி மலை இருக்கிறது அதற்குப் பக்கத்தில் நடுக்காவல் சத்திரம் என்ற பிரதேசம் இருக்கிறது. அங்கே நான்கு மைல் அளவுக்கு விவசாயம் செய்யத்தக்க நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் பழைய காலத்தில் கிணறு இருந்த அடையாளம் வரப்பு இருந்த வரம்பு அடையாளம் இருக்கிறது. பி. என். பட்டி கிராமத்திற்கு அருகில் வனவாசி பக்கநாடு என்ற காடு இருக்கிறது. அங்கே 3,000 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு பயன்படக்கூடிய முறையில் இருக்கிறது. அதே மாதிரி சோளப்பாடி என்ற பகுதியில் நிலம் இருக்கிறது. மேட்டூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் 10,000 ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்கு கொண்டு வருவதற்கு லாயக்காக இருக்கின்றன. இந்த நிலங்களெல்லாம் பாரெஸ்டு இலாகா நிலமாக இருப்பதினால் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறது. ரெவின்யூ இலாகாவுக்கும் பாரெஸ்டு இலாகாவுக்கும் எப்பொழுதுமே உறவு சுமுகமானது அல்ல, அது மட்டுமல்ல. அணைகள் கட்டப்படுகிற பகுதிகளிலே பாரெஸ்டு இலாகாவிலிருந்து நிலங்களை மராமத்து இலாகா, மின்சார இலாகா எடுத்துக் கொண்டால் அதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் விலை வைத்து வாங்கிவருகிறார்கள். சமீபத்தில் பரம்பிக்குளம் பகுதிக்கு போயிருந்தேன். அங்குள்ள பெரிய அதிகாரிகள் அணைக்கட்டு கட்டுவது சர்க்கார் நிலம், அது பாரெஸ்டு இலாகா நிலம், ரெவின்யூ இலாகா நிலம் மராமத்து இலாகா நிலம் என்ற கணக்கில் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஒருவருக்கொருவர் வாங்கிக் கொள்கிற நேரத்தில் அதிக விலை வைத்துக் கொடுப்பதன் மூலம் அந்த அணைக்கட்டின் மொத்த மதிப்பீடு அதிகமாகிறது என்ற ஒரு வாதத்தைச் சொல்கிறார்கள். இம்மாதிரியான முரண்பாடு குறித்து பரிசீலனை செய்து சரி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் விவசாய அபிவிருத்தி செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல அந்தப் பகுதிகளில் இருக்கிற நிலங்களைப் பல பேர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கான உத்தரவு சமீபத்தில் 1966-ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்டது. அந்த உத்தரவிலே ஏற்கனவே இருந்த உத்தரவைத் திருத்தி இன்னும் அதை விரிவுபடுத்தி, ஐந்து விதத்தினர்களுக்கு நிலம் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஜி.ஓ. எம்.எஸ். நம்பர் 1919, 1944-ல் ஜூலை 20-ம் தேதி உத்தரவிடப்பட்டு, அது மறுபடியும் 21—4—1964-ல் திருத்தப்பட்டு, கடைசியாக 20—12—1966-ல் அமுலுக்கு வருகிறது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ராணுவத்தில் வேலை செய்கிறவர்கள், ராணுவத்திலிருந்து திரும்பிவந்தவர்கள் அவர்களில் பலர் என்னிடம் விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் கொடுப்பதற்காக வைத்திருக்கிறேன். ஆதாரத்துடன் விண்ணப்பங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விவரத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காட்டு இலாகாவில் இருப்பவர்கள் ஏலதார்களுடைய ஆட்களாகத் தான் இருக்கிறார்கள். நிலம் காட்டு இலாகாவுக்குச் சொந்தம், அரசாங்கத்துக்குச் சொந்தம், அதை அபிவிருத்தி செய்யவேண்டும், அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனோபாவம் அவர்களிடத்தில் இல்லை. மேலே இருக்கிறவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. கீழே இருப்பவர்கள், வாட்சர், கார்டுகள் போன்றவர்கள் பக்கத்தில் இருக்கும்படியான விவசாயிகளுக்கு ரொம்பவும் தொல்லை கொடுக்கும்படியான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரெஸ்டு இலாகா ஓரத்தில் இருக்கிற விவசாய நிலங்களிலுள்ள விவசாயிகளுடைய மாடுகள் அந்தப் பகுதியிலே எங்கேயாவது மேய்ந்தால் அல்லது ஆடுகள் மேய்ந்தால், அவைகளை ஒன்றாகக் கூட்டிக் கொண்டு வந்து வைத்து, ஒரு ஆடுக்கு அல்லது ஒரு மாடுக்கு இவ்வளவு

ரூபாய் என்று கணக்குப் போட்டு அவ்வளவு பணத்தையும் வாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளிடத்தில் விண்ணப்பம் செய்து, புகாரை விசாரிக்கவேண்டுமென்று கேட்பதற்குப் பயப்படுகிறார்கள். "இன்றைக்கு ஒரு சிறிய விஷயத்தில் நாங்கள் அம்மாதிரி செய்துவிட்டால், பரம்பரை பரம்பரையாக எங்களுக்கு தொல்லை கொடுப்பார்கள், பரம்பரையாக நாங்கள் ஆடு மாடுகளை மேய்க்க முடியாமல் போய்விடும்" என்று கதறுகிறார்கள். மேலும் அறுவடைக் காலத்தில் விவசாயிகள் இவ்வளவு படி, இவ்வளவு மூட்டை, இவ்வளவு வள்ளம் என்று நெல்லை அல்லது வேறு தானியததை காட்டு இலாகாவில் இருக்கிற பல்வேறு அதிகாரிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டியிருக்கிறது என்று என்னிடம் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, காட்டு இலாகாவில் சுள்ளி பொறுக்குவதற்கு வாழ்வதற்கு வழி இல்லாத பெண்கள் சென்று காய்ந்துபோன சுள்ளிகளைப் பொறுக்கித் தலையில் சுமந்துகொண்டுவந்து இரவில் 7, 8 மணிக்கு நகர்ப்புரங்களில் கொண்டுவந்து விற்றால், ரூ. 1, $1\frac{1}{2}$க்-கு விற்றால்கூட அவர்கள் நகரங்களுக்குள் வந்து விற்றாலும்கூட, அவர்களைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு வந்து, அரட்டி, மிரட்டி போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு வந்து நிறுத்தி, தண்டனைக்குள்ளாக்குகிறார்கள். இம்மாதிரிப் பரிதபிக்கக் கூடிய பல காரியங்களைக் காட்டு இலாகாவினர் செய்துவருகிறார்கள்.

காட்டு இலாகாவில் மரங்களை ஏலம் விடும் நிலையில், ஏலம் விட்ட மரங்கள் அல்லாது பல்வேறு மரங்களையும் ஏலதார் வெட்டிக்கொண்டு போவதற்குக் காட்டு இலாகாவிலுள்ளவர்களே உடந்தையாக இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். நம் எல்லோருக்கும் தெரியும். சந்தன மரங்கள் பல இடங்களிலும் வெட்டப்பட்டு, அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டமாகிறது. துணிந்து சந்தனக் கட்டையைத் திருடுவதற்கு பலர் முன்வருவதற்குக் காரணம் அங்கு இருப்பவர்களே அதற்கு உடந்தையாக இருப்பதுதான். நமக்கே தெரிகிறது, காட்டு இலாகாவில் உள்ளவர்கள் மரங்கள், விலங்குகள் இவற்றோடு பழகுவதால், அவர்களுடைய குணம்சங்களில் பெரிய மாற்றம் காணப்படுகிறது. சாதாரண மக்களுடைய குணம்சயங்களை நாம் பார்த்திருக்கிறோம். வேறு சூழ்நிலையிலே உள்ளவர்களுடைய குணம்சங்களில் வேறு மாதிரியாக இருக்கும். சாதாரண மக்களுடைய குணம்சங்கள் வேறு மாதிரியாக இருக்கும். அப்படிச் சாதாரண ஜனங்களிடம் இல்லாத ஒரு மாற்றம் காட்டு இலாகாவினரிடம் இருப்பதாக எனக்குத் தென்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கடந்த அரசு காலத்திலிருந்து வனவாசி, பக்கநாடு காட்டுப் பிரதேசத்தில் காட்டு இலாகாவினர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஒரு பிரச்சினை இருந்து வந்தது. காட்டு இலாகாவினர் விவசாயிகளை மிரட்டி, துன்பத்திற்கு ஆளாக்கிக்கொண்டிருந்தார்கள். இந்த அரசு வந்தவுடன் கருணை மிக்க விவசாய அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும், கருணை மிக்க முதல் அமைச்சர் அவர்களும், இரண்டு பேர்களும் நேரில் வந்து பார்த்து விவசாயிகளின் துன்பங்களைத் தீர்ப்பதற்கு முன்வந்தார்கள். முன் வந்து சில உத்தரவுகளைப பிறப்பித்தார்கள். ஆனால் இன்றைக்குக்கூட காட்டு இலாகாவைச் சேர்ந்தவர்கள் இன்னும் விவசாயிகளை துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். என் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த நிலங்களை அவர்களுக்கே அளிப்பது என்பது சர்க்கார் முடிவு. அப்படி முடிவுசெய்து அந்த நிலங்களை அவர்களுக்கு அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, காட்டு இலாகாவினர் "எங்களுக்கு அம்மாதிரியான உத்தரவு இல்லை" என்று சொல்லுகிறார்கள். கடைசியாக முடியும்வரை விவசாயிகளுக்குத் துன்பம், தொல்லைகள் கொடுத்துக்கொண்டுதான் இருப்போம் என்ற அளவில் அவர்கள் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் எடுத்துக் கொண்ட

நடவடிக்கை உண்மையா, அல்லது அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்கின்ற காரியங்கள் உண்மையா என்ற அம்சங்களையெல்லாம் பார்க்கும் பொழுது, நிர்வாக இயந்திரத்தில் ஏதோ கோளாறு . . .

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அங்கத்தினர் அவர்கள், அதிகாரிகள் காட்டுப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நிலங்களை விவசாயிகளுக்கு வழங்குவது என்று அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. இன்னும் உத்தரவு அனுப்பப்படவில்லை. அப்படி எதாவது குறிப்பிட்ட தொந்தரவு இருக்குமானால் எனக்குத் தகவல் கொடுத்தால் விசாரிக்கலாம். பொதுவாக்கில் எதையாவது சொல்ல வேண்டாம், முழுமையான தகவல் இருந்தால், அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் எடுத்துக் கொள்கிறேன். இன்றைக்கு நாளைக்கு என்னுடைய தொகுதியிலிருந்து தபால் வரும் என்று எதிர்பார்க்கிறேன். குறிப்பிட்ட நபர்களின் பெயர், இடம் போன்ற விவரங்களைத் தரமுடியும் என்று நம்புகிறேன். இப்பொழுது பொதுவாகத்தான் சொன்னேன். நான் ஒரு காரணத்திற்காகச் சொன்னேன். இம்மாதிரி நடக்கவேண்டும் என்று அரசு நினைக்கிறது என்று நான் கருதவில்லை. அங்கு இருக்கிற இயந்திரக் கோளாறுகளினால், இம்மாதிரியான விளைவுகள் நடக்கின்றன. நல்ல திட்டங்கள் போடப்பட்டாலும், அவற்றை சரியான முறையில் அமல்படுத்தாமல், விவசாயிகளுக்குப் பல தொல்லைகளைக் கொடுக்கிறார்கள். அமைச்சர் பேரில் தப்பு அபிப்பிராயத்தை உண்டாக்கும்படியான காரியங்கள் சில இடங்களில் நடைபெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன்.

பி.ப.
மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வனவாசி பக்கநாடு தீர்ந்த 1-30
பிரச்சினை. மீண்டும், மீண்டும் அதைப்பற்றிப் பேசி தகராறு குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்.

திரு. எம். சுரேந்திரன் : ஆகவே, மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு நேரம் பேசச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கும், விளக்கம் தந்த அமைச்சருக்கும், மிகப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, முடிக்கிறேன்.

பி.ப.
மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : இத்துடன் 1-31
அவை கலைந்து, மறுபடியும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் மாலை 4 மணிக்குப் பேரவை மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமையில் மீண்டும் கூடியது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையின்மீது நேரம் குறைவாக இருக்கும் காரணத்தினால் ஒருசில அம்சங்களைமட்டும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

பொதுவாக இந்தத் தேசத்திலே நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலும் இந்தத் தேசத்திற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், விவசாயத்தில் நாம் அனுஷ்டித்து வரும் பழங்கால முறைகள் ஆகும். மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் நம் நாட்டில்தான் அதிகம். இவ்வளவு அதிகமான பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தும், நம்முடைய தேவைக்குக்கூட உணவை உற்பத்தி செய்ய முடியாமல் உலகத்து நாடுகளை உணவிற்காக நம்பியிருப்பதும் நம்முடைய நாடுதான். இதற்கான காரணத்தை ஆராயும்போது

[திரு. செ. பாலசுப்பிரமணியன்] [1967 ஜூலை 14

இந்தத் தேசத்திலே யார் விவசாயிகளாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு முழுதாக நிலம் சொந்தம் ஆக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே நிலச்சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்தி அமைத்து, முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியிலே இருந்த ஓட்டை உடைசல்களையெல்லாம் அடைத்து, நிலத்தைச் சொந்தமாக்குவதற்கு வேண்டிய காரியங்களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தேசத்திலே விவசாய ஆராய்ச்சி செய்து, மிகப் பெரிய அளவிலே ஆராய்ச்சி செய்து புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடிக்கிறோம். கோவையிலே கரும்பு சம்பந்தமான விவசாய ஆராய்ச்சிகள் செய்து புதிய முறைகளை, புதிய விதைக் கரும்புகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏ.டி.டி. 27 போன்ற புதிய ரக விதைகளைக் யெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு ஒரு பக்கத்தில் புதிய கண்டு பிடிப்புகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கும் அதே சமயத்தில், விநியோக முறைகளை நிச்சயமாக, இன்னும் அபிவிருத்தி செய்துதான் ஆகவேண்டும். அவ்வாறு செய்வதன்மூலம்தான் புதிய கண்டுபிடிப்புகளை விவசாயிகள் அனுபவிக்கச் செய்ய முடியும். உதாரணமாக ஒன்றே ஒன்றைச் சொல்லுகிறேன், ஏ.டி.டி. 27-பின் மூலம் அதிகப்படியாக நெல் உற்பத்தி விளைச்சலைக் காணமுடியும். ஆனால் அதைக்குறிப்பிட்ட பருவத்திலே நாம் பயிரிட வேண்டும். வெய்யில் காலத்தில் பயிரிட வேண்டும் பனிக்காலத்தில் பயிரிட்டால் நோய் விழுந்து வீணாகிவிடும். கோவையிலும், லோயர் பவானியிலும் பனிக்காலத்திலே, டிசெம்பர் மாதத்திலே, பயிரிடக் கூடிய அளவுக்கு வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக அதிகப்படியாக நெல்லுக்கு நோய் விழுந்து விளைச்சல் குறைந்தது. அவ்வாறு விளைச்சல் குறைந்ததால் "புரொக்யூர்மெண்ட்"டும் குறைத்துக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே ஒரு பக்கம் பெரிய கண்டுபிடிப்புகளைச் செய்யும் அதே நேரத்தில். மற்றொரு பக்கத்தில் அவற்றை விநியோகிப்பது, பராமரிப்பது போன்ற வகைகளிலும் இன்னும் நல்ல, தீவிர கவனம் செலுத்துவதினால் முழுப்பலனையும் அடைய முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிளாக்குகளில் மிக மோசமான விதைகள் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, வீரிய ஒட்டுச்சோளம், ஹைபிரிட் சோளம், ஹைபிரிட் கம்பு கொடுக்கப்படுகிறது. உளுத்துப்போன நிலையில் கொடுக்கப்படுகிறது. "பெர்ட்டிலைஸர்ஸ்" கேட்டால் இதை வாங்கிக் கொண்டால்தான் அதைக் கொடுப்போம் என்று சொல்லும் நிலையைப் பார்க்கிறோம். எனவே விநியோகத்தில் இதையெல்லாம் கவனித்து, எந்தெந்தக் காலத்திலே, எதையெதைக் கொடுக்க வேண்டும், எந்தெந்த முறையிலே கொடுக்க வேண்டும் என்பதைச் சிந்தித்து நன்றாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு பிரச்சினையைக் கூறி முடித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். கால்நடை அபிவிருத்தி பற்றிப் போதிய கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக, கால்நடை அபிவிருத்தியை இரண்டாம் தரமாக ஒதுக்கி, விவசாய அபிவிருத்திக்குத்தான் முதலிடம் என்ற மனோபாவத்தைப் பார்க்கிறோம். நாம் நிச்சயமாக அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, கால்நடை அபிவிருத்திக்கு இன்னும் அதிக ஊக்கமும், தொகையும் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கால்நடை அபிவிருத்தி என்று சொல்லும்பொழுது தொழில் நுணுக்க நிபுணர்கள்கூடச் சில தவறுகள் செய்கிறார்கள். அதில் ஒரேயொரு தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிரசித்தி பெற்றது காங்கேய இனம். எங்கள் பகுதியில் மிக அதிகமாகப் பிரசித்திப் பெற்றது. "ஆர்ட்டிபிஷியல் இன்ஸெமினேஷன் சென்ட்டர்"களில் ஒரு பக்கம் பால் அபிவிருத்தி செய்கிறார்கள். "ஆர்ட்டிபிஷியல் இன்ஸெமினேஷன் சென்ட்டர்"களில் மற்ற இனங்களைக் கொண்டு இனக்கலவை செய்கிறார்கள். பெருந்துறை காங்கேயத்திற்குப் பிரசித்தி பெற்ற இடம். ஆனால் அந்த இடத்திலே இருக்கின்ற "ஆர்ட்டிபிஷியல்

1967 ஜூலை 14] [திரு. செ. பாலசுப்பிரமணியன்]

இன்ஸெமினேஷன் சென்ட்டரில்" தார்ப்பார்கார் கலவை செய்கிறார்கள். இதை அங்குள்ளவர்களே எதிர்க்கிறார்கள். குறிப்பாக விவசாயிகள் எதிர்க்கிறார்கள். எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவந்து போட்டோமோ அது நிறைவேறுவதில்லை என்று அறிகிறேன். காங்கேயம் என்பது பால் கொடுக்கக்கூடிய இனம் அல்ல என்பதை ஒப்புக்கொள்கிறேன். இதையே "டுயல்பர்ப்பஸ்"க்காக, அதாவது இரண்டு காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்கள். ஒன்று பால் கொடுப்பது, மற்றொன்று வேலைகளுக்குப் பயன்படுத்துவது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் நாம் இன்னும் ஒரு நூறாண்டுக் காலத்திற்காவது நிச்சயமாக மாடுகளைத்தான், எருதுகளைத்தான் நம்பிக்கொண்டிருக்க வேண்டும். காங்கேயம் வேலை செய்வதில் மிகவும் பிரசித்தமானது. காங்கேயம் பிரசித்தமாக உற்பத்தியாகும் இடத்திலேயே காங்கேயத்தை அழித்துவிட முயற்சி செய்தால் அது சரியாக இருக்காது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முறை காரணமாக எங்கள் பகுதியில் காங்கேயம் மாடுகள் ஆயிரம், ஆயிரத்து இருநூறு ரூபாய் விற்கக் கூடியது, இந்த இனக்கலவையால் 200 ரூபாய், 300 ரூபாய் குறைந்து போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதை இங்கே இந்தச் சட்டமன்றத்தில் கேள்விகள்மூலம் கேட்டிருக்கிறேன். மந்திரியவர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறேன். டைரக்டரை, ஆபீசரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சொல்லும் ஒரேயொரு காரணம் இதுவெல்லாம் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தது, அவர்கள் கொடுக்கும் மானியம் இதில் இருக்கிறது, என்று கூறுகிறார்கள். பெருந்துறையைப் பால் அபிவிருத்தித் திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

திரு. எ. அ. சுப்பராஜா : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலையில் உணவு இல்லை என்றால் உலகமே ஸ்தம்பித்துப் போய்விடும். எவ்வளவு தொழிற்சாலைகள் கட்டினாலும் கூட, எத்தனை, நவீன ஆலைகளைக் கட்டினாலும் கூட தொழிலாளர்களுக்கு உணவில்லை என்று சொன்னால், உடனே எல்லாம் நின்று போய்விடும். இது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். எனவே இன்றையச் சூழ்நிலையில் உணவு உற்பத்தியை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். "ரெமூனரேஷனை" மனத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது, கருத்திலே இருக்கக்கூடாது. இன்றைக்கு "எர்லைன்ஸ்" கார்ப்பொரேஷன் நடத்துகிறார்கள். டாட்டா நடத்துகிறார். மிக நல்ல முறையிலே நடத்தி வருகிறார்கள். அதேபோல் மாகாண அளவில் கார்ப்பொரேஷன் ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதன் பிரிவுகளைத் தாலுக்காக்களில் உள்ள ஆபீஸர்களிடம் கொடுத்து எல்லாவிதமான உபகரணங்களையும்," ஸாயில் டெஸ்டிங் மெஷின்", "டிராக்டர்ஸ்" முதலியவற்றை ஒரு தாலுக்காவிற்கு பத்தாவது கொடுக்க வேண்டும். "புல் டோஸர்ஸ்", "டிரில்லிங் மெஷின்"கள் வைத்திருக்கும் விவசாயிகள் நல்லவிதத்திலே விருத்தி செய்யும் அளவிலே எல்லாவித உதவிகளையும் கார்ப்பரேஷனில் செய்து, நேரடியாக அந்த விவசாயிகளுக்குச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். அரசாங்கத்திற்குக் கொஞ்சநஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும், அதனைப் பாராது உதவி செய்ய வேண்டும். எத்தனையோ தொழில்களுக்கு "சப்ஸிடி" கொடுக்கிறோம். கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கிறோம். கணக்குப்பிள்ளையிடமிருந்து அந்தக் கிணறு வெட்டுபவருக்கு வருவதற்குள் 500 ரூபாய் தீர்ந்துவிடுகிறது. முடிவில் பாதிக்கிணறுதான் வெட்டப்பட்டிருக்கும். அடுத்து நல்ல விதைகளை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அந்த விதைகளிலே பாதி வீணாகி நஷ்டமாகிறது. இதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இவ்வாறு நாம் போடும் திட்டங்களின் பலன்கள் அடுத்த இடத்திலே போய் எல்லாம் பரவலாகப் பிரிந்து சரியான முறையில் பலனளிக்கவில்லை. எனவே நல்ல முறையில், பலன்கள் அளிக்கக்கூடிய முறையில் திட்டங்களைப் போடவேண்டும் என்பதை உணரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

விவசாயக் கல்லூரிகளில் படித்துப் பட்டம்பெற்று வெளிவரும் மாணவர்கள் வேலைக்குச் செல்லுவதற்கு முன் இரண்டு வருஷக்காலம்

[திரு. எ. அ. சுப்பராஜா] [1967 ஜூலை 14

கிராமங்களுக்குச் சென்று, கிராம மக்களோடு பழகி, நிலங்களினுடைய மண் வளத்தை எல்லாம் நன்கு பரிசோதித்துப் பார்த்து, எந்த எந்த நிலத்தில் என்ன என்ன பயிர் செய்யலாம், என்ன என்ன உரம் போட்டால் விளைச்சல் அதிகரிக்கும் என்பதைப்பற்றியெல்லாம் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். சாதாரணமாக, இப்பொழுது என்ன நடக்கிறதென்று பார்த்தால், எந்த ரசாயன உரம் கிடைக்கிறதோ அது பாஸ்பேட்டாக இருந்தாலும், ஸல்பேட்டாக இருந்தாலும், எது கிடைக்கிறதோ அதை வாங்கி அப்படியே நிலத்தில் போட்டுவிடுவது என்ற நிலைதான் இருக்கிறது. மண்ணில் எந்தச் சத்து "டெஃபிஷியன்ட்"டாக இருக்கிறதோ, அதை ஈடு செய்ய எந்த உரம் போடலாம் என்று பார்ப்பதே கிடையாது. இப்படிப் பட்ட நிலைக்கு இப்பொழுது வந்துவிட்டது. எத்தனையோ கோடி ரூபாய் செலவாயிற்று என்று சொல்லுகிறோம். எத்தனையோ கோடி ரூபாய் ஸப்ஸிடி கொடுத்ததாகச் சொல்லுகிறோம். அமெரிக்க நாட்டவர்களும், ருஷ்ய நாட்டவர்களும், உணவு உற்பத்தி சம்பந்தமாக நாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கடன் தரத் தயாராக இருக்கிறோம் என்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மிகத் துணிவோடு காரியங்களைச் செய்கின்றது. ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை மிகவும் துணிவோடு இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. அதேபோல், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழியில் மிக தைரியமாக முன்வரவேண்டும். எவ்வளவு பணம் செலவழித்தாலும் சரி, அரசாங்கத்தின் கையைப்பிடிக்கும் என்ற சங்கை இருந்தாலும் அதை எல்லாம் நிவர்த்தி செய்தாக வேண்டும். தாலுக்காவாரியாக நிலங்களை எடுத்துக்கொண்டு, எந்தெந்த நிலங்கள் எப்பேர்ப்பட்ட நிலங்கள், நிலம் தரிசாக இருக்கிறதா, நஞ்சை தானா, செம்மண்ணா, கரிசல் மண்ணா என்றெல்லாம் மண் வளத்தைப் பரிசோதித்துப் பார்த்து, சர்வே செய்து, ஒவ்வொரு நிலத்தினுடைய ஜாதகத்தையும் கையில் வைத்திருக்கவேண்டும். தாலுக்கா லெவலில் கார்ப்பரேஷனில் எடுத்து வைத்துக்கொண்டு, திட்டம் போட்டு, ஒவ்வொரு வருஷமும் இன்ன இன்ன நிலங்களில் இந்த இந்த விதத்தில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான திட்டம் போடவேண்டும். விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுவரும் அத்தனை பேர்களும் கிராமங்களுக்குச் சென்று, விவசாயிகளுக்கு உதவியாக இருந்து, நிலத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எதிர் காலத்தில் விவசாயம் செய்வதற்கான "மானுவல் லேபரர்ஸ்" யாருமே வரமாட்டார்கள் என்ற நிலை வந்துவிடக்கூடும் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது இருக்கும் நிலையில், கிராம ஜனங்களெல்லாம் ஸிடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். எங்கே ஆலைகள் இருக்கின்றனவோ, எங்கே இன்டஸ்ட்ரீஸ் வளர்ந்திருக்கின்றனவோ, அங்கே கிராம ஜனங்கள் சென்று கொண்டிருப்பதை நாம் பொதுவாகக் கண்டு வருகிறோம். இதே நிலை நீடித்துக்கொண்டு போகுமானால், கிராமங்களில் விவசாயம் செய்ய ஆள் இல்லை என்ற நிலை ஏற்பட்டு, இயந்திர சாதனங்களைக் கொண்டுதான் விவசாயம் செய்தாகவேண்டும் என்ற அவசியம் எதிர் காலத்தில் வரத்தான் போகிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு நிலை எதிர் காலத்தில் வரவிருப்பதை இப்போதே கவனத்தில் கொண்டு, உடனடியாகவே அதற்குரிய வகையில் திட்டம் தீட்டவேண்டும். கையில் பண வசதி இல்லை என்று சொல்லக்கூடாது. உணவு இல்லை என்றால் எல்லாம் போய்விடும் என்ற அடிப்படையான கொள்கையைக் கருத்தில் கொண்டு, இப்போதிருந்தே, காலதாமதம் செய்யாமல், கொஞ்சங்கொஞ்சமாக, மிக விரைவில், தாலுக்கா லெவலில், ஒரு தனிக் கார்ப்பரேஷனை அமைத்து, ட்ராக்டர், புல்டோஸர் போன்றவற்றை அங்கே வைத்துக்கொண்டு, நிலத்தின் தரத்தையும் வகைப்படுத்தி வைத்துக்கொண்டு, தரிசாக இருக்கும் நிலத்தை வருஷாவருஷம் எவ்வளவு சீர்திருத்தலாம் என்பதற்கும் திட்டம்போட்டுச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

(திரு. பெ. மலைச்சாமி தலைமை)

1967 ஜூலை 14]

*DR. HABIBULLAH BAIG: Mr. Chairman, I rise to support the Demands moved by the Hon. Minister for Agriculture. We know very well that this country is an agricultural country having more than 75 per cent of the population living on agriculture. So it is our duty to see that there is agricultural development on a national basis. Apart from developments in other fields, agricultural development is the most basic and important need in our country. We have seen that the previous Government has failed in bringing about agricultural development to our satisfaction. At least this Government must see that the policy of augmentation of food is vigorously implemented. For that purpose water is very very important. Though irrigation schemes come under the head of Public Works Department, without proper irrigation, agriculture cannot be improved. We have got major, medium and minor irrigation schemes. The experience of the Government has been that major and medium irrigation schemes are costlier than minor irrigation schemes. Our State has not got many rivers and so we cannot depend much on surface water. We have to depend mostly on sub-soil water. So we have to tap sub-soil water be means of open wells, bore wells, tube wells and artesian wells. From the statistics provided by the Government we find that 42 per cent of the cultivable land is fed by tanks and 20 per cent is fed by sub-soil water. Thus about 62 per cent of the cultivable area is entirely dependent upon minor irrigation. Nearly 30 per cent of the cultivable area is dependent upon major and medium irrigation. At the same time major and medium irrigation schemes are costlier take a longer time and yield very little compared to the minor irrigation schemes. Minor irrigation is cheaper. Each well can irrigate five acres of land. Because we do not have any more surface water available, we have to concentrate more on minor irrigation so that our farmers can get more water for cultivation. Each drop of water is very precious. We must see that drainage water also is utilised for irrigation.

Certain States like the Andhra Pradesh have more rivers and certain States are devoid of rivers. So rivers and irrigation must be under the control of the Centre, or a Board comprising representatives of all the States and the Centre must be constituted and the control vested in it. Then each State can say what it wants to say in the Board.

(The time bell was rung.)

I am sorry. I must have some more time to speak. I have got so many points.

There is no use of wasting five crores of rupees to-day on the policy of giving rice at one rupee a measure at the cost of the exchequer. There should be revolutionary changes in agriculture. On account of the policy of augmenting food production in Russia, that country has become not only self-sufficient but is also exporting foodgrains to other countries. Russia augmented food prroduction

by co-operative farming, collective farming and Government farming. Our country, especially our State is going on in the same old way and we are not in a position to augment food production to the necessary extent and our people are suffering. If there is no water, there will be no food production, if there is no food there will be disease and if there is disease we will have to have more and more medical health officers. All these troubles are there. Agriculture is very important and it depends upon irrigation. Without adequate irrigation facilities, the Agriculture Minister cannot do anything even if we place more money at his disposal. Rivers and irrigation must be under a common control so that there may be an equitable distribution of the water in the whole country in order to enable the augmentation of food production.

Hon. Members have suggested many other things—supply of improved seeds, supply of fertilisers in time and in adequate quantities, grant of loans for purchase of manure, etc. Farmers are not getting loan in time. A small landless farmer may take a land on lease from a big farmer. If he wants a loan, he cannot get it unless he produces documents for the past ten years. All these things have to be tackled in a better manner so that the farmer may get not only money but also manure, fertilisers, etc. As I have already pointed out, 75 per cent of the people of our country are depending purely upon agriculture.

So, more than 50 per cent of the labourers are agricultural labourers. Our Hon. Minister for Labour at the time of making his policy statement on Labour has made references to safeguards for all labourers except the agricultural labourers and he has also given assurances to them. But he has not touched agricultural labour. Sir, our country is full of landless labourers and their plight is horrible but no assurance, not even a word of assurance, has been given by the Hon. Minister for Labour. I hope that at least the Hon. Minister for Agriculture will give such assurances. There are lakhs and lakhs of landless agricultural labourers. Their plight is horrible and how is he going to solve their problem. In this connection I want to point out that these agricultural labourers are mostly Harijans and they are economically, educationally and socially very backward and they are now very depressed. So something must be done to improve the lot of the agricultural labourers.

Now, coming to the food problem, only 50 to 60 lakhs of tonnes of food grains are produced in our State. We have to see that at least 70 lakhs of tonnes are produced. Otherwise, it is very difficult to become self-sufficient in food. For achieving self-sufficiency, I want to lay stress on minor irrigation works. So, the Hon. Minister for Agriculture must see that somehow or other the minor irrigation works are improved by supplying electric motors and pumpsets and also oil engines to the farmers so that they can cultivate their lands easily and profitably. If this is done, the food problem can be solved. Thank you, Mr. Chairman.

***திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற வேளாண்மை மானியத்தின் மீது எங்கள் கட்சி கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது நாட்டின் அடிப்படை தொழில் வேளாண்மை. நமது பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு அச்சாணியாக இருப்பது வேளாண்மை என்றால் அது மிகையாகாது. இந்த வேளாண்மைக்கு உறு துணையாக இருப்பது கால்நடை. இவை ஒன்றுக்கொன்று இணைந்து இருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். வேளாண்மை அபிவிருத்தியில் ஓரளவு முன்னேறியிருந்த போதிலும்கூட இன்னும் போதிய அளவு முன்னேற்றம் அடையவில்லை. நாம் இத்துறையில் போதுமான பணத்தைச் செலவழித்தபோதிலும், இன்னும் நல்ல முறையிலே முன்னேறவில்லையென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். வேளாண்மை அபிவிருத்தியில் நாம் அபிவிருத்தி அடையாததன் காரணம் பருவ மழை இல்லாமல் இருந்தது. மேலும் விவசாயிகளுடைய ஊக்கமும் அவர்களுடைய பொருளாதார நிலையும் அபிவிருத்திக்கு உகந்ததாக இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுவதும் நிறைவேற்றப்பட்டுவிட்டன, இனிமேல் நாம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்தவேண்டும். கிணறு மானியத் திட்டங்கள், மின்சார மோட்டார் இணைப்புத் திட்டங்கள் போன்றவற்றிற்கு நாம் விரைவிலே கவனம் எடுக்கவேண்டும். சிறுபாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இவை பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்படாமல் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்டிருக்கிற சிறு பாசனத் திட்டத்திற்காக அரசாங்கம் கொடுக்கின்ற மானியம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அது நல்ல முறையில் செப்பனிடப்படவில்லை. கிணறு வெட்டுதல், குளங்கள் பராமரித்தல்மூலமாக மேலும் அதிக அளவில் மானியம் அளித்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கிணறு வெட்டும் மானியமானது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கிணறு வெட்டுவதற்கு 2 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்து, அதில் 25 சத விகிதம் அதவாது 500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால் அறிக்கையில், கோவை மாவட்டம் தாளவாடி வட்டாரத்தில் ரூபாய் 3,000 கடனாகக் கொடுக்கப்பட்டு அதில் 50 சத விகிதம் ரூ. 1,500 மானியமாகவும் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிணறு வெட்டுவதற்காகக் குறைந்தது ரூபாய் 3,000 கொடுத்து அதில் 50 சத விகிதம் மானியமாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணறு வெட்டுவதற்கும், மின்சார மோட்டார் வைப்பதற்கும் விவசாயிகள் எந்தெந்தச் சமயத்தில் பஞ்சாயத்து யூனியன்களையோ, அரசாங்கத்தையோ அணுகுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் அவர்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்யவேண்டும். விவசாயிகளுக்குச் சில சமயங்களில்தான் பணம் கிடைக்கிறது. பல சமயங்களில் கிடைப்பதில்லை. எப்படிக்கொடுக்கப் படவேண்டும் என்பதிலே விதி முறைகள் சரியாக இல்லை. செல்வாக்குப் படைத்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும்தான் கடன் கிடைக்கிறது. எல்லா விவசாயிகளுக்கும் இந்த மானியம் கொடுக்க, தக்க முயற்சி செய்யவேண்டும். கிணறுகளை ஆழப்படுத்தவும், கிணறுகளைத் துளை போடவும்கூட இயந்திரங்கள் இல்லை. விவசாயப் பெருமக்கள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக இது உதவியாக இருக்கும். ஆகவே, இதை மனதில்கொண்டு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கிணறு ஆழப்படுத்தும் இயந்திரமும், துளை போடும் இயந்திரமும் அரசாங்கம் வாங்கிக்கொடுத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1967, ஜூலை 14

அடுத்தபடியாக தரிசு நிலங்களைப் பயன்படுத்துவதற்காக "புல்டோசர்" வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகளின் நலனை முன்னிட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு புல்டோசரும், டிராக்டரும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல பொறுக்கு விதைகள் இப்பொழுது வேளாண்மைத் துறையிலிருந்து கொடுக்கப்படவில்லை. அரசாங்கம் கொடுக்கும் பொறுக்கு விதைகளைவிட விவசாயிகள் வைத்திருக்கும் விதைகளே நல்ல விதமாக இருக்கிறது. அரசு இதைக் கவனித்து நல்லவிதமாக விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் ரசாயன உர வினியோகம் நல்ல முறையில் நடைபெறவில்லை. அமைச்சர் அவர்கள், நல்ல முறையில் நடக்க முயற்சிப் போம் என்று மாவட்ட விவசாயக் கருத்தரங்கிலே சொன்னார்கள். இதையும் நல்ல முறையில் சீராக வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

கால்நடைச் செல்வங்கள் வேளாண்மைக்கு இன்றியமையாததாக இருக்கின்றன. இன்று, அவற்றின் தரம் மிக மிகக் குறைந்திருக்கிறது. பல திட்டங்களை அமல் நடத்தினாலுங்கூட அவற்றின் தரம் முன்னுக்கு வரவில்லை. ஆகவே, கால்நடைப் பராமரிப்புக்கு ஒரு நல்ல திட்டத்தை அமல்படுத்தவேண்டும். (மணியடிக்கப்பட்டது). சில இடங்களில் மேய்ச்சல் தரிசு நிலங்களைச் சிலர் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். மேய்ச்சலுக்கு நிலம் கிடைக்காத வரையில் கால்நடைச் செல்வங்கள் பெருக வழி ஏற்படாது. ஆகவே, கூடுமான வரையில் மேய்ச்சலுக்கு நிலத்தை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாய மக்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், கால்நடைப் பாதுகாப்பு திட்டங்களை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரவேண்டும். மேலும் அந்தத் திட்டங்களை ஒரு சில இடங்களில் பரீட்சார்த்தமாகக் கொண்டுவந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

***திரு. டி. ஏ. ராஜவேலு :** அவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை முழுக்க முழுக்க வரவேற்று ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயம் முன்னணியில் நிற்கவும், விவசாயிகளுக்கு உழைப்பு சிக்கனம் ஏற்படவும், நவீன விவசாயக் கருவிகள் அதாவது, மருந்து தெளிக்கும் கருவி, பார் கலப்பை, பேபி டிராக்டர் முதலியவற்றை 25 சத விகித மானியத்துடன் கிடைக்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்தின் தலைமையிடத்தில் புல்டோசர், பவர் டிரில், டிராக்டர், பவர் ஸ்பிரேயர் ஆகிய இயந்திரங்களைக் கண்டிப்பாக வாங்கிவைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள ஏரி, குட்டைகள் இவற்றின் கரைகளைப் பராமரிப்பு செய்வதோடு நில்லாமல், எல்லா ஏரி குட்டைகளையும் தூர் எடுத்தால்தான் மழைக்காலங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் தேங்கி நிற்க உதவியாயிருக்கும். மேலும் கிணறு வெட்டக்கடன் வழங்கும் அதிகாரம் ஆணையாளருக்கு அதிக அதிகாரம் இருக்கவேண்டும். தற்போது 2,000 என்று இருப்பதை 5,000 ரூபாய் என்ற அளவில் உயர்த்த வேண்டும். கிராம சேவகர்களின் அதிகாரம் 1,000 ரூபாய் என்பதை 2,500 என்று உயர்த்தி நன்கு பரிசீலனை செய்து, ஆணையாளர் ஒப்புதலுடன் கடன் கொடுக்க வகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்பு மருந்துகள், எல்லாப் பயிர்களுக்கும், உணவுப் பயிர், பணப் பயிர் என்று பிரிக்காமல், எல்லா வகைப் பயிர்களுக்கும் 50 சத விகிதம் மானிய விலையில் மருந்து கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலிடால், என்டிரின், கந்தகம்போன்ற மருந்துகள்

1967 ஜூலை 14] [திரு. டி. ஏ. ராஜவேலு]

எப்பொழுதும் விவசாய டிப்போக்களில் கிடைக்கும்படி வழிவகை செய்ய வேண்டும். வேண்டாத, தேவையற்ற மருந்துகள், வைத்திருப்பதை விட்டுவிட்டு, மேற்சொன்ன மருந்துகள் எப்பொழுதும் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, உயர் ரக விதைகள்—அதாவது ஆடுதுறை—27, வீரிய சோளம்—சி. எஸ். எச். 1. சோளம், எச்.பி 1. கம்பு இவற்றை கிலோ 8½ ரூபாய், 10½ ரூபாய் என்று அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள். அதிக விலையாக இருப்பதால் விவசாய மக்கள் அந்த விதைகளை வாங்கத்தடுமாறுகிறார்கள். ஆதலால், இந்த விதைத் தானியங்கள் 50 சத விகித மானிய விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஏரிகளில் கருவேல மரம் வளர்ப்பதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும். ஏரித் தண்ணீர் கருவேல மரத்தின் துவர் அடித்துக் கெட்டு விடுகிறது. அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் பயிர் நாசம் அடைகிறது. ஆகவே, ஏரிகளில் கருவேல மரம் வளர்ப்பதைக் கண்டிப்பாகத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 4–30 பி.ப.

என்னுடைய தொகுதியான திருச்செங்கோட்டில் மோடமங்கலம் அக்கிரகாரம், மன்னிப்பாளையம் அக்கிரகாரம், சமயசாங்கிலி அக்கிரகாரம், கொமாரபாளையம் அக்கிரகாரம் என்பதாகப் பல அக்கிரகாரங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் உடனே முறைப்படி சர்வேசெய்து ஆங்காங்குள்ள விவசாயிகளுக்குக் கடன் பெற வசதிசெய்து தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருச்செங்கோடு தொகுதியில் இதுவரை கால்நடை அபிவிருத்தி நிலையம் ஒன்று இருந்தது. அதை எடுத்துவிட்டார்கள். நான் கைந்து காளைகள்தான் இருக்கின்றன. மீண்டும் அங்கே கால்நடை அபிவிருத்தி நிலையத்தை விருத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எங்கள் பகுதியில் பால் அபிவிருத்தியைவிடக் காளைக் கன்றுகள் தேவையாய் இருக்கின்றன. ஆகையால் இன அபிவிருத்தி செய்து காங்கேயம் காளைகளை அந்தப் பகுதிக்கு வாங்கிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்துகள் சரியான முறையில் Safety test and potency test முதலிய டெஸ்டுகள் செய்யாமல் விநியோகிக்கப் படுவதாகச் சொல்கிறார்கள். இதைப் பரிசீலனைசெய்து நல்ல முறையில் பரிசோதனை செய்யப்பட்ட மருந்துகளை எல்லா இடங்களுக்கும் விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஜி. நடராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் நான் பேசுவது இதுவே முதல் தடவையாக இருப்பதால் எனக்கு ஐந்து நிமிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் திட்டத்தின்கீழ் நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு வருகிறோம். வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தாலுக்கா, பேரணம்பட்டு கிராமத்தில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைத்தால் 70 ஆயிரம் ஏக்கரா நல்ல பாசன வசதியைப் பெறும் என்ற கருத்து முன்பேயே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுகுறித்து அந்த இலாக்கா அதிகாரிகள் எல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்தத் திட்டம் இதுவரை நடைமுறைக்கு வராமல் இருப்பதைக் கருதி, இந்த ஆண்டாவது நமது அரசு அந்த நீர்த் தேக்கத்தை அமைத்துக் கொடுத்தால் விவசாய மக்களுக்கு மிகவும் உபயோகமாக

இருக்கும். உணவு உற்பத்தியும் பெருகும். உணவுப் பற்ருக்குறை பிரச்சினையும் குறையும். ஆகவே இந்த நீர்த்தேக்கத் திட்டத்தை உடனடியாக அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடியாத்தம் தாலுக்காவைச் சேர்ந்த காட்பாடிக்கு அருகில் இரண்டு மூன்று மைல்களில் ராஜாத்தோப்புஎன்ற செஞ்சி கிராமத்திற்கு அருகில் 2 ஆயிரம் ஏக்கரா நிலம் நல்ல முறையில் சாகுபடி செய்யத் தகுதி உடையதாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மலைச் சாரல் தண்ணீர் இன்றைய தினம் வீணுகப் பாலாற்றில் போய்க் கலப்பதாக விவசாயிகள் கூறுகிருர்கள். அங்கும் ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்துக் கொடுத்தால் சாகுபடிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, காட்பாடிக்குப் பக்கத்தில் என் சேனூர் கிராமத்தில் 3 ஏக்கரா நஞ்சை நிலம் இருக்கிறது. இவை கசக்கால் வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறவேண்டியிருக்கிறது. பத்தாண்டுக்கு ஒரு முறை தான் வெள்ளாமை இருக்கிறது. மழை இல்லை என்ருல் பயிர் வீணுகி விடுகிறது. ஆகவே ஒரு கிணறு எடுத்து, கசக்கால்வாயில் மோட்டார் பம்பு போட்டு அங்கே விவசாயத்திற்கு வசதி செய்துதர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடியாத்தம் தாலுக்காவில் சுமார் 3 ஆயிரம் ஏக்கரா காட்டு நிலங்கள் இருக்கின்றன. அந்தக் காட்டு நிலங்களில் எந்தவிதமான பலனும் இப்போது இல்லை. அந்தக் காட்டு நிலங்களை அரசாங்கத்தின்மூலமாகவோ, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள்மூலமாகவோ அந்த அந்தப் பகுதியில் உள்ள நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுத்தால் விவசாயம் பெருகும். அவை நல்ல முறையில் செப்பனிடப்பட்டு, விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக ஆகும்.

அடுத்து, ஏரி, குள மீன் பிடிப்புக் குத்தகையைத்—தனிப்பட்டவர்களிடம் இருப்பதை ரத்து செய்து ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுத்தால் நல்ல வருவாய் வரும். அதன் மூலம் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டு சபை முன் உள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, வனத் துறை மானியக் கோரிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்களை முதலில் கூறவேண்டுமென்று கருதுகிறேன். வனத்துறையைப் பொறுத்து குறிப்பாக எங்கள் பகுதியில் இருக்கிற குறைபாடுகளைக் கூறுவது தலை சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், அதிகமாக வன வளம் இருக்கிறது. ஆனுல் அங்கு இப்போது ஒரு டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீஸ் கிடையாது. டி.எப்.ஓ. திருநெல்வேலியில் இருந்துகொண்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து 60 லட்சத்திற்கு மேலான தடிகள் வெட்டி வருவாய் வரக்கூடிய காடுகள் இருக்கின்றன. எப்போதும் அடர்த்தியாக இருக்கக்கூடிய காடுகள் கன்னியாகுமரி பகுதியில்தான் இருக்கின்றன. அங்கு இருக்கிற எல்லா மக்களும் பலவிதமான கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகி, வன இலாக்காவில் ஒரு காரியம் ஆகவேண்டுமென்ருல் திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே அந்த இலாகாவைப் பராமரிக்கிற அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியிலேயே அதை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். மற்ற போலீஸ் இலாக்காளாலும் எப்படி சப்டிவிஷன்கள் வைத்திருக்கிருர்களோ, அந்த அளவுக்காவது இங்கே உடனடியாக ஏற்படுத்தவேண்டும்.

இன்னொரு விஷயம். அந்தப் பகுதியில் ஐந்தாயிரம் ஏக்கரா ரப்பர் ப்ளான்டேஷன் இருக்கிறது. வேறு இடங்களிலும் அங்கே இருக்கின்றன. 5,000 ஏக்கராவுக்கு அரசாங்கத்தில் 50 ரேஞ்சர்கள் வைத்திருக்கிருர்கள். தனியார் 2,500 ஏக்கராவுக்கு ஒரு அதிகாரிதான் வைத்திருக்கிருர். அரசாங்கத் தரப்பில் அதிகமான ஆட்களைப் போட்டிருக்கிருர்கள். அதன் தலைமைக் காரியாலயம் நாகர்கோயிலில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு ஐந்தாறு ஜீப்புகள் சொந்தமாக இருக்கின்றன. நாகர்கோயிலில் இருந்து சிரிப்பாரை என்ற இடத்திற்கு அடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் ரப்பர் தோட்டம் இருக்கிற இடத்திற்கே இதை மாற்றி அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ வேண்டுமென்று குறை சொல்வதற்கோ, பழித்துச் சொல்வதற்கோ சொல்லவில்லை. இதனுல் அரசாங்கத்திற்கு மிகுந்த லாபம் ஏற்படும், சிக்கனமும் ஏற்படும் என்பதால் இதை அரசாங்கத்தின் ஆழ்ந்த கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற காடுகளில் உள்ள நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன். விளவங்கோடு தாலுகாவில் காணிபற்று நிலங்கள் சுமார் 4,000, 5,000 ஏக்கர்கள் இருக்கின்றன. திருவிதாங்கூர் அரசாங்கத்தில் அவை இருந்தபோது, அங்கே உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் மக்களை அங்கே குடியேற்றுவதற்கும், அவர்கள் அங்கே விவசாயம் செய்வதற்கும் அனுமதித்தார்கள். ஆகவே அதன்பேரில் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே குடியேறினுர்கள். சிலர் ரப்பர் தோட்டங்களும், தென்னை, பாக்கு மரத் தோட்டங்களும் வைத்திருக்கிருர்கள். இப்போது அரசாங்கம் அங்கே ரப்பர் ப்ளான்டேஷனை விஸ்தரிப்பதற்காகத் திட்டமிட்டு அங்கேயிருக்கின்ற குடியிருப்பு ஜனங்களை அப்புறப்படுத்துவதற்காகப் பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். ஆயிரக்கணக்கான பிரதேசங்களில் மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதால் அவர்கள் துன்பத்திற்கும் துக்கத்திற்கும் ஆளாகியிருக்கிருர்கள். பெரும்பாலும் ஏழைகளாக எளியவர்களாக இருக்கக்கூடிய கையேறுவோர்களை அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தினுல் அவர்கள் பெரிய சங்கடத்திற்குய ஆளாகக் கூடும். இதிலே அரசியல் தலையிட்டு அங்கே கிருஷிகர் சங்கம் என்று சொல்லக்கூடிய சங்கம், இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பெயரால் பல வகைகளில், கிஷான் மூவ்மெண்ட் போன்ற உருவங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே கிளர்ச்சிகள் ஏற்பட்டால் சங்கடங்கள் ஏற்படும். ஆகவே உடனடியாக அரசாங்கம் அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் ஏழைகளுக்கு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வன இலாகா விஷயமாக இன்னும் ஒரு விஷயத்தை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பள்ளக்குளம் என்ற இடத்தில் ரிசர்வ் பாரஸ்ட் இருக்கிறது. அதில் அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் வழக்கு இருக்கிறது. 90 ஏக்கரா அல்லது 900 ஏக்கரா என்பதிலே தகராறு ஏற்பட்டு அது ஹைகோர்டிலே விவாதத்திலே இருக்கிறது. அதிலேயிருந்து தேக்குப் போன்ற மரங்களை வெட்டுவதற்கு இலாகாவிலிருந்து முன்பு கான்ட்ராக்ட் கொடுத்தார்கள். ஆனுல் நிலத்தின் உரிமை கொண்டாடுகிற நபர் கோர்டிலே அதற்காக ஸ்டே வாங்கிவிட்டார். சட்டப்பூர்வமாகத் தேக்கு போன்ற மரங்களை வெட்டுவதற்கு அன்று இருந்த சட்டப்படியானுலும்சரி, இன்றிருக்கின்ற சட்டப்படியானுலும்சரி உரிமை உண்டு. அந்த கான்ட்ராக்டர் ஒரு ஆயிரம் கன அடிகள் மரத்தை வெட்டிச் சேகரித்து வைத்திருக்கிருர்கள். ஆனுல் அதிலே ஒரு பகுதி காணுமற் போய்விட்டது. அதை உடைமையாளர்களோ அல்லது வேறு எவரோ எடுத்து மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே பெரிய நஷ்டம் ஏற்படக்கூடிய அளவிலே இருக்கிறது. அதைத் தடுக்கக்

கூடிய வகையிலே உடனடியாக ஏலம் போட்டு வேண்டுமானால் அந்தத் தொகையைக் கோர்ட்டிலே கட்டி வைத்து தர்க்கம் தீர்ந்த பிறகு, அது யாருக்குச் சொந்தம் என்று ஏற்படுகிறதோ அவர்கள் வைத்துக்கொள்ளலாம். தேக்கு மரங்களை எடுப்பதற்குத் தனியார்களுக்கு உரிமை கிடையாது. அதிலே இருக்கிற தேக்கு மரங்களை உடனே வெட்டி மாற்றினால் தான் லாபம் இருக்கும். ஆகவே இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தனியாருக்கு குடிவிலை அவகாசம் மட்டும்தான் உண்டு. வேறு எந்த உரிமையும் கிடையாது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீன்வளத் துறையைப்பற்றி இரண்டு விஷயங்கள் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே ஜூன் மாதத்திலே கடல் கொந்தளிப்பு, ஸீ எரோஷன் ஏற்பட்டு பல கிராமங்கள் அதற்கு இரையாக்கப்பட்டு, விளவங்கோடு, மிட்டாரம் போன்ற பகுதிகளில் மீனவர்கள் அவர்களுடைய வீடுகளையெல்லாம் இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடங்களில் சென்று குடியிருப்பதற்கு வசதியில்லாமல் அவல நிலையில் இருந்து கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் குடியிருப்புத் திட்டத்திற்காக அரசாங்கம் உடனடியாகக் கவனித்துச் செய்தால்தான் அவர்கள் வாழ முடியும். அவர்கள் ஏழைகள், பரம ஏழைகள், ஏதோ 30 ரூபாய் என்று கலெக்டர் டிஸ்கிரஷனரி பண்டிலிருந்து மானியம் கொடுத்து இருக்கிறார்கள். அது இரண்டு மூங்கில்களை வாங்குவதற்குக்கூடப் போதாது. ஆகவே நல்ல முறையிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளச்சலையும், லீபுரத்தையும் மீன்பிடி துறைமுகங்களாக ஆக்குவது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துகொண்டிருக்கின்றது. கொளச்சலில் விசைப் படகுகள் செயலாற்றிக்கொண்டு வருகின்றன. அதே மாதிரி லீபுரத்திலும் விசைப்படகுகள் இருக்கின்றன. மீனவர்களுக்கு உபகாரமாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே கொளச்சலையும் லீபுரத்தையும் ஃபிஷ்ஷிங் போர்ட் ஆக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கொளச்சலில் அப்படிச் செய்வதற்காக இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து இதற்கு வேண்டுமென்றால் உடனடியாக உதவி பெற்றுக்கொண்டு இதை பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. ஆர். கோவிந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கைகளை முழு மனதோடு ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்காக எனக்கு வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் மானியக் கோரிக்கைகளை இந்த மன்றத்தின் முன்னாலே வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசை எடுத்த எடுப்பிலேயே நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம், திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட மறு தினத்திலிருந்து வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ் நாட்டில் ஏழை விவசாய மக்களுக்கு நிலங்களை வழங்குவதற்கும், மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்ற முறையில் அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நல்ல எண்ணத்தை எவருமே பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு சிறந்த எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். மாவட்டங்கள் தோறும் வட்டங்கள்தோறும் அமைச்சரவர்கள் வேளாண்மை மாநாடுகளை ஏற்படுத்தி விவசாயிகளை நேரடியாகக் கலந்தாலோசித்து அவர்களுடைய கருத்துக்களை ஏற்று நல்ல முறையிலே செயல்படுகின்ற வழியினை வகுத்துக்கொண்டிருக்கிறது, அதை நாம் பாராட்ட வேண்டும்.

சென்ற காலத்தில் ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் அரசாங்கம் வானொலி மூலமாக விவசாயிகளுக்கு திட்டங்களையும் நன்மைகளையும் எடுத்துச் சொல்லி வந்தது. அப்படிச் சொல்லப்பட்ட நேரத்தில் எல்லோருக்கும் ஒரு செயற்கை உணர்ச்சிதான் தோன்றியது, கூடிய விரைவிலே அது மறைந்துவிட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே வானொலி மூலம் பல நல்ல திட்டங்களை மக்களுக்கு இயற்கையாக எடுத்துக் கூறவேண்டுமென்ற முறையிலே எடுத்துக் கூறிவருகின்ற நிலைமையை தமிழகத்திலே உள்ள அத்தனை விவசாயக் குடிமக்களும் நல்ல முறையிலே பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

புறம்போக்கு நிலங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான பகுதிகள், புறம்போக்கு நிலங்கள் அவையும் காட்டு இலாகா நிலங்களும் விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கப்படாத நிலங்களாக இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் சங்ககிரி, மேட்டூர், ஓமலூர், கூணண்டியூர், குளத்தூர், டேனிஷ்காடு, ஏர்க்காடு போன்ற இடங்களிலே நிலங்கள் இருந்தும் அவற்றை 'சென்ற அரசாங்கம்' இதுவரை இருந்து சென்று மறைந்த அரசாங்கம், கவனிக்காத நிலை இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், ஏழைகளின் அரசு, ஏழை விவசாயக் குடிகளின் மக்கள் அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த நேரத்திலே 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்கு வழங்கி அதன் மூலம் பல நன்மைகளை நாட்டுக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் ஏற்படுகிற இரண்டு நன்மைகள் என்னவென்றால் ஏழை விவசாயக் குடிமக்கள் நலத்தைப் பெறுவார்கள், அதே சமயத்திலே உற்பத்தியும் பெருகும். ஆகவே உடனடியாகப் புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்காக வழங்க வேண்டும். என்னிடம் 1,000 மனுக்கள் வந்திருக்கின்றன; நான் சட்டமன்றத் தலைவர் மூலமாக இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கின்றேன.

கிணற்றுப் பாசனம் சேலம் மாவட்டத்தில் பெரும்பான்மையான பகுதிகளில் இருந்து வருகிறது. கிணற்றுப் பாசனம் என்று சொன்னால் பாதி நாட்கள் அவற்றில் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. அதற்குச் சிறந்த பரிகாரம் ஏரிகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்தி ஆறுகளில் இருந்து தண்ணீரைக் கொண்டு சென்று ஏரிகளை நிரப்பி கிணறுகளுக்குக் கொண்டு போய்ப் பாசன வசதியைப் பெருக்கித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார இலாகா இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மந்தமான நிலையில் பணியாற்றி வருகிறதே தவிர, சிறந்த ஊக்கத்தோடு பணியாற்றி வருவதாகத் தெரியவில்லை. எங்கள் பகுதியிலுள்ள கிணறுகளுக்குப் பம்ப் செட் வைக்க சாங்ஷன் ஆகியும் எலக்ட்ரிசிடி சப்ளை இரண்டு ஆண்டு காலமாகியும் கொடுக்கப்படவில்லை. இனம் சர்வே நிலங்களை, புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து ஏழை மக்களுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன்துறை அமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் மீனவர்களுடைய சமுதாயமும் அவர்கள் நம்பி இருக்கும் மீன் தொழிலும் எந்த விதமான முன்னேற்றத்தையாவது அடைந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லையென்று கூறமுடியும். அந்த அளவுக்கு மீன் துறையைப் பொறுத்தமட்டில் பல குறைகள் இருந்து வந்தாலும் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் அவர்களுடைய குறைகளைத் தீர்க்கும் வகையில் செயலாற்றி வருகிறார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

[திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணுண்டோ] [1967 ஜூலை 14

இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத் துறையில் உள்ள குறைகளைத் தெரிந்து அகற்றுவதற்காக ஆங்காங்கு மாவட்டந்தோறும் விவசாயக் கருத்தரங்கை நடத்தி வருகிருர்கள். அதே போன்று மீன் துறையிலுள்ள குறைகளை அறிந்துகொள்ள மாவட்டந்தோறும் மீனவர் கருத்தரங்கைக் கூட்டி மீனவர்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவித்தால் அவற்றை அகற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் துறையைப் பொறுத்தமட்டில் மீனவர்களுக்கு விசைப்படகுகளைக் கடந்த அரசாங்கம் வழங்கி வந்தது என்ருலும் கூட உள்ளபடியே அந்தப் படகுகளால் மீனவர்களுக்குப் பலன் கிடைத்ததா என்ருல் நிச்சயமாக இல்லை. செல்வந்தர்கள் தங்களுடைய கையிலுள்ள செல்வத்தை வைத்துக் கொண்டு மீனவர்களை ஏமாற்றி அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்கள் பெயராலே தங்களுக்குப் படகுகளின் மூலம் வருவாயைத் தேடிக் கொண்டார்கள். மீனவர்கள் அந்தப் படகுகளைப் பெற்றுப் பயன் அடையும் நிலை இல்லை.

மீனவர்களுக்கு இரண்டு வகையான படகுகளைக் கொடுக்கிருர்கள். "யான்" என்ற படகைக் கொடுத்தார்கள். 30 அடி நீளம் உள்ள படகு அது. அதிலே 30 எச்.பி. இயந்திரத்தைப் பொருத்தியிருந்தார்கள். ஒரு படகை 13,000 ரூபாய்க்கு வழங்கி வந்தார்கள். அதே நேரத்தில் ரஸ்டன் என்ற படகைக்கொடுத்தர்கள். 30 அடி நீளமுள்ளது. 24 எச்.பி. இயந்திரம் பொருத்தப்பட்டது. விலை 18,000 ரூபாய். அதிலே 24 எச்.பி. இயந்திரத்தை மட்டுமே பொருத்தியிருப்பதால் இழுக்கும் சக்தி இல்லாது பெரும்பாலும் அப்பேர்ப்பட்ட படகுகள் மீன்பிடி தொழிலுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. இன்றையதினம் அந்தப் படகுகளுக்குக் கட்ட வேண்டிய பணத்தை ஏழை மீனவர்கள் கட்ட முடியாத காரணத்தால் அந்தப் படகுகள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. பின்னர் ரஸ்டன் என்ற அந்தப் படகுக்கு 30 அடி நீளமுள்ள படகுக்கு 37 எச்.பி. இயந்திரத்தைப் பொருத்திக் கொடுத்தார்கள். அது பயனுள்ளதாக இருக்கிறது. மீனவர்களுக்கு யான் படகு 30 எச்.பி. இயந்திரம் பொருத்தியது, ரஸ்டன் படகு 37 எச்.பி. இயந்திரம் பொருத்தியது மீனவர்களுக்குக் கொடுத்தால் மீனவர்கள் பயன் பெறுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மீன் துறைக்கு மிகவும் அவசியமானது நைலான் வலைகள். இதற்கு முன்பு மீனவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட நைலான் நூல்கள் ஒழுங்காக அவர்கள் கைக்குப் போய்ச் சேர்ந்ததா என்ருல் நிச்சயமாக இல்லை. கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்ற பெயரில் அங்குள்ள செல்வந்தர்கள் போய்ச் சேர்ந்து அவற்றை வாங்கிக் கொள்ள அவர்களிடமிருந்து ஏழை மீனவர்கள் அதிகமாக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிருர்கள் என்பதை அறியும்போது அவர்களைப் பாராட்டுவது என்னுடைய கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலிலே மீன் பிடிக்கும் தொழிலுக்குப் பல இடர்ப்பாடுகள், குறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னுல் கடற்கரைப் பகுதியில் தண்ணீர் மட்டத்திற்குப் பாறைகள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக திருநெல்வேலியில் உள்ள பெரிய தாழை, புன்னைக்காயல் பகுதிகளில் செல்லும் வழியில் பாறைகள் இருக்கும் காரணத்தால் மீனவர்கள் ஐந்து மைல், பத்து மைல் சுற்றிச் செல்லவேண்டிய அவல நிலைமை இருக்கிறது. அந்தப் பாறைகளை அகற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும். இந்தப் பாறைகள் கரையில் இருந்து 3 மைல் தூரம் வரை இருப்பதால் மீனவர்கள் மூன்று மைலுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்க வேண்டியிருக்கிறது. அந்த இடத்திற்குத்தான் இயந்திரப் படகுகள் வைத்திருப்பவர்களும் மீன் பிடிக்க வருகின்ற காரணத்தால்

1967 ஜூலை 14] [திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணுண்டோ]

அந்த இயந்திரப்படகுகள் இந்த மீனவர்களுடைய வலைகளை அறுத்து சேதம் உண்டாகிற நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பாறைகளை அகற்றிக் கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், இயந்திரப் படகுகள் பத்து மைலுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்க வேண்டுமென்ற உத்தரவையும் பிறப்பிக்க வேண்டும்.

கடலுக்குச் செல்லுகின்ற மீனவர்கள் திரும்ப வருவார்களா என்ற நிலைமை இயற்கைக் கோளாறுகளின் காரணமாக ஏற்படுகிறது, தக்க முறையில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க இன்ஷூரன்ஸ் திட்டத்தை இந்த அரசாங்கம் கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னுலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் கடல் அரிப்பினுல் பாதிக்கப்படுகின்ற மீனவர்களுக்குப் கொடுக்கப்படுகிற தொகை குறைவாக இருக்கிறது, கணிசமான தொகையாகக் கொடுக்கவேண்டுமென்று கூறினர்கள். சில கிராமங்களில் கடற்கரைக்கும் வீடுகளுக்கும் 2 அடி தூரந்தான் இருக்கும். சாத்தான்குளம் பகுதியில் மணப்பாடு, உவரி போன்ற பகுதிகளில் வீடுகளும், கடற்கரையும் நெருங்கிய தூரத்தில் இருக்கின்றன. கடல் கொந்தளிப்பு ஏற்படுகின்ற போது கடல் தண்ணீர் வீட்டுக்குள் வருகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அந்த நிலைமையை நீக்குவதற்கு தடுப்புச் சுவர்களை இந்த அரசாங்கம் கட்டித்தர வேண்டும். மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கு வசதியாக கடற்கரைப் பகுதிக்கும், கிராமங்களுக்கும், சந்தைப் பகுதிக்கும் இணைப்பு ரோடுகள் போட்டுக் கொடுக்க வேண்டும். நகர மன்றங்கள் நடத்தும் சந்தைகளில் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாத்திரம் மீன் விற்கும் உரிமையை நகர மன்றங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உணவு உற்பத்திக்கு வேளாண்மைத் துறையை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்ருல் கிராமங்களில் உள்ள மைனர் இரிகேஷன் ஏரிகளை நல்ல முறையில் வருஷா வருஷம் மராமத்து செய்து தண்ணீர் தேக்க உதவி செய்ய வேண்டும். பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்களுக்குப் பண உதவி கொடுத்து உதவி ஓவர்சியர்களைக் கொண்டு தண்ணீர்த் தேக்கத்தை சீர்திருத்துவதை மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்று இருப்பதை மாற்றி, வருஷத்திற்கு ஒரு முறை சீர்திருத்த வேண்டுமென்ற யோசனையைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவு உற்பத்திக்கு ஆதாரமாக உள்ள வேளாண்மை அதிகாரி பணியாற்ற வேண்டியது—ஜில்லா அதிகாரிகளாக இருந்தாலும் ஆங்காங்குள்ள ஒன்றிப்பு மன்றங்களில் பணியாற்றுகின்ற கிராமசேவக்குகளிடம் கிராமத் தலைவர்களை வைத்துக் கொண்டு என்னென்ன விஸ்தரிக்க வேண்டும், விவசாயத் துறையில் உள்ள குறைகள் என்ன என்பதை பற்றியெல்லாம் எடுத்துக்கூறி அவற்றைக் களைய ஏற்பாடு செய்யவேண்டும். பூச்சி மருந்துகள், பொறுக்கு விதைகளை எல்லாம் அவர்கள் வாங்கி விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான திட்டங்களைச் செய்து கொடுத்தால் நல்ல முறையில் பயன்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு சாயில் கன்சர்வேஷன் ஆபீசர் அவர்களையும் கலந்து மாலை
கொண்டு நிலத்துக்குத் தக்கவாறு விதை விதைக்க ஆவன செய்வது 5-00
நல்லது. அதற்குள்ள உரங்கள் முதலியன கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக கொடுப்பதானுலும் ஒன்றிப்பு மன்றங்கள் வழங்கும் தாளைக் கொண்டு உரம் சப்ளை செய்வது நல்ல முறையில் செயலாற்றும். அர

சாங்கம் மூலமாக ட்ராக்டர் கொடுத்து உதவுவது மிகவும் மகிழ்ச்சி தரக் கூடியதாகும். ஆனால், அதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் ரிப்பேர் செய்யவேண்டுமானால் திருச்சிக்கும் மதராஸுக்கும் வரவேண்டியிருக்கிறது. ஆகையால் எங்கள் தொகுதி உளுந்தூர்பேட்டையில் அங்கு தொழிற் பேட்டை கல்லூரி ஒன்றிருக்கிறது, அதில் ட்ராக்டர் தொழில் கற்பிக்கவும் அதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் செய்ய திட்டமிடுவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோழிப் பண்ணை நகரங்களில் ஏற்படுத்தினால் நல்ல லாபம் வரும். தொத்து நோய் பரவும் இந்தச் சமயத்தில் ஆடு மாடுகளுக்கு வேண்டிய மருந்துகளை ஆங்காங்கு உள்ள மருத்துவ நிலையங்களுக்குக் கொடுக்கவேண்டும். காடு கள் வளர்ப்பதற்கு வேண்டிய இடம் தற்போது நெய்வேலிக்காக எடுத்த 900 எக்கர் நிலத்தை அவர்கள் குடிவராத காரணத்தினால் அதையும் காடு வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போது மழை பெய்வதற்கும் வசதியாக இருக்குமென்று கூறிக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சி. திம்மராய கவுண்டர். மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காக பஞ்சாயத்து யூனியன்களிலே ரூ. 2,000 கடன் கொடுக்கப்படுகிறது. என் னுடைய தொகுதியாகிய நாட்டறம்பள்ளி பக்கமுள்ள பிரதேசங்களில் கிணறு தோண்ட வேண்டுமென்றால் 15 அடி வந்தவுடன் பாறை வந்து விடுகிறது. ஆகவே கிணறு வெட்ட முடியாமல் பாதியில் நின்று அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்களே தவிர, அவை பூர்த்தி யாகாமல் நின்று விடுகிறது. ஆகவே கிணறுகள் வெட்டுவதற்கு குறைந் தது 5,000 ரூபாயாவது கடன் கொடுத்தால்தான் விவசாயிகளுக்கு அனுகூல மாக இருக்கும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகாவில் பெரிய ஏரிகள் கிடையாது. அங்கு எந்தவித நீர்த்தேக்கமும் கூட இன்று வரை கட்டவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தற் போது சிறிய பாசனத்திட்டத்தின் கீழ் நாட்டறம்பள்ளி தொகுதியில் ஏலேக்கல்நத்தம் என்னுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட 11 லட்சம் ரூபாய்க்கு ஒரு எஸ்டிமேட் தயார் செய்து இந்த அரசுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதேபோல் மண்டல நாயனகுண்டா, அம்பலூர், மோட்டூர் பக்கம் பாலாற்றில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட ஒரு திட்டம் தயார் செய்திருப்ப தாகத் தெரிகிறது. இந்த இடத்தில் நீர்த்தேக்கம் கட்டினால் வட ஆர்க்காடு ஜில்லாவில் லட்சக்கணக்கான ஏக்கருக்கு தண்ணீர் பாய ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதைக் கவனித்து இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் உரக் கடன்கள் கொடுக் கிறார்கள். ஆனால் உரத்தை கூட்டுறவு சொசைட்டியில் போய் எடுப்பதி னால் அநேக சிரமங்கள் ஏற்படுகின்றன. அதனால் கடன் கொடுப்பதோடு பஞ்சாயத்து யூனியனிலேயே உரமாகக் கொடுத்து விட்டால் விவசாயிகளுக்கு ரொம்பவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பஞ்சாயத்து யூனியன்களில் ஆடுகள் வளர்ப்பதற்காக கடன் வழங்கப்படுகிறது. அதுபோல் உரம் தயார் செய்ய மாடுகள் வாங்கிக் கொள்ள விவசாயிகளுக்கு கடன் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கடன் 3,000, 5,000 ரூபாய் இருந்தால்தான் மாடுகளை அதிகமாக வாங்கி மேய்த்து உரம் தயார் செய்ய அனுகூலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எருக்குழிகளுக்கு மானியம் தருவதை நிறுத்திவிட்டு வட்டி இல்லாமல் விவசாயிகளுக்கு மூன்று வருடம், ஐந்து வருடம் என்று கொடுத்தால் விவசாயிகள் எரு தயார் செய்ய மிகவும் ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நெல் விலையை கொஞ்ச

மாவது உயர்த்தாவிட்டால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுவார்கள். அதனால் இந்த அரசு ஏதோ கொஞ்சமாவது நெல்லுக்கு விலையைக் கூட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

நாட்டறம்பள்ளியில் ஒரு ரெஜிஸ்டர் ஆபீஸ் கட்டுவதாக பழைய அரசாங்கம் ஏற்பாடு செய்து அது அப்படியே நின்று விட்டிருக் கிறது. அங்கே உள்ள பொதுமக்கள் வசதிக்காக நாட்டறம்பள்ளியில் ஒரு ரெஜிட்டஸ்ர் ஆபீஸ் கட்ட ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சட்ட மன்றத்தில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. என். பரமசிவ கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச எனக்கு அனுமதி அளித்ததற்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று விவசாயத்துறையில் உள்ள பல பிரச்சினைகள் பற்றியும், குறைபாடுகள் பற்றியும் பேசினார்கள். காலம் குறுகியதாக இருப்பதால் நான் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம் மாநில உணவு, விவசாயத் துறை அமைச்சர்கள் டெல்லியில் நடந்த உணவு அமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திற்கு சென்றிருந்தபோது அங்கு தீர்மானிக்கப்பட்ட விஷயம் முக்கியமாக சிறிய நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது. அடுத்தபடியாக, நெல், விதை, உரம் போன்றவற்றிற்கு முக்கி யத்துவம் கொடுக்கவேண்டும் என்றும் பேசியிருக்கிறார்கள். அந்த முறையில் இன்று சிறிய நீர்ப்பாசனத்திற்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து நம் அறிக்கை வெளி வந்திருப்பதை வரவேற்கிறேன். எங்கள் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிணறுகள் தோண்டுவது என்றால் 100 அடி ஆழம் செல்லவேண்டியிருக்கிறது. இன்னும் பழைய கால முறையிலேயே தோண்டி வருவதால் ஒரு கிணறு தோண்டுவதற்கு நாலைந்து மாதங்கள் ஆகின்றன. இயந்திர வசதி பெருகியிருக்கும் இந்தக் காலத்தில் ஜர்மனியில் ஒரு இயந்திரம் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஏழு நாட்களுக்குள்ளாக மிகப் பெரிய கிணறைக்கூட தோண்டி விட முடியும். இதை பஞ்சாப் மாநிலத்தில் பரீட்சார்த்தமாக செய்து காட்டியிருக்கிறார்களென்று சொல்கிறார்கள். அந்த முறையில் நம் மாநிலத்திலும் அதைக் கொண்டு வந்து விவசாய மக்க ளுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுத்து ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, விதை உற்பத்தி, விதையைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு அரசாங்கம் வீரிய விதையை நம் நாட்டில் 70,000 ஏக்கரில் உற்பத்தி செய்ய திட்டமிட்டு செயல்பட்டார்கள். ஏதோ காரணத்தி னால் இந்த ஆண்டு வீரிய விதை உற்பத்திக்கு அவ்வளவாக ஆக்கம் தருவதாகத் தெரியவில்லை. மஹாராஷ்ட்ரம், மைசூர், பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் விதை உற்பத்தி செய்ய, மஹாராஷ்ட்ராவில் 20,000 ஏக்கரில் விதை உற்பத்தி செய்யப் போகிறார்கள். மைசூரில், பஞ்சாபில், ஆந்திராவில் பல்லாயிரக்கணக் கான ஏக்கர்களில் விதை உற்பத்தி செய்து அவர்களுடைய விவசாய பூமியில் பெரும் பகுதி வீரிய தானிய விதை உற்பத்திக்குக் கொண்டு வரப் போகிறார்கள். ஆனால் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அந்தமாதிரி ஒரு முயற்சி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நெல் லுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் பாக்கியுள்ள வேறு சிறிய தானியங் களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

இன்றைய தினம் நெல் உற்பத்தி செய்யக்கூடிய பூமியைப் போல் மூன்று மடங்கு தானிய உற்பத்தி செய்யக்கூடிய பூமியிருக்கிறது. நெல் விளைச்சல் பாசனத்தில் இருக்கிற அதே அளவிற்கு மற்ற தானிய

[திரு. பி. என். பரமசிவ கவுண்டர்] [1967 ஜூலை 14

உற்பத்தியும் இருக்கிறது. அந்த முறையில் வீரிய வித்துக்களை நாம் உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு நல்லதொரு முயற்சி எடுத்துக் கொண்டு அதை தேசீய விதை கார்ப்பரேஷனுக்கு விடாமல் நாமே எடுத்துக்கொண்டு நல்லமுறையில் விதை உற்பத்தியை ஊக்குவித்து நல்ல தொரு பலன் ஏற்படச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. மு. வேதாசலம்** : தலைவர் அவர்களே, பேரவை முன்னுள்ள மானியங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நம்முடைய தமிழகத்திற்குப் பெரிய கடல் இருக்கிறது. அந்தக் கடலில் ஏராளமான மீன்கள் இருக்கின்றன. முத்துக்கள் இருக் கின்றன. சங்குகள் இருக்கின்றன. ஆனால் அவைகளை எடுப்பதற்கு மீனவர்களுக்குத் தகுந்த உதவிகள் செய்யப்படவில்லை. நம்முடைய மீன் இலாகா அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினாலும், மீன் களைப் பிடிக்க வசதி செய்யாத காரணத்தினாலும், மீன்கள் பிடிக்கப் படாமல் தேங்கியிருக்கின்றன. முத்துக்கள்—விலையுயர்ந்த முத்துக்கள்—தமிழகத்தில் கிடைக்கின்றன; அவைகளெல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. சங்குகள் ஏராளமாக இருக்கின்றன. பல கோடி ரூபாய் வருமானம் வரும் அளவுக்கு இருக்கின்றன. அரசாங்கம் முயற்சி எடுத்தால் அவசியம் நிறைய வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது அல்லாமல், மீனவர்கள் கடலோரத்தில் வாழுகிறார்கள். குடிசை களிலே வாழுகிறார்கள். அவர்கள் புயலால் பாதிக்கப்பட்டு, கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, கடலரிப்பால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்திருக்கிறார்கள். ஏழை மீனவ மக்கள் வாழ முடியாத நிலைமை இருக்கிறது. கடலோரத்தில் தடுப்புச் சுவர் கட்டவேண்டும். தடுப்புச் சுவர் கட்டி மீனவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு விசைப்படகுகள் தருவதாகச் சொல்லுகிறார்கள். படகு களை நல்ல முறையில் கட்டுவது கிடையாது. மினவர்களுக்குக் கொடுக்கக்கூடிய படகை அயனி அல்லது ஆசன மரத்தில் கட்டினால் தான் உறுதியாக இருக்கும். மீன் இலாகாவில் கட்டுகிற படகுகளை கண்ட மரத்தில் கட்டுகிறார்கள். விருப்பப்பட்ட மரத்தில் கட்டுகிறார்கள். அதோடு கட்டும்போது சரியான முறையில் கார்க்கிங் (corking) செய்யாத காரணத்தினால் படகுகள் வெடித்து விடுகின்றன. 35,000 ரூபாய் உள்ள, 30 ஹார்ஸ் பவர் கொண்ட படகுகள் சாதாரணக் காற்றில் நொறுங்கிப் போகின்றன. உறுதியான முறையில் கட்டு வதற்கு செம்பு ஆணி அடிக்கவேண்டும்; ஆனால் அவர்கள் சாதாரண ஆணியால் அடிக்கிறார்கள்—இரும்பு ஆணி அடிக்கிறார்கள். ஹல் பக்கத் தில் செப்புத் தகடுக்கு பதில் துத்தநாகத் தகடு அடிக்கிறார்கள். செப்புத் தகடு, செப்பு ஆணி அடித்தால் உபயோகமாக இருக்கும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

தனியார் மூலமாகக் கட்டுகிற படகுகளை (குமார் கம்பெனி மூலமாகக் கட்டுகிற படகுகளை) அவர்களிடம் 13,000 ரூபாய்க்கு வாங்கி, அதே படகை 18,000 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். இந்த அநியாயத்தை கண்டிக்காமல் இருக்க முடியாது. மீனவ ஏழைப் பாட்டாளி மக்களுக் காக அரசாங்கம் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த இலாகாவில் இருக்கிறவர்கள் மீனவர்களைக் கேவலமாகக் கருதுகிறார்கள். மேலும் என்னைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர் எழுதக் கூடிய கடிதங்களுக்கே பதில் போடுவதில்லை. நான்கு மாதங்

1967 ஜூலை 14] [திரு. மு. வேதாசலம்]

களுக்கு முன் 'ஐ.பி. 66 என்ற படகு காணாமல் போயிருக்கிறது. அது எங்கே இருக்கிறது ? யார் வைத்திருக்கிறார்கள் ? உடனடியாக அதை தேடிப் பாருங்கள்', என்று சொன்னேன். இது வரையில் அதற்கு பதில் வரவில்லை. காரணம் என்ன என்று தெரியவில்லை. அதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன் இலாகாவில் ஃபிஷரீஸ் அட்வைஸரி கமிட்டியில் (Fisheries Advisory Committee) முழுக்க முழுக்க மீனவர்கள் அங்கம் வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீன் பிடிப்பதிலே எந்த பஞ்சாயத்தாக இருந்தாலும், எந்த இடமாக இருந்தாலும், மீனவர் களைத் தவிர வேறு யாருக்கும் கொடுக்கக்கூடாது. மீனவர்கள் பிற்பட்ட வர்கள், ஏழை எளியவர்கள், படிக்கத் தெரியாதவர்கள், பணம் இருந்தாலும் எப்படிச் செலவு செய்வது என்று தெரியாதவர்கள். பின் தங்கிய வகுப்பினரைவிட மோசமான நிலையில் இருக்கக் கூடியவர்கள். ஆகையால் அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மார்ட்டின் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள்—ரமணி அம்மையாருக்கு போட் தந்திருப்பதிலே கட்சிக் கண்ணோட்டத் தோடு பார்க்கக் கூடாது என்று சொன்னார்கள். கடந்த 20 ஆண்டுக் காலத்தில் கட்சிக் கண்ணோட்டத்தோடு தான் கொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு போட் கூட கொடுத்தது கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அம்மையார் பேரிலே போட்டுக்கு விண்ணப்பம் வரவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

போட் தருவதில் யார் முதலில் பணம் கட்டினாலும் சீனியாரிட்டி பிரகாரம் தரவேண்டும். இலாகாவில் இருக்கிறவர்கள் ஓரவஞ்சனையாக இருந்து ஒரு போட் வேண்டுமென்றால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய், டிரான்ஸிஸ்டர், வாட்ச் எல்லாம் கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த முறையை எல்லாம் மாற்றி ஏழை மீனவர்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எவ்வளவு அதிக விலையில் போட் தந்தாலும், அவைகளுக்குத் தகுந்த துறைமுகம் இல்லாத காரணத்தினால் விலையுயர்ந்த படகு புய லாலும், காற்றாலும் நாசமடைகிறது. இராயபுரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் அவசியம் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் திட்டமும் தீட்டி யிருக்கிறார்கள்.................. (மணியடிக்கப்பட்டது).

***திரு. பா. தம்பி நாயக்கர்** : தலைவர் அவர்களே, வனத்துறை மானியத்தின் மீதும், வேளாண்மைத் துறை மானியத்தின் மீதும் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

காட்டிலாகாவைப் பொறுத்தவரையில் அது சர்க்காருக்கு அதிக வருமானம் வரக்கூடிய ஒரு இலாகா. அதிலே ஒரு சில காரணங்களால் வருமானம் குறைவாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் அந்த காட்டி லாகாவில் குத்தகை எடுக்கக் கூடியவர்கள், பல மைல்களுக்கு சொந்த செலவிலேயே ரோடுகளையெல்லாம் போட்டு விறகுகளை அப்புறப்படுத்த வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் விறகுகளை அப்புறப் படுத்த முடியாமல் மழை முதலிய காரணங்களால் நின்று விடுகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் எடுக்க முடியவில்லையானால் விறகுகளைச் சர்க்கார் உடைமையாக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். அந்த மாதிரி விறகுகளை குறிப்பிட்ட தேதிக்கு மேல் அப்புறப்படுத்த வேண்டுமென்றால் சென்னை வந்து மந்திரியிடத்தில் தான் உத்திரவு வாங்கவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அதை மாற்றி ஜில்லா ஃபாரஸ்ட் அதிகாரியிடமே

வாய்தா கொடுக்கும் அதிகாரத்தைக் கொடுப்பார்களானால், தாராளமாக அந்த காண்ட்ராக்ட்டை எடுக்கவும், ஏறிய குத்தகைக்கு எடுக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

அதே போல இந்த கூப் வெட்டும் இடங்கள் பல ஆயிரக்கணக்கான எக்கர் எங்கள் பிரதேசத்தில், குமரி கல்ட்டிவேஷன் என்று சொல்லப்படுகிற நிலையிலே விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய அந்த இடங்கள் முன்னால் கொடுக்கப்பட்டு வந்தன. அவர்கள் 2—3 ஆண்டுகளுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்வதற்காக எடுத்துக்கொண்டு விவசாயம் செய்யும் இடத்தில் சர்க்கார் என்னென்ன மரங்கள் நடும்படி சொல்லுகிறார்களோ அந்த மரங்களைச் சர்க்காரே கொடுத்து அவர்கள் அதை நட்டு நல்ல முறையில் வனத்தையும் காப்பாற்றி, விவசாயப் பொருள்களையும் உற்பத்தி செய்யும்படி செய்தால் ஏற்ற முறையாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அதேபோல 'சிறுமலையைப் பற்றி நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அந்த மலையிலே ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் எதற்கும் உதவாமல் இருக்கின்றன. அந்த இடங்களிலே ஃபாரஸ்ட் இலாகாவிற்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் இப்போது இருக்கும் வாழைத் தோட்டங்களுக்கு அருகாமையில் இருக்கின்றன. அந்த இடங்களெல்லாம் சர்க்காருக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாத முறையில் இருக்கின்றன. விறகுகளை அப்புறப்படுத்த முடியாத இடம் அது. அந்த இடங்களை விவசாயத்திற்குக் கொடுத்தால் பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களில் வாழை, காப்பி போன்ற பொருள்களை உற்பத்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

அத்துடன் காடுகளின் பசுந்தழை உரத்திற்காக எடுக்க அனுமதி கொடுக்கவேண்டும். பசுந்தழை சர்க்காருக்கு வருமானம் வரும் மரங்களிலிருந்து எடுப்பதில்லை.

சாதாரணமாக சிறு சிறு செடிகளிலிருந்து பசுந்தாள் உரம் எடுப்பது. பசுந்தாள் உரத்தினால் விவசாயம் நல்ல பலன் தரும். சர்க்காருடைய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு பசுந்தழைகளை பாரெஸ்டு இலாகா நிலத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து புறம்போக்கு கூப்புகளை இப்பொழுது பாரெஸ்டில் சேர்க்க வேண்டும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது. பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களிலிருந்து விவசாயிகள் இப்பொழுது பசுந்தாள் உரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் இப்பொழுது பாரெஸ்டு இலாகாவில் சேர்த்து விட்டால் விவசாயத்திற்கு மிகவும் குந்தகம் ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,000 பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேற்பட்ட பணமெல்லாம் கலெக்டர் மூலம்தான் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. ரூ. 2,000 வைத்துக்கொண்டு ஒரு கிணற்றை நிச்சயம் விலை ஏற்றமுள்ள இந்த நாளில் வெட்ட முடியாது. ரூ. 5,000 வரையில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலமாகவே கொடுக்கலாம் என்று உத்தரவிட வேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு விதைப் பண்ணை கண்டிப்பாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது உரமும், பூச்சி மருந்தும் அந்த பஞ்சாயத்து யூனியன் மூலமாக விதை கொடுப்பவர்களைக் கொண்டே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். எல்லா

வற்றையும் விட, என்ன தான் பூச்சி மருந்து, உரம் முதலியவைகள் கொடுத்தால்கூட, விவசாயம் நல்ல முறையில் வருவதற்கு உழவுதான் மிகவும் முக்கியம். நல்ல முறையில் உழுதால் தான் விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும். இப்பொழுது பொதுவாக மாடுகள் அதிகமாக விலை ஏறியிருக்கிற காரணத்தினால் நல்ல மாடுகள் வாங்க முடியாத காரணத்தால் ஒரு நிலத்திற்கு 2, 3, உழவுக்கு மேல் உழ முடியவில்லை. ஆகையால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு டிராக்டர் வாங்கிக் கொடுக்கவேண்டும். அல்லது 30, 40 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நிலச்சுவான்தாருக்கும் கடனாக ஒரு டிராக்டர் வாங்கிக்கொடுப்பதற்கு சர்க்கார் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய எல்லா மான்யக் கோரிக்கைகளையும் ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு ஆண்டவர்கள் தங்களுடைய 20 ஆண்டு கால ஆட்சியில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு செய்துவிடுவோம் என்று சொல்லி அவர்கள் திட்டங்கள் போட்டார்கள். திட்டம் போட்டதைவிட அதிகமான பணம் செலவழிக்கப்பட்டதே தவிர, திட்டத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் கிடையவே, கிடையாது. உண்மையிலேயே அவர்கள் போட்ட திட்டங்களின் பலனெல்லாம் யாருக்கு கிடைக்கவேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்காமல், வேறு யார் யாரோ எடுத்துக்கொண்டு போய் விட்ட காரணத்தினால், உண்மையிலேயே விவசாயிகளுக்கு அந்தப் பலன் போய் சேராத, அவர்கள் அந்தப் பலனை அடையமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, இந்த அரசு அதுபோல் இல்லாமல் உண்மையிலேயே செலவழிக்கக்கூடிய பணத்தின் பலன்கள் விவசாயிகளுக்கு நேரடியாக போகக் கூடிய அளவிலே காரியங்களைச் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. ஏரி மராமத்து வேலைகளை எடுத்துக்கொண்டால், இது 3, 4 இலாகாக்களின் கீழ் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கிராமத்தில் பார்த்தால், பி.டபிள்யூ.டி. மராமத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். பக்கத்து கிராமத்தில் பார்த்தால் மைனர் இரிகேஷன் துறையினர் அதைச் செய்வார்கள் என்று சொல்கிறார்கள். எல்லா ஏரிகளையும் ஒன்றாக இணைத்து, ஒரே அதிகாரியின் கீழ் வைத்தால்தான், இதுபோன்ற சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும். பி.டபிள்யூ.டி. அதிகாரியைக் கேட்டால் "இது என்னுடைய ஏரி இல்லை, புட் ப்ரோடக்ஷன் துறையினர் எடுத்துக் கொண்டு விட்டார்கள். நான் ஒன்றும் செய்வதற்கு இல்லை" என்று மறுத்துவிடுகிறார்கள். எல்லா ஏரிகளையும் ஒன்றாகச் சேர்த்து, ஒருமுகப்படுத்தி, ஒரே இலாகாவின் பொறுப்பின் கீழ் வரும்படியாகச் செய்தால்தான், பாசன வசதியைப் பெருக்க முடியும், அதன் மூலம் நமது குறிக்கோளான உணவு தான்ய உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, கிணறு வெட்டுவதற்கு சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள். அது ஒன்றும் முழு தொகையும் மான்யமாகக் கொடுக்கப்படவில்லை. கொடுக்கக்கூடிய கடனை காலாகாலத்தில் கொடுத்தால் தான் விவசாயிகள் கிணறுகளை வெட்டி உணவு தான்யத்தை உற்பத்தி செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். மனுப்போட்டுவிட்டு, 3 மாதம், 6 மாதம் காத்துக்கொண்டிருக்க வேண்டிய பழைய நிலை இல்லாமல், கடன் மனு போட்டவுடனேயே ஒரு மாதத்திற்குள் காலதாமதம் இல்லாமல் கடனை கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். சொத்து மதிப்பு இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்து, 10, 15 நாட்களுக்குள் கிணறு வெட்டுவதற்கு கடன் தொகை அளிக்கப்பட்டுவிட வேண்டும்.

இந்தத் தொகை திருப்பி வாங்கக்கூடிய பணம் தான். அதை ஒன்றும் மான்யமாகக் கொடுக்கவில்லை. கிணறு வெட்டுவதற்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், உடனுக்குடன் உணவு தான்ய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏராளமான பேர்கள் கிணறுகள் வெட்டுவதற்காக மான்யம் கோரியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த மாவட்டத்தில் ஒரு லட்சம் கிணறுகள் இருந்துக்கொண்டிருக்கின்றன. 60,000 பம்பு செட்டுகளுக்கு மேல் வழங்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியில் வட ஆர்க்காடு மாவட்டம்தான் வருகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏராளமான ஏரிகள் இதுவரையில் மராமத்து செய்யப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. ஏரி மராமத்து உடனுக்குடன் செய்தால்தான் பாசன வசதி கிடைக்கும். பல ஏரிகளுக்கு வரத்துக் கால்வாய்கள் இருக்கின்றன. 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு தான் அவைகளில் தூர் வாரியிருக்கிறார்கள். வரத்துக் கால்வாய் செப்பனிடப்பட்டால் தான் உடனுக்குடன் பாசன வசதி ஏற்படும். ஏரிகளுக்கு அதிகமான தண்ணீர் வந்து, 2, 3 மாதங்களுக்கு அதிகமான பாசன வசதி பெறுகிற அளவுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தின்படி வரத்துக் கால்வாய் குடிமராமத்தில் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். குடிமராமத்தில் செய்யவேண்டும்என்றால் அதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1 சர்க்கார் கொடுக்கிறார்கள். 1,000 ஏக்கர் பாசன வசதி கிடைக்கக்கூடிய ஏரி என்றால், வரத்துக்கால்வாய் மிகப் பெரியதாக இருக்கும். அதைச் செப்பனிடவேண்டுமென்றால் ஏறக்குறைய ரூ. 20,000, 30,000 செலவழித்தால் தான் முடியும். அவர்கள் கொடுக்கக்கூடிய ரூ. 1,000 வைத்துக்கொண்டு இம்மாதிரி வரத்துக் கால்வாயை குடிமராமத்து மூலம் சீர்செய்ய வேண்டுமென்பது முடியக்கூடிய காரியமா என்பதைக் கொஞ்சம் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏராளமாக பணம் செலவழிக்கப்பட்டாலும், அந்தப் பணம் நல்ல முறையில், நியாயமான முறையில், என்ன காரணத்திற்காக நாம் செலவழிக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதாவது உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு பயன்படக்கூடிய வகையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைச் சர்க்கார் தீர ஆலோசித்து இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடன் மனு கொடுத்துவிட்டு விவசாயிகள் படும் தொல்லைகள் சொல்ல முடியாது. முதலில் கணக்குப்பிள்ளைக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு நம்பர்களைப் பெறவேண்டிய சூழ்நிலை இருந்துக்கொண்டிக்கிறது. சர்க்காருக்கு இதுசம்பந்தமாக நான் ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன். ஐடெண்டிடி கார்டு, கொடுப்பதுபோல், ஒவ்வொரு விவசாயிக்கும் அவனுடைய நிலத்தின் சர்வே நம்பர் போன்ற விவரங்களை தகுந்த பாதுகாப்பாக வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு நோட்புக்கில் எழுதி அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அவன் கடன் மனு செய்தால், அந்த நோட்புக்கை எடுத்துக்கொண்டுபோய் தகுந்த அதிகாரியிடம் காண்பித்தால், அந்த அதிகாரி அந்த விவசாயிக்கு சொத்து இருக்கிறதா என்று பார்த்துவிட்டு உடனே கடன் தொகையை வழங்கும்படியான ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும். வேண்டுமானால் சர்க்காருக்கு ஒரு சந்தேகம் வரக்கூடும் என்று சொல்லலாம். விவசாயி யாருக்காவது அந்த நிலத்தை விற்றுவிட்டால் என்ன செய்வது என்ற ஒரு பிரச்சினையை எழுப்பலாம். சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் பத்திரத்தை பதிவு செய்யும்பொழுது, இந்த ரிகார்டையும் காண்பித்து, தகுந்த மாற்றம் செய்துகொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டால், விவசாயி எளிய முறையில் கடன் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி உரத்திற்காக கார்டு கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி கார்டு கொடுக்கும்பொழுது, விவசாயிக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, அவனுக்கு எவ்வளவு உரம் வேண்டும் என்று அந்தக் கார்டில் எழுதிக் கொடுத்துவிட்டால், கொள்முதல் செய்யும்பொழுது இத்தனை ஏக்கருக்கு இவ்வளவு நெல் கொடுக்க வேண்டும் என்று கணக்கிட்டு கொள்முதல் செய்து கொள்ளலாம். இந்த முறையை அனுஷ்டித்தால் விவசாயிகளுக்கு எளிதாக உரம் கிடைக்கும், சர்க்காருக்கும் கொள்முதலில் வேண்டிய நெல் கிடைக்கும்.

சீரான விதை தானியங்கள் கிடைக்காத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அதற்காகக் கொடுக்கக்கூடிய மான்யம் அதை உற்பத்தி செய்யக்கூடிய கிராம சகாயக்குக்குத் தரப்படுகிறது. குவிண்டாலுக்கு ரூ. 5, 6 என்று கொடுக்கப்படுகிறது. விவசாயி அந்த விதை தான்யத்தை உற்பத்தி செய்துவிட்டு அந்தப் பணத்தைப் பெறுகிறானா என்று கேட்டால் அப்படி கிடையவே கிடையாது. அதற்கான கணக்குகளை மட்டும் எழுதிவிட்டு அந்தப் பணத்தை பெற்றுக்கொள்கிறான்., உண்மையிலேயே விதைக்கான தான்யத்தை உற்பத்தி செய்கிறானா என்று கேட்டால், கிடையவே கிடையாது. அந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும். சர்க்கார் விதைப் பண்ணையில் ஏராளமான விதைகளை உற்பத்தி செய்கிறார்கள். கட்டுப்படியான விலை எப்படியிருக்கிறது என்றால், மார்கெட்டில் ரூ. 40 என்றால், அங்கே ரூ. 60 என்ற அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் விற்றுவிட்டு உண்மையான விவசாயிகளுக்கு தரமான விதை தான்யங்கள் உற்பத்தி செய்வதற்கு குவின்டாலுக்கு ரூ. 10 என்று நிர்ணயித்து கொடுத்துவிட்டால் கூட, சர்க்கார் விதைப்பண்ணையில் விதை உற்பத்தி செய்வதில் நஷ்டம் வராது. விவசாயிகளுக்கு ஒரு குவின்டாலுக்கு ரூ. 10 என்று நிர்ணயித்துவிட்டால், தரமான விதை எல்லா விவசாயிகளுக்கும் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த பயிர் பாதுகாப்பிற்காக பூச்சி மருந்து மாலை
கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது உணவு தானியத்திற்காகக் 5–30
கொடுக்கும்போது 25 சதவீதம் சப்சிடியும், மற்றபடி பணப்பயிருக்கு 50 சதவீதம் சப்சிடியும் கொடுக்கிறார்கள். அந்தச் சலுகை எந்த அடிப்படையில் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. நெல் பயிருக்கு பாதி மான்யம் கொடுப்பதுதான் நலமாக இருக்கும். ஆகவே, பணப்பயிருக்கு 25 சதவீதம் என்றும், மற்றவைகளான நெல் போன்ற பயிர்களுக்கு 50 சதவீதம் என்றும் சலுகை கொடுக்க வேண்டும் என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சிறு சிறு பாசனத்திட்டங்களெல்லாம் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து ஏராளமாக உணவு உற்பத்தியை வட ஆர்க்காடு மாவட்டத்தில் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு இந்தச் சலுகைகள் சிறு பாசன வசதிக்கு கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன்.

தூர் வாரும் பணியைச் செய்யும் இலாகா, இரண்டு ஏரிகளைச் செய்கிறார்கள். உடனே இயந்திரங்களைக் எடுத்துக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஆகவே, இரண்டு யூனிட்டுகளை வட ஆர்க்காடு மாவட்டத்திலேயே வைத்து, அங்கே இருக்கும் ஏராளமான ஏரிகளை தூர் வார வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதோடு கூட அப்படித் தூர் வாருவது என்று சொல்லும்போது, அப்படிப்பட்ட ஏரிகளிலிருந்து மண்ணை விவசாயிகள் எடுத்துப்போக அனுமதி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் சர்க்காருக்கும் பணம் மிச்சமாக இருக்கும், விவசாயிகளுக்கும் உபயோகமாக இருக்கும். அதனால் உணவு பொருள்களும் அதிகமாக உற்பத்தியாகும். அதில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். பழங்காலத்தில் விவசாயிகள் அப்படிச் செய்து கொண்டு வந்தார்கள். அது இன்னும் சில இடங்களில்

தொடர்ந்து செய்யப்படுகிறது. எங்கள் பகுதியில் இரண்டு ஏரிகளில் 9 மாதம் பாசனம் நடக்கிறது. பிறகு, நடுவே நடைபாதி செய்திருக்கிறார்கள். அங்கே மழை இல்லாத காலத்தில், மண்ணை எடுத்து நிலங்களுக்குப் போடுகிறார்கள். ஏரியும் தூர்ந்து போகிறதில்லை. தூர் வாரவேண்டிய அவசியமும் இல்லை. இந்த விஷயத்தை கவனித்துச் செய்தால், சர்க்காருக்குப் பணமும் மிச்சமாகும்.

கிராம சேவக்குகளை முழுக்க முழுக்க விவசாயத்திலேயே ஈடுபடுத்த வேண்டும். வேறு ஒரு வேலையும் அவர்கள் செய்ய வேண்டியதில்லை. இன்றைக்கு யூனியனில் 10 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அதை 20 பேர்கள் என்று அதிகப்படுத்தினாலும் பரவாயில்லை. அவர்கள் வேறு வகையில் ஈடுபடாமல் இருக்கவும், விவசாயத்திலேயே முழுக்கவனம் செலுத்தவும் வழிவகை செய்யவேண்டும். நம்முடைய விவசாயிகளுக்கெல்லாம் ஒரு படி அரிசித் திட்டத்தை மாநிலம் பூராவும் நிச்சயமாகக் கொடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான வேலைகளை அமைச்சர் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே மாதிரி . . (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : பட்டியலில் உறுப்பினர்களுக்கு காலம் குறைவாக இருக்கும் காரணத்தால் பேசுவதற்கு நேரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திரு. சுப்பையா முதலியார் ஐந்து நிமிஷங்களும், டாக்டர் ஹாண்டே ஐந்து நிமிஷங்களும் மட்டும் பேசலாம் என்று தெரிவிக்கிறேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கை மீது சில வார்த்தைகள் சொல்வதற்கு விரும்புகிறேன்.

இன்றைக்கு அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுவதற்காக என்றே அமைக்கப்பட்ட கமிட்டியின் ரிப்போர்ட் இருக்கிறது, The report of the Committee on Agricultural Production, Madras. 1964-ல் திரு. வர்கீஸ் தலைமையில் உருவாக்கினார்கள். அது 161 ரெகம்மண்டேஷன்களைக் கொண்டது. அவைகளில் இன்று வரையில் ஒரு சில செயல்பட்டாலும் மற்றவைகள் செயல்படவில்லை. அதைச் செவ்வனே செய்தால் உணவு உற்பத்திக்கு நல்ல வழி ஏற்படும். ஏனென்றால், பெரும் அனுபவம் உள்ளவர்களும், திரு. வர்கீஸ் போன்றவர்களும், சேர்ந்து உருவாக்கப்பட்டது. அதன் பின் அதை திரு. கெய்வார் திரு விஸ்வநாதன் தலைமையில் 161 ரெகம்மண்டேஷன்கள் உருவாகப்பட்டுச் சர்க்காருக்கும் சிபாரிசு செய்யப்பட்டது அந்தப் புத்தகம் இப்பொழுது பழைய புத்தகமாகப் போய்விட்டது. அதில் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தக் கமிட்டி, ஏன் அமைக்கப்படுகிறது என்று :

'The Government constituted a committee to survey the progress of implementation of Food producti n Schemes in the Third five-Year Plan and to suggest measures for the speedy achievement of the pl n targets in full and to make recom endations in regard to schemes on which efforts should be c ncentrated during the Fourth Plan period.' ஆகவே, நான்காவது திட்டத்தில் உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டி. அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டைப்பற்றி இப்பொழுது அது பழைய ரெகார்டாகப் போய்விட்டதே என்பதைக் கண்டு வருத்தப்படுகிறேன்.

விதையைப்பற்றிப் பேசும்போது ஏ.டி.டி. 27 இருக்கிறது. அதைவிட இன்றைக்குத் தேவையானது "ஸெமி-ட்ரை பேடி" தான். இஸ்ரேல் போன்ற நாடுகளில், குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிகமான விளைச்சலை எடுகிறார்கள். ஆனால், நாம் அதிகமான தண்ணீரை வைத்

துக்கொண்டு, குறைந்த மகசூல் அடைகிறோம். அதிகத் தண்ணீர் இருப்பது வரவேற்கத்தக்கதுதான். இங்கே தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட விளையக்கூடிய, "ஸெமிட்ரை பேடி" விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். அதோடு விதைகளை டெஸ்ட் பண்ண வேண்டும். விதைகளை உற்பத்தி செய்வதில் கிராம சகாயத் திட்டம் வெற்றிகரமில்லை. மாற்று திட்டம் தேவை. பழைய திட்டத்தையே கூட ஸீட் கார்ப்பொரேஷன் வரும் வரையில் நடத்தலாம் அதிக நேரம் இல்லை எல்லாவற்றையும் சொல்ல.

ப்ளாண்ட் ப்ரொடெக்ஷன் பற்றிச் சொன்னார்கள். மருந்தின் விலையில் பருத்திக்கு ஒரு ரேட், மற்றதற்கு ஒரு ரேட் என்று சொல்வதெல்லாம் உண்மைதான். பருத்திக்கு ஸெண்ட்ரல் எய்ட் இருக்கிறது. இவைகளையெல்லாம் பூல் செய்து ஒரே விலையில் அதாவது, குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். மலேரியா எராடிகேஷன் ஸ்கீம் மாதிரி, ப்ளாண்ட் ப்ரொடெக்ஷன் கொடுத்தால் நலமாக இருக்கும்.

இம்ப்ளிமெண்ட்ஸ் சம்மந்தப்பட்டவரையில், நிறையக் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்துக்களில் ஸ்ப்ரேயர்கள் சர்வீஸ் இல்லாததால், உறங்கிக் கொண்டு இருக்கிறது. ரிப்பேராக போய்விடுகின்றன. அவற்றை சர்வீஸ் செய்ய ஒரு திட்டம் வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு வார்த்தை அனிமல் ஹஸ்பண்ட்ரி பற்றி. இனவிருத்தி என்று ஒருபுறம் சொல்லுகிறோம். ஆனால், சமீபத்திலே, 17—5—1967-ல், டைரெக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்டரி அவர்கள் ஒரு சுற்றறிக்கையை விட்டிருக்கிறார்கள். அதில், 'The team sponsored by the Foundation in its report on India Food C isis and the steps to be taken to meet it by agricultural production has recommended the f llowing f r reducing the cattle numbers' என்று சொல்லி, 'measures to control open grazinge என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கேயெல்லாம் மேய்ச்சல் தரை வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சுற்றறிக்கையில் இருப்பது அதற்கு நேர் மாறானது. மேலும்,

'A graduated tax on cattle which would make maintenance of useless cattle a burden on their owners c mpulsory confinement of all bulls kept for natural service. Mandatory castration of all young bulls not required f r breeding, compulsory ste ilisation of surplus cowsand heifers'.

என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த அமெரிக்க திட்டத்தை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று டைரக்டர் சொல்லியிருக்கிறார்கள். அவர்,

'All the Project Office s are requested to enfo ce the above recommendations in their respective projects and issue clear instructions to the officers wo king under them'.

என்று சுற்றறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது அதாவது, மாட்டுக்கு வரி போட வேண்டும், விறை அடிக்க வேண்டும், மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது கேவலம். 'confinement of all bulls kept for natural service' என்கிறார்கள். அதோடு மேய வெளியே கொண்டு போகக் கூடாது என்றும் சொல்லுகிறார்கள். இங்கே நாம் திட்டங்களைப் போடுகிறோம். அதற்கு நேர் விரோதமாக அவர்கள் அறிக்கைகள் விடுகிறார்கள். அதன் அர்த்தம் என்ன? அப்படிப்பட்ட உத்தரவு கொடுக்கப்பட்ட பிறகு கீழே இருப்பவர்கள் என்ன செய்வார்கள்? எப்படி விருத்தி ஏற்படும்? இந்த மாதிரி உத்தரவுகள் போட்டால் மனதிற்கு மெத்த வருத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

மாலை 5-30 DR. H. V. HANDE : Mr. Chairman Sir, at the very outset I would like to chalk out the general policy of my party with regard to agriculture. My party does not believe in the agricultural policy that is pursued by the present party in power which is a continuation of the old Congress Party's policy. In fact a few years ago this making of lands into small bits was started by the then ruling party. Even then we explained to them clearly that it would affect food production. We are not here to argue for the rich landlords or the rich tenants. We are here to point out that by this Land Ceiling Act the entire agriculture in our country has been thoroughly ruined. Of course it is not a State problem ; it is an all-India problem. I want to stress this very clearly that just like an industry in a factory, agriculture must be made an industry. Thirty-eight lakhs of tonnes was the production at the beginning of the First Five-Year Plan. During the first two Plan periods the Government have sunk Rs. 30 crores and the agricultural production at the end of the two plans was 53 lakh tonnes. During the Third Plan period the Government have sunk nearly Rs. 40 crores. In spite of this 40 crores, the food production increased only by 5 lakh tonnes. This is the point that I want to establish. Why did the Government not increase production appreciably in spite of the fact that we have poured Rs. 40 crores ? We have gone to the tax payer, we have told him nice words and we have raised taxes and imposed a burden of Rs. 40 crores. But we were able to increase production of foodgrains only by 5 lakh tonnes. In other words there is something seriously wrong with the agricultural policy that was started by the Congress Party and pursued by the present ruling party. This is what I want to emphasise.

If only we have reorientated our agricultural policies, these things could not have happened. My submission is that we are not going to make the living of the small farmer pleasanter. There are a large number of small farners and a number of political parties are speaking for small farmers. But I am very sorry to point out that the life of the small farmers is miserable if not worse than it was before. The small farmer with his small piece of land will not be able to properly eke out his livelihood by raising a small crop on his land. So, we must pursue a courageous policy. After some years, the population will increase a nda number of persons will then come forward to suggest that the land ceiling should be fixed at 20 or 10 acres as then only more and more landless people will get land. Now, let us take a huge factory in Avadi. It must be under one organisation. It may be a private enterprise or a public enterprise. The factory workers who work there are responsible for its production. Let us presume that every worker should get a nut or a bolt or a bar. Now if we divide the factory into such small pieces, it will not be worth even one rupee. My revered leader, Professor N. G. Ranga when he founded the Krishak Lok Party at the time when my leader, Rajaji, was at the helm of affairs here, laid emphasis on agricultural production and agricultural labour. Now I want to suggest to this House an alternative to the problem of agricultural labour. We

are trying to solve the problem of the poor farmer by giving him a small piece of land but it is not possible for him to cultivate his land. Now, under the Fourth Five-Year Plan we are sinking about Rs. 80 crores but so far we have spent about Rs. 40 crores but we will not be able to increase the production by even ten lakh acres. The very basis and foundation of our agricultural policy is wrong. As the factory is an industrial project, agriculture is a major industrial project in the country. Out of the total income of Rs. 18,000 crores in this country, agricultural income accounted for 45 percent. So, agricultural production is one of the major issues which have to be tackled effectively. Unfortunately several previous Governments I am not taking of the Congress Government in particular-at all levels, according to us, have gone pathetically in the wrong direction. They have sunk a large number of wells and provided so many conveniences but in spite of them, something has gone wrong somewhere and the agricultural production has not increased. That is because we have not treated agriculture on an industrial basis. We want to give protection to agricultural labour and in fact our leader Professor N. G. Ranga wants to give more protection to them than anybody else in this world. He wants agricultural labour to prosper. The prosperity of the agricultural labour is the most important thing and we want agricultural labour unions. That is the only way of protecting agricultural labour. At the same time we can increase the agricultural output fantastically like any other country in the world provided the Agriculture Department does not pursue its present policy which is a peculiar, anachronistic and outmoded one. This policy is not pursued in any other country in the world. Even in Russia they have got co-operative farming. About China, the less said about it the better. In America and Germany also there are such farming societies. In this respect, even Russian Government are better than the Indian Government because even there they can use tractor on a large scale. But here can we use it on small pieces of land! Just imagine how we can use modern agricultural implements on those lands. In fact people laugh at us at seeing this state of affairs. We want our Agriculture Department to be one of the modernised and revolutionary Departments. We want India to be a fine country with green fields presenting an excellent picture.

Then, my Hon. Friend, Thiru Audimoolam, has told me that the Government are spending so much money on so many projects and are stating that the water resources in the State have been exhausted. He wanted particularly the Ramana and Ghatana river projects in the Tirunelveli district to be executed immediately by the Government. For the Ramana project, a sum of Rs. 1 Crore has been allotted but only Rs. 50,000 is going to be spent, during this year. In the case of the Ghatana project a sum of Rs. 1 crore and 65 lakhs have been allotted but only about Rs. 5 lakhs is going to be spent this year. I would request the Hon. Minister for Agriculture to look into this matter and do the needful in the matter.

Then, I come to a matter relating to my constituency, Park Town. We have got a Veterinary College. A number of students of that College have got a long standing grievance and they have represented them even to the previous Ministry but nothing has happened. They become veterinary doctors after five years of hard work like medical men. They get a very paltry pay. They have noticed a dangerous trend in regard to their affairs. There is a proposal to suspend the Crash Programme. If this programme is suspended, those students may not get jobs. Also, they are called upon to undergo an external examination where out of 100 students only 12 or 15 students come out successful. This would create unemployment problem. So, I request the Hon. Minister to look into this matter.

With regard to Fisheries—unfortunately my hon. Friend, Thiru Bhoovaragan is not here—I have already told this House that I would raise several points and I have accepted the challenge thrown by him. The expenditure on Fisheries Development Scheme is Rs. 75 lakhs. The revenue from the Department is only about Rs. 25 lakhs. There is thus a loss of about 60 lakhs. This huge loss is on account of open grounds in the Department. Thiru Royappa has sent a report to the Government in regard to this matter and if a copy of that report can be supplied to us, we can properly study it and give our constructive suggestions. The Accountant-General has also commented upon this aspect of the matter. What the Accountant-General has found out accidentally are also not acted upon. A few instances are, (1) Three officers jointly and separately claimed on bogus bills Rs. 30,000 in all in Tuticorin as bonus to chank divers and misappropriated from the year 1959. For three years the Director evaded taking action and sent all sorts of dilatory correspondence to the Accountant-General and the Government. At one stage these confidential files were even shown to the delinquent officers so as to get their clues to hush up the matter. This is a very serious charge and I request the Hon. Minister to look into such charges which are many.

Then the Accountant-General found out a false bill for Rs. 18,000 in Rameswaram Cyclone Relief disbursement. The police arrested a clerk. The clerk gave a statement that the officer asked him to prepare many such bills. But so far no case has been filed.

Then in Thiruthani—I am sorry my Hon. Friend, Thiru Vinayakam is not here—a subordinate manufactured the Treasury rubber seal and forged the signature of the treasury officer fifty times and prepared bogus chalans and swindled Rs. 5,000 in 1964.

Then, in Pulicot another staff pocketed Rs. 20,000 of the Society. It was found out by the Co-operative Department officer and not by the Assistant Director or Director of Fisheries. The amount was reduced as Rs. 8,000 and the Director to help the culprit, necessarily referred it to the Government and delayed the case over two years now. What I am saying is that the people are thinking

that the Fisheries Department is a wonderful department but it is not so. What has the previous Ministry done with regard to these cases ? I request the Hon. Minister to look into the cases.

In this connection, it is my duty to refer to another matter. In 1960 there was an enquiry by Sri S. K. Chettur about the affairs of this Department and he had submitted a report. My ex-colleague in the Upper House, Thiru Anbazhagan had raised the matter and while doing so he almost shed tears. Mr. Anbazhagan made the request on 18th March 1960. As a consequence of that request, Sri S. K. Chettur, I.C.S. was appointed as a one-man committee in 1960. An enquiry was conducted on 1960 and in the report very grave swindles and frauds were proved and recommendations were given to punish the culprits.

There are a number of things. I do not want to go into them and take up any more of the time of the House. I only request the Hon. Minister to completely look into the whole thing without fear or favour and to place the report of Mr. S. K. Chettur on the table of the House.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த விவசாய 'மானியத்திலே என் கட்சியின் சார்பிலே கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் நான் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இந்த இலாக்காவைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள், முன்பு என்னுடன் சக உறுப்பினராக இந்த சட்ட மன்றத்திலே இருந்தபோது, நாங்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றும்படியான சந்தர்ப்ப சூழ்நிலையைப் பெற்றிருந்தோம். அவர் அமைச்சர் ஆனவுடனேயே என்னைச் சந்தித்த சமயத்தில் அவர் என்னிடம் பேசின பேச்சு இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "நான் ஏற்றுக்கொண்டிருக்கும்படியான பொறுப்பில் நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஆதரிக்க வேண்டும்" என்று அவர்கள் மிகவும் கண்ணியமாகவும், பயத்துடனும் சொன்ன அந்த வார்த்தைகள் எப்பொழுதும் என் மனத்தை விட்டு அகலாது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மானியத்திலே இருக்கும்படியான பிரச்சினை, விவசாயத்தைப் பற்றி இருக்கும்படியான பிரச்சினை, சாதாரணப் பிரச்சினை அல்ல. இந்த விவசாய மானியம் கடைசியாகக் கொண்டுவரப்பட்டிருப்பதைப்பற்றிக் காலையிலேயே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இயற்கையாகவே விவசாயம் என்றால் கடைசிதான். விவசாயி என்றால் ஒருவராலும் கவனிக்கப் படமாட்டான். நாட்டின் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரிதான் விவசாய மானியமும் இங்கே கடைசியில் வந்திருக்கிறது. விவசாயம் மிக முக்கியம் என்றாலும் கூட, விவசாயத்தைக் கவனிப்பார் யாருமே கிடையாது. இதுவரையிலும் கவனிக்கப்படாதிருந்த விவசாயி இப்பொழுது ஏன் கவனிக்கப் படுகிறான் என்றால், எல்லாம் பற்றாக்குறையாக இருப்பதனால்தான். உணவுப் பொருள்கள் பற்றாக்குறையாக இருப்பதால்தான் இப்போதெல்லாம் விவசாயிகள் கவனித்துக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலையிலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைத் தந்தார்கள். அவர்கள் 7-ந் தேதியே விவசாய மானியத்தை இங்கே எடுத்துக்கொள்வதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால், டெல்லியில் அந்த நாளில் தான் விவசாய மாநாடு நடைபெற்றது. அதற்காக விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் அங்கே போயிருந்தார்கள். விவசாயத்தைக் கடைசியில்

தள்ளிவிடுவது இல்லை. நீர்ப்பாசனத்திற்குப் பிறகுதான் விவசாயம் செய்ய வேண்டும் என்பதற்காக முதலில் நீர்ப்பாசனம், பிறகு விவசாயம் என்று எடுத்துக்கொண்டோம். (சிரிப்பு).

திரு பி. ஜி. கருத்திருமன் : 7-ந் தேதியே விவசாய மானியத்தை இங்கே எடுத்துக்கொள்வதாக முதலில் போட்டிருந்தாலுங்கூட, இயற்கை கூட விவசாயத்தைக் கடைசியில் தள்ளிவைத்து விடுகிறது என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (சிரிப்பு) விவசாயத்தை முன்னே வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தாலுங்கூட, இதுதான் நிலைமை. விவசாயியை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நினைவு இருந்தாலுங்கூட, விவசாயி பின்னால், தள்ளப்பட்டு, உந்தப்பட்டு, கீழ்நிலைக்குக் கொண்டு வரப்படுகிறான் என்ற நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். விவசாயி சுழன்றுகொண்டேதான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடையாது. விவசாயி முன்னேற வேண்டும் என்றெல்லாம் வாயளவில் தான் பொதுவாகப் பேசப்படுகிறது. இந்தச் சர்க்காரை மட்டும் நான் சொல்லவில்லை. நான் சொல்லும்படியான குற்றச்சாட்டு இந்தியாவில் உள்ள எல்லா சர்க்காரையும் தான். எப்போதுமே என்னுடைய கருத்து இதுதான். நான் விவசாயத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம் இதுதான் என்னுடைய கருத்து என்பதை இந்த அமைச்சர் அவர்களே தெரிந்து கொண்டிருக்கக்கூடும். ஆகவே, விவசாயி சரியாகக் கவனிக்கப்படாதிருக்கும் வரையில், விவசாயின் யிமனம் திருப்தியாக இல்லாத வரையில், என்ன தான் திட்டம் போட்டாலும் இந்த நாட்டில் உற்பத்தி பெருகாது என்பதைத் தான் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுமாதிரி நிலையில், விவசாயத்தைச் சீரும் சிறப்புமாக ஆக்கவேண்டும் என்று இப்பொழுது ஏன் நினைக்கிறார்கள் ? காரணம், இப்பொழுது உணவுப் பற்றாக்குறையாக இருக்கிறது. சில இடங்களில் பஞ்சம் இருக்கிறது. ஆகையால், விவசாயிகளைக் கவனிக்கிறார்கள். உணவுப் பற்றாக்குறையும் பஞ்சமும் இருக்கிற வரையிலும் விவசாயியை ஒரு மனிதனாகவாவது கவனிக்கும்படியான நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாய டிப்பார்ட்மெண்டை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு இருபது, முப்பது வருஷங்களுக்கு முன்னால், விவசாய டெமான்ஸ்ட்ரேட்டரைத் தேடிப் போய்ப் பார்த்தாலும் விதைகள் முதலியவை கிடைப்பதே கஷ்டமாக இருக்கும். ஆனால், இப்பொழுது வெகுவாக அதிகரிக்கப்பட்டு, நன்றாக அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு ஓரளவு உதவி அளிக்கப்படுவதோடு, விவசாய ஆராய்ச்சியும் செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

ஏன் விவசாயி கடைசியாகக் கவனிக்கப்படுகிறான் ? தொழில் துறையை எடுத்துக்கொள்ளுங்கள். இலட்ச ரூபாய்க்கு விண்ணப்பம் போட்டாலும், கடன் தொகை அந்த முதலாளியின் மேசை மீது வந்து நிற்கும். ஆனால், விவசாயி ஐநூறு ரூபாய் கடன் வாங்கவேண்டுமானால் அவன் படும் கஷ்டம், அவன் உந்தப்படும் நிலை, கேட்கப்படும்படியான கேள்வி எத்தனை எத்தனை என்பதை எல்லோரும் உணருவார்கள். ஐந்து லட்சம், பத்து லட்சம் ரூபாய் வரையில் பெரிய முதலாளிகள் எல்லாம் கடன் வாங்கி, தப்புக் கணக்கு வைத்து, அவர் மேலே புகார் சொல்லி, இல்லாவிட்டாலுங்கூட விட்டுவிடப் படுகிறது. ஆனால், ஏழை விவசாயி, 100 ரூபாய், 200 ரூபாய் கடன் வாங்குவதற்குப் படும் கஷ்டங்கள், அல்லல்கள், துன்பங்கள் மிகவும் பெரிய அளவில் இருக்கின்றன. ஆகவே, விவசாய ஆராய்ச்சி சரியாக நடைபெறுகிறதா, விவசாயத்தில் முன்னேற்றம் இருக்கிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டும்

டாக்டர் ஹாண்டே அவர்கள் விவசாயக் கொள்கையைப்பற்றியெல்லாம் பெரிதாகச் சொன்னார்கள். டாக்டர் ரங்கா அவர்களைப்பற்றி எனக்குத் தெரியும். எங்கள் கட்சியில் இருந்தபோது, கோவாப்பரேடிவ் பார்மிங் வேண்டும், கிஸான் சங்கம் வேண்டும் என்று சொன்னதையெல்லாம் நானும் முன்பு கேட்டிருக்கிறேன். இப்பொழுது மாறிவிட்டார்கள். கலர் மாறிவிட்டது ; அதற்குத் தகுந்த மாதிரி பேசிக்கொண்டிருக்கிறார். (திரு டி. எஸ். ஆதிமூலம் : ஃப்ராக்மென்டேஷன்) பூமி சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விட்டதால் உழைக்கும் திறமை குறைந்து விட்டது, ஆகையால் உற்பத்தி இல்லை என்று சொல்லுகிறார்கள். மன்றத் தலைவர் அவர்களுக்கு நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்—நான் அதிருஷ்டவசமாக உலகத்திலுள்ள எல்லா பகுதிகளையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறேன். ஜப்பானுக்கு சென்றிருக்கிறேன். எந்த எந்த பகுதிகளைப்பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டதோ அந்தப் பகுதிகளுக்கெல்லாம் நான் சென்றிருக்கிறேன். ஜப்பானில் ஒரு இரண்டு ஏக்கர் நிலத்தை வைத்து, பத்து குடும்பங்களுக்கு வேண்டிய உணவு உற்பத்தியும், பழ உற்பத்தியும் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு மனிதனிடத்தில் இருக்கும் படியான பூமியில் எவ்வளவு தூரம் தீவிரமாக பாடுபட்டு, அதை அதிகமாக உபயோகித்து, அதில் அதிகமாக உற்பத்திப் பெருக்கத்தைச் செய்கிறார்களோ அதில்தான் திறமை இருக்கிறது. பூமி நிறைய வைத்துக்கொண்டு சோம்பேறியாக இருக்கவேண்டும் என்ற நிலைமைதான் இருக்கவேண்டும் என்றால், அதில் திறமை ஒன்றும் இல்லை. பூமியை அதிகமாக வைத்துக் கொண்டு, ஏதோ உற்பத்தி செய்துவிட்டோம் என்று சொல்வதில் அவ்வளவு பெருமை இல்லை. இது உடைமையைப்பற்றியதல்ல. இருக்கும்படியான பூமியில் தீவிரமாக உழைத்து, அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதைப் பொருத்துத்தான் திறமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு வேறு விதத்திலே கூட பதில் சொல்லலாம். டாக்டர் ஹாண்டே அவர்கள், பூமி பிரிந்துவிட்டதாகச் சொல்வது தவறு, உச்ச வரம்புச் சட்டத்தின் பெயரால் பூமி பிரிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறதே தவிர, இது உள்ளபடியே பிரிக்கப்படவில்லை என்பதைக் கூடப் பதிலாகச் சொல்லலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த விஷயத்தில் அமைச்சர் திரு. கருணாநிதி, டாக்டர் ஹாண்டே இவ்விருவருக்குமே நான் அபிப்பிராய பேதப்படுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். பிரிந்துவிட்டதா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டியது ஆளுகின்றவர்களுடைய பொறுப்பு. அவர்தான் இப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார். இருவருமே சேர்ந்துகொண்டு எங்கள் கட்சியின் மீது புகார் சொல்லுவதற்காகச் சொல்லுகிறார்கள். (சிரிப்பு) இதுமாதிரியெல்லாம் மறுத்து, தடுத்து என்னை இழுக்க வைக்க முடியாது. எனக்கும் அரசியல் தெரியும். எனக்கும் அனுபவம் இருக்கிறது. இது மாதிரி இழுத்துவிட்டு, உடனே, பார்த்தீர்களா, எதிர்க்கட்சித் தலைவரே சொல்லிவிட்டார் என்று சொல்லுவதற்கு நான் இடம் கொடுக்க முடியாது. உரிமை இருக்கும்படியான நிலையில்தான் அவரவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. இப்பொழுது ஆளுங்கட்சியாக நீங்கள் வந்திருக்கிறீர்கள். எங்கே எதை எடுத்துக்கொள்ள வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் கையில் ஆட்சி கிடைத்துவிட்டது. நீங்கள் பார்த்து எது வேண்டுமானாலும் செய்யலாம். தர்மப் பிரபுக்கள் பார்த்து, யார் யாரிடத்தில் எப்படி எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்ற நிலைகளையெல்லாம் ஏற்படுத்தலாம். (குறுக்கீடு) குறுக்கீட்டினாலேயே என் நேரம் குறைந்துவிடுகிறது. ஆகவே, தயவு செய்து குறுக்கீடுகள் வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு எல்லாம் தெரியும். விவசாயி ஒன்றும் தெரியாதவன் அல்ல. அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துவிடுவோ

மானுல், இந்திய நாட்டு விவசாயிகளைவிடச் சிறந்தவர்கள், உயர்ந்தவர்கள் உலகத்திலேயே யாரும் கிடையாது என்ற நிலை நிச்சயமாக ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உலகத்திலே எவ்வளவு உற்பத்தி பெருக்குகிறார்களோ, அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கு வதற்கான ஆற்றலும் அறிவும் படைத்த விவசாயிகள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள். நானே ஒரு விவசாயி. ஏக்கருக்கு 8,500 பவுண்டு வரையில் விளைவித்திருக்கிறேன். என்னுடைய பண்ணையில் ஒரு மாதத் திற்கு முன்னாலே எடுத்திருக்கிறேன். உலகத்திலே இருக்கும்படியான விவசாய இலாக்காக்களைவிட இந்தியாவில் சீரும், சிறப்பும், ஆற்றலும் அறிவும் உள்ளவர்களைக் கொண்டு நமது இலாகா இருக்கிறது. விவ சாயிகளும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு வேண்டிய உதவிகள் காலா காலத்தில் கிடைக்காத காரணத்தால்தான் உணவுப் பெருக்கம் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. ஒரு விவசாயி தன்னுடைய பூமியின் மண்வளம் எப்படிப்பட்டது, அந்த மண்ணுக்குத் தகுந்த மாதிரி எப் பேர்ப்பட்ட வெள்ளாமை செய்யலாம், மண்ணில் என்ன சத்துக் குறை வாக இருக்கிறது என்பதையெல்லாம் உடனுக்குடன் தெரிந்துகொள்ளு வதற்காக ஸாயில் டெஸ்ட்டுக்கான வசதி ஒவ்வொரு விவசாயிக்கும் இருக்கவேண்டும்.

மாலை 6-00

அடுத்தபடியாக நல்ல விதைகள், உயர்தர விதைகள் கொடுக்கப்படவேண் டும். எந்த எருக்களை, எந்த நேரத்தில் சேகரிக்கவேண்டும் என்பதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும். பெர்டிலைசர்ஸ் போன்ற உரங்களையும் மற்ற ரசாயன உரங்களையும் எந்தெந்த உரங்களை— எந்தெந்த காலத்தில் —எப்படி எப்படி போட வேண்டுமென்பதைக் கவனிக்க வேண்டும். இப் போது பூச்சிகள், நோய்கள் வரக்கூடிய காலத்தில் நல்ல ஏற்பாடுகளைச் செய்து அவைகள் வராமல் தடுக்க வழிவகைகள் செய்ய வேண்டும். மேலும் ஏழை விவசாயிகளுக்குக் கடன்களை காலாகாலத்தில் கொடுத்து உதவ வேண்டும். அதோடு மட்டும் அல்ல. இத்தனையும் செய்து விவசாயி அறுவடை செய்கிற சமயத்தில், "பதுக்கல் பதுக்கல்" என்று போலீஸ் காரனைக்கொண்டு பிடிக்க வைத்து, அவனை பதுக்கல்காரராக, திருடனாக வைத்து விடுவார்கள். நம்முடைய உணவு அமைச்சர் வருகிற போது, களத்துமேட்டிலே பதுக்கல், வீட்டிலே பதுக்கல் என்று சொன்னால், விவசாயம் செய்பவனுக்கு விவசாயம் செய்வதில் எப்படி உற்சாகம் தோன் றும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் விவசா யிக்குக் கொடுக்கும்படியான விலை என்ன ? நான் உணவு அமைச்சருக்கு ஒரு சவால் கூட விடுகிறேன். ஒரு ஏக்கருக்கு உற்பத்தி செலவு— நெல் பயிரிட—கரும்பு பயிரிட—மற்றப் பயிர்கள் பயிரிட—எவ்வளவு செலவாகும் என்பதை ஆராய்ச்சிப் பண்ணையில் குறிப்பெடுத்துப் பார்க்கும் போது, நாம் விவசாயிக்குக் கொடுக்கும் விலை உண்மையில் நியாயமான விலைதானா, அவனுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலைதானா என்பதை சிந்திக்க வேண்டும். விவசாயியின் உற்பத்திச் செலவு எல்லாம், ஓரளவு கணக்கை குறைவாக வைத்து, மேற்பார்வை கணக்கையெல்லாம் ரூ. 300, 400, இல்லாமல், நெல் உற்பத்தி செய்ய வேண்டும். விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு 16 மூட்டைதான் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு உண்டான வேலைக்குக் கணக்குப் பார்த்தால் மொத்த வருமானம் 500 ரூபாய் ஆகிறது. உற்பத்தி செலவு 300 ரூபாய் ஆகிறது. ஆகவே விவசாயி 300 ரூபாய் செலவு செய்து, நிலத்திலிருந்து வருகின்ற வருமானம் 500 ரூபாய் என்ற நிலை யிருந்தால் அவன் என்ன செய்ய முடியும் ? குத்தகை செய்யும் விவசாயி யாக இருந்தால், குத்தகையும் கொடுத்து, மற்ற காரியங்களையும் எப்படிச் செய்ய முடியும்? விவசாயி, தான் உற்பத்திசெய்யும் நெல்லுக்கு வெளி யிலே நல்ல விலை கிடைக்கிறது என்பதற்காகத்தான் இத்தனை சிரமங்களை யும் ஏற்றுக்கொண்டு வயலில் பாடுபடுகிறான்.

The present increase in production of foodgrains is partly due to the Five-Year Plans, partly due to the adoption of the latest methods of cultivation and chiefly due to the rise in price of food grains.

என்று நான் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். வெளியிலே தானியங்களுக்கு அதிகமான விலை கிடைக்கிற காரணத்தால் தான் விவசாயி பாடுபடுகிறான். "அப்படி எனக்குத் தெரியாது" என்று விவசாய அமைச் சர் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறார். நம்முடைய விவ சாய அமைச்சர் விவசாயிகளின் காவலனாக இருக்கவேண்டும். அப்படி இருக்கும்படியாக விவசாயிகள் அவரை "கெரோ" செய்ய வேண்டும். அதுவும் சட்டப்படியான "கெரோ" செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "கெரோ" செய்ய வேண்டு மென்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார். நாளைய தினமே பத்திரிகை யில் எதிர்க்கட்சித் தலைவர் கெரோ செய்யும்படிக் கூறுகிறார் என்று வந்துவிடும். . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : "கெரோ" என்றால் கம்யூனிஸ்டுகள் செய் கின்ற முறையில் அல்ல. அன்பு முறையில் செய்கின்ற கெரோ. . . .

திரு. என். சங்கரய்யா : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கம்யூனிஸ்டு தோழர்கள் என்று சொல்கிறார். இந்த அவையிலுள்ள அதிகார பூர்வமான கம்யூ னிஸ்டுகளைக் குறிப்பிடுகிறாரா என்பதை விளக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது எங்களுடைய அபிப்பிராயம் இல்லை என்பதை வேண்டுமானால் அவர்கள் மறுத்துக்கொண்டு போகட்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்தச் சபையிலுள்ள கம்யூனிஸ்டு தோழர்கள் எதுவும் சொல்லாமல் இருக்கும் போது "கம்யூனிஸ்டு தோழர்கள் கெரோ" என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்களை அந்த வார்த்தையை வாபஸ் வாங்கும்படிச் செய்ய வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, சில வார்த்தை கள் சொல்லும் போது வெளியிலே இருக்கும் யாருக்கும் தப்பபிப் பிராயம் ஏற்படக்கூடாது என்பதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொன்னது ஒரு தமாஷாக இருக்கும் நிலையே தவிர வேறு எந்த விதமாகவும் இதைச் சொல்லவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் விளைவிக்காமல், வாழை, கரும்பு, பருத்தி முதலிய பயிர்கள் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்று விவசாயி கருதுகிறான். வாழைத் தோட்டம் போட்டால் ஏக்கருக்கு 2 ஆயிரம்—பருத்தி போட்டால் ஆயிரம் ரூபாய்—கிடைக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிறபோது, விவ சாயி, நாம் மட்டும் ஏன் நெல்லைப் பயிரிட வேண்டும் என்று தானே எண்ணுவான். அவன் மனதிலே உதிக்கும் எண்ணம் அப்படியாகத் தான் இருக்கும். நியாயமான விலை கிடைக்கிறதென்றால் விவசாயி கட்டாயம் நெல் பயிரிடுவான். ஆகவே, நியாயமான முறையில் அவனுக்கு விலை கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக நமது இலாகாக்களிலும் டெமான்ஸ்ட்ரேட்டர்கள் இருக் கிறார்கள். கம்யூனிட்டி டெவலப்மெண்ட்டிலும் டெமான்ஸ்ட்ரேட்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருவருக்கும் ஒத்துப் போவதில்லை. இவர்கள் ஒரு போக்கு—அவர்கள் ஒரு போக்கு. இவர்களுடைய அனுபவத்தை, விவசாயிகளுடைய அனுபவத்தை வைத்துத்தான் பார்க்க வேண்டும். இவர்கள் சொல்வதற்கும் விவசாயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் இதை நேரடியாக அனுபவித்தவன். நாம் எதிராகச் சொன்னால் அவர்கள் நம் பக்கமே பார்ப்பதில்லை. ஒரு சமயம் டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் திரு. சிவராமன் அவர்கள்

வந்திருந்தார்கள். "இப்போது இருக்கும்படியான இன்னின்ன விதைகளை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். ஏ.டி.டி. 27 விதை வந்திருக்கிறது. அது அதிகமாக விளைச்சலைத் தருவது—சிறந்த விதை—அதை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார்கள். அந்த டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சர் ஆபீசரின் செயலால் என் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான ஏக்கரிலே மக்கள் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்கள், ஏ.டி.டி. 27 நல்ல விதை, அதை நாம் பயிரிட வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த விதை ஜூன், ஜூலையில் போட்டு, செப்டம்பர் அக்டோபரில் அறுவடையாகி விட்டால்தான் நல்ல பலன் தரும். அதற்குப் பிறகு போட்டால் நிச்சயமாகப் பலன் அளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் பகுதியில் பூச்சி வந்தது, பயிர்கள் நாசமாகிவிட்டன. இந்தப் பொறுப்பை யார் ஏற்றுக் கொண்டுவிடுவார்கள்? நான் அந்தப் பருவம் தவறி போட வேண்டாம் என்று சொன்னேன். மக்கள் என்னை நம்பவில்லை. மறுபடியும் அந்த ஆபீசர் அந்த இடத்தை வந்துபார்த்தாரா? என் ஆயிரக்கணக்கான ஏக்கரிலே அந்த விதையைப் போடச் சொன்னார்? இந்த நிலையில் விவசாயிதான் கஷ்டப்படுகிறான். "உரலுக்கு ஒரு புறம் இடி என்றால் மத்தளத்திற்கு இருபுறமும் இடி" என்பது போல விவசாயி கஷ்டப்படுகிறான். ஆனால் எட்டு பங்கு புரக்யூர்மெண்ட் செய்ய வந்துவிடுகிறார்கள். டிஸ்டிரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசரின் யோசனையால் பருவம் தவறிய காரணத்தாலும் பூச்சி வந்து பயிர்கள் எல்லாம் பாழாகிவிட்டன. பவானி, ஈரோடு பகுதிகளில் இப்படி நடந்தது. ஏ.டி.டி. 27 பயிரை தஞ்சாவூரில் நீண்டகாலப் பயிரை நீக்கி, இரண்டாம் தரமாக போட சர்க்கார் முயன்று வருகிறது. செப்டம்பர், அக்டோபருக்கு மேல் போட்டால் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் நஷ்டமாகி, மக்களுக்கு அரிசி கிடைக்காது என்பதை இப்போதே எச்சரிக்கையாக விடுக்கிறேன். முன்னாலே போட்டிருந்த திட்டமாக இருந்தாலும் கூட இதை அமுல் நடத்தக்கூடாது. சில பயிர் வகைகள் சில காலத்திற்கு ஏற்ற வகையாக இருக்கின்றன. It is season-bound and not period-bound இந்த ஏ.டி.டி 27 என்பது ஜப்பானிலிருந்து வந்த ஒரு ஜாதி நெல்லும், நம் நாட்டு நெல்லும் கலந்து உண்டான ஒரு புது ஜாதி நெல் ஆகும். இது ஒட்டு ஜாதி நெல். இது முதல் போகத்திற்குத்தான் நல்ல விதையாக இருக்கிறது. இரண்டு போகத்திற்கு இது சரிப்பட்டு வராது. செப்டம்பர், அக்டோபரில்தான் வேளாண்மை செய்ய இருக்கிறது. இது சரிப்பட்டு வரும் என்று அவர்கள் சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். பெரும் பகுதியான இடங்களில் இத்தனை ஏக்கர்களில் இதைப் பயிரிட்டால் நல்லது அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, அதை ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஜூன், ஜூலை மாதங்களில் தவிர மற்றமாதங்களில் அது பலன் தராது என்று சொல்கிறார். ஜனவரி, பிப்ரவரியில் விதைத்தால் நல்ல பலன் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நடைமுறைக் கேள்வி அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : செப்டம்பர், அக்டோபரில்தான் சரியாக வராது என்று சொன்னேனே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பேச்சை அவ்வளவு கவனமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார். நான் இனிமேல் வாத்தியார் வேலைதான் செய்ய வேண்டியிருக்கிறது. அதுதான் இதில் உள்ள பெரிய தகராறு. ஜனவரி, பிப்ரவரியில் அந்த நெல் வராது என்று நான் சொல்லவில்லை. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில்தான் பயிரிடக் கூடாது என்று சொல்கிறேன். இதைப் பற்றி அவர் என்னிடமே கேட்டார். சொல்லியிருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் சீக்கிரம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால் நடை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. இன்னும் அதிகப் பணம் ஒதுக்கியாக வேண்டும். இன விருத்தி மாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். கலப்பின மாடுகள்தான் தேவை. இன்றையதினம் விலைவாசிகளைக் குறைத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஒரு ஜோடி மாடு பழைய கோட்டையில் வாங்குவதானால் இரண்டாயிரம், மூவாயிரம் ஆகிறது. அது ஏர் உழுமா என்றால் உழாது. ஆகவே, இன்றுள்ள நிலையில் மலிவு விலையில் இயந்திரக் கலப்பைகள், டிராக்டர்கள் முதலியவற்றை அதிகப்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மீன் வளம். அதைப் பற்றி திரு. ஹாண்டே அவர்கள் புகார்ச் சொன்னார்கள். மீன் வளம் நன்றாக வளர்ந்து வருகிறது. கீழ் பவானி தொகுதியில் இருந்து வருகிற நான் நிச்சயமாக சொல்ல முடியும். நல்ல நல்ல மீன்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு அபிவிருத்தி அடைந்து வருகின்றன. மேலும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அது நல்ல சத்துள்ள உணவு. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீங்கள் சாப்பிடுவீர்களா?) நன்றாகச் சாப்பிடுவேன். அமைச்சர் எந்தப் பொருளில் கேட்கிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இத்துறையில் நல்ல ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கொடுத்து மீன் வளத்தை பெருக்க வேண்டும்.

அடுத்தபடியாகக் காடுகள். காட்டிலாக்காவைப் பற்றி நான் வருத்தத்துடன்தான் சொல்லிக் கொள்ளவேண்டும். மேல் மட்டத்தில் உள்ளவர்கள் காடுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் இருந்தாலும் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் இதைப் பாழடிப்பதற்காகவே இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். டி.எப்.ஓ. மேல் மட்டத்தில் இருந்து காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் கீழ் மட்டத்தில் அங்கங்கே என்ன நடக்கிறது என்பதை அவர்கள் சென்று பார்ப்பதில்லை. காடுகளில் மாடுகளை மேய்ப்பதற்குப் பாஸ்கள் கொடுக்கிறார்கள். நான் இப்படி பாஸ்கள் கொடுப்பதையே எடுத்துவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கடைகள் கட்டுவதற்குப் பாஸ்கள் கொடுக்கிறார்கள். கடைகள் போட்டால் அந்த மாடுகள் 5 அல்லது 6 மைல்கள் சென்று மேய்ந்தாலும் திரும்பவும் எந்த இடத்தில் கடை போடப்பட்டதோ அந்த இடத்திற்கே இரவு வந்துவிட வேண்டும் என்கிறார்கள். தவறி வேறு எங்காவது இரவு தங்கிவிட்டால், கீழ் நிலையில் உள்ளவர்கள் கண்ணில் பட்டுவிட வேண்டும், அவ்வளவுதான் இரண்டு மூன்று மாடுகளை விற்று அவர்களது தொந்தரவில் இருந்து விடுபட்டாக வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மாடுகளுக்குப் பாஸ் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் இந்த வீணான சிரமங்கள் அவர்களுக்கு ஏற்படும்படியாகச் செய்யக்கூடாது.

அடுத்து கீழ்ப் பவானி ஏரியாவில் காட்டு இலாக்காவுக்குச் சொந்தமான 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ்ப்பவானி அணைப் பிரதேசத்தில் ஒரு ஆறு கிராமங்கள் முன்பு அடிபட்டிருக்கின்றன. புதுப்பீர்க்கடவூர், ராஜநகர் போன்ற கிராமங்களில் அந்த மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய வீடுவாசல், நிலம் முதலியவற்றை எல்லாம் அந்த அணைக் கட்டுக்காகக் கொடுத்துவிட்டே வேறு இடத்தில் குடியேறித் தவித்துக் கொண்டிருக்கிற அந்த ஆறு கிராம மக்களுக்கு முதலில் இந்த 50 ஆயிரம் ஏக்கர் காட்டு நிலத்தையும் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுத்தது போக இருந்தால் தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. மற்ற மானியங்களைபோன்ற மானியம் அல்ல இது. இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைக் குறைக்க வேண்டும் என்பது வெட்டுத் தீர்மானம் என்றாலும், இதற்கு இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி

சுறுசுறுப்பாகப் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியத்தின்மீது 39 அங்கத்தினர்கள் பங்கு கொண்டு சிறந்த பல கருத்துக்களை நல்கி இருக்கிறார்கள். அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டுள்ள நல்ல யோசனைகளைமட்டும் செயல் படுத்துவதற்கு எல்லாவிதமான முயற்சியையும் இந்த மந்திரி சபை மேற் கொள்ளும் என்கிற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல விவசாயி. அனுபவம் உள்ளவர். அவர் குறிப்பிட்டதுபோல நீண்ட நாட்களாக எனக்கு அவரோடு பழக்கம் உண்டு. ஆனால் காங்கிரஸ் கட்சியில் அவர் இருப்பதைவிட சுதந்திராக் கட்சியில் இருக்க வேண்டுமென்று நீண்ட நாளைக்கு முன்னேயே சொல்லி யிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் அவர் இருந்தாலுங்கூட விவசாய மானியம் வரும்போது அவர் விவசாயிகளுக்காகவே 1952-இல் இருந்து பேசிக்கொண்டு வருவதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே இது ஒரு பழைய பல்லவி என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்றைக்கும் நான் விவசாயிகளுடைய கட்சி தான். விவசாயிகளுடைய கட்சியில் இருப்பதற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி ஒரு கட்சியை திரு. கருத்திருமன் அவர்கள் ஆரம்பிப்பார்கள் என்றால் அதன் துவக்க நாளை நான் எதிர்பார்க்கிறேன்.

விவசாய மானியத்தைப் புறக்கணித்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்க வேண்டும், நல்ல திட்டங்களைத் தரவேண்டும், கூடுதலாக மத்திய சர்க் காரிடம் இருந்து நிதியை வாங்கி வழங்க வேண்டும் என்கிற காரணங் களினால்தான் இம்மாதம் 7-ம் தேதி நடந்த விவசாய மகாநாட்டுக்கு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதியின் பேரில் நான் சென்று இருந் தேன். அதனால்தான் இந்த மானியம் கடைசியாக வந்தது. நீர்ப்பாச னத்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதுபோல, இது நீர்ப்பாசனத்தோடு இணைந்த பிரச்னை. ஆகவே அடிக்கடி திருத்தம் வேண் டாம் என்கிற அடிப்படையில் நீர்ப்பாசனத்திற்கு அடுத்த மானியமாக இதை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்தோம். நான் காலையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வளவு நேரமும் எல்லா உறுப்பினர்களும் இருந்து இந்த மானியத்தை நிறைவேற்றிக் கொடுக்க இருப்பதற்கு நான் பெருமை கொள்கிறேன். இதற்குப் பலர் வெட்டுத் தீர்மானம் கொடுத் திருந்தாலும் எல்லோரும் ஒட்டியே பேசினார்களேயொழிய இந்தத் துறையில் நிதி வெட்டுச் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. மாறாக இன்னும் அதிக நிதி இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட முடி விலே வெட்டுத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளப் போகிறோம் என்று குறிப்பிடுவார்கள் என்று இருந்தேன். அவரும் சம்பிரதாயமாக ஆதரிப்பதாகச் சொன்னார்கள். அவர் காலையில் இருந்து இங்கேயே இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அமைச்சர்கள் எப்படி இருக்கவேண்டியது அவசியமோ அப்படியே எதிர்க்கட்சித் தலைவரும் இருக்க வேண்டியது அவசியமாகும். (திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் **என் அறையில் இருந்து மைக் மூலம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.)** ஆயினும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் குறையை நிவர்த்தி செய்திருக்கிறார்கள். அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோவையில் நடந்த அசம்பாவிதம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆடுதுறை விதையை எல்லா மாதங் களிலும் போடலாம் என்பதாக ஜில்லா அதிகாரி சொல்லி விவசாயிகள் செய்யவில்லை; அவர்களே அந்த விதையைப் போட்டால் அதிகப் பலன் கிடைக்கும் என்று நினைத்து இறங்கினார்கள். தஞ்சையில்கூட முதல் போகம்தான் ஆடுதுறை விதை போடப்படுகிறது. மழை காலத்தில் அதைப்போட்டால் ப்ளாஸ்ட் என்ற நோய் வருகிறது என்பதை அதிகாரிகள் தெரிவித்தே வருகிறார்கள். ஜூன், ஜூலை, ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில்தான் போடுகிறார்கள். அந்த இலாக்கா இயக்குநருடைய திறமை எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியாதது அல்ல. ஒரு காரியத் தைச் சர்க்கார் மேற்கொண்டது என்று தவறான எண்ணத்தில் சொல் வார்களானால் அதற்காக நான் வருந்துவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்றுதான் சொன்னார்கள் என்றுதான் அதை எடுத்துக் கொள்வேனே தவிர வேறு முறையில் கருதமாட்டேன்........

திரு. பி. ஜி. கருத்திருமன் : தயவு செய்து அங்கே இருக்கிற விவசாயிகளிடம் டி.ஏ.ஓ. என்ன சொன்னார் என்று கேட்பதற்காக விசாரணை நடத்தினால் அதை ஒப்புக் கொள்ள நான் தயாராக இருக் கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி டி.ஏ.ஓ. சொல்லி யிருந்தால் அது தவறு. அதற்காக டைரக்டர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால் அதற்கு ஆதாரம் வேண்டும். வாயளவிலே சொன் னால் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1964–65-ல் உற்பத்தி 58 லட்சமாக இருந்தது. அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 80 லட்சமாக ஆக்க வேண்டுமென்று பல திட்டங்கள் மேற் கொள்ளப் படுவதற்காக அப்பொழுது உணவுக் கமிஷனராக இருந்த திரு. ராயப்பா திட்டங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி அவர்கள் ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். கூடியவிரை விலே அதைப் பரிசீலனை செய்து முடிவுகள் எடுக்கப்படும். அந்த அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது. உயர்வு விளைச்சலிலே ஹை ஈல்டிங் புரோ கிராமிலே 527,000 டன் உற்பத்தியானது; இந்த ஆண்டிலே 1,741,000 டன் நெல்லை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட் டோம். ஆடுதுறை 27 ரகத்திலே 1,350,000 ஏக்கர்களைக் கொண்டுவர முடிவு செய்து ஆடுதுறை 27-க்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு கொடுக்க முயற்சிக்கிறோம்.

அடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாவட்டம் கோயம் புத்தூர். அந்த கோவையை சேர்ந்த சி.ஓ. 25, சி.ஓ. 29 ஆகிய ரகங்களு க்கும் முக்கியத்துவம் தரவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள் என்று மத்திய சர்க்காரிடத்திலே சமீபத்திலே நடைபெற்ற ஏழாம் தேதி மாநாட் டிலே வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே மத்திய சர்க்கார் இதை ஆதரித் தால் தேவையான ரசாயன உரம் கிடைத்தால் நல்ல பலன்களை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மழைக் காலத்திலே இந்த ஆடுதுறை 27, சி.ஓ.25, சி.ஓ. 29 இவற்றைப் பயன்படுத்தவேண்டுமென்று விவசாயிகளிடம் சொல்லியிருக்கிறோம். ஒரு போக நிலத்தை இரண்டு போக நிலமாக ஆக்குவதற்கு விவசாய இலாகா இயக்குநர், செயலாளர், நீர்ப்பாசன இலாகா செயலாளர் இவர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். தஞ்சையிலே அதன்படி 4½ லட்சம் ஏக்கர் களைக் கூடுதலாக இரண்டு போகமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள் ளப்படும். சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கர்களை இரு போகமாக மாற்றுவதற்கும் கிருஷ்ணகிரி பகுதியில் 9,000 ஏக்கர்களை இருபோகமாக மாற்றுவதற்கும் முயற்சி எடுத்திருக்கிறோம். இதனாலே கூடுதலாக விளைச்சல் ஏற்படுவதற்குச் சாத்தியம் இருக்கிறது. இதை எதிர்

கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். கனம் உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைகளை எந்த நேரத்திலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

முதலிலே நான் சொன்னதைப்போல் இந்தத் துறையைப் பொறுத்த வரையில் சொன்ன கருத்துக்கள் முழுக்க முழுக்க நல்லவையாக இருக்க லாம். அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் நல்ல கருத்துக்களைச் சொன்னால் அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். விவசாயிகளுடைய கருத் துக்களைக் கேட்டறிவதற்காக ஆங்காங்கே விவசாயக் கருத்தரங்குகள் நடத் தப்பட்டன. திருச்சி, நீலகிரி, சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், சிதம் பரம், மாயவரம், திருநெல்வேலி, வேலூர் ஆகிய ஒன்பது இடங்களில் விவசாய மாநாடுகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. குறிப்பாக விழுப் புரம் விவசாய மாநாட்டிலே நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்து இருக்கிறார்கள். அதே போல புதுக்கோட்டையில் நடைபெற்ற விவசாய மாநாட்டிலே முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே நடந்த மாநாட்டிலே உணவு அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டிருக் கிறார்கள். ஆகவே அமைச்சர்கள் கலந்து கொண்டது மட்டுமல்ல, இங்கிருக் கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் கட்சி வேறுபாடுகள் மாச்சரியங்கள் இல்லாமல் சீரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் செயல்படுத்தக்கூடிய முறையில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு அடையாளமாக நான் பின் னாலே சொல்லப்போகின்ற கருத்தின் அடிப்படையிலும், விவசாயக் கருத் தரங்குகளில் சொல்லப்பட்ட கருத்துக்களையும் சேர்த்து அவற்றை அடிப் படையாக வைத்து முடிவு எடுக்கப்படுகிறது.

மேலும் பல கருத்துக்களையெல்லாம் நான் காலையிலே சொல்லியபடி அறிக்கையிலே கொடுத்திருக்கிறேன். அவற்றை இங்கே படிக்காவிட்டாலும் படித்ததாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே நான் சொல்கின்ற கருத்துக்களில் ஆங்காங்கு விட்டுப்போய் இருந்தாலும்கூட, ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்துக்கும் பதில் சொல்லப்படும். அவர்களுக்குப் பதில் அனுப்புவதற்குக்கூட முயற்சிக் கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்களில் சில பேர்கள் அவர்கள் வெட்டுத தீர்மானங்களில் கொடுத்தவற்றைப் பேசாமல் விட்டுவிட்டார்கள்; விவசாயக் கல்லூரியைத் திறக்க வேண்டுமென்று யாரும் சொல்லாவிட் டாலும் அதை அடுத்த ஆண்டு திறப்பதற்கு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெறப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு அறிவிக் கிறேன். எந்த ஜில்லாவில் திறக்கப்படும் என்பது பிறகு அறிவிக்கப்படும். மூன்று மாவட்டங்களிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அது எந்த ஜில்லாவில் அமைக்கப்படும் என்பதை முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்வார்கள். விவசாயக் கல்லூரி வர இருக்கிறது என் பதை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். விவசாயக் கல்லூரியில் படித்த மாணவர்களில் 70 பேர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறது. ஆனால் விவசாயக் கல்லூரி திறக்க வேண்டுமென்று நிறையக் கோரிக்கைகள், விண்ணப்பங்கள் வரக்கூடிய நிலை இருக்கிறது. விவசாயக் கல்லூரியிலே பயிற்சிபெற்றவர்கள் நேரடியாக விவசாயத்திலே ஈடுபட வேண்டும். விவசாயக் கல்லூரி வேண்டுமென்று மூன்று மாவட்டங்களி லிருந்து கேட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது மூன்று இடங்களில் ஏற்கெனவே விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. கோவை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் இருக்கின்றன. ஆகவே, அதிகப்படி யாக ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதாக முடிவுசெய்யப்பட்டிருக் கிறது.

உரக்கட்டுப்பாடுபற்றிச் சொல்லப்பட்டது. உரம் விவசாயத்திற்குப் பரவ லாகத் தேவைப்படுகிறது. நேரமில்லாததால் மிகவும் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். நமக்கு 163,000 டன் நைட்ரஜன் தேவையாக இருக்கி றது. ஆனால் மத்திய சர்க்கார் கொடுக்க உத்திரவாதம் அளித்திருப்பது 83,000 டன்தான். முதல் தவணையாக அவர்கள் அனுப்பியிருப்பது 29,000 டன், இரண்டாவது தவணையாக செப்டம்பர் 30-ம் தேதிக்குள் கிட்டத்தட்ட 63,000 டன் அனுப்ப இருக்கிறார்கள். இதிலே உயர் ரக நெல்லுக்கு மட்டும் 48 ஆயிரம் டன் உரம் தேவைப்படுகிறது. ஹை ஈல்டிங் முறையில் விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு எல்லாம் உரம் நிச்சயமாக கொடுக்கும் என்பதை இந்தச் சர்க்கார் உத்தரவாதத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. அதை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டிருக் கின்றவர்களுக்கு உரம் கிடைக்காத நிலை இருக்காது. கார்டு முறையிலே கொடுக்கப்படும். நிச்சயமாகக் கார்டு முறை விரைவிலே வர இருக்கிறது. இதை, நடைபெற்ற ஏழு எட்டு விவசாய மாநாட்டிலும் பேசி ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலிலே பேசிய நண்பர் சுப்ரமணியம் அவர்கள் கேட்டார்கள், உரம் இருக்கிற அளவிலே பகிர்ந்து ,கொடுக்கப்படுமா அல்லது நிலத்திற்குத் தகுந்தவாறு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். உரம் இருக்கிற அளவுக்குத் தகுந்த அளவில்தான் கொடுக்கப்படும். நிலம் இருக்கிற அளவுக்குக் கொடுக்க முடியாது. இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திடம் கணக்குக் கொடுத்திருக்கிறோம். நானும் உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்களும் அவர்களிடம் இவ்வளவு உரம் தேவைப்படுகிறது என்று கேட்டோம். அவர்கள் நெல் கேட்டார்கள். "கமான், லெட் அஸ் எக்ஸ்சேஞ்ஜ்" என்ற முறையிலே கேட்டார்கள். அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஒத்துக்கொண்டிருக் கிறோம். மத்திய உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் தமிழகத்திற்குக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் பேசு கிறேன். நம்முடைய முயற்சியைப் பாராட்டி அவர்கள் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக் கடிதத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் உதவிகளைக் கேட்டிருக்கிறோம். அவசியம் உதவி செய்கி றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே கிடைக்கப்படு கின்ற உரத்தை நிச்சயமாக ஹை ஈல்டிங் வெரைடீஸ் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நிச்சயமாகக் கொடுப்போம். மீதியிருப்பதை எந்த அளவுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கிறதோ அதைப் பொறுத்து கார்டு மூலம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். ஒரு கிராமத்திலே இல்லாவிட் டாலும் கார்டு மூலமாக இன்னொரு கிராமத்திலே வாங்கிக் கொள்ளலாம். இதைப்பற்றி விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்கள் கூட்டுறவுத் துறையிலே அனுபவம் உள்ளவர்கள், விவசாயச் செயலாளர், இயக்குநர் இவர்கள் எல்லாம் கூடி முடிவு எடுப்பார்கள்.

காட்டுவளத்தைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். காட்டு நிலங்களைப் பாதுகாக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. காடு அதிகமாக இருந்தால்தான் மழை கணிசமாக இருக்கும். அதே நேரத் தில் காடாக இல்லாத வெறும் இடங்களை விளைச்சல் நிலங்களாகக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பல வருஷங்களாகக் குடி யேறி விவசாயம் செய்து வருகிறவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு வேறு இடங்களில் நிலம் கொடுக்கப்படும். மதுரையிலே வருஷ நாடு பகுதியில் 40 ஆயிரம் ஏக்கர் நிலம் அளிக்க இருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதேமாதிரி சேலம் மாவட்டத்தில் வனவாசி பக்கநாடு பகுதியில் 6 ஆயிரம் ஏக்கர் நிலமும் பவானிசாகர் பகுதியில் 6,000 ஏக்கர் நிலமும் விவசாயிகளுக்குக் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறோம்.

மாலை 6-30

வேறு பல காடுகள் இருப்பதாகவும், அவற்றையும் விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றும் உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். அதை யும் செயல்படுத்த அரசாங்கம் தயங்காது. அந்தக் காடுகளை எல்லாம் நேரடியாகச் சென்று பார்த்து, விவசாயத்திற்குக் கொண்டுவரக் கூடிய நிலங்கள்தானா என்று பார்த்துச் செய்யலாம்.

கமர்ஷியல் கிராப்சுக்கு 50 சதவிகித மானியமும், உணவு தானியங்களுக்கு 25 சதவிகித மானியமும்தான் தரப்படுகிறது. உணவு தானியங்களை உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக மானியம் தரவேண்டுமென்று தெரிவித்தார்கள். இந்தக் கோரிக்கையை விவசாயக் கருத்தரங்கிலும் பலர் தெரிவித்தார்கள். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும், மற்றவர்களும், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் தெரிவித்தார்கள். அது நல்ல கருத்து, நியாயமான கோரிக்கை என்ற காரணத்தால் வியாபாரப் பொருள்களுக்கு 15 சதவிகிதத்தைக் குறைத்துக்கொண்டு உணவு தானியப் பொருள்களுக்கு 10 சதவிகிதத்தைக் கூட்டி 35 சதவிகிதமாக எல்லோருக்கும் சமமாக வழங்குவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இதனால் சர்க்காருக்குக் கூடுதலாகக் கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் வேண்டுமென்று சொன்னார்கள், பூச்சி அடித்துக் கோவை மாவட்டத்தில் 20,000 ஏக்கர் சாவியாகப் போன செய்தியைக் கேட்டு நானும் உணவு அமைச்சர் அவர்களும் சென்று பார்த்து விட்டு வந்தோம். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மத்திய சர்க்கார் சட்டத்தை உருவாக்க யோசித்து வருகிறார்கள். அந்தச் சட்டம் அமலுக்கு வரும்போது நாமும் அதை அமலுக்குக் கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டிராக்டர்களைப்பற்றிப் பேசப்பட்டது. இப்போது யார் சொந்தத்தில் டிராக்டர்கள் வாங்கக்கூடியவர்களோ அவர்கள் கடன் விண்ணப்பம் போட்டு பெற்று வருகிறார்கள். நடுத்தர விவசாயிகளுக்கு வசதி இல்லாமல் இருந்தால் அந்த வசதி ஏற்படுகிற முறையில் நல்ல முறையில் விளம்பரம் செய்து, விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றைப் பரிசீலனைசெய்து விவசாயிகளுக்கு டிராக்டர்கள் வழங்க முடிவு செய்திருக்கிறோம். இதன்மூலம் நடுத்தர விவசாயிகள் பெரிதும் பயன் பெறுவார்கள்.

சொந்த நிலம் இல்லாதவர்களுக்குக் கடன் வசதி வேண்டுமென்று கேட்டார்கள். அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான்.

விதைப் பண்ணைகள் 300 அளவுக்கு மத்திய சர்க்கார் உதவியால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இப்போது அது 70 ஆகக் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் நல்ல நிலம் இல்லாமல், நீர்ப்பாசன வசதி இல்லாமல் இருக்கக்கூடிய இடங்களில் அவசர அவசரமாக விதைப் பண்ணைகளை ஏற்படுத்திச் சர்க்கார் பணத்தை விரயமாக்கியதுதான். இவ்வாறு சர்க்கார் பணம் விரயமாகிறது என்று எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் எஸ்டிமேட் கமிட்டியில் இருந்தபோது நானே இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்திருக்கிறேன். இது இப்போது 70 ஆகக் குறைக்கப்பட்டு இப்போது 52 பண்ணைகள்தான் லாபகரமாக இயங்கி வருகின்றன. மற்றவை லாபகரமாக இயங்கவில்லை. அவைகளும் ஒழுங்காக இயங்க சர்க்கார் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது.

சிறவை என்ற பறவை தஞ்சை மாவட்டத்தில் பயிர்களை நாசம் செய்து விடுவதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பறவையைப் பிடித்து வியாபாரம் செய்கின்ற நோக்கத்தில் பிடிக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். 'பேர்டு சாங்சுவரி போர்டைக்' கலந்து அந்தப் பறவையை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்கலாம். அதுவரை பறவைகளை ஸ்கார்ஸ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலாம் என்று கருதுகிறேன்.

உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் நிதியை எல்லாம் ஏன் குறைத்து விட்டீர்கள் என்று கேட்டார்கள். உணவு உற்பத்தி விஷயத்தில் எந்த அளவுக்கு உற்பத்தி மூலதனச் செலவு இருந்தாலும், நடைமுறைச் செலவு இருந்தாலும் அது குறைக்கப்படவில்லை. அதுபற்றி விரிவாகச் சொல்வதற்கு நேரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாராளமாகப் பேசலாம். நேரத்தை முடிவு செய்வது என்னுடைய கடிகாரத்தைப் பார்த்துதான்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது போடப்பட்டிருக்கும் செலவுத் தொகைகூடக் கூடுதலாக முடியும். மத்திய சர்க்காரிடத்தில் இருந்து 20 கோடி ரூபாய் கேட்டோம். ஐந்து கோடி ரூபாய் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் வரும்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அந்தத் தொகை அவசியம் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார இணைப்பு விஷயத்தில் காலதாமதம் இருக்கிறதென்று ஈரோடு திரு. சின்னசாமி அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் கலந்து கொண்ட கருத்தரங்குகளிலும் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி மின்சார போர்டு தலைவர் திரு. அப்பாதுரை முதலியார் அவர்களிடத்தில் சொல்லி துரித நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருக்கிறோம். போதுமான மெடீரியல்ஸ் கிடைக்காததுதான் காலதாமதத்திற்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கக் கூடாது என்ற நிலை இல்லை. இப்போது துரிதமாகக் கேட்ட இடங்களில் கொடுத்து வருகிறோம். அதனால்தான் உறுப்பினர் பேசும்போதுகூட எந்தக் கிராமத்தில் அக்ரிமெண்ட் ஆகி இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறது என்று கேட்டேன். அதுபற்றிக் குறிப்பாகச் சொன்னால் துரிதமாகக் கொடுப்பதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

கம்யூனிடி வெல்பேர்பற்றிச் சொன்னார்கள். சர்க்காரே பத்துப் பதினைந்து கிணறுகளை வெட்டி பம்ப் செட் வைத்துத் தண்ணீர் கொடுத்து அதற்கான தொகையை மொத்தமாக வசூல் செய்து கொள்ளலாம் என்றார்கள். பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமானால் பரவலாகச் செய்யலாம் என்று அதற்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நான்கு கிணறுகளை வெட்டிச் சரியான முறையில் இயங்குகிறதா என்று பார்த்து பின்னர், விஸ்தரித்துக்கொள்ளலாம்.

கூட்டுப் பட்டாதாரர்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முதலில் தஞ்சை, செங்கற்பட்டு மாவட்டங்களில் பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். கூட்டுப் பட்டா இருந்தாலும் கடன் வசதி பெற வழி இருக்கிறது. கடன் கேட்டால் சீக்கிரம் கிடைப்பதில்லை என்று சொல்லப்பட்டது. நண்பர் திரு. முருகையன் அவர்கள் அதுபற்றி விரிவாகப் பேசினார்கள். கடன் கேட்டு வரும் விண்ணப்பங்களுக்கு கடன் கிடைக்குமா, கிடைக்காதா என்பதைப்பற்றி ஒரு மாத காலத்திற்குள்ளாக பைசல் செய்துவிட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். கடன் கொடுப்பதாக இருந்தால் சென்று வாங்கிக் கொள்ளலாம். கடன் இல்லை என்றால் வீணாக அலைந்து செல்ல வேண்டியதில்லை.

கால்நடை இலாகாக்களைப்பற்றி இங்கே கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறினார்கள். அது சர்க்காருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. மாட்டுக்கு எவ்வளவு வயது, எவ்வளவு பிரிமியம் இருக்க வேண்டும் என்பதுபற்றியெல்லாம் யோசித்து வருகிறார்கள். கால்நடை உதவி மருத்துவர்களை கெஜெட் பதிவு பெற்றவர்களாக நியமிக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்தக் கோரிக்கையை அவர்கள் மதுரையில் துணை மருத்துவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். அதன்படி அவர்கள் கெஜெட் பதிவு பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டாலும் அதிக ஊதியம் பெற வழி இல்லை. அவர்களுக்கு ஒரு அந்தஸ்து வருகிறது. ராஜபாளையத்தில் கால்நடைப் பண்ணை வைக்கவேண்டுமென்று

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1967 ஜூலை 14

கோரப்பட்டது. செட்டிநாட்டில் ஒன்று இருக்கிறது. அதே மாவட்டத்தில் இன்னும் ஒன்று தேவையில்லை என்று கருதுகிறேன். கால்நடைகளை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

கால்நடைகளுக்காக வீண் செலவாகிறது என்ற குற்றச்சாட்டுப் பரவலாகச் சொல்லப்படுவதால் கோழிப் பண்ணையைப் பரிசீலனை செய்வதற்காக நேரடியாகப் போய் பார்த்து வர, உத்தியோகப் பற்றற்ற மூவரைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழு சுற்றிப் பார்த்து பரிசீலனை செய்து வருகிறார்கள். அந்தக் குழு தகவல் கொடுத்த பிறகு, கோழிப் பண்ணைகளை விரிவுபடுத்துவதுபற்றி யோசிக்கலாம். கால்நடைகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்படாததற்குக் காரணம் மத்திய அரசு கொடுத்து வந்த நிதி தடைப் பட்டதால் இன்றைய நிதிநிலைமையில் அம்மாதிரி செயல்படுத்த முடிவிற்கு வந்திருக்கிறோம். தரமான கால்நடைகள் வேண்டும் என்பதுதான் நம் நோக்கம்.

ட்யூவல் பர்பஸ் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளவேண்டிய விஷயந்தான். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் காங்கேயம்பற்றிக் கவலைப்பட்டார்கள். அவருக்குக் கவலையுண்டு. அது அவர் மாவட்டம். அவர் அது குறித்து ஒத்துக்கொள்ளவில்லை. காங்கேயம் உழைப்பிற்காகத்தான் இருக்கிறதே தவிர, நல்ல பால் கொடுக்கக்கூடிய தல்ல என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மறுத்தார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் கூடத்திடுக்கிட்டுப் போனேன். அந்தக் கடிதத்தைக் கூட அனுப்பி வைத்தார்கள். கால்நடை டைரக்டர் அவர்களாகவே செய்த தவறு அல்ல. ஃபோர்ட் பவுண்டேஷன் டீம் மத்திய அரசின் அனுமதியின் பேரில் இங்கு வந்திருக்கிறார்கள். திரு. சுப்பையா முதலியார் அவர்கள் கருத்து நிச்சயமாகக் கவனிக்கப்படும். மத்திய அரசு சொல்லிவிட்டார்கள் என்பதற்காக இங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்களானால் மாற்று வழிகள் சொல்லத் தயங்கமாட்டோம். ஆனால், அது அவர்களாகவே செய்த தவறல்ல. அவர்கள் சொந்தப் பொறுப்பில் செய்துவிட்டார்களோ என்று திரும்பிப் பார்த்தேன். எனக்குள்ள தகவல்படி மத்திய அரசு அனுமதியின்படி இதுபற்றி பேசி அவர்கள் சிபார்சை எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். கால்நடைகள் மேயக் கூடாது என்று சொன்ன கருத்தை நான் கூட ஒத்துக்கொள்ள முடியாது. நல்ல மேய்ச்சல் காடுகள் வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், அங்கத்தினர்களும் மேய்ச்சல் காடுகள் ஒதுக்கப்பட வேண்டும், மந்தைவெளி வேண்டும், அவற்றை வேறு காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தை பரவலாகச் சொல்லி வருகிறார்கள்.

திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், திருப்பனந்தாளில் கால்நடை மருத்துவ நிலையம் வேண்டுமென்று. ஒரு யூனியனுக்கு ஒரு கால்நடை மருத்துவ நிலையம் என்றிருப்பதால் வேறு ஒன்று திறக்கமுடியாது. சர்க்கார் நிதிநிலை சரியானால் இரண்டு மருத்துவ மனைகள் திறக்க வாய்ப்பிருக்குமானால் அது பற்றி யோசிக்கலாம்.

மீன்வளம் பற்றிப் பல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. மார்டின் அவர்கள் பேசும்போது ஒரு உருக்கமான செய்தியைச் சொன்னார்கள். உத்தரவு போடப்பட்டும் இன்னும் 'போட்' வழங்கப்படவில்லையே என்றார்கள். எல்லோருக்கும் போட்கள் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில்தான் பேசுகிறார்கள் என்று கருதினேன். ஆனால் முடிக்கிற போது கிருஷ்ணபாய் ராமுண்ணி மேனனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அரசியல் காரணத்திற்காக அதை நிறுத்தக் கூடாது என்று சொன்னார்கள். அவர் வழக்கறிஞர். அரசியல் காரணத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள் என்ற கருத்தை அவரே மறைமுகமாக ஒத்துக்கொண்டு பேசியதற்காக

1967 ஜூலை 14] [திரு. ஏ. கோவிந்தசாமி]

நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். போட் வழங்கும் உத்தரவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மீனவர்களுக்கு போட் வழங்கக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தோடு அல்ல. அது சம்பந்தமாகப் புகார் வந்திருக்கிறது. அதை விசாரித்துக் கொண்டிருக்கிறோம். கூடுமான வரையில் மீனவர்களுக்கு போட் வழங்கப்பட்டு அதிகப்படியான மீன் சேகரிக்கவேண்டுமென்ற எண்ணம் உடையவர்களில் நானும் ஒருவன். திரு. மார்டின் அவர்கள் நல்ல முறையில் கருத்தை எடுத்து வைக்கமுடியாத நிலைக்கு வருந்துகிறேன். அவர் எனக்குத்தான் உதவி செய்தார்.

முன்பு மீனவர்கள் கட்டுமரங்களில் சென்று மீன் பிடித்து வந்தார்கள். இப்போது அவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க போட்கள் கட்டப்பட்டு கொடுக்கப்படுகின்றன. மண்டபம், நாகப்பட்டினம்,ராயபுரம், எண்ணூர் போன்ற இடங்களில் போட் கட்டுகிற தொழில் நடைபெற்று வருகிறது. போட் கட்டும் தளத்தில் வேலை செய்கிறவர்கள், கிட்டத்தட்ட ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்கிறவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் தினக் கூலிகளாக இருந்து வருகிறார்கள் என்று குறை சொன்னார்கள். அவர்களில் இன்றைய தினம் 57 பேர்களுக்கு வேலை நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் வரையில் கூலிகளாக இருந்தவர்கள் இன்றைய தினம் சம்பளத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவர்களுக்குக்கூட சம்பளத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்புபற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உருக்கத்தோடு சொன்னார்கள். உடனே அதைக் கவனிக்கும்படி டைரக்டர் அவர்களிடம் சொன்னேன். நம் இலாகா மூலம் 3,750 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கலெக்டர் ரூ. 7,700-ம், 150 மூட்டை அரிசியும் கொடுத்திருக்கிறார்கள். கடலரிப்பைத் தடுக்க மதில் கட்டவேண்டுமென்று சொன்னார்கள். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தால் பல நன்மைகள் ஏற்படும். அம்மக்களின் பாதுகாப்பிற்காக, அவர்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டிய வசதிகளைச் செய்ய அரசாங்கம் தயார். நல்ல உறுதியான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டம்—நிதிநிலை சரியாக இல்லாததால் அதைக் கவனிக்க முடியவில்லை. அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம், உயிருக்குப் பாதுகாப்பு தருவது, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இவற்றை மேற்கொள்ள அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய நிதிநிலை சரியாக இல்லாததால்தான் இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது. மே மாதம் அடித்த புயலில் 45 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஸீ எரோஷனினால் 35 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அகஸ்தீஸ்வரத்தில் 220 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. ராயபுரம் பகுதியில் துறைமுகம் அருகில் தீயில் ரூபாய் இரண்டு லட்சம் மதிப்புள்ள வலைகள் எரிந்து விட்டன. காசிமேடு பகுதியிலும் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடுகள், உடைமைகள், வலைகள் இவை எரிந்துவிட்டன. அவர்களுக்கு உடனடியாக என்ன நிவாரணம் அளிக்கமுடியுமோ அதை அளித்திருக்கிறார்கள்.

சென்ற ஆட்சியில் நடந்த தவறுதல்கள்பற்றி திரு. ஹாண்டே அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். இராமேஸ்வரம் விஷயத்தில் 10,000 ரூபாய் கையாடப்பட்டிருக்கிறது. அது சம்பந்தப்பட்ட அதிகாரி திரு. வெங்கடராமன் என்பவரை ஸஸ்பெண்டு செய்து வைத்திருக்கிறோம். நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புலிக்காடு மார்க்கெட்டிங் யூனியனில் ரூ. 8,000 கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. பணம் கட்டியாகிவிட்டது. திரு. எஸ். கே. செட்டூர் அவர்களின் ரிப்போர்ட் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். நான் யாருக்கும் பயந்து பணியாற்றவில்லை. மக்களுக்குத் தான் பயப்பட வேண்டும். நான் தனிப்பட்ட ஒருவருக்கும் பயப்படவில்லை. தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள், யார் சுட்டிக் காட்டினாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தயார்.

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1967 ஜூலை 14

திரு. ஹாண்டே அவர்கள் கொள்முதல் விஷயத்தில், விவசாயம் சம்பந்தமாக சொல்கிற கருத்துக்கள் இவற்றைத் தேர்தலில் கூட்டுறவு இருந்தாலும், அந்தக் கருத்தை ஒத்துக்கொள்ள முடியவில்லை என்று தைரியமாக ஒத்துக்கொள்ள முடியாதிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள தயங்க மாட்டேன்.

காட்டு வளம் 16 சதவிகிதம்தான் இருந்து கொண்டிருக்கிறது. 33 சதவிகிதம் காடு இருக்க வேண்டும். துர்ப்பாக்கியவசமாக 16 சதவிகிதம்தான் இருக்கிறது. நல்ல சந்தன மரங்கள், முந்திரி போன்ற அந்நியச் செலாவணி தேடிக் கொடுக்கும் மரங்கள், தேக்கு மரங்கள் இவை எல்லாம் இருக்கின்றன. அதில் சிலவற்றை வெட்டுகிறார்கள் என்ற புகார் வந்து அது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

மேட்டூர் தொகுதி எம்.எல்.ஏ. பேசும்போது விவசாயிகளைக் காட்டு இலாகா தொந்தரவு செய்வதாகக் காலையில் சொன்னார்கள். அவர்கள் கொடுத்த தகவலைப்போல எங்கள் கட்சியின் சார்பிலும் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. கோவிந்தன் அவர்களும் அதே கருத்தைச் சொன்னார்கள். அதைத் துணையாக வைத்து கொண்டு சேலத்திற்குச், மாவட்டத்தில் உள்ள எல்லா எம்.எல்.ஏ.க்களும் சென்று பார்த்தோம். விவசாயத்திற்கு உரிய நிலத்தை விவசாயத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தது உண்மை. உத்தரவு வடிவில் இப்போதுதான் முடிவு எடுத்திருக்கிறோம். அது கூடிய விரைவில் அனுப்பப்படும். அதில் தயக்கம் ஏதும் இராது. துன்புறுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். யாரைத் துன்புறுத்துகிறார்கள் என்று ஆராய்ந்ததில் யாரோ சிலர் புதிதாகக் குடியேறியிருக்கிறார்களாம். ஏற்கனவே இருந்தவர்களுக்குக் குத்தகைக்கு வழங்க முடிவு செய்திருக்கிறதே தவிர, பட்டா வழங்க உத்தேசமில்லை. அரசாங்கத்தின் நிதி நிலைமை சீரானவுடன் காடுகளைப் பெருக்கச் சர்க்கார் தயங்காது. இப்போது உணவு உற்பத்திக்காக 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு, நல்ல முறையில் விவசாயம் செய்தால் 15 ஆண்டுகளுக்குக்கூட நீடிக்கலாம். சர்க்கார் நிதி நிலைமை சரியாகி காட்டுப் பகுதியாக மாற்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் பட்டா செய்யாமலே குத்தகைக்கு மட்டும்தான் குறைந்த கட்டண அடிப்படையில் வழங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சனம் அங்கத்தினர் சொன்ன கருத்துக்கு மதிப்பளித்து 6,000 ஏக்கர் விவசாயிகளுக்கு வழங்க இருக்கிறோம். இதை வழங்குவதற்குக் காட்டு இலாகா அதிகாரிகள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்தான், சம்மதிக்க மாட்டார்கள்தான். காடுகளைப் பாதுகாக்கத்தான் காட்டு இலாகா அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். காட்டுப் பகுதியிலிருந்து 6,000 ஏக்கரை இழக்கிறார்கள் என்றால், அவர்கள் அதற்குச் சம்மதித்தால், நான் கூட அவர்கள் பொறுப்பு இல்லாமல் ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்றுதான் நினைப்பேன். காட்டிலாகாவிடம் இருக்க வேண்டுமென்று எவ்வளவு தூரத்திற்கு வாதாடவேண்டுமோ அந்த அளவுக்கு வாதாடினார்கள். உடனடியாகக் காடுகளாக மாற்ற முடியாத காரணத்தினால் விவசாயத்திற்குத் தர வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். இதிலே முதலமைச்சர் அவர்கள் அழுத்தமாக, உறுதியாக இருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதியில் தரிசு நிலமாக இருந்தாலும், சர்க்கார் புறம்போக்காக இருந்தாலும், காட்டு இலாக்கா நிலமாக இருந்தாலும், அந்த நிலங்களை உணவு உற்பத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ரப்பர் தோட்டத்தைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தோட்டத்தைப் பொறுத்த வரையில் சர்க்கார் கவலையோடு இருக்கிறது, அது நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

1967, ஜூலை 14] [திரு. ஏ. கோவிந்தசாமி]

மேலும் நாகர்கோவில் பகுதியில் அஸிஸ்டன்ட் கன்ஸர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்டு போட முடிவு செய்திருக்கிறோம். இதனால் அவர்கள் மனது திருப்தி அடையும். காட்டு இலாகா பகுதி அங்கு நிறைய இருக்கிறது. அதிகாரி இல்லாத நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே பாளையங்கோட்டையில் டி. எஃப் .ஓ., இருப்பார்கள். அந்தப் பகுதியையும் கவனித்துக்கொள்வார்கள்.

தேக்கு மரங்களை ரிமூவ் செய்கிற விஷயமாக ஹைக்கோர்டிலிருந்து ஸ்டே வந்திருக்கிறது. அதனால்தான் தடையே தவிர வேறு கிடையாது. சொன்ன கருத்துக்கள் கவனித்துக்கொள்ளப்படும்.

ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த கன்னியாகுமரி பெரிய உதவியாக இருக்கும். ரப்பருக்கு வேண்டிய முக்கியத்துவம் கொடுப்பதைப்பற்றி அவர் சொன்ன கருத்தை எடுத்துக்கொள்வோம். இதனால் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால் அவருடைய கருத்துக்கு நிச்சயமாக மதிப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு இலாகாவிலே கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள்—ரேஞ்சர்ஸ், கார்டு முதலியவர்கள்—கடுமையாக நடந்துகொள்கிறார்கள் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. யார் அப்படி நடந்துகொண்டாலும் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். 1953-ல் என்று நினைக்கிறேன், என்னுடைய தொகுதியில்கூட அம்மாதிரி அசம்பாவிதம் நடந்தது. அப்போது அதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுத்தார்கள். எந்த ரேஞ்சர், எந்த கார்டு என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறேன்.

நமது கரூர் தொகுதி உறுப்பினர் 10 அம்சத் திட்டத்தைக் கொடுத்தார்கள். அவருடைய திட்டம் எங்களுக்கு உதவியான திட்டம்தான். அந்தத் திட்டத்தை அமல்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். அவருடைய சீரிய கருத்துக்கள் ஒவ்வொன்றும் மேற்கொள்ளப்படும். அவற்றை எடுத்துக்கொள்ளத் தயங்க மாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா உறுப்பினர்களும் நான்கு நிமிடங்களுக்குள் பேசவேண்டுமென்று தலைவர் அவர்கள் சொன்னாலும் அவராவது 15 நிமிடங்களுக்கு மேல் பேச வேண்டுமென்று நானே விரும்பினேன். அதற்காக சபாநாயகர் அவர்களின் அனுமதி பெற்று, அவர் அந்த அளவுக்குப் பேசவேண்டுமென்று நானே கேட்டுக்கொண்டேன். அந்த நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இல்லாத காரணத்தினால், அவர் இந்த விவாதத்தில் கலந்துகொள்ளுவாரோ மாட்டாரோ என்று எண்ணி இவராவது பேசட்டும் என்று எண்ணினேன். அவர் நிலச்சுவான்தாராக இருந்துகொண்டு வீட்டில் இருப்பவர் அல்ல. விவசாயத்தில் அவர் நேராகக் கண்காணித்துக் கவனம் செலுத்தக்கூடியவர். ஆதலால் அவருக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்றுதான் அவர்கள் அதிக நேரம் பேசவேண்டுமென்று விரும்பினேன். அவர் நல்ல கருத்துக்களைக் கொடுக்கக் கூடும் என்று எண்ணினேன். அவருடைய 10 அம்சத் திட்டத்தை நிச்சயமாகச் செயல்படுத்துவோம்.

சிங்கோனா டிபார்ட்மெண்ட் பற்றி கட் மோஷன் யாரும் கொடுக்காவிட்டாலும், ஏற்கனவே அதிக நஷ்டத்தில் போய்க்கொண்டிருந்தது, இப்போது லாபகரமாக மாறிக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான்கூட அங்கே போயிருந்தேன். வாசனைத் திரவியங்கள் மருந்து வகைகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. அதை மேலும் விஸ்தரிக்கும் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ட்ராக்டர் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அது அவசியம்தான். ட்ராக்டர் வாங்கக்கூடிய அளவுக்குப் பண வசதி சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு இருக்கிறது.

எந்தெந்தப் பஞ்சாயத்து யூனியக்குப் பண வசதி இருக்கிறதோ அதற்கெல்லாம் ட்ராக்டர் வாங்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவை அவர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக ட்ராக்டர் வாங்கி விவசாயத்திற்கு வாடகைக்கு விடவேண்டுமென்பதிலே சர்க்கார் தயங்காது. நிச்சயமாகச் சர்க்கார் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாகப் பேசிய எனது மாவட்டத்தைச் சேர்ந்தவர், பக்கத்து ஊர்க்காரர், நல்ல விவசாயி. நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு கவலை. ஈ. ஓ. (அக்ரி.) எங்கோ ஸ்டோர் கீப்பராக இருக்கிறார். நிலத்திற்குப் போய் வேலை செய்யவில்லையே என்று தெரிவித்தார். ஈ. ஓ. (அக்ரி.) நிலத்திற்குப் போகவேண்டுமென்று கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டு, விவசாய டைரக்டர் கடுமையான உத்தரவைப் போட்டு விவசாயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறார். ஸ்டோருக்குத் தனியாக 63 ஸ்டோர் கீப்பர்கள் போட்டுவிட்டோம். மேலும் போட்டு, ஈ. ஓ. (அக்ரி.)யை நேரடியாகச் செயலில் ஈடுபடுத்தியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது, கர்ணம் சர்வே நம்பர் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது, சங்கடம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இதைத்தான் திருச்சி கருத்தரங்கில் சொல்லும்போது கர்ணத்தின் வேலை பளுவைக் குறைக்கவேண்டுமென்று, விவசாயிகளுக்கும் நன்மையாக இருக்க, கிராம சேவக்குகள் கர்ணத்திடம் சென்று சர்வே நம்பரைக் குறித்துக்கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்லுகிறேன். இதனால் கர்ணத்திற்கும் தொந்தரவு இருக்காது. அதே நேரத்தில் செக் செய்ய கிராம சேவக்குகளுக்குத் துணையாக இருக்கும். இதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லிக்குப்பம் ஆலையில் போனஸ் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதற்கு முன்னாலேயே மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களிடம் இந்த ஆலை மட்டுமல்லாமல் எந்தெந்த ஆலைகளில் போனஸ் கொடுக்கப்படாமல் இருந்தாலும் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

கரும்பு உற்பத்தி செய்வதில் இந்தச் சர்க்காரில் எதிர்ப்பு இருப்பது போல நீர்ப்பாசன அமைச்சர்மீது பழி சுமத்துவது மாதிரிச் சொன்னார்கள். அவர் உணவுப் பொருள் உற்பத்தி செய்யக் கூடிய நிலத்தில் அதற்குப் பதில் கரும்பு பயிரிடுவதைப்பற்றி, நெல் பயிரிடும் நிலத்தில் விளைச்சலைக் கட்டுப்படுத்த வேண்டும், உணவு உற்பத்தியைக் குறைக்கவேண்டுமென்ற அத்தகைய நோக்கத்தோடு செய்வதைப்பற்றித்தான் அவர் சொல்லியிருக்கிறார். அதுதான் நோக்கமே தவிர விவசாயி கரும்பு பயிரிடக் கூடாது என்ற நோக்கம் கிஞ்சித்தும் கிடையாது.

கரும்புக்குக் கூடுதலாக விலை கிடைத்தால் சர்க்கரை உற்பத்தி ஆகும். கரும்பு விலை குறையும்போது வெல்லம் காய்ச்சினால் நிறைய லாபம் என்று காய்ச்சத் துவங்கி விடுகிறார்கள். பெண்ணாடம் பகுதியில் ஆலைக்குக் கரும்பு வரவில்லை என்று சொன்னார்கள். கரும்பு விவசாயத்திற்குப் பாதகம் ஏற்படாத வகையில் இந்த அரசு இருக்கும். அப்படி நெல் பயிரிடுகிற நிலத்தில் மாற்று க்ராப்பாகக் கொண்டு வரும் முறையில் திரு. சீமைச்சாமி சொன்ன மாதிரி நடைமுறைக்குக் கொண்டுவந்தால் அதற்கு ஆட்சேபணை கிடையாது. வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்தால்தான் இந்தச் சர்க்கார் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

7–00 இரவு இன்னும் பூச்சி மருந்து அடிப்பதைக் கூட்டுப் பொறுப்பில் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், கூட்டுப் பொறுப்பில், பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதைச் செய்யலாம். ஏரோபிளேன் மூலம் பூச்சி மருந்தைத் தெளிக்கும் முறையை சில இடங்களில் பரீட்சார்த்தமாகக்

கையாண்டு பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் பகுதியில் இந்த முறையைக் கையாள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கனவே அந்தத் திட்டம் அமுலுக்கு வந்து, அதனால் நன்மை ஏற்பட்டிருக்கிறது.

விவசாய வருமான வரியைப்பற்றியெல்லாம் திரு. மார்டின் அவர்கள் சொன்னார்கள். அவற்றைப்பற்றி வேறு மான்யத்தில் பேசியிருக்க வேண்டும். அந்த மான்யக் கோரிக்கையின் பேரில் விவாதத்திற்குப் பதில் அளிக்கும்பொழுது ஏற்கனவே அதற்கெல்லாம் இங்கு பதில் சொல்லி விட்டார்கள்.

திரு. தங்கப்பன் அவர்கள் மீனவர்கள் பிரச்சினையைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இண்டோ–நார்வே திட்டத்தின்கீழ் நல்ல போட்டுகள் கட்டுகிற நிலை உருவாகியிருக்கிறது. அந்த போட்டுகள் மீனவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறதே ஒழிய, மீனவர்கள் அல்லாதவர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்தத் திட்டத்திற்கு டிரெயினிங் பெற்று இருக்க வேண்டும், மீனவர்களாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான் அந்தத் திட்டம் இருக்கிறது. ஃபுல்லாக டிரைனீஸ் வைத்திருப்பவர்களுக்கு முழுமையாக வழங்கப்படும். இரண்டொரு டிரையினீஸ் வைத்திருப்பவர்களுக்கு 50 சதவிகிதமும், மற்ற மீனவர்களுக்கு 50 சதவிகிதமும் வழங்கப்படுகிறது. மீனவர் அல்லாதார் யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருத்தரங்கு நடத்தவேண்டும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்தில் நடத்தியிருக்கிறேன். மற்ற மாவட்டங்களிலும் மீனவர்கள் வாழும் பகுதியில் நடத்துவேன் என்று கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக, விவசாய இலாகா உணவு உற்பத்தி கமிஷனர், திரு. ராயப்பா அவர்களுக்கும், செயலாளர்கள் திரு. ராமநாதன், திரு. பாலசுப்பிரமணியன் ஆகியோர்களுக்கும், இயக்குநர் திரு. திரவியம் அவர்களுக்கும், கால்நடை இலாகா இயக்குநர் திரு. மந்திரமூர்த்தி அவர்களுக்கும், மீனள இலாகா இயக்குநர் திரு. பத்மநாபன் அவர்களுக்கும், வன இலாகா சீப் கன்சர்வேடர் ஆப் பாரெஸ்டு அவர்களுக்கும், மற்றுமுள்ள சிப்பந்திகளுக்கும் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அவர்களை அழைக்கிற நேரத்தில் வந்து தகுந்த ஆலோசனைகளைக் கூறி, உற்பத்தியை நல்ல முறையில் பெருக்குவதற்கு யோசனை சொல்லி வருகிறார்கள். உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற அத்தனை விவசாயிகளுக்கும், பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தத் திட்டம் வெற்றி பெற நீங்கள் சொன்ன அரிய ஆலோசனைகளை நான் செயல்படுத்துவேன், ஆகவே வெட்டுப் பிரேரேபணைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கைகளை ஏக மனதாக நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக்கோரிக்கைகள் மீதான விவாதம் முடிவு பெற்றது. கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் இப்பொழுது பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றன.

கோரிக்கை எண் XVI—க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களெல்லாம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி:

" கோரிக்கை எண் XVI—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,04,73,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XVII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களெல்லாம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் XVII மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,14,17,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XVIII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களெல்லாம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் XVIII விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,40,88,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXIX-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் XXXIX வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,64,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXXV-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களெல்லாம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் XXXV-காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,71,03,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் XXI-சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,69,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XLIV-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் XLIV-காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,45,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்பு

1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டு வருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் திருக்கிறார்கள். எனவே, இந்த மசோதாவை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருவார்கள்.

6. அரசினர் மசோதா.

1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு இரா நெடுஞ்செழியன்: நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மசோதா பேரவைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. இந்த அவை இரவு
நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம். 7–00

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*236. Notification issued with G.O. Ms. No. 829, Home, dated the 10th March 1967 making certain amendments to the Madras Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (Central Act IV of 1939)].

B. Reports, Notifications and other papers.

† 101. Policy Note on Fisheries (Tamil).

† 102. A note on the Madras Cinchona Department (Tamil).

† 103. A Review on the progress made in the Madras Forest Department (Tamil).

† 104. A Policy Note on the Demand for the Animal Husbandry 1967-68 (Tamil).

*105. Speech by Dr. Sathiavanimuthu, Minister for Harijan Welfare and Information on Demand No. XXXIV—Stationery and Printing, 1967–68 (English and Tamil).

*106. Speech by Thiru M. Muthusamy, Minister for Local Administration on Demands Nos. XXII, XXIII and XXIX 1967–68 (Tamil).

* Despatched to Members on 12th July 1967.
† Laid on the Table of the House on 13th July 1967.

இணைப்பு.

[290-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

[வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை, 1967–68].

[மாண்புமிகு விவசாய அமைச்சருடைய உரை.]

உணவு உற்பத்தியைப் பெருக்குவதே வேளாண்மைத் துறையின் சிறப்பு மிக்க வேலைத் திட்டமாகும். மூன்றாவது திட்ட இறுதியில் உணவுத் தானிய உற்பத்தித் திறன் 12·6 லட்சம் டன் கூடுதலாகும் வண்ணம் உருவாக்கப்பட்டது ; இதனால் மொத்தம் உணவு உற்பத்தித் திறன் 65·74 லட்சம் டன்னாக உயர்ந்தது. ஆயினும் தென் மேற்குப் பருவமழை பொய்த்தாலும், வட கிழக்குப் பருவ மழை காலந்தாழ்த்திப் பெய்ய தொடங்கியதாலும், 1965–66-ல் உற்பத்தி குறைந்தது. வளர்ச்சி வேலைத் திட்டங்கள் வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டு வந்தபோதிலும் வேளாண்மை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நாம் பெருமளவுக்கு மழையையே நம்பியுள்ளோம் என்பதை இது நமக்கு எடுத்துக் காட்டியுள்ளது. முந்திய ஆண்டு உற்பத்தி அளவு 58 லட்சம் டன்களாக இருக்க, 1965–66-ல் உற்பத்தியளவு 52·6 லட்சம் டன்னாகக் குறைந்தது. 1965–66-ல் பருவ நிலைகள் நல்ல முறையில் இருந்திருப்பின் உற்பத்தியளவு 60 லட்சம் டன்களாக அதிகரித்திருக்கும் என்ற அடிப்படையில் நான்காவது திட்டத்திற்கான வேலைத் திட்டங்களையும் 1966–67-க்கான வேலைத் திட்டங்களையும் தயாரிக்கையில் அடிப்படை உற்பத்தி நிலை 60 லட்சம் என்று வைத்துக்கொள்ளப்பட்டது. அடியிற்கண்ட செயல் முறைகளின் மூலம் இந்த அடிப்படை நிலையாகிய 60 லட்சம் டன்களுக்கு மேற்பட்டு உணவு உற்பத்தியை 4·53 லட்சம் டன்கள் கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

	லட்சம் டன்கள்.
பெரிய பாசனத் திட்டங்கள்	0·09
சிறு பாசன திட்டங்கள்	0·94
மண்வளப் பாதுகாப்பு	0·07
நில மேம்பாடு	0·16
தரமான விதைகள்	0·66
இரசாயன உரங்கள்	2·09
உள்ளூர் எரு வகைகள்	0·08
தழை உரம்	0·44
மொத்தம் ..	4·53

சென்ற ஆண்டும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் இடர்ப்பாடுகள் நேர்ந்தன. தென் மேற்குப் பருவ மழை மிகவும் தாமதமாகத் துவங்கியது. ஜூலைத் திங்கள் இறுதியிலேயே மேட்டூரிலிருந்து பாசனத்திற்கும தண்ணீர் விடப்பட்டது. நவம்பர் திங்களில் வீசிய கடும் புயற்காற்று, அதையடுத்துப் பெய்த பெரு மழை காரணமாக வேளாண்மை உற்பத்தி மீண்டும் நலிந்தது. மேலும் திட்டமிட்ட அளவுக்கு இரசாயன உரங்களும் கிடைக்கவில்லை. இயல்பான பருவ நிலைகள் இருந்திருப்பின், கிடைத்திருக்கும் உற்பத்தி அளவை விட சென்ற ஆண்டு, உற்பத்தி அளவு குறைந்திருக்க இவையே காரணம்.

1967-68 வேலைத் திட்டம்

1967–68-ல் அடியிற்கண்ட செயல்முறைகளை மேற்கொள்ளுவதினால் உணவு உற்பத்தியை 11·33 லட்சம் டன்கள் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

	லட்சம் டன்கள்.
பெரிய பாசனத் திட்டங்கள்	0·11
சிறு பாசனத் திட்டங்கள்	1·95
மண்வளப் பாதுகாப்பு	0·13
நில மேம்பாடு	0·33
தரமான விதைகள்—	
மிகு பயன்தரும் விதைகள் திட்டமும், பிற ரக விதைகளும்.	6·85
இரசாயன உரங்கள்	1·24
உள்ளூர் எரு வகைகள்	0·14
தழை உரம்	0·58
மொத்தம் ..	11·33

தமிழகத்திலுள்ள பெரிய நீர் நிலை வாயில்கள் அனைத்தும் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. உணவு உற்பத்திப் பெருக்கம் சிறு பாசன வாயில்களையும் மும்முரப் பயிர் விளைச்சல் திட்டங்களையுமே நம்பியுள்ளது என்னும் இவ்வுண்மை முன்பும் பலமுறை சொல்லப்பட்டுள்ளது. அதை மீண்டும் இங்கே குறிப்பிடுவது இன்றியமையாததாகிறது. இந்த ஆண்டு, வரவு-செலவுத் திட்டத்தில் நமது நிதிநிலை அனுமதிக்கக்கூடிய வரையறைக்குள், இவ் வேலைத் திட்டங்களுக்காக அதிக அளவு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்களையும், திட்டக் குறிக்கோள் அளவு பற்றிய விவரங்களையும் பின்வரும் பத்திகளில் காணலாம். ஆயினும் உணவு உற்பத்தித் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்காக குறிப்பாக, சிறு பாசன வேலைகளை விரைந்து நிறைவேற்றுவதற்காக இந்திய அரசிடமிருந்து பெரிய அளவில் தனி நிதி ஒதுக்கம் ஒன்றைப் பெற இம் மாநில அரசு கருதியுள்ளது. ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக மாற்றுவது குறித்துப் பரிசீலனை செய்து அறிக்கை அனுப்புமாறு உணவு உற்பத்தி ஆணையரை அரசு அண்மையில் கேட்டுக்கொண்டது. அவர் தமது அறிக்கையில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவான அடிப்படையில் விவாதித்துள்ளார். அறிக்கை இப்போது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. சிறப்புச் சிறு பாசனத் திட்டம், புதிய கிணறு மானியத் திட்டம், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள் போன்ற சிறு பாசனத் திட்டங்களுக்காகப் பெருமளவுக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமென அவர் பரிவுரை வழங்கியுள்ளார். இதனால் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யவேண்டி வரும். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக இயன்ற அளவில் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய அரசு முயற்சி செய்யும். கடந்த ஆண்டுகளில் வேளாண்மைத் துறையின் முன்னேற்றம்

ஆறுதல் தரும் வகையில் அமைந்துள்ளதால், தனி நிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் அதிகமான நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்ய இந்திய அரசு முன்வரும் என்று இம் மாநில அரசு நம்புகிறது.

சென்ற ஆண்டு துவக்கப்பட்ட மிகு பயன் தரும் விதை உற்பத்தித் திட்டம் உணவு உற்பத்திப் பெருக்கம் திட்டத்தில் மிகப் பெரிய வேலைத் திட்டமாகும் என்பதை மேற்சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நெல், சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களில் மிகு பயன் தரும் விதைகளை உற்பத்தி செய்வது குறித்தும், இவ் வகை விதைகளுக்கான அதிக அளவு உர வகைகளைப் பயன்படுத்துவது குறித்தும் கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது குறித்தும் திட்டமிட்ட நடைமுறையை மேற்கொள்ளுவதற்கு இது வகை செய்கிறது. குறுகிய காலத்தில் உணவு உற்பத்தியை அதிக அளவு பெருக்குவதற்கு இவ் வேலைத் திட்டம் பெருந் துணையாகும். 1966-ல் கார் பட்டத்தில் அல்லது குறுவைப் பருவத்தில் 3 லட்சம் எக்கர் பரப்பளவில் மிகு பயன் தரும் விதைகள் வித்திப் பயிர் செய்யப்பட வேண்டும் என்று குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டிருக்க, ஆடுதுறை 27 ரக நெல் விதை கொண்டு 2·8 லட்சம் எக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டது. இதில் 2 லட்சம் எக்கர் பரப்பளவு நிலங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருந்தன. தனித் திட்டத்தின்கீழ் கூடுதலாக 43,500 எக்கர் பரப்பளவில் கோயம்புத்தூர் 25 வகை நெல் ரகம் பயிரிடப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் சீர்கேடான பருவ நிலை நிலவிய போதிலும், ஆடுதுறை 27 நெல் ரகம் கொண்டு எக்கர் ஒன்றுக்குச் சராசரி 3,300 ராத்தல் (1,500 கிலோ கிராம்) விளைச்சல் கிடைத்தது. சாதாரண ரக நெல் விதைகளைச் சென்ற ஆண்டில் பயன்படுத்தியபோது 2,400 ராத்தலும் (1,100 கிலோ கிராம்) எக்கர் ஒன்றுக்கு 1,000 ராத்தல் (480 கிலோ கிராம்) மிகக் குறைந்த விளைச்சலும் கிட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடுதுறை 27 நெல் ரகம் பயிரிடப்பட்ட பிற மாவட்டங்களில் எக்கர் ஒன்றுக்குச் சராசரி விளைச்சல் குறித்த விவரம் வருமாறு :—

	எக்கர் ஒன்றுக்கு (கிலோ கிராம்).
திருச்சிராப்பள்ளி	1,717
மதுரை	1,828
திருநெல்வேலி	1,764
கோயம்புத்தூர்	1,824
சேலம்	1,759
தர்மபுரி	2,841
செங்கற்பட்டு	1,656
வடார்க்காடு	2,080
தென்னார்க்காடு	1,280

ஆடுதுறை 27 நெல் ரகம் பயிர்த் திட்டத்தின்கீழ் சில குடியானவர்களின் நிலங்களில் விளைந்த அதிக அளவு விளைச்சல் வருமாறு :—

	எக்கர் ஒன்றுக்கு (கிலோ கிராம்).
தஞ்சாவூர்	2,900
திருச்சிராப்பள்ளி	3,424
மதுரை	4,300
திருநெல்வேலி	2,575
கோயம்புத்தூர்	3,983
சேலம், தர்மபுரி	3,225
செங்கற்பட்டு	3,300
வட ஆற்காடு	4,184
தென் ஆர்க்காடு	3,375

உற்பத்திக்கான உர வகைகள் பரிவுரை செய்யப்பட்ட அடிப்படையில் பயன்படுத்தப்படுமானால், மிகு பயன் தரும் பயிர் ரகங்கள் திட்டத்தின் மூலம் அரிசி உற்பத்தியை இரண்டு மடங்காக்கலாம் என்பது மேற்கண்ட தகவல்களிலிருந்து தெரியவருகின்றது.

1966-67 ஆண்டு முழுவதிலும் மிகு பயன் தரும் ரக திட்டத்தின் கீழ் 4·75 லட்சம் எக்கரா பரப்பளவில் நெல்லும், 0·42 லட்சம் எக்கர் பரப்பளவில் சி.எஸ்.எச். 1. சோளமும், 0·08 லட்சம் பரப்பளவில் எச்.பி. 1 கம்பும் 0·02 லட்சம் எக்கர் பரப்பளவில் தக்காணச் சோளமும் விளைவிக்கப்பட்டன. 1967-68-ல் 16·54 லட்சம் எக்கர் பரப்பளவில் நெல்லும், 0·87 லட்சம் எக்கர் பரப்பளவில் சிறு தானிய வகைகளும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நெல் விளைவிக்கப்பட்ட பகுதியில் ஆடுதுறை 27 ரகம் 13·52 லட்சம் பரப்பளவிலும் (11·94 லட்சம் எக்கர் பரப்பளவில் சொர்ணவாரி, கார், குறுவை வகைகளும் 1·58 லட்சம் எக்கர் பரப்பளவில் நவரை வகையும்) கோயம்புத்தூர் 25 ரகம் 2·19 லட்சம் எக்கர் பரப்பளவிலும், கோயம்புத்தூர் 29 ரகம் 0·65 லட்சம் எக்கர் பரப்பளவிலும், டெய்சுங் ரகம் போன்ற பிற வகைகளை 0·18 லட்சம் எக்கர் பரப்பளவிலும் பயிரிடப்படும். இவ்வாண்டில் ஜூலைத் திங்களில் தஞ்சை மாவட்டத்தில் தொன்றுதொட்டு ஒரு போக சம்பா நிலங்களாக இருந்து வந்த 6 லட்சம் எக்கர் பரப்பளவில் ஆடுதுறை 27 ரகத்தைப் பயிரிட முயற்சிகள் மேற்கொண்டிருப்பது உணவு உற்பத்திப் பெருக்கத்தில் மிக முக்கிய பணியாகும். இப்பகுதியில் 4 லட்சம் எக்கருக்குக் குறையாத பரப்பளவில் இரண்டாவது குறுகிய அல்லது நடுத்தர கால பயிர் சாகுபடி செய்யப்படும். இதனால் தஞ்சாவூரிலுள்ள இருபோக பயிர் விளையும் பரப்பளவு மேற்கொண்டும் 4 லட்சம் எக்கர் அதிகமாகும். இதன் மூலம் ஆடுதுறை 27 ரகம் பயிர் செய்யப்படும் பரப்பளவின் மொத்தம் 9 லட்சம் எக்கராகும். இவ் வேலைத் திட்டம் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்பட்டால் இம் மாநிலத்தின் மொத்த அரிசி உற்பத்தி இன்னும் அதிகமாகும். ஆடுதுறை 27 ரகம் இன்னும் அதிகப் பரப்புள்ள நிலங்களில் பயன் படுத்துவதற்காக விதைகள் பொதுவாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையின் விஸ்தரிப்பு பணியாளர் உரங்களை கிடைக்க வகை செய்வதிலும் மும்முர உற்பத்தித் திட்டத்தை மேற்கொள்வதிலும், மிகுந்த நாட்டம் செலுத்துவர். மிகு பயன் தரும் விதைகள் திட்டப் பகுதிக்காக நைட்ரஜன் உரம் வழங்கப்படும் என்று இந்திய அரசு வாக்களித்துள்ளது. இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு உரம் உரிய காலத்தில் இம் மாநிலத்திற்குக் கிடைக்குமென்று நம்புகிறோம்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான பிற திட்டங்கள் குறித்த விவரங்கள் வருமாறு :—

I. பெரும் பாசன வேலைகள்

முக்கியமாய்ப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் பெரிய பாசன வேலைத் திட்டங்கள் மூலமாக 0·81 லட்சம் எக்கர் பரப்பளவுள்ள புதிய பகுதி விளைச்சலின் கீழ்க் கொண்டுவரப்படும். ஏற்கனவே பயிரிடப்பட்டு வரும் 1,500 எக்கர் பரப்பளவில் பாசன ஏற்பாடுகள் உறுதி செய்யப்படும்.

II. சிறு பாசனம்

1967-68-ம் ஆண்டில் சிறு பாசனத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதன் மூலமாக மொத்தம் 2·42 லட்சம் எக்கர் பரப்பளவுள்ள புதிய பகுதி பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். 0·47 லட்சம் எக்கர் பரப்பளவில் தற்போதுள்ள பாசன வசதிகள் உறுதிப்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றும் கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

(i) **சிறப்புச் சிறு பாசனத் திட்டம்**—தற்போதுள்ள பாசன வாயில்களில் தனிப்பட்ட செப்பனிடு வேலைகளை நிறைவேற்றுவதும், கவனிக்காமல் விட்டுவிடப்பட்ட பாசன ஆதாரங்களைச் சீரமைத்தலும், வீணாகிக் கொண்டிருக்கும் நீர் நிலைகளைச் சீர்படுத்துவதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

முன்னாள் ஜமீன் பகுதிகளிலுள்ள நீர் நிலைகள் வெகு காலமாகக் கவனிக்கப்படாமல் விட்டு விடப்பட்டுள்ளன. அவற்றில் தனிச் செப்பனிடு வேலைகளை நிறைவேற்றி அவற்றின் பழைய நிலைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வதும் இவ்வேலைத் திட்டத்தின்கீழ் கவனிக்கப்படும். இம் மாநிலத்திலுள்ள 12,400 முன்னாள் ஜமீன் நீர் நிலைகளில் 5,000 நீர் நிலைகள் சீரமைக்கப்பட்டு விட்டன.

4·70 லட்சம் ஏக்கராவுக்குப் பயன் அளிக்கும் வகையில், மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் ரூ. 800 லட்சம் செலவிட மூன்றுவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றுவது திட்டக் காலத்தில் மொத்தம் ரூ. 1,111·59 லட்சம் செலவாகியது. 5·46 லட்சம் ஏக்கர் மொத்தப் பரப் பளவுக்குப் பாசன வசதிக்கு வகை செய்யப்பட்டது. அவற்றில் 1·35 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதியுடன் நன்செய் சாகுபடி யின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. அதன் விளைவாக 1·21 லட்சம் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யப்பட்டது.

இறுதியாக மாற்றியமைக்கப்பட்ட நான்காவது திட்டத்தின்கீழ் ரூ. 1,300 லட்சம் செலவில் 2·94 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதியை உறுதிப் படுத்தவும், 1·24 லட்சம் ஏக்கர் புதிய பரப்பளவுக்குப் பாசன வசதி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் ரூ. 331 லட்சம் செல வாயிற்று. 31–12–1966 வரையில் 0·66 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதிக்கு வகை செய்து, 16,616 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யப்பட்டது. 1967–68-க்காக ரூ. 251·46 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்ட வேலைகள் விரை வில் பலனளிப்பவை. ஆயினும், நிதி ஆதாரங்கள் போதுமான அளவுக்கு இராததால், ஒவ்வொரு வேலைக்காகவும் வரையறுக்கப்பட்ட ஒரு தொகை யையே வழங்க இயலும். இவ் வேலைகளுக்காக வழங்கும் தொகையைக் கூடுதலாக்குவது குறித்து ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

(ii) **புதிய கிணறு மானியத் திட்டம்**—கிணறுகளைத் தோண்டுவதற் கும் விசை ஏற்றங்களை நிறுவுவதற்குமான வேலைத் திட்டம், தனியார் முயற்சியின் மூலம் பூமிக்கடியில் உள்ள நீரைப் பயன்படுத்திப் பாசன வசதிகளைக் கூடுதலாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். பாசன வசதி களைப் பெருக்கி விரைவாகப் பயன்களைப் பெறுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ் புதிய கிணறுகளைத் தோண்ட ஊக்க மளிக்கப்படுகிறது. அதிக அளவு ரூபாய் 500 என்பதற்குட்பட்டு, கிணற்றுக் காகும் செலவில் 25 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆனால், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தாளவாடி வட்டாரத்தில் மட்டும் ரூ. 1,500 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு, செலவில் 50 சத வீதம் வழங் கப்படுகிறது. இத் திட்டத்தின் முன்னேற்றம் மிகுதியாகிக் கொண்டே வரு கிறது. மூன்றுவது திட்டத்தில் இது மிகவும் சிறப்படைந்துள்ளது. இதற் கென ரூ. 100 லட்சம் செலவிடவும், 6,000 கிணறுகளைத் தோண்டவும் மூன்றுவது திட்டத்தில் திட்டமிடப்பட்டது. ஆனால், ரூ. 714·62 லட்சம் செலவில் 21,212 கிணறுகள் முடிக்கப்பட்டன. பணியாளர்கள், உதவித் தொகை உட்பட 1966–67-ல் சுமார் ரூ. 506 லட்சம் செலவிடப்பட்டது. அந்த ஆண்டின் முதல் தவணை, 21,548 கிணறுகளுக்காக வழங்கப் பட்டது. இரண்டாவது தவணை 11,327 கிணறுகளுக்கு வழங்கப்பட்டது. முந்திய ஆண்டுகளில் தவணைத் தொகை வழங்கப்பட்ட கிணறுகள் உட்பட 1966–67-ல் 22,994 கிணறுகள் குறித்து இரண்டாவது தவணைத் தொகை வழங்கப்பட்டது. அந்த ஆண்டில் 9,389 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டு, குறைந்தது 9,389 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கப் பட்டது. 1967–68-ஆம் ஆண்டிற்கென ரூ. 522·90 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. 15,000 கிணறுகள் கூடுதலாகத் தோண்டப்பட்டு, குறைந்தது 15,000 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படு கிறது. இத் திட்டத்திற்குப் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டால், அதைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த இயலும்.

(iii) **எண்ணெய்ப் பொறிகளையும் மின்சார மோட்டார் விசை ஏற்றங் களையும் வழங்குவதற்கான திட்டம்.**—எண்ணெய்ப் பொறிகளையும் மின்சார விசை ஏற்றங்களையும் வழங்கும் திட்டமும், கிணறுகள் தோண்டும் திட்டமும் இணைந்து செயல்படுகின்றன. இத் திட்டத்தின் கீழும் செலவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. மூன்றுவது திட்டத்தின்கீழ் ரூ. 100 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கையில், ரூ. 216·75 லட்சம் தொகை 2,268 எண்ணெய்ப் பொறிகளையும் 11,361 மின்சார மோட்டார் விசை ஏற்றங்களை யும் வாங்கக் கடனாக வழங்கப்பட்டது. இவற்றின் மூலம் 62,320 ஏக்கர் நிலங்களுக்குக் கூடுதலான பாசன வசதி கிடைத்து, 31,160 டன் கூடுதலான உணவு உற்பத்தி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிணறுகள் தோண்டும் திட்டங்களையும் விசை ஏற்றத் திட்டங்களையும் உழவர் பெருமக்கள் பெரிதும் நாடுகின்றனர். நான்காவது திட்டக் காலத் தில் மேற்சொன்ன இரு திட்டங்களுக்காகவும் முறையே ரூ. 2,188 லட்ச மும், ரூ. 700 லட்சமும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் முறையே ரூ. 506 லட்சமும் ரூ. 175 லட்சமும் செலவிடப்பட்டன. கிராம மின்வசதித் திட்டத்தை மும்முரமாகச் செயல்படுத்தியதன் விளைவாக, கிணறுகள் தோண்டும் திட்டமும் விசை ஏற்றங்கள் திட்டமும் நான்காவது திட்டக் காலத்தில் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குப் பேருதவியாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசை ஏற்றத் திட்டத்தின்கீழே ஒதுக்கப்பட்ட ரூ. 175 லட்சம் தொகை 1966–67-ம் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்பட்டது. 1,710 எண்ணெய்ப் பொறிகளும் 7,042 மின்சார மோட்டார் விசை ஏற்றங்களும் வழங்கப்பட் டன. அதன் விளைவாக 40,000 ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலங்களுக்குப் பாசன வசதி செய்வதன் மூலம் 20,000 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யப்பட்டது. 1967–68-ல் ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டது. இத் தொகையைக் கொண்டு 375 எண்ணெய்ப் பொறிகளையும் 3,750 மின்சார மோட்டார் விசை ஏற்றங்களையும் வழங்கி, 17,625 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி கிடைக்கச் செய்யலாம். அதன் மூலம் சுமார் 8,800 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கக் கூடும்.

(iv) **பாசன ஏரிகளைத் தூறுவாரப் பண்படுத்தல்**—மூன்றுவது திட்டக் காலத்தில், 1,038 ஏக்கர் ஏரி எதிர்வாய் நிலங்களும் 2,039 ஏக்கரா புதிய நிலங்களும் பண்படுத்தப்பட்டன. அதற்கென ரூ. 108·05 லட்சம் செல வாகியது. 1,281 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைத்தது. 1966–67-ல், 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில், 219 ஏக்கராவுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டு, 98 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யப்பட்டது. அந்த ஆண்டில் மொத்தம் ரூ. 24 லட்சம் செலவாகியது. 1967–68 க்காக ரூ. 8·14 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் ஏழு வேலைகளை முடித்து 540 ஏக்கராவுக்கு பாசன வசதி அளித்து, 225 டன் உணவு உற்பத்திக்கு வகை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) **அரசுத் துறை குழாய்க் கிணறுகள்**—இத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறை குழாய்க் கிணறுகளை அமைத்து இயக்கும் என்று முதற்கண் எதிர் பார்க்கப்பட்டது. அத்துறை விசை ஏற்றப் பொறிகளை வழங்கி கிணறுகளைப் பேணி வந்திருக்க வேண்டும். மூலதனத்தின் மீதான வட்டி உட்பட நடைமுறைச் செலவுகள், இத் திட்டத்தின் மூலம் பயனடை பவர்களிடமிருந்து வசூலிப்பதாய் இருந்தது. போதிய அளவுக்கு விசை ஏற்றப் பொறிகள் கிடைக்காததாலும், உழவர் பெருமக்கள் போதிய அளவுக்கு முன்வராததாலும் மூன்றுவது திட்டத்தில் அது செயல்படுத்தப் படவில்லை. தற்போது உருவாக்கப்பட்டுள்ள நான்காவது திட்டத்தில் 50 கிணறுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயனடைபவர்களிடம் இக் கிணறுகளை ஒப்படைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. நீரைப் பயன்படுத்துவதற்கென அவர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது, அக் கிணறுகள் அந்தந்த ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படலாம். பயனடைபவர்கள் அல்லது ஊராட்சிகள் கடன் பெறத் தகுதியுடையனவாகும் விசை ஏற்றப் பொறிகளை நிறுவுவதற்காக

25 சத வீத உதவித் தொகை அவர்கட்கு வழங்கப்படும். பரிசீலனை வேலைக் கான பணியாளர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1967–68-ல் இரண்டு கிணறுகளைத் தோண்ட திட்டமிடப்பட்டுள்ளது.

(vi) தனியார் குழாய்க் கிணறுகள்—துளைக் கிணறுகள் தோண்டுதல் மூலம் நிலத்திற்கு அடியில் உள்ள நீர் ஆதாரங்களைப் பயன்படுத்த இத் திட்டம் வகை செய்கிறது. கடன்-உதவித் தொகை அடிப்படையில் விசை ஏற்றப் பொறிகள் வழங்கப்படும். கடனும் உதவித் தொகையும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

கடன் உதவித் தொகை

கோவை நீங்கலாக ஏனைய மாவட்டங்கள்.	8,000	ஒவ்வொரு குழாய்க் கிணறுக்கும் ரூபாய் 500 என்ற பேரளவுக்குட்பட்டு, கடன் தொகையில் 10 சத வீதம்.
கோவை மாவட்டம் ..	10,000	ஷை
சுழல் துளைக் கருவிகளால் தோண்டப்பட்ட ஆழமான துளைக் கிணறுகள்.	20,000	ஷை

சென்டேஜ், வட்டியுடன் 10 ஆண்டுத் தவணைகளில் இக் கடன் வசூலிக் கப்படும். கடன் வாங்காதவர்களுக்கும் உதவித் தொகை மேற்சொன்ன வீதத்தில் வழங்கப்பெறும். 1966–67-ல், 800 கிணறுகள் தோண்டுவ தென திட்டமிட்டிருக்க, 865 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1967–68-ல் இயல்பான வேலைத் திட்டத்தின்கீழ் 1,500 கிணறுகளை அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 300 தனியார் குழாய்க் கிணறு கள் அமைப்பதற்கான சிறப்புத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட் டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் 2,000 கிணறுகளைத் தோண்டுவதற் கான மற்றொரு சிறப்புத் திட்டம் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(vii) வடிமுனைக் குழாய் கிணறுகள்.—நிலத்திற்கு அடியில் மணல் அடுக்குகளில் உள்ள தண்ணீரை மேலே கொண்டுவந்து வேளாண்மைக்குப் பயன்படுத்த வடிமுனைக் கிணறு ஒரு சாதனமாகும். உழவர் பெரு மக்களுக்குப் பயனளிப்பதற்காக வேளாண்மைத் துறையினர் அவர்களது நிலங்களில் கிணறுகளை அமைக்கின்றனர்.

இத் திட்டத்தின் கீழ் பேரளவு ரூ. 3,500 வரையில் உழவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. பேரளவு ரூ. 150 என்பதற்குட்பட்டு, கடன் தொகையில் 10 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. விசை யேற்றப் பொறிகளின் விலையும், விசையேற்றப் பொறியை அமைப்பதற் கான கொட்டகையைக் கட்டச் செலவும் கடன் தொகையில் அடங்குகின்றன. கடன் வசதிகளைப் பெறுமல் துறையினர்களின் பொறிகளைப் பயன்படுத்து பவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்கும் விரைவுத் திட்டத்திற்கு அரசு 1965-ல் ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது. 1966–67 முதல் முறையான வேலைத் திட்டத்துடன் இந்த விரைவுத் திட்டம் இணைக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில், செயல் படும் விரைவுத் திட்டத்தின் அடிப்படையில், திருச்சி மாவட்டத்தில் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்கும் சிறப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1966–67-ல் 1,200 கிணறுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், 2,038 கிணறுகள் அமைக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான சிறப்புத் திட்டம் நீங்கலாக 1967–68-ல் 2,000 கிணறுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(viii) கிணறுகளில் துளை போடுதல்.—இத் திட்டத்தின் கீழ், ஏற் கெனவேயுள்ள தரைக் கிணறுகளின் நீர்க் கொள்ளளவை உயர்த்தி பாசன காரியங்களுக்காக அந்த நீரைப் பயன்படுத்தும் பொருட்டு அவற்றில் துளை கள் போடப்படுகின்றன. தனியார் குழாய்க் கிணறுகளுக்கு வழங்கப்படும் அதே கடன் தொகைகளும் உதவித் தொகைகளும் இவற்றிற்கும் வழங்கப் படும். 1966–67-ல் 600 கிணறுகளுக்காகத் துளைபோட திட்டமிடப்பட்டது. ஆனால், 565 கிணறுகளுக்குத் தான் துளை இறக்கப்பட்டது. 1967–68-ல் 600 கிணறுகளுக்குத் துளைபோடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ix) கிணறுகளை ஆழப்படுத்தல்.—பாறைகள் உள்ள பகுதிகளில் பாறை உடைப்புக் கருவிகளைக் கொண்டு கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின் றன. இந்தக் கருவிகள் உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. கருவியின் விலையில் 10 சதவீத உதவித் தொகையுடன், ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூ. 2,000 கடன் வழங்கப்படுகிறது. 1966–67-ல் 120 கிணறு கள் ஆழப்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டில் 195 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. 1967–68-ல் 300 கிணறுகளை ஆழப்படுத் தத் திட்டமிடப்பட்டுள்ளது.

III. மண்வளப் பாதுகாப்பு

நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண் காற்றாலும் நீராலும் பாதிக்கப் படாமல் பாதுகாப்பதும் மண்ணின் ஈரத் தன்மையைப் பாதுகாப்பதும் இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வேளாண்மை நிலங்களில் இதற்கென பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலங்களின் வளைவுக் கேற்ப கரை கட்டுதல், மேட்டுப் பகுதிகளில் சம மட்டக் கரைகள் கட்டுதல், நில வளைவுக் கேற்ப கற்சுவர் கட்டுதல், வாய்க்கால் மதகுகள் கட்டுதல், மண்ணரிப்புக் கட்டுப்பாடு முதலிய பல வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. நீர் ஆதாரத்தின் (Water shed) அடிப்படையில் அல்லது துணை நீர் ஆதாரத்தின் (Sub-water shed) அடிப்படையில் இந்த வேலை மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலான மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1967–68 முதல் இந்திய அரசு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக 15 சதவீத மானியமும் 6 சதவீத கடனும் வழங்கு கின்றனர். 1966–67-ல் 1·32 லட்சம் ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலைகளை நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், 0·92 லட்சம் ஏக்கரில்தான் அவை நிறைவேற்றப்பட்டன. சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்காக, 1966–67-க்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட புதிய உட்கோட்டங்கள் துவக்கப்படாததே அதற்குக் காரணம். 1967–68-ல் 0·96 லட்சம் ஏக்கரில் மட்டும் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் நிறைவேற்றப்படும். ஏனென்றால், அந்த ஆண்டிற்கென குறைவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. பரிசீலனை, மண்வள ஆய்வு, நிலப் பயன் குறித்துத் திட்டமிடுதல், செம்மண் பகுதிகளில் ஆராய்ச்சி முதலிய வேலைகள் 1967–68-ல் தொடர்ந்து நிறை வேற்றப்படும். தற்போது செயல்பட்டு வரும் பாதுகாப்பு உட்கோட்டங்கள், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள வேலையைத் தொடர்ந்து கண் காணிக்கும்.

IV. நிலத்தைப் பண்படுத்துதல்

இதுவரை பயிர் செய்யப்படாத புதிய நிலங்களையும் தற்போது தரிசாக உள்ள நிலங்களையும் பண்படுத்தி, அவற்றை விளைச்சலுக்கு ஏற்ற தாகச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இவ்வேலைக்கென

டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் துறையினரின் பரம்புப் பொறிகளும் (Bulldozer) டிராக்டர்களும் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. வேளாண்மை வேலைகளில் உழவர்கள் பொறிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க, தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் டிராக்டர்களும், விசையால் இயங்கும் துளைபோடும் கருவிகளும் வழங்கப்படுகின்றன. டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ், 1966–67-ல் 7,400 ஏக்கர் பயிரிடப்படா நிலங்களும், 8,000 ஏக்கரா நடப்புத் தரிசு நிலங்களும் பண்படுத்துவதாகத் திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த ஆண்டில் அவற்றில் 8,795 ஏக்கரா பயிரிடப்படா நிலமும், 11,505 ஏக்கரா நடப்புத் தரிசும் பண்படுத்தப்பட்டன. 1967–68-ல் 8,300 ஏக்கரா பயிரிடப்படா நிலங்களையும் 9,000 ஏக்கரா நடப்புத் தரிசையும் பண்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் 1966–67-ல் 220 டிராக்டர்களை வழங்குவதென திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த ஆண்டில் 209 டிராக்டர்களே வழங்கப்பட்டன. 1967–68-ல் 260 டிராக்டர்களையும், 30 விசையால் இயங்கும் துளைக் கருவிகளையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

V. தரமான விதைகள்

நெல், சிறு தானியங்கள் பயிராகும் பரப்பளவு அதிகரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக வட்டாரம் மூலம் உழவர்களுக்குத் தரமான விதைகள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மூல விதைகள் ஆராய்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அடிப்படை விதைகள் அல்லது ஆரம்ப நிலைவிதைகள், துறையினரின் அரசாங்க விதைப் பண்ணைகளில் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இந்த ஆரம்ப நிலை விதைகள் ஊராட்சிகள் தேர்ந்தெடுத்துள்ள முற்போக்கு நோக்குள்ள உழவர்கட்கு வழங்கப்படுகின்றன. அவர்கள் கிராமத் துணைவர்கள் (Grama sahayaks) ஆவர். ஊராட்சிகளின் மேற்பார்வையின் கீழ் அவர்கள் அந்த விதைகளைப் பெருக்கி உழவர்கட்கு வழங்குவர்.

இம்மாநிலத்தில் தேவைப்படும் ஆரம்ப நிலை விதைகளை உற்பத்தி செய்வதற்காக, ஒவ்வொன்றும் 25 ஏக்கரா பரப்புள்ள 230 அரசு விதைப் பண்ணைப் பிரிவுகள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்ட இறுதியில் 210 பிரிவுகள் நிறுவப்பட்டன. 1966–67-ல் எஞ்சிய 20 பிரிவுகளை நிறுவ திட்டமிடப்பட்டது. ஆனால், உரிய ஆதாயமளிக்கா சில பிரிவுகளை மூடி விட நேர்ந்ததால் 1966–67 முடிவில் 216 பிரிவுகளே செயல்பட்டன. அவை 73 இடங்களில் பரவி இருந்தன. எஞ்சிய பிரிவுகள் 1967–68 முடிவுக்கு முன்பு நிறுவப்படும்.

அரசு விதைப் பண்ணை ஒவ்வொன்றின் மேம்பாட்டிற்கான ஒரு தனி வரைப்படம் தயாரிக்கும் வேலை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு விதைப் பண்ணைகளில் ஆரம்பநிலை விதைகளை உற்பத்தி செய்யும் வேலைக்குச் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அரசு விதைப் பண்ணைகள் போதிய அளவிற்கு ஆரம்ப நிலை விதைகளை உற்பத்தி செய்ய இயலாவிட்டால், துறையினரின் மேற்பார்வையில் தனியார் நிலங்களில் அவற்றை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வோராண்டும் நெல்லுக்கான ஆரம்ப நிலை விதைகளை 2,780 டன்னும் சிறு தானியங்களுக்கான ஆரம்ப நிலை விதைகளை 506 டன்னும் உற்பத்தி செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், 3,826 டன் நெல் ஆரம்ப நிலை விதைகளும், 354 டன் சிறு தானிய ஆரம்ப நிலை விதைகளும் 1966–67-ல் வழங்கப்பட்டன.

ஒவ்வோராண்டும் நெல் குறித்தும் சிறு தானியங்கள் குறித்தும் முறையே 41,700 டன்னும், 6,160 டன்னும், இரண்டாம் நிலை விதைகளை வழங்க உற்பத்தி செய்வதென திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், 66–67ல்

29,791 டன் நெல் இரண்டாம் நிலை விதைகளும், 3,828 டன் சிறுதானிய இரண்டாம் நிலை விதைகளும் வழங்கப்பட்டன. கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ள விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தில் பரிசோதித்துப் பார்த்து விதைகளின் தரம் நிச்சயித்தறியப்படுகின்றது. கோவை ஆராய்ச்சி நிலையத்தில் ஓராண்டில் 10,000 மாதிரிகளை ஆராயும் வசதிகள் உள்ளன.

VI. ரசயான உரங்கள்

உணவு உற்பத்தித் திட்டத்திற்கு மிகச் சிறந்த ஊட்டமளிப்பதாக அமைவது ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதாகும். பயிர் வளர்ச்சிக்கு நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாஷ் ஆகிய உரங்கள் ஊட்டமளிக்கும் முக்கியப் பொருள்களாகும். பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் சாதாரண வாணிப முறையில் வழங்கப்படுகின்றன. மத்திய உரங்கள் பொதுச் சேமிப்பிலிருந்து (Central pool) நைட்ரஜன் உரங்கள் வழங்கப்படுகின்றன ; இம்மாநிலத்திற்கு இந்திய அரசு ஒதுக்கியுள்ள உர அளவு, வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) நடத்துகிற அரசு வாணிப திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. 1966 அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து உள்நாட்டுத் தொழிற் சாலைகள் அவற்றின் உற்பத்தியில் 30 சதவீத அளவை பொதுச் சேமிப்பில்லாமல் வெளிச் சந்தையில் விற்க இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இந்தச் சதவீத அளவு 1967 அக்டோபர் 1-ம் தேதி முதல் 50 சதவீதத்திற்கும் 1968 அக்டோபர் 1-ம் தேதி முதல் 70 சதவீதத்திற்கும் உயர்த்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் நைட்ரஜன் உரத்தைத் (யூரியா) தயாரிக்கும் பொதுத் துறையிலுள்ள ஒரே தொழிற்சாலையான நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன், வெளிச் சந்தையில் விற்கக் கூடிய அளவில் பாதியை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்ய ஒப்புக் கொண்டது. இம்மாநிலத்திற்கு மத்தியப் பொதுச் சேமிப்பிலிருந்து ஒதுக்கப்படும் நைட்ரஜன் அளவில் சுமார், 40 சதவீதம் கலவை உரங்கள் தயாரிப்பதற்காக உரக் கலவை நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. நேரடியாகப் பயன்படுத்தப்படுவதற்கான உரங்கள் பெரும்பாகம் கூட்டுறவு நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது ; செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தனியார் வாணிபம் மூலமும் குறிப்பிட்ட அளவிற்கு உரங்கள் வழங்கப்படுகின்றன. —

மத்திய உரப் பொதுச் சேமிப்பிலிருந்து ரசாயன உரங்கள் வழங்குவதற்காக மாநில அரசு மூலம் வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) இந்திய அரசுக்கு ஆண்டுக்குத் தேவையான உர அளவுப் பட்டியை அனுப்புகிறது. ஒவ்வொர் ஆண்டுக்கும் தேவைப்படும் உர அளவை அந்த ஆண்டுத் தொடக்கத்திற்கு முன்னதாகவே வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) உன்னிப்பாக மதிப்பிடுகிறது. பயிரிடப்பட்ட பரப்பு, உரமிடக்கூடிய அளவு, புதிய வகை விதைகளுக்கான திட்ட வேலை, பாசனம் முதலியவற்றிற்கு விடப்பட்ட புதிய பரப்பளவு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு வேளாண்மைத் துறை நெறியாளருடன் கலந்தாலோசித்த பின்னர் மேற்கண்டவாறு மதிப்பிடப்பட்டு, தேவையின் நிலைப்பட்டி இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது.

மாவட்ட வாரியாக உரங்கள் ஒதுக்கப்படும் பணியை வேளாண்மைத் துறை நெறியாளரின் ஆலோசனையுடன் வருவாய்த் துறை வாரியம் மேற்கொள்கிறது. மாவட்டத்திற்குள், வேளாண்மை, கூட்டுறவுத் துறை அலுவலர்களின் ஆலோசனையுடனும் நிலையங்களின் கருத்தறிந்தும் கலெக்டர்கள் உரங்களை வழங்குகின்றனர்.

முதல், இரண்டாவது, மூன்ருவது திட்டங்களின்போது போடப்பட்ட திட்டக் குறியளவும் சாதனையும் நான்காம் திட்டத்திற்கான வேலைத் திட்டமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

அம்மோனியம் சல்பேட்
(லட்சம் டன்களில்)

	உரவகைகளை பயன் படுத்துவது குறித்த திட்டக் குறியளவு.	உறுதியான தேவை.	இந்திய அரசு ஒதுக்கியுள்ள உரவகைகளின் அளவு.	பயன்படுத்திய உரத்தின் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)
I திட்டம் ..	1·09	..	..	1·03
II திட்டம் ..	3 22	..	..	1·22
III திட்டம்—				
1961–62 ..	2·89	2·75	1·89	1·66
1962–63 ..	3·56	3·46	3.21	2.42
1963–64 ..	4·07	4.08	2.41	2.74
1965–64 ..	4·95	4·78	3·54	3·51
1965–66 ..	5·83	6·95	2·78	" 3·28
VI திட்டம்—				
1966–67 ..	6·50	6·75	4·33	3 88
1967–68 ..	7·35	8·15	..	..

குறிப்பு.—ஒரு ஆண்டில் ஒதுக்கப்பட்ட உரத்தின் முழு அளவும் அந்த ஆண்டிலேயே வருவதில்லை. எனவேதான் ஒதுக்கிய அளவுக்கும் பயன்படுத்திய அளவுக்கும் வேறுபாடுள்ளது. பொதுவாகச் சொல்லப் போனால் உரிய காலத்தில் பெறப்படுகிற உரம் முழுவதும் பயன் படுத்தப் படுகிறது. எடுத்துக்காட்டாக அமோனியம் சல்பேட்டாகக் கணக்கிட்டுச் சொல்வதானால், 1966–67-ல், 3·88 லட்சம் டன் உரம் பெறப்பட்டுப் பயன்படுத்தபட்டது.

மிகுதியான விளைச்சல் தரும் பயிர் வகைகளைப் பயிரிடும் நிலப்பரப்பு அதிகப்படுத்தப்படுவதன் விளைவாக, நைட்ரஜன் உரங்களின் தேவையும் உயரும். நமது எல்லாத் திட்டங்களுக்கும், அம்மோனியம் சல்பேட் சம்பந்தமாக மொத்தம் 8·15 லட்சம் டன் தேவைப்படும். இம் மாநிலத்தில் மிகுதியான விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டத்திற்குத் தேவைப்படும் உரங்களின் அதிகப் பங்கீட்டு அளவை வழங்குமாறு திருத்தியமைத்த தேவைப்பட்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

VII. உள்ளூர் எரு

(எ) கிராமக் கலவை எரு.—மண் வளத்தைப் பெருக்கவும் தகுந்த எருத் தயாரிப்பு முறையைப் பின்பற்றி நல்ல தரமான கலவை எருவைத் தயாரிப்பதில் உழவர்களுக்கு உதவவும் கிராமப் பகுதிகளில் கிடைக்கும் கழிவுப் பொருள்களைப் பயன்படுத்திச் சிறந்த தரமான எருவாகத் தயாரிப்பது தான் இத் திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முற்போக்கு நோக்குள்ள 100 உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கலவை எரு தயாரிப்பதில் மேம்பாட்டு முறைகள் குறித்துச் செயல் முறையில் விளக்கிக் காட்ட அவர்கள் பயன்படுவார்கள். மாட்டுத்

தொழுவங்கள் கட்டுவதற்கான செலவில் 10 சதவீதம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதிக அளவு ரூ. 150 வரை உழவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மூன்றும் திட்டக் கால இறுதியில் அதாவது, 1965–66-ல் 57·38 லட்சம் டன் அளவு கிராமக் கலவை எரு தயாரிக்கப் பட்டது.

நான்காவது திட்டக் காலத்தில் ஆண்டுக்கு 75 லட்சம் டன் எரு உற்பத்தி செய்யக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. 1966–67-ல் கலவை எரு உற்பத்தி 62·70 லட்சம் டன் அளவு எய்தப்பட்டது. 1967–68-ல் இந்த உற்பத்தியை 64 லட்சம் டன்னுக்கு அதிகரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(பி) மலக் கலவை எரு.—கிராமங்களில் மலக் கலவையை அறிவியல் முறையில் தரமுள்ள எருவாக மாற்றியமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1,500-க்கு மேல் மக்கள் தொகையுள்ள, ஆனால் நகரப் பஞ்சாயத்துக்களென அறிவிக்கப்படாத பெரிய பஞ்சாயத்துகளில் மலப் பொருளைக் கலவை எருவாக மாற்றும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மலக் கழிவுகளை ஒரு வகை செய்வதற்கான ஏற்பாடுகள் உள்ள பெரிய பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 கடன் உதவியும் மலக் கழிவுகளை ஒரு வகை செய்வதற்கென வசதிகளில்லாத பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றுக்கும், மனைக்கட்டு, வண்டி, கருவிகள், மலக்கழிவுகளை ஒரு வகை செய்வதற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றுக்காக ரூ. 3,600 கடன் உதவியும் கொடுக்கப்படுகிறது. இம் முன்பணத்தொகைகள் 20 ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ரூ. 150 என்கிற அதிக அளவு வரையறைக்குட்பட்டு நிகர நடைமுதல் செலவில் 25 சத விகிதம் உதவித் தொகையும் கொடுக்கப்படும். மூன்ருவது திட்ட முடிவில் இத் திட்டம் 1,357 பஞ்சாயத்துக்களிலும் செயலாக்கப்பட்டது. பெரிய ஊராட்சிகளுக்குக் கடன் வழங்கும் திட்டம் நான்காவது திட்டத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். 1966–67-ல் 399 புதிய ஊராட்சிகளில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டது ; 1967–68-ல் இந்தத் திட்டத்தை மேற்கொண்டும் 500 பஞ்சாயத்துக்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்குக் குறைவான மக்கள் தொகையுள்ள குறிப்பிட்ட சில கிராமங்களில் மலக் கலவை எரு உற்பத்திக்கான முன்னோடித் திட்டம் ஒன்று இயங்கி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் ரூ. 3,400 தொடரா இன மானியமும், ரூ. 555 தொடர் இன மானியமும் அளிக்கப்படுகிறது. 1964–65 முதல் இந்த முன்னோடித் திட்டம் நீட்டிக்கப்படவில்லை. ஆனால் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்ட 170 கிராமங்களில் மலக்கலவை எருத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

இரண்டாவது திட்ட முடிவில் மலக்கலவை எரு உற்பத்தி 0·16 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. உற்பத்தியை 2·07 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பதே மூன்ருவது திட்ட இலக்காகும். ஆனால் 1965–66-ல், 1·24 லட்சம் மெட்ரிக் டன் மலக் கலவை எரு உற்பத்தி செய்யப்பட்டது. நான்காவது திட்டக் குறியளவு 3 லட்சம் மெட்ரிக் டன்னாகும். 1966–67-ல் உற்பத்தி 1·51 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது ; 1967–68-ல் உற்பத்தியை 2·00 லட்சம் டன்னாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப் புறக் கலவை எரு

நகர்ப் புறத்தில் கிடைக்கிற மலம், குப்பை முதலிய கழிவுப் பொருள்களை அறிவியல் முறையில் கலவை எருவாகப் மாற்றிப் பயன்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இவ் வேலைத் திட்டம் சென்னை மாநகராட்சி 6 நகர் புற குழுக்களைத் தவிர 81 நகராட்சிகளிலும் 321 பஞ்சாயத்துக்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. உறுதி செய்யப்பட்ட விற்பனை விலை உற்பத்திச் செலவை விடக் குறைவாக இருந்து, விற்பனை மூலம் இழப்பு ஏற்பட்டால், அதைச் சரிக்கட்ட உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இரண்டாவது திட்ட முடிவில் உற்பத்தியளவு 3·35 லட்சம் டன்னாகத்தான் இருந்தது.

1965–66-ல் அந்த அளவை 6·20 லட்சம் டன்களுக்கு உயர்த்துவதே மூன்றாவது திட்டக் குறியளவாகும். ஆயினும் 1965–66-ல் உற்பத்தியளவை 5·15 லட்சம் மெட்ரிக் டன்களாக இருந்தது. நான்காவதுதிட்டத்தில் 10 லட்சம் டன் நகர்புறக் கலவை எரு உற்பத்தி செய்வதென திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் உற்பத்தியளவு 5·38 லட்சம் டன்னாக அதிகரித்தது. 1967–68-ல் உற்பத்தியளவு 7·00 லட்சமாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பதினெட்டு உள்ளாட்சி மன்றங்களில், கழிவு நீரைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் திட்டம் நடந்தேறி வருகிறது, அத்துடன் 10 உள்ளாட்சி மன்றங்களில் (அவற்றில் எட்டு நகராட்சி மன்றங்களாகும். ஒன்று நகர்ப்புற பகுதியாகும். ஒன்று பெரிய ஊராட்சியாகும். கழிவு நீரைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் தனித் திட்டத்தை நிறைவேற்ற 1965–66-ல் அனுமதியளிக்கப்பட்டது. இவ்வேலை நடந்து வருகிறது. இப் பத்து உள்ளாட்சி மன்றங்களிலும், மற்ற 18 உள்ளாட்சி மன்றங்களிலும் இவ் வேலை நன்கு நடந்தேறி வருகின்றது. அந்த உள்ளாட்சி மன்றங்களில் வேலை இன்னும் மும்முரமாக்கப்படும். குறிப்பிடப்பட்ட பத்து உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் உதவித் தொகை அடிப்படையில் சல்லடைகளும் வழங்கப்பட்டன.

VIII. தழை உரம்

இம் மாநிலத்தில் நெல் பயிரிடப்பட்ட பகுதி முழுவதிலும் பசுந்தழை எருவைப் பயன்படுத்த வகை செய்வதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இரண்டாவது திட்ட முடிவிற்குள், 30 லட்சம் ஏக்கர் நெற்பயிர் நிலத்தில் பசுந்தழை எரு போடப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில் 60 லட்சம் பரப்பளவுக்கு மேல் நெல் விளைச்சல் ஆகும் என்ற கணக்கில் இம் மாநிலத்தில் எஞ்சியுள்ள முப்பது லட்சம் ஏக்கர் நெற்பயிர் நிலத்தில் தழை எரு போடத் திட்டமிடப்பட்டது.

அறுபது லட்சம் ஏக்கர் பரப்பளவில் தழை உரம் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டிருக்க, 56·72 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பசுந்தழை உரம் பயன் படுத்தப்பட்டுள்ளது. நான்காவது திட்டக்கால இறுதியில் பசுந்தழை உரம் பயன்படுத்தப்படும் பரப்பளவை 56·72 லட்சம் ஏக்கரிலிருந்து 76·00 லட்சம் ஏக்கராவாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை மூலமாக விதைகள் வழங்குதல், வாணிக நிறுவனங்கள் மூலமாக விதைகள் வழங்குதல், குடியானவர்களிடம் உள்ள விதைகள், இக் காரியத்துக்காக காடுகளிலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் பெறப்படும் பசுந்தழைகள் ஆகியவை மூலமாக மேற்சொன்ன வேலைத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, விதைகளை அவற்றின் விலையில் 85 சத விகிதம் விலையில் வழங்குகின்றது. இந்த வேலை 1962–63 வரையில் அரசுக் கணக்கில் நடைபெற்றது. ஆனால் இவ் வேலை 1963–64-லிருந்து பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வேளாண்மைத் துறை வழங்குவதற்கான விதைகள் தனியார் நிலங்களிலும் பஞ்சாயத்து நிலங்களிலும் விதைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் பெறப்படுகின்றன. தனியார் நிலங்களில் விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவதன் மூலமும் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏக்கர் ஒன்றுக்குப் பயிரிடும் முன் பணமாக ரூ. 10 முதல் 15 வரை வழங்கி விதைகளைச் சேகரிக்கும் சமயத்தில் இந்த முன் பணம் வசூலிக்கப்படுகிறது. இம் மாநிலத்தில் உள்ள வட்டாரம் ஒவ்வொன்றிலும் 10 ஏக்கரா பரப்பளவில் விதைப் பண்ணை வைத்துப் படிப்படியாக, தன்னிறைவு உள்ளதாக ஆகும் வரை விஸ்தரிக்க வேண்டும்.

தெரிந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் தழை உர விதைகளை உற்பத்தி செய்வதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று 1963–64-ல் செயல்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட சில இடங்களுக்கு ரூ. 5,500 வரை நீண்ட காலக் கடன் வழங்கப்படுகின்றது. பசுந்தழை எரு விதைப் பயிர் ஒன்றை

யேனும் பயிரிடும் பொருட்டு கிணறுகள் வெட்டவும், விசையேற்றப் பொறிகள் நிறுவவும் அக் கடன் வழங்கப்படுகின்றது. நிலக்கடலை அல்லது பாசனம் மூலம் பயிரிடுகிற தினை வகைகள் போன்ற இரண்டாவது பயிரை ஊராட்சிகள் தெரிந்தெடுக்க வேண்டும். பயிரிடும் செலவுகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 என்ற குறுகிய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. விதை உற்பத்தி விஷயமாக பஞ்சாயத்துக்கு உதவி செய்யத் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளுக்கு ஒரு மேஸ்திரியினுடைய சேவை இலவசமாகக் கிடைக்கும். மூன்றாவது திட்டக் காலத்தில் 89 நிலையங்கள் நிறுவப்பட்டன. நான்காவது திட்டத்தில் 374 இடங்களில் அதாவது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்புகளிலும் ஒரு நிலையத்தை நிறுவும். 1966–67-ல் மேற்கொண்டும் 52 நிலையங்கள் நிறுவப்பட்டன. 1967–68-ல் மேற்கொண்டு 75 நிலையங்கள் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

விதைகள் விதைப் பண்ணைக் குடியானவர்களிடமிருந்தும் ஊராட்சிகளிடமிருந்தும் குவிண்டல் ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்தில் வாங்கப்படுகின்றன. மற்ற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் விதைகள் நல்ல தரம் உள்ளவைகளாக இருந்தால் அவற்றைப் பரிசோதித்துப் பார்த்து வாங்கப்படுகின்றன. 1961–62-ல் 2,039 டன்களும், 1962–63-ல் 2,344 டன்களும், 1963–64-ல் 2,764 டன்களும், 1964–65-ல் 3,246 டன்களும், 1965–66-ல் 3,550 டன்களும், 1966–67-ல் 2,850 டன்களும் விதைகள் வழங்கப்பட்டன. 1967–68-ல் 3,600 டன் விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையின் ஏனைய வேலைத் திட்டம், அடுத்துவரும் பாராக்களில் ஓரளவு காட்டப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு

அடியிற்கண்ட வேலைத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன :—

(ஏ) குறைந்த விலையில் ரசாயனப் பொருள்களை வழங்கிப் பூச்சிகளையும் நோய்களையும் ஒழித்தல்.

(பி) தெளிப்பான்களையும் துடைப்பான்களையும் குறைந்த விலையில் வழங்குதல்.

(சி) பூச்சி ஒழிப்பு மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவுதல்.

(டி) தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

பூச்சிக் கொல்லி மருந்துகளும், காளான் ஒழிப்பு மருந்துகளும் உணவுப் பயிர்கள் சம்பந்தமாக அடக்க விலையில் முக்கால் விலையிலும் பருத்தி, கரும்பு, நிலக்கடலை, எள், தேங்காய், காய்கறி முதலிய பயிர்களுக்கு பாதி விலையிலும் கொடுக்கப்படுகின்றன. 1965–66-ல் முனைப்பு உற்பத்தித் திட்டப் பகுதிகளில் புகையிலை குறித்தும் பூச்சி ஒழிப்பு மருந்துகளும் காலான் ஒழிப்பு மருந்துகளும் பாதி விலையில் வழங்கப்பட்டன. உணவுப் பயிர்களுக்கும் வாணிபப் பயிர்களுக்கும் ஒரே மாதிரியான உதவித் தொகை வழங்குவது குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறது.

மூன்றாவது திட்டக்கால இறுதியில், பயிர்ப் பாதுகாப்பு வேலைகளின் கீழ் 27·11 லட்சம் ஏக்கர் உணவுப் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன. 1970–71-க்குள் உணவுப் பயிர்கள் சம்பந்தமாக, முந்தைய பரப்பளவைவிட இரு மடங்கு பரப்பளவிற்கு பயிர்ப் பாதுகாப்பு அளிப்பதே நான்காவது திட்டத்தின் இலக்காகும். 1966–67-ல் 34·11 லட்சம் ஏக்கர் பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. 1967–68-ல் 36·00 லட்சம் ஏக்கர் பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பது இலக்காகும். இதைத் தவிர, வாணிபப் பயிர்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான திட்ட இலக்குகள் தனியாக நிச்சயிக்கப்பட்டுள்ளன.

[1967 ஜூலை 14

தெளிப்பான்களையும் தூவு கருவிகளையும் வழங்குதல்

கையால் இயக்கப்படும் தூவு கருவிகளும் தெளிப்பான்களும், ஒரு ஆண்டிற்கான குறைந்த விலையில் 50 சத வீதத்தில் வழங்கப்படுகின்றன. இவற்றை வழங்கும் பொறுப்பு 1961 அக்டோபர் 1-ம் தேதி முதல் பஞ்சாயத்து ஒன்றிப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நான்காவது திட்ட காலத்தில், 25,000 தெளிப்பான்களையும், 2,000 தூவு கருவிகளையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் 5,577 தெளிப்பான்களும், 1,151 தூவு கருவிகளும் வழங்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 1967–68-ல் 5,000 தெளிப்பான்களையும், 400 தூவு கருவிகளையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின் சக்தியால் இயக்கப்படும் தெளிப்பான்களையும், தெளிப்பான்-தூவு கருவிகளையும் பயன்படுத்துவது பரவலாகி வருகின்றது. இக் கருவிகளை ஒவ்வொரு வட்டாரத்திலும் பயன்படுத்துவதற்காக அவற்றை வாங்கி பயிர்ப் பாதுகாப்பு அதிகாரிகளிடமும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகளிடமும் பஞ்சாயத்து ஒன்றிப்புகளிடமும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. 1963–64-ல் இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட மின் சக்தியால் இயக்கப்படும் 200 ஆல்மன் தெளிப்பான்-தூவு கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதைத் தவிர, 1964–65-ல் ஒதுக்கப்பட்ட மின் சக்தியால் இயக்கப்படும் 700 ஆல்மன் தெளிப்பான்-தூவு கருவிகளும், 1965–66-ல் ஒதுக்கப்பட்ட 300 சிபா மைக்ரோனைசர்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. உள் நாட்டில் இவற்றின் உற்பத்தி அதிகரித்து வருவதால், இவற்றை நேரடியாக வாங்குவதற்கு குடியானவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஊக்கமளிக்கப்படுகின்றன. அவற்றை வாங்குவதில் ஏதாவது இடர்ப்பாடு ஏற்பட்டால் வேளாண்மைத் துறையின் உதவி அளிக்கப்படுகின்றது. தற்போது செயல்பட்டு வரும் வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவதுடன், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளைப் பழுது பார்க்கவும், செப்பனிடவும், ஒரு பராமரிப்பு நிறுவனத்தை ஏற்படுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

நெல் பயிர்களுக்கு விமானம் மூலம் மருந்து தெளிக்கும் வேலை, ஒரு முன்னோடி நடவடிக்கையாக 1966–67-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஒரு சுற்று தெளிக்கும் வேலை முடிவடைந்தது. 1966–67-ல் மருந்து தெளித்ததனால் ஏற்பட்ட நன்மைகளை மதிப்பிட்டவுடன் விமானம் மூலம் மருந்து தெளிப்பதை 1967–68-ல் அதிக பகுதிகளுக்கு நீட்டிப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும்.

மேம்படுத்தப்பட்ட கருவிகள்

கலப்பைகள் வழங்குதல்.—மேலூர் கலப்பைகள், **M. B.** கலப்பைகள் கலப்பை கொழுக்களும் ஆகியவை வட்டாரங்கள் மூலம் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 1·00 லட்சம் கலப்பைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கலப்பைகளை வழங்கும் பொறுப்பு 1967–68 முதல் வட்டாரங்களிடம் ஒப்படைப்பது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

வேளாண்மைக் கல்வி.—கோயம்புத்தூரிலும் மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. இவ்விரு கல்லூரிகளிலும் முறையே ஆண்டிற்கு 162 மாணவர்களும், 80 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதைத் தவிர, அண்ணமலை பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மைப் பட்டப்படிப்பு பாட முறையில் 75 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1967–68-ல் ஏற்படுத்த திட்டமிட்டிருந்த வேளாண்மை விரிவு குறித்த பட்ட மேற்படிப்புப் பாட முறைக்கு சென்னை பல்கலைக் கழகத்தின் ஒப்புதல் தேவைப்படுவதால் அதைத் துவக்குவது தள்ளிப் போடப்பட்டுள்ளது. ஏனைய பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் கோயம்புத்தூரில் தொடர்ந்து செயல்படும்.

1967 ஜூலை 14]

வேளாண்மை ஆராய்ச்சி.—வேளாண்மையின் பல்வேறு பிரிவுகளில் ஆராய்ச்சி நடத்த வேண்டியதன் தேவை உணரப்பட்டு, கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சி நிலையத்திலும், அந் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள 41 ஆராய்ச்சி நிலையங்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மூன்றாவது திட்டக் காலத்தில் 74 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. மேலும் பல ஆராய்ச்சித் திட்டங்கள் 1967–68-ல் மேற்கொள்ளப்படும்.

மண்வள ஆய்வு.—விளைச்சலை மிகுதிப்படுத்தும் பொருட்டு பயிர்களுக்கு ஏற்ற உரங்களைப் பயன்படுத்துவது குறித்து பரிவுரை செய்வதற்காக மண் வகைகளின் மாதிரிகளையும் தண்ணீரின் மாதிரிகளையும் பகுத்து ஆராய்வது இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது, ஆடுதுறை, கோயம்புத்தூர், கோவில்பட்டி, கடலூர் ஆகிய நான்கு இடங்களிலும் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடலூரிலுள்ள நிலையம் 1965–66-ல் நிறுவப்பட்டது. மாதிரிகளை மிகுந்த அளவில் பரிசோதனை செய்யக்கூடிய திறனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு, கூடுதலாகச் சாதனங்கள் வாங்கப்பட்டும், கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தும் தற்போதுள்ள ஆய்வுக் கூடங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 1966–67-ல் மதுரை, குடியாத்தம், காஞ்சிபுரம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் ஆய்வுக் கூடமாக மேலும் மூன்று ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏழு ஆய்வுக் கூடங்களும் தொடர்ந்து செயல்படும். வட்டாரவாரியாக மண் வகைகளின் தரத்தை முறையாகப் பகுத்து ஆராய்வதும், மண்வளத்தைக் காட்டும் வரை படத்தை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தயாரிப்பதும் இந்த ஆய்வுக் கூடங்களின் முக்கிய பணியாகும்.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் பரப்பு முழுவதிலும் முனைப்பு நடவடிக்கைகளின் மூலம் மும்முர வேளாண்மை மேம்பாட்டு வேலைகளை மேற்கொண்டு, ஒரு ஏக்கருக்கான விளைச்சலை அதிகப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

பண்ணைக்குத் தேவையானவை அனைத்தையும் வழங்கி அதன் மூலமாக உற்பத்தியை பெருக்குவதற்காக, பங்கு கொள்ளும் குடியானவர்களுக்கு "தனிப் பண்ணைத் திட்டங்கள்" (Farm Plans) தயாரிப்பது இவ் வேலைத் திட்டத்தின் முக்கிய கூறாகும். குடியானவர் ஒவ்வொருவரும் தன் பண்ணையில் விளைவை மிகுதிப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும், இதனால் திட்ட இலக்கை அடையவும் அவர்களுக்கு உதவி அளிக்கப்படுகின்றது. தொழில் நுட்ப முறையில் குடியானவர்களுக்கு வழிகாட்டி உதவி செய்வதுடன், அவர்களுக்காகப் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன :—

(i) விஞ்ஞான முறையில் செய்முறை விளக்கங்களை நடத்திக் காட்டுவதன் மூலம் சிறந்த முறையில் சாகுபடி செய்யும் நுட்பங்களைக் குடியானவர்களுக்குக் கற்பித்தல்.

(ii) உற்பத்தி செய்வதற்கான பொருள்களை வாங்குவதற்காக குடியானவர்களுக்கு உரிய காலத்தில் ரொக்கமாகவும் பொருளாகவும் போதிய கடன் வசதி வழங்குதல்.

(iii) பணியாளர்களையும் பொருள்களையும் வேண்டிய இடங்களுக்கு விரைந்து அனுப்புவதற்காகப் போக்குவரத்து வசதியைப் பெருக்குதல்.

(iv) கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் விற்பனை, மற்றும் ஏனைய வகையான பணிகளைச் செய்தல்.

(v) தேவையான பொருள்களை வழங்கவும் விற்பனை வசதிக்காகவும் மாட்டு வண்டிகள் சென்றடையக் கூடிய தொலைவில், கிடங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். மூன்றாவது திட்ட காலத்தின் முதல் ஆண்டில் இவ் வேலைத் திட்டம் 26 வட்டாரங்களின் 30 சத வீதத்திலிருந்து,

அதாவது 3·43 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து, 24 வட்டாரங்களில் எல்லாப் பகுதியிலும், இரண்டு வட்டாரங்களில் 65 சத வீதப் பரப்பிலும், 9 வட்டாரங்களில் 30 சத வீதப் பரப்பிலும், ஒரு வட்டாரத்தில் 40 சத வீதப் பரப்பிலும் செயல்படுத்தப்பட்டது. மூன்றாவது திட்ட இறுதியில் மொத்தம் 12·22 லட்சம் நிலப்பரப்பில் இவ் வேலைத் திட்டம் செயல்பட்டது. 1966–67-ல், இத் திட்டம் செயல்படும் நிலப்பரப்பு, 33 வட்டாரங்களில் 100 சத வீதமாகவும், 1 வட்டாரத்தில் 65 சத வீதமாகவும், மற்றொரு வட்டாரத்தில் 40 சத வீதமாகவும், இன்னுமொரு வட்டாரத்தில் 30 சத வீதமாகவும் உயர்ந்துள்ளது. இதன் மூலம் மொத்தம் 13·04 ஏக்கர் நிலப்பரப்பில் இவ் வேலைத் திட்டம் செயல்பட்டது. இவ் வேலைத் திட்டத்தின் கீழ், 1966–67-ல் குறுவைப் பருவத்தில் 2 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் ஆடுதுறை 27 நெல் ரகம் பயிரிடப்பட்டதுதான் தலையாய சாதனையாகும்.

நிலத்துக்கடியில் உள்ள நீரை வடிமுனைகளின் மூலம் எடுத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1966–67-ல் 1,816 வடிமுனைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. குறுவைப் பருவத்தில் முன்னதாகவே நாற்று நடுவதற்காக நாற்றங்கால்களுக்குத் தண்ணீர் வசதியளிக்கவும், கோடை மாதங்களின் ஒரு போகம் பருத்தி அல்லது வேர்க்கடலை பயிரிட இவை துணையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. 20,000 முதல் 22,000 ஏக்கர் பரப்புள்ள கோடைப் பயிர்களுக்கு வடிமுனைகள் மூலம் பாசன வசதி அளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டம்

மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டத்தைச் செயல்படுத்த செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அத் திட்டம் 1965–66-ல் அம் மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. இந்த மாவட்டங்களில் உள்ள குடியானவர் ஒவ்வொருவருக்கும், முனைப்பு நடவடிக்கைகளைக் கற்பித்தல், பண்ணைத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல், பண்ணைக்குத் தேவையான பொருள்களை வழங்குதல், கடன் வசதியளித்தல், நவீன வேளாண்மை முறைகளைக் கையாளும் முறையை நடைமுறையில் செய்து காட்டுதல் ஆகிய நடவடிக்கைகள் மூலமாக நெல், சோளம், கேழ்வரகு ஆகிய முக்கிய உணவுப் பயிர்களின் உற்பத்தியையும் இவற்றுடன் மாறி மாறிப் பயிரிடப்படும், வேர்க்கடலை, பருத்தி போன்ற வாணிப முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களின் உற்பத்தியையும் பெருக்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 133 வட்டாரங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில், நிலையான பாசன வசதி கொண்ட 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட 83 வட்டாரங்களில் வேளாண்மை வளர்ச்சி அதிகாரி ஒருவரும், கிராம நிலையில் பணி புரியும் ஐந்து பணியாளர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு குடியானவருக்கும், தனிப் பண்ணைத் திட்டங்கள் அடிப்படையில் விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், மேம்படுத்தப்பட்ட கருவிகள், கூட்டுறவுகள் மூலம் கடன் வழங்குதல் போன்ற உற்பத்திக்கான உதவிகளைப் போதிய அளவிற்கும் உரிய காலத்திலும் அளிப்பதே இவ் வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தர விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள், நவீன கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி குடியானவர்கள் முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ் வேலைத் திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு பயிருக்கும் முனைப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குடியானவருக்கும் தனிப் பண்ணைத் திட்டங்களை கிராம நிலைப் பணியாளர்கள் மேம்படுத்துகின்றனர். இதன் மூலம் கிராம நிலைப் பணியாளர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. கிராம நிலைப் பணியாளர்களைக் கலந்தாலோசித்து ஒவ்வொரு குடியானவருக்கும்

பண்ணை உற்பத்தித் திட்டத்தைத் தயாரிப்பது வேளாண்மையில் நவீன முறைகளைக் கையாளும்படிக் குடியானவர்களுக்கு அறிவுறுத்த வகை செய்கிறது.

தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டம் எந்த வட்டாரத்தில் உள்ளதோ, அந்த வட்டாரத்தின் வேளாண்மைத் துறைத் துணை நெறியாளரின் மேற்பார்வையில் ஒவ்வொரு மாவட்டமும் உள்ளது. இத் துணை நெறியாளர் ஒவ்வொருவரும் மாவட்டத்தின் திட்டப் பகுதி அதிகாரியாவார். தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திற்கும் மாவட்ட வேளாண்மை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டத்தின் ஒரு பகுதி, நான்காவது திட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டமாகக் கருதப்படும்.

இந்திய-ஜெர்மன் வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

இமாசலப் பிரதேசத்தில் மண்டி மாவட்டத்தில் 1962-ம் ஆண்டு முதல் இந்திய-ஜெர்மன் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று நடைபெற்று வருகிறது. அத்தகைய திட்டம் ஒன்று இம் மாநிலத்தில் நீலகிரி மாவட்டத்திலும் 8–1–1967-ம் தேதி முதல் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மேற்கு ஜெர்மனியிலிருந்து தொழில் நுட்ப உதவியும், நிதி உதவியும், கருவிகள், பொருள்கள், நிபுணர்கள் வகையில் கிடைக்கின்றது.

இவ் வேலைத் திட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு :—

(1) உருளைக் கிழங்கு, காய்கறிகள், தீவனப் பயிர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதிலும் கறவை மாடுகளை வளர்ப்பதிலும் ஆடு வளர்ப்பிலும் கோழியினப் பறவை வளர்ச்சியிலும் கூட்டு ஆலோசனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) உரங்கள், பயிர்ப் பாதுகாப்புப் பொருள்கள் (அதாவது ரசாயனப் பொருள்கள், விசைத் தெளிப்பான்கள்), சிறு பொறிகள், கருவிகள், விதைகள், பொலி காளைகள் ஆகியவை மேற்கு ஜெர்மன் அரசினால் இலவசமாக வழங்கப்படும்.

(3) (a) உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு, (b) உருளைக்கிழங்கு, காய்கறிகள், தீவனப் பயிர்கள் வளர்ச்சி, (c) விலங்கின வளர்ச்சி முதலிய முக்கிய துறைகளில் ஜெர்மன் நிபுணர்கள் பணியினைத் தந்து உதவுவர்.

முதற்கண் இந்த வேலைத் திட்டம் ஐந்தாண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

கீழ்க்கண்டவற்றைச் செய்யும் பொறுப்பினை மாநில அரசு மேற்கொண்டது :—

(1) ஜெர்மன் குழுவின் அலுவலகத்தை நிர்வகிப்பதற்கு வேண்டிய இந்தியப் பணியாளர்களைத் தவிர இந்தியத் திட்ட அதிகாரி ஒருவரையும் ஜெர்மன் நிபுணர்களுக்கு ஏற்ற இந்திய நிபுணர்களையும் நியமித்தல்.

(2) ஜெர்மன் குழு அலுவலகத்திற்கு நிலம் பெறுதலும், கட்டிடம் கட்டுதலும், ஜெர்மன் அதிகாரிகளுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் உறைவிடங்களில் வேண்டிய வசதிகளை அமைத்துக் கொடுத்தல்.

(3) ஜெர்மன் அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்தியாவில் செய்யும் பயணங்களுக்குப் பயணப்படியும் நாள் படியும் வழங்குதல்.

(4) இறக்குமதி செய்த கருவிகள்மீது சுங்கத் தீர்வையும் இறக்குமதி செய்த துறைமுகத்திலிருந்து நீலகிரிப் பகுதிக்குப பொருள்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவும்.

வாணிபப் பயிர்கள்

பருத்தி வளர்ச்சி (விரைவுத் திட்டம் உட்பட)

நான்காம் திட்டத்தில் கூடுதலாக 1·45 லட்சம் பேல் பருத்தி உற்பத்தி செய்யும் குறிக்கோள் அளவு மேற்கொள்ளப்பட்டது. இதனால் திட்டக் காலத்து இறுதியில் 5·80 லட்சம் பேல் பருத்தி உற்பத்தி அளவினை எய்த முடியும். ஒருங்கிணைந்த பருத்தி வளர்ச்சித் திட்டமும் முனைப்புத் திட்டமும் மும்முரமாக நிறைவேற்றப்படும். 1965–66-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட முனைப்புத் திட்டம் 1966–67-ல் 75,000 எக்கர் கூடுதல் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் இன்னும் கூடுதலாக 60,000 எக்கரில் முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியுள்ளது. இந்தப் பரப்பளவில் கோயம்புத்தூரில் இரு பிரிவுகளில் 60,000 எக்கராவில் பாசனம் பெறும் கம்போடியாப் பருத்தியை விளைவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, 4·35 லட்சம் பேலாக உள்ள பருத்தி உற்பத்தியின் மேல் இத் திட்டத்தினால் 1967–68-ல் 0·57 லட்சம் பேல் கூடுதல் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்பு வளர்ச்சிக்கான பணிகள் (சாலைப்பணிகள் உள்பட)

இரண்டாவது திட்டத்தின் முடிவில் கரும்பு உற்பத்தி அளவானது 67·5 லட்சம் டன்னாக இருந்தது. மூன்றாவது திட்ட முடிவில் இந்த அளவை 77·50 லட்சம் டன்கள் அல்லது 7·75 லட்சம் டன்களுக்கு வெல்ல உற்பத்தியைக் கொண்டுவர வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது. ஆனால் 7·14 லட்சம் டன் வெல்லம்தான் உற்பத்தி செய்யப்பட்டதென இறுதியாகக் கிடைத்த விவரங்களிலிருந்து தெரியவந்தது. 1965–66-ல் பருவநிலை சாதகமாக இல்லாததால் கரும்பு உற்பத்தியின் குறிக்கோள் அளவை எய்தினாலும் வெல்ல உற்பத்தி பாதிக்கப்பட்டது. சாதாரண பருவ நிலை இருந்திருந்தால், வெல்ல உற்பத்தி குறித்த குறிக்கோள் அளவு எய்தப்பட்டிருக்கும். இதைக் கருத்தில் கொண்டு நான்காம் திட்டத்தில் 1·8 லட்சம் டன் வெல்லத்திற்கு ஈடாக 18 லட்சம் டன் கரும்பு கூடுதலாக விளைவித்து இதன் மூலம் 9·55 லட்சம் டன் அளவுக்கு வெல்ல உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மும்முர விளைச்சல் பணிகளாலும், புதிய ரக கரும்பினைப் பயிரிடுவதாலும், கரும்பு பயிரிடும் பகுதியை விரிவுபடுத்துவதாலும், 52,000 எக்கராவில் முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் மட்டுமே திட்டமிட்ட குறிக்கோள் அளவை எய்த முடியும். 1967–68-ல 0·62 லட்சம் டன் குறிக்கோள் அளவில் கூடுதல் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுராந்தகம் ஆலைப் பகுதியில் 1964–65-ல் 4,000 எக்கர் பரப்பில் கரும்பு பயிரிடும் முனைப்புத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டது. இது நான்காவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்படும். மேலும் 52,000 எக்கர் பரப்பை கரும்புப் பயிரின் கீழ்க் கொண்டுவர மற்றும் 13 முனைப்புத் திட்டங்கள் துவங்கப்படும். 1967–68-ல் பெண்ணாடம், முண்டியம்பாக்கம், ஆம்பூர், ஆப்பக்கூடல் ஆகிய நான்கு இடங்களில் உற்பத்திப் பிரிவுகளைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரும்பை எளிதாகவும் விரைந்தும் எடுத்துச் செல்ல வசதி செய்யும் பொருட்டு கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சாலை மேம்பாட்டுக்கான திட்டம் நான்காவது திட்டக் காலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உதவிப் பொறியாளர்கள் மூவரின் துணை கொண்டு ஒரு கோட்டப் பொறியாளரைக் கொண்ட தனிப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழு இத் திட்டத்தின்கீழ் உள்ள சாலைப்பணிகள் குறித்து நாட்டம் செலுத்தி, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சாலைப்பணிகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யும்.

எண்ணெய் வித்துக்கள் (முனைப்புத்திட்டம் உட்பட)

1961–62 முதல் எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் முக்கிய கூறுகளாவன :—

(1) ஆண்டுதோறும் நிலக்கடலை பயிராகும் 1/10 பரப்பில் (சுமார் 2·00 லட்ச எக்கரில்) நிலக்கடலைப் பயிரிடுவதற்காக தேர்ந்த நிலக்கடலை பருப்புகள் வழங்குதல். இதற்காக, 700 எக்கர் அரசு நிலப்பரப்பில் அல்லது குத்தகை நிலப் பரப்பில் 14 இடங்களில் மண்டலப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2,000 எக்கர்களில் முதல் நிலை விதைப் பண்ணைகளும் 8,000 எக்கர்களில் இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளும், 40,000 எக்கர்களில் மூன்றும் நிலை விதைப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடைசி மூன்று நிலைகளில் விதைப் பெருக்க நடவடிக்கை குடியானவர்களின் நிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மூன்றும் நிலை விதைப் பெருக்கும் பணியை படிப்படியாக 40 கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கத்திலும் இதற்காக 1,000 எக்கர் பயன்படுத்தப்படும். இது வரை, 19 சங்கங்கள் இவ் வேலையை மேற்கொண்டுள்ளன. ஒவ்வொரு சங்கத்திற்கும் விவசாய விளக்குனர் (Upper Subordinate) ஒருவரது பணியும் மேஸ்திரி ஒருவரது பணியும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(2) உரம் பயன்படுத்தத் தூண்டும் மும்முரப் பிரசாரம் நடத்துவதும் ஆண்டொன்றுக்கு 320 செய்முறை விளக்கங்களுக்கு உதவித் தொகை வழங்குவதும் நடைபெறுகின்றது. பயிர் விளைவிக்கப்படும் பரப்பு பெருமளவில் இருப்பதால் அதிகப்படியாக செய்முறை விளக்கங்கள் நிகழ்த்தவேண்டியதன் தேவையை உணர்ந்து 1965–66-ல் இந்த எண்ணிக்கை 520 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(3) பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைப் பாதி விலையில் வழங்குவதன் மூலம் தக்க சமயத்தில் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், தகுந்த பகுதிகளில் விமான மூலம் பூச்சி மருந்துகளைத் தெளித்தல், நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் சிவப்புக் கம்பளிப் பூச்சிகளை ஒழிக்க உடனடிக் கடன்களை வழங்குதல், மதுரை, கோயம்புத்தூர், விழுப்புரம் ஆகிய ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று பயிர்ப் பாதுகாப்புத் தனிப்படைகள் செயலாற்றி வருகின்றன. இவை ஒவ்வொன்றிலும் விவசாய விளக்குனர் ஒருவரும் நான்கு களப்பணியாளர்களும் (fieldman) பணியாற்றுகின்றனர்.

(4) கலப்புச் சாகுபடியின்கீழ் உள்ள பகுதியை விரிவு படுத்துவதற்காக இலவசமாக ஆமணக்கு விதைகள் வழங்குதல். கால்வாசி விலையில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்குதல். (இப்போது இந்தச் சலுகை நிறுத்தப்பட்டிருக்கிறது.)

(5) பயிர் செய்யத்தக்க பகுதிகளில் முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

1964–65-ம் ஆண்டு இறுதியில் கடலூர், ஆனைமலை, திருவண்ணாமலை, விழுப்புரம், கம்பம் ஆகிய இடங்களில் 5 முனைப்பு உற்பத்திப் பிரிவுகள் செயலாற்றி வந்தன. இவற்றுடன் கீழ்பவானி திட்டப் பகுதியில் கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு ஆகிய இடங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு மேலும் இரண்டு திட்டங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. நான்காண்டுக் காலத்தில் 40,000 எக்கராவில் படிப்படியாக புன்செய்ப் பயிர் விளைவிக்கும் திட்டம் 1966–67-ல் தொடங்கப்பட்டது. இத் திட்டம் இரு பிரிவுகளாகச் செயல்படும்.

இரண்டாவது திட்டத்தின் இறுதியில் எண்ணெய் வித்துகளின் உற்பத்தி அளவு 10·86 லட்சம் டன்னாக இருந்தது. மூன்றாவது திட்டத்தில் 3·08 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் கூடுதலாக உற்பத்தி செய்ய

வேண்டும் என்பது நமது குறிக்கோள் அளவு. குறிப்பிட்ட இவ்வுற்பத்தித் திறனைப் பெறுவதற்குரிய உற்பத்தித் திறன் ஏற்படுத்தப் பட்டிருந்தபோதிலும், 9·51 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இது அடிப்படை அளவிற்கும் குறைந்துள்ளது. ஆயினும், 1964–65-ல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அளவு 11·57 லட்சம் டன் ஆக இருந்தது.

கூடுதலாகத் தேவைப்படும் உரவகைகள், தோற்றுவிக்கப்பட்டுள்ள உற்பத்தித் திறனளவுகள் இவற்றைக் குறித்து முறையே ஆலோசித்த பின்னர் இயல்பான பருவநிலை இருந்திருந்தால், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 12 லட்சம் டன்னாக இருந்திருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இது நான்காவது திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான அடிப்படை உற்பத்தி நிலையாகக் கொள்ளப்படுகிறது.

1970–71-ம் ஆண்டு முடிவில் உற்பத்தி 17·24 லட்சம் டன்னாக அதிகரிக்கும் வகையில் 5·24 லட்சம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று நான்காவது திட்டத்தில் நிச்சயிக்கப்பட்டது. இலவசமாக ஆமணக்கு விதைகள் வழங்கப்படுவதும், ஆமணக்கு உற்பத்திக்காகப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் முக்கால் விலையில் வழங்கப்படுவது நீங்கலாக தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் அனைத்தும் நான்காவது திட்டத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படும். மற்ற எண்ணெய் வித்துக்கள் போலவே இவ்வகை வித்துக்கள் விற்பனை குறித்து 50 சத விகிதம் உதவித் தொகை வழங்கப்படும்.

வான் பொய்க்காப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுவரும் முனைப்பு உற்பத்தித் திட்டம் படிப்படியாக 1·00 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விரிவு படுத்தப்படும். 1966–67-ல் தற்போதுள்ள பிரிவுகளை அடுத்து அமைந்துள்ள 25,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 1967–68-ல் தவறாது மழை பெய்யும் பகுதிகளில் மேற்கொண்டும் 25,000 ஏக்கர் பரப்பளவில் இந்த முனைப்பு உற்பத்தித் திட்டம் நிறைவேற்றப்படும். மூன்றும் நிலை விதைப் பெருக்க வேலை மேலும் பதினோரு சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும். மேலும், நான்காவது திட்டத்தில் வட ஆற்காடு, சேலம், செங்கற்பட்டு மாவட்டங்களில் மொத்தம் 5·50 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி நோக்குக் கொண்ட திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும். இதன்கீழ் 1967–68-ல் 1·40 லட்சம் ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். 1966–67-ல் 0·45 லட்சம் டன்களும், 1967–68-ல் 2·88 லட்சம் டன்களும் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

முந்திரி உற்பத்தி

மூன்றும் திட்டக் காலத்தில் ஒருவருக்கு அதிக அளவு ரூ. 2,000-க்கு மேற்படாமல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 80 வீதம் நீண்டகாலக் கடன் உதவி அளிப்பதன் மூலம் காடு அல்லாத பகுதிகளில் 10,000 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சிறந்த வகை விதைகள் கடன் பெறுவோர்க்குக் கடன் தொகைக்குப் பதிலாக வழங்கப்படுகின்றன. மூன்று ஆண்டுகளில் 10,000 ஏக்கர் நிலத்தில் முந்திரி வளர்க்கப்படுவதற்காக 1963–64-ம் ஆண்டில் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சிக்கான தனித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் 26,960 ஏக்கர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்கள் 20,000 ஏக்கர்களில் முந்திரி வளர்க்க வேண்டுமென்னும் குறிக்கோள் அளவுடன் நான்காவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1966–67-ல் 5,353 ஏக்கர் நிலப் பரப்பில் முந்திரி பயிரிடப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் மேலும் 5,000 ஏக்கர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் முந்திரி, தென்னை உற்பத்திப்பெருக்கம்

முந்திரி, தென்னை வளர்ப்புக்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று 1966–67-ம் ஆண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நான்காவது திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதியில் 8,000 ஏக்கர் பட்டா நிலங்களில் முந்திரி, தென்னை பயிரிடப்படும் ; அதாவது—

2,000 ஏக்கர் நிலங்களில் தென்னையும், 6,000 ஏக்கர் நிலங்களில் முந்திரியும் வளர்க்கப்படும். இதற்காக ஏக்கர் ஒன்றுக்கு முறையே ரூபாய் 350-ம் ரூபாய் 100-ம் நீண்டகாலக் கடனாக வழங்கப்படும். 1966–67-ம் ஆண்டில் 250 ஏக்கர் நிலங்கள் முந்திரி வளர்ப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1967–68-க்கான குறிக்கோள் அளவு 500 ஏக்கர் நிலத்தில் தென்னை மரங்களும், 2,000 ஏக்கர் நிலத்தில் முந்திரியும் வளர்ப்பதாகும்.

தென்னை உற்பத்திப் பெருக்கம்

(i) தென்னம்பிள்ளை வளர்ப்பிடங்களை ஏற்படுத்துதல்

நான்காவது திட்டத்தில் கூடுதலாக 1·50 லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யும் வகையில் 5 தென்னம்பிள்ளை வளர்ப்பிடங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நான்காவது திட்ட இறுதியில் ஆண்டுதோறும் 7·50 லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்ய முடியும். இவைகளுள் ஒன்று 1967–68-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் நிறுவப்படும். 1966–67-ம் ஆண்டில் 5·52 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன. 1967–68-ல் 6 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) மும்முர நடவடிக்கைகளின் மூலம் தென்னை உற்பத்தியை அதிகரித்தல்

உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகளையும், பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளையும், உரங்கள் பயன்படுத்துதலையும்—மேற்கொள்வது குறித்த பிரசாரம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. எரு உபயோகம் பற்றிய செய்முறைகளும், பயிர் விளைச்சல் பற்றிய செய்முறைகளும் நடத்தப்படுகின்றன. இதற்காக செய்முறை ஒன்றுக்கு முறையே ரூ. 50, ரூ. 10 உதவித்தொகை வழங்கப்படுகிறது. பயிர் பாதுகாப்பு மருந்துகள் பாதி விலையில் வழங்கப்படுகின்றன. தென்னம் பிள்ளைகளின்மீது மருந்து தெளிக்கத்தக்க தெளிப்பான்கள் ரூ. 100 என்ற அதிக அளவு உதவித் தொகைக்கு உட்பட்டு பாதி விலையில் வழங்கப்படுகின்றன. இவ் வேலைகள் யாவும் நான்காவது திட்டத்தில் தொடர்ந்து செயல்படும். மேலும் அதிகக் காய்ப்புப் போட்டிகளும் தொடர்ந்து நடத்தப்படும்.

(iii) சதுப்பு நிலப்பகுதியில் செயல்முறை விளக்கப் பண்ணைகளை நிறுவுதல்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 3 பண்ணைகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பண்ணையும் பணியாற்றுகின்றன. இவற்றில் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஒரு பண்ணையும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு பண்ணையும் செய்முறைப் பண்ணைகளாகத் தொடர்ந்து செயல்படும். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மற்ற இரு பண்ணைகளும் மூடப்பட்டன.

(iv) ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களை நடத்துதல்

தென்னை மரங்களை அழிக்கும் ஒரு வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் குடியாத்தம், கோயம்புத்தூர், நாகர்கோயில், ஊத்தங்குடி (திருநெல்வேலி மாவட்டம்), தஞ்சாவூர்

ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 2 லட்சம் மரங்கள் பயனடையும் வகையில் இவ்வொட்டுண்ணிகள் குடியானவர்களின் தோப்புகளில் விடப்படுகின்றன. இவ் வேலை நான்காவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். பெருகிவரும் தேவைக்கேற்ப 1967–68-ல் காஞ்சிபுரம், சேலம், சிவகங்கை ஆகிய இடங்களில் கூடுதலாக 3 நிலையங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) முனைப்புத் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த அதிராமபட்டினத்தில் ஒருங்கிணைந்து அமைந்துள்ள 1,000 எக்கர் நிலப்பரப்பில் 1963–64-ல் ஒரு முனைப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. உற்பத்தியை 25 சத வீகிதம் அதிகரிப்பதற்காக முனைப்பு உற்பத்தி முறைகளை மேற்கொள்வதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். உரங்களை வாங்குவதற்காக கடன்-உதவித் தொகை ஒன்று கீழே குறிப்பிட்டவாறு வழங்கபபடுகிறது :—

	எக்கர் ஒன்றுக்கான விகிதம்.
ஒரு எக்கரும் அதற்குக் குறைவாகவும் உள்ள நிலத்தை வைத்திருப்பவர்கள்.	180 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.
ஒரு எக்கருக்கு மேற்பட்ட ஆனால் ஐந்து எக்கர் அல்லது ஐந்து எக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்.	90 ரூபாய் உதவித் தொகையாகவும், 90 ரூபாய் கடனாகவும் வழங்கப்படும்.
ஐந்து எக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருப்பவர்கள்.	180 ரூபாய் கடனாக வழங்கப்படும்.

முதல் மூன்று ஆண்டுகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1965–66-ல் 1,000 எக்கர் நிலம் குறித்து இக் கடன்-உதவித் தொகை வழங்கப்பட்டது. 1966–67-ல் தஞ்சாவூர், கன்னியாகுமரி, வடஆற்காடு மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றிற்கு 1,000 எக்கர் வீதம் இத் திட்டத்தைச் செயல்படுத்த மேலும் 3 பிரிவுகள் தொடங்கப்பட்டன. அதே சமயத்தில் முனைப்பு உற்பத்தி திட்டங்களால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. 1967–68-ல் மேற்கொண்டும் ஒரு நிலையம் தொடங்கப்படும்.

(vi) தென்னை நெற்றுப் பண்ணை

தரமான தென்னை நெற்றுகளை உற்பத்தி செய்ய 100 எக்கர் கொண்ட நிலப்பரப்பில் பண்ணை ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான இடத்தை தேர்ந்தெடுக்கும் வேலை நடந்தேறி வருகிறது.

(vii) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை உற்பத்திப் பெருக்கம்

மூன்றுவது திட்டக் காலத்தில் 500 குடும்பங்களை குடியேற்றி, குடும்பம் ஒன்றுக்கு 5 எக்கர் நிலத்தை ஒதுக்கி அவர்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் குறைந்த அளவு 3 எக்கர் நிலத்திலாவது தென்னை மர வளர்ப்பு வேலைகளை மேற்கொள்ள இத் திட்டம் வகை செய்கிறது.

இதனுடன் நீண்டகாலக் கடன் வழங்குவது மூலம் 7,500 எக்கர் பட்டா நிலங்கள் தென்னை உற்பத்தியின்கீழ் கொண்டு வரப்படும். மூன்றுவது திட்டக்காலத்தில் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலப் பரப்பளவு வருமாறு:—

				எக்கரில்.
1961–62	..	..	..	204
1962–63	..	..	..	1,464
1963–64	..	..	..	1,178
1964–65	..	..	..	1,538
1965–66	..	..	..	1,834
		மொத்தம்	..	6,218

இத் திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக, ஆறு தென்னம்பிள்ளை வளர்க்குமிடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டிற்கு 1·80 லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யவேண்டும் என்பது குறிக்கோள் அளவாகும். சாதனைக் குறித்த விவரம் பின்வருமாறு :—

				லட்சத்தில்.	
1961–62	..	..	..	1·32	
1962–63	..	..	..	1·37	
1963–64	..	..	..	1·46	
1964–65	..	..	..	1·60	
1965–66	..	..	..	2·78	
1966–67	..	..	..	1·80	(எதிர்பார்ப்பது.)
1967–68	..	..	..	1·80	

இவ்வேலைத் திட்டம் நான்காவது திட்டத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். வேளாண்மைத்துறைக்கு எப்பகுதியும் ஒதுக்கப்படாததால் புதிய குடும்பங்கள் எவையும் 1966–67-ல் குடியேற்றப்படவில்லை. ஆயினும் 1967–68-ல் 100 குடும்பங்கள் குடியேற்றப்பட்டு, அவர்களின் மூலம் 300 எக்கர் நிலத்தில் தென்னை மரங்கள் வளர்க்கப்படும். பட்டாதார்களுக்குக் கடன்கள் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக, 1,700 எக்கர் பரப்பளவில் தென்னை வளர்க்கப்படும். 1·80 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு தென்னம்பிள்ளைகளை வழங்குவதென குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

(viii) தென்னை உற்பத்திப் பகுதியை விரிவுபடுத்துதல்

நான்காவது திட்டத்தில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 300 நீண்டகாலக் கடன் வழங்குவதன் மூலம் புதிதாக 10,000 எக்கர் பரப்பளவில் தென்னை வளர்ப்புப் பணி நிறைவேற்றப்படும். ஒவ்வொரு ஆண்டும் 2,000 எக்கர் நிலம் இத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும்.

செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டக் கரைகளில் குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இடைக்கழிநாடு பகுதியில் உள்ள தென்னந்தோப்புகளை 1966-ம் ஆண்டு நவம்பர் திங்களில் வீசிய கடும் புயல் காற்று அழித்தது. புதிய தென்னந் தோப்பு வைப்பதற்கு எக்கருக்கு ரூ. 300 எனக் கொடுக்கப்படுகிற நீண்டகாலக்கடன், தற்போதுள்ள தென்னந் தோப்புகளில் தென்னம்பிள்ளைகளை மீண்டும் நடுவதற்கும் கொடுக்கப்பட வேண்டும் என அரசு இப்பொழுது ஆணையிட்டுள்ளது. இது இப்பகுதிகளில் தென்னை வளர்ப்போருக்கு பேருதவியாய் இருக்கும்.

தோட்டக்கலை

(i) பழ உற்பத்தியை பெருக்குதல்

மூன்றாவது திட்டத்தில் திராட்சை நீங்கலாக பிற பழங்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலம் ஒவ்வொருவருக்கும், ரூ. 2,000 என்ற அதிக அளவு வரையறைக் குட்பட்டு பழத் தோட்ட வளர்ப்புத் திட்டம் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டது. திராட்சைத் தோட்டங்களைப் பொறுத்தவரையில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும் ஒவ்வொருவருக்கும் ரூ. 6,000 என்ற அதிக அளவும் வரையறைக்குட்பட்டு கடன் வழங்கப்படுகிறது. 1961–62-ல் கூடுதலாக 829 எக்கரா பரப்பளவில் பழத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. 1962–63-ல் 1,010 எக்கர் பரப்பளவிலும், 1963–64-ல் 1,195 எக்கர் பரப்பளவிலும், 1964–65-ல் 1,286 எக்கர் பரப்பளவிலும், 1965–66-ல் 1,430 எக்கர் பரப்பளவிலும் பழத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. நான்காவது திட்டத்தில் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலம் 15,000 எக்கர் பரப்பளவில் பழத் தோட்டம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல், 1,474 எக்கர் பரப்பளவில் பழத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டிருக்குமென என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1967–68-ல் 2,000 எக்கர் பரப்பளவில் பழத் தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பழைய தோட்டங்களைப் புதுப்பிக்க எக்கர் ஒன்றுக்கு ரூ. 65 வீதம் குறுகியக் காலக் கடன் வழங்கும் திட்டத்திற்கு மக்கள் ஆதரவு இல்லாததால், நான்காவது திட்டத்தில் இது விட்டுவிடப்பட்டது;

(ii) மாதிரிப் பழத் தோட்டங்கள்

மூன்றாவது திட்ட இறுதியில் திம்மபுரம், பெரியகுளம், குன்னூர், குற்றாலம், கோடைக்கானல், ஆத்தூர், பூவணி (இராமநாதபுரம் மாவட்டம்) கூடப்பட்டு (வடார்க்காடு மாவட்டம்) மருங்குளம் (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 9 மாதிரி பழத் தோட்டங்கள் சிறு செடிகளை வளர்க்கும் இடங்கள் செயல்பட்டு வந்தன. நான்காவது திட்டத்தில் தென்னார்க்காடு, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக நான்கு பழத்தோட்டங்களை அமைப்பதன் மூலம் இம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பழத்தோட்டம் ஏற்படும். 1967–68-ல் இரண்டு பழத் தோட்டங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

காய்கறி விதை உற்பத்தி.

பாலூர், கோடைக்கானல், பவானிசாகர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக காய்கறி தர விதை உற்பத்தி நிலையங்கள் மூன்று செயல்பட்டு வந்தன. விரைவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1965-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பவானிசாகரில மேலும் காய்கறி விதை உற்பத்தி நிலையம் ஒன்று துவக்கப்பட்டது. பவானிசாகரில் முதலில் இருந்த இந்த நிலையம் மாதிரி பழத்தோட்டம் அமைக்கப்பட்ட மருங்குளத்திற்கு மாற்றப்பட்டது. இந்த நிலையங்களில் விதை உற்பத்தி தொடர்ந்து நடைபெறும்.

(iii) பழப் பாதுகாப்பு நிலையங்கள்

பழங்களையும், காய்கறிகளையும் பாதுகாப்பது குறித்த செய்முறை விளக்கத்திற்கான இரண்டு நிலையங்களில் ஒன்று திம்மபுரத்திலும், மற்றொன்று பெரியகுளத்திலும் செயல்பட்டு வருகின்றன. இயங்கும் நிலையம் ஒன்று விரைவில் செயல்படுத்தப்படும். முந்திரிப் பழச் சாற்றை பாதுகாப்பது குறித்த செய்முறை விளக்கத்திற்கான நிலையம் ஒன்று தஞ்சாவூரில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையங்கள் அனைத்தும் நான்காவது திட்டக் காலத்தில் தொடர்ந்து செயல்படும்

(iv) வாழை பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம்

வாழைப்பழ உற்பத்தியை, குறிப்பாக ஏற்றுமதி செய்யத் தக்க வாழைப் பழங்களின் உற்பத்தியை, அதிகரிக்க 1964–65-ல் முனைப்பு உற்பத்தித் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 4,000 எக்கர் நிலப்பரப்பளவில் வாழைப் பயிரிட அனுமதியளிக்கப்பட்டது. வடார்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரத் திட்டமிட்ட 4,000 எக்கர் பரப்பளவைத் தவிர கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் கூடுதலாக 8,000 எக்கர் பரப்பளவில் வாழைப் பயிரிட மேலும் இரண்டு நிலையங்களைத் தொடங்கவும், அதன் மூலம் வாழை உற்பத்தியைப் பெருக்கவும் விரைவுத் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மூன்றும் திட்டத்தின் இறுதியில் 7,296 எக்கர் பரப்பளவு முனைப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. நான்காவது திட்டத்தில் மேலும் 12,000 எக்கர் பரப்பளவில் இத் திட்டத்தை நிறைவேற்ற மேலும் 3 நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் மூன்றும் திட்டத்தில், இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட 7,296 எக்கர் நிலை நிறுத்தப்பட்டன. மேலும் 4,000 எக்கர் பரப்பளவு முனைப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. 1967–68-ல் தற்போதுள்ள தோட்டங்களைத் தொடர்ந்து பேணி வருவதுடன், வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 500 எக்கர் பரப்பளவிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2,000 எக்கர் பரப்பளவிலும் இத்திட்டத்தை விரிவுப்படுத்துவதன் மூலம் 3,000 எக்கர் பரப்பளவுள்ள புதியப் பரப்பளவு இதன் கீழ் கொண்டு வரப்படும்.

பாக்கு

நாற்றுப் பண்ணைகளைத் துறையினர் வளர்த்து, நல்ல தரமான நாற்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர், கல்லாறு, மதுரை மாவட்டத்திலுள்ள பெரியகுளம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குமரி முனை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த குற்றாலம் ஆகிய இடங்களில் நாற்றுப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. 1966–67-ல் 1·50 லட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டன. நோய் வருமுன் தடுப்பதற்கும், உரமிடுவதற்கும், மும்முர பிரச்சாரம் தற்போது செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் இந்தப் பிரச்சாரம் செய்யப்படும். உதவித் தொகை அதிக அளவு ரூ. 100-க்கு மேற்படாமல் தெளிப்பான்கள் பாதிவிலைக்கு வழங்கப்படுகின்றன. 1965–66 வரை 152 தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. ஆண்டிற்கு 20 தெளிப்பான்களை வழங்குவது நான்காவது திட்டத்தின் குறிக்கோள் அளவாகும். இது நிறைவேற்றப்படும்.

புகையிலை

செய்திப் பரப்புதல் முலமும், உதவித் தொகையுடன் கூடிய செய்முறை விளக்க ஏற்பாடுகள் மூலமும், சிறந்த தரமான விதைகளை வழங்கியும், தாம்பூலப் புகையிலை. புகைக்கும் புகையிலை ஆகியவற்றின் விளைச்சலையும், தரத்தையும் பெருக்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும், ஒரு தடவை செய் முறை விளக்கம் நிகழ்த்த ரூ. 50 உதவித் தொகை கொடுக்கப்படுகிறது, நான்காவது திட்டத்திலும் இது தொடர்ந்து நடைபெறும்.

தாம்பூலப் புகையிலை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோபிச்செட்டிப்பாளையம், அவனுசி தாலூக்காக்களில் படிப்படியாக 6,000 எக்கர் பரப்பில் கட்டுக் கோப்பான பகுதிகளில் 1964–65-ல் முனைப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1965–66-ல் 4,000 எக்கர் புகையிலை உற்பத்தியின் கீழ்க்கொண்டுவரப்பட்டது. 1966–67-ல் மேற்கொண்டும் 2,000 எக்கர் பரப்பு புகையிலை உற்பத்தியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 6,000 எக்கர் முழுவதும் முனைப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1967–68-ல் இதை 8,000 எக்கராவாக பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஹோசூர் பகுதியில் பயிரிடப்பட்ட வர்ஜீனியா புகையிலை (புகையூட்டிப் பாடம் செய்யப்படுவது) நல்ல பயனைத் தந்தது. 1966–67-ல் 53·5 எக்கரில் இப் புகையிலை பயிரிடப்பட்டது. முன்னுள் செயலாற்றிய புகையிலைக் குழு வழங்கிய பக்குவப்படுத்தும் இயக்க அமைப்பினைக் கொண்டும், 1966–67-ல் அரசு அளித்த கடன் தொகை-உதவித் தொகையுடன் உற்பத்தியாளர்களால் கட்டப்பட்ட புகையிலை பக்குவப்படுத்தும், இரு அமைப்புகளைக் கொண்டும் முந்திய ஆண்டுகளின் உற்பத்தி பதப்படுத்தப்பட்டது. 1936–67-ம் ஆண்டின் உற்பத்தி வர்ஜீனியா புகையிலை உற்பத்தி வேலையில் பயிற்சி பெற்ற துறைப் பணியாளர்களின் மேற்பார்வையின் கீழ் பதப்படுத்தப்பட்டு வருகிறது.

1967–68-ல் வர்ஜீனியா புகையிலையை 200 எக்கர் பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காம் திட்ட முடிவில் 500 எக்கரில் புகையிலையை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் இனங்களின் கீழ் உள்ள உதவித் தொகை உற்பத்தியாளர்கள் வர்ஜீனியா புகையிலையை உற்பத்தி செய்வதில் ஊக்கம் காட்டுவதற்காக கொடுக்கப்படுகிறது :—

(1) உரங்களுக்கான உதவித் தொகை (விலையில் 25 சத வீதம்)

(2) பயிர்ப் பாதுகாப்பு ரசாயனப் பொருள்களுக்கான உதவித் தொகை (விலையில் 50 சத வீதம்).

(3) பதப்படுத்துவதற்காக உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்படும் (உதவித் தொகை பதப்படுத்துவதற்கு எக்கருக்கு 50 ரூபாய்).

(4) பதனிடும் நிலையம் கட்டுவதற்கான உதவித் தொகை (நிலையம் ஒன்றுக்கு ரூ. 1,000).

போதிய நிதி வசதிபற்றவரும், பதனிடும் நிலையம் கட்டும் அதிகச் செலவை மேற்கொள்ள முடியாதவருமாகிய வர்ஜினியா புகையிலை உற்பத்தியாளர்களுக்கு, பதனிடும் நிலையம் ஒன்றுக்கு ரூ. 4,000 கடன் தொகை கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தொகையானது 5 ஆண்டுகளில் 6 சத வீதம் வட்டியுடன் திருப்பி வசூலிக்கப்படும்.

கோக்கோ உட்பட தோட்டச் சிறு பயிர்கள்.—மூன்றுவது திட்டத்தின் கீழ் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மூன்றிடங்களில் ஒவ்வோரிடத்திலும் 10 எக்கர் பரப்பில் கோக்கோ பயிர் செய்வதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று செயல்பட்டது. கோக்கோ தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1965–66-ம் ஆண்டில் இந்த நிலையங்களுக்கருகில் .தனியார் நிலங்களில் ஏறக்குறைய ஐந்து எக்கர் பரப்பளவில் கோக்கோ பயிரிடப்பட்டது. 1966–67-ம் ஆண்டில் மூன்று நிலையங்களும் தொடர்ந்து பணியாற்றின. 23 எக்கர் நிலப்பரப்பினில் கோக்கோ பயிரிடுவதற்காக எக்கர் ஒன்றிற்கு 300 ரூபாய் வீதம் நீண்டகாலக் கடன் ஒப்பளிக்கப்பட்டது. நான்காம் திட்டக் காலத்தில், நீண்டகாலக் கடன் வழங்கி, 200 எக்கர் பரப்பினில் கோக்கோ பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம்பு, சாதிக்காய், ஏலக்காய் போன்ற தோட்டச் சிறு பயிர்களையும், மஞ்சள், மிளகாய் போன்ற சுவையூட்டும் பொருள்களையும் பயிராக்கும் பணி மூன்றும் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. நான்காம் திட்டக் காலத்தில் மும்முரமாகப் பயிரிடும் நடவடிக்கைகள் மூலமும், பயிரிடும் பரப்பினைக் கூடுமான இடங்களில் விரிவுபடுத்துவது வாயிலாகவும் இப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க கீழே காட்டியுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும் :—

ஏலக்காய் —மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களில் நான்கு நாற்றுப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும். மதுரையில் கோக்கோ முன்னோடித் திட்டத்திற்கான செய்முறை விளக்க நிலையத்தில் இத்தகைய பண்ணை ஒன்று முன்னரே தொடங்கப்பட்டுள்ளது.

கிராம்பும், சாதிக்காயும்—தரமான நாற்றுகளை வழங்குவதற்காக, கல்லாற்றிலும், குற்றாலத்திலும் நாற்றுப் பண்ணைகள் இரண்டு ஏற்படுத்தப்படும்.

மஞ்சள்.—பயிர்ப் பாதுகாப்புப் பணிகள் உட்பட; பயிரிடும் நவீன முறையைக் கொண்டும், இரண்டாயிரத்து ஐந்நூறு எக்கரில் மஞ்சள் பயிரிடப்படும். 1968-69-ம் ஆண்டில் இதனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மிளகாய்.—கே. 1 மிளகாய் என்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புதியவகை மிளகாய் வயலில் விளைவிக்கப்படும். அதன் மூலம் மிளகாய் விதை பெருக்கப்படும்.

குன்றுகளில் உருளைக் கிழங்கு பயிராக்குவது உட்பட, காய்கறி உற்பத்தியைப் பெருக்குதல்.

காய்கறிகள்.—1962–63-ம் ஆண்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை ஆகியவற்றைச் சுற்றியுள்ள 30 மைல் பரப்பளவில், காய்கறி உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் நாட்டு நெருக்கடியை முன்னிட்டும் காய்கறி விலை உயர்வினைத் தடுக்கவும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பூச்சி கொல்லும் மருந்து, காய்கறி விதைகள், நாற்றுகள் ஆகியவற்றை பாதி விலைக்கு விற்கப்படும். இத்துடன், காய்கறி விளைவிக்க, காய்கறி பருவ காலத்தில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 120 வீதம் காய்கறி உற்பத்தியாளர்களுக்குக் குறுகிய காலக்கடன் வழங்கப்படுகிறது. இத் திட்டம் மக்களால் விரும்பி வரவேற்கப்படுவதால், 1963–64-ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் 1964–65-ம் ஆண்டில் நெய்வேலிக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. நான்காம் திட்டத்திலும் இத் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நகரங்கள் உட்பட, இம் மாநிலத்தில் 120 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் இப்போது நிறைவேற்றப்படுகிறது. சமவெளிப் பகுதியில் வேலூர் ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய நான்கு இடங்களிலும் மலைப்பகுதியில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய மூன்றிடங்களிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்காக, வளர்ச்சி சிறப்புத் திட்டம் ஒன்று 1965–66-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. நான்காம் திட்டத்தில் முறையான காய்கறி உற்பத்தி பெருக்க திட்டத்தின் பகுதியாக இத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

உருளைக்கிழங்கு.—நெற் பயிர், சிறு தானியப் பயிர் போலவே, உருளைக் கிழங்கு விதை. பெருக்க வேலையும் அரசாங்க விதைப் பண்ணைகளால் கவனிக்கப்படுகிறது. நோய் பற்று நல்ல நிலையிலுள்ள மூல விதைகள் கிடைக்காததே. இதிலுள்ள முக்கியமான இடர்ப்பாடாகும். இதனால், உருளைக் கிழங்கு விதை உற்பத்தி மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. நோய் பற்றுத நல்லரக மூல விதைகள் சிம்லாவிலிருந்து ஓரளவு பெறப்பட்டுள்ளன. நீலகிரி, கோடைக்கானலிலுள்ள அரசாங்க, விதைப்

பண்ணைகளில் அவற்றைப் பெருக்கும் திட்டம் முன்னேறி வருகின்றது. (Nematode) என்னும் பூச்சியினால் வரும் நோயை எதிர்த்து நிற்கும் திறனுள்ள உருளைக் கிழங்கு வகை விதைகள் வட அயர்லாந்திலிருந்து பெறப்பட்டுள்ளன. அவை பரிசோதனையிலுள்ளன.

கோடைக்கானல் மலைப் பகுதிகளில் உருளைக் கிழங்கு உற்பத்தி அதிகரிப்பதற்கான மற்றொரு வளர்ச்சி சிறப்புத் திட்டம் 1965–66-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அரசாங்க உதவி அடிப்படையில் விதைகளைப் பகிர்ந்தளிப்பதே இதன் தலையாய நோக்கமாகும். நோயினால் பாதிக்கப்படாத மூலவிதைகள் போதிய அளவு இல்லாததனால் இவ்விதை வழங்குத் திட்டம் பெரிய அளவில் இயங்கவில்லை. மற்றும் உற்பத்திப் பெருக்கத்திற்காக மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்தும் (சிம்லா) ஓரளவு விதைகள் பெறப்பட்டுள்ளன. தற்போதுள்ள இப் பயிரின் உற்பத்தியைப் மேம்பாடு செய்வதற்காக கோடைக்கானல் மலைப்பகுதியிலுள்ள பயிர் செய்வோருக்கு இலவச தொழில் நுட்ப அறிவுரைகளும் உற்பத்தி உதவியும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது கோடைக்கானலிலுள்ள (வில்பட்டி, ரைஃபிள் ரேஞ்ச்) அரசாங்க விதைப் பண்ணைகள் இரண்டும் தேவையான அளவு நோய் பற்று விதைகளை உற்பத்தி செய்ய இயலாமலிருக்கின்றன. நடைபெற்று வரும் பண்ணைகளில் விதைப் பெருக்கிய பின்னர் கூடுதலான பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இப் பிரிவுகளுடன் இணைக்கப்படும். 1967–68-ம் ஆண்டில் 50 தெளிப்பான்கள் . பாதி விலையில் வழங்கப்படும். நோயினால் பாதிக்கப்படாத உருளைக் கிழங்கு விதைகளும் 100 டன் பகிர்ந்தளிக்கப்படும்.

தகுதியான இடங்களில் உருளைக் கிழங்கு பயிரினை விரிவாக்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. 1967–68-ம் ஆண்டில் ஹோசூர் பகுதியில் காட்டு வளத்துறை அளித்துள்ள 137 எக்கர் பரப்பில் உருளைக் கிழங்கு பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட விலையில் 90 சத வீத விலையில் தரமான விதைகள் பயிராக்குபவருக்கு கொடுக்கப்படும். பயிர் பாதுகாப்பு மருந்துகள் பாதி விலையில் அளிக்கப்படும். அறுவடைக் காலத்தில் திரும்பப் பெறும் வகையில் 400 ரூபாய் குறுகிய காலக் கடன் அளிக்கப்படும். சமவெளிப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிராக்குவதற்கான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. அதன் முடிவுகள் ஊக்கமளிப்பவையாகவேயுள்ளது. பரிசோதனைகள் தொடர்ந்து நடத்தப்படும்.

கிழங்கு வகைப் பயிர் உற்பத்திப் பெருக்கம்—

(a) **மரவள்ளிக் கிழங்கு.**—மரவள்ளிக் கிழங்கு சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிராகிறது. முக்கியமாக மாவுப் பொருளைத் தயாரிப்பதற்காக சேலம் மாவட்டத்தில் ஏறத்தாழ 55,000 எக்கர் பரப்பினில் மரவள்ளிக் கிழங்கு விளைவிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 40,000 எக்கர் பரப்பினில் மரவள்ளிக் கிழங்கு பயிராகிறது. அங்கு அது முக்கிய உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது. முதற்கண் கிள்ளியூர் வட்டாரத்தில் 1967–68-ம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகளுக்கு ஏறக்குறைய 9,000 எக்கர் பரப்பினில் முனைப்புத் திட்டம் முறைகளை மேற்கொண்டு மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியினை மும்முரமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர், மற்றப்பகுதிகளில் முனைப்புத் திட்டத்தை நிறைவேற்ற செய்முறை விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பெறும்.

(b) **சர்க்கரை வள்ளிக் கிழங்கு.**—இம் மாநிலம் முழுவதிலும் பரவலாக 8,387 எக்கர் பரப்பளவில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிராக்கப்படுகிறது. துணை உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையாக, இப்பயிர் 10,000 எக்கர் பரப்பில் 70,000 டன் விளைவிக்கப்படும். பயிரிடும் பரப்பளவில் இது தரமான முறைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் பரப்பளவை அதிகப்படுத்துவது மூலமாகவும் இப்படிச் செய்ய

திட்டமிடப்பட்டுள்ளது. எக்கர் ஒன்றுக்கு ரூ. 150 வீதத்தில் பயிரிடுவோருக்கு கடன் வசதி அளிக்கப்படும். இக்கடன் தொகை ரொக்கமாகவோ அல்லது பிறவகையிலோ செலுத்தப்படலாம். ஒருவருக்கு 1,000 ரூபாய் வரையில் இக்கடன் கொடுக்கப்படும். உற்பத்தி பெருக்கு நோக்கத்துடன் இக்கடன் வழங்கப்படுகிற பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் அடக்க விலையில் ¼ விலைக்கு அளிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் 500 எக்கருக்கு ஒன்று என்ற அளவில் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 செலவில் 20 செய் முறை விளக்கப் பண்ணைகள் நிறுவப்படும். நிலம் ஒன்றினுக்கு 50 ரூ. வீதம் எருக் கலவை, உரம், பயிர்ப்பாதுகாப்பு மருந்து ஆகியவை இலவசமாக வழங்கப்படும்.

முடிவுரை.—வேளாண்மை உற்பத்தி குறித்த எல்லா கூறுகள் பற்றியும் தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதென்பதையும், முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு பயிரின் உற்பத்தியையும் மும்முரமாக்குவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்பதையும் இவ்வறிக்கையிலிருந்து அறியலாம். தொடக்கத்தில், குறிப்பிட்டபடி, உணவு உற்பத்தியை விரைவில் அதிகரிப்பதே முதன்மையான நோக்கமாகும். இவ்விரு மானியக் கோரிக்கைகளையும் வெட்டு ஏதுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டுமென இப்பேரவையினை கேட்டுக் கொள்கிறேன்.

64926

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO. Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED, Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arco tdistrict.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE ASSEMBLY.

(1)	(2)	(1)	(2)